Ref-3



*With Best Wishes*

*&*

*Kind Regards*

*From*

**M. I. M.**

**Naleem Hadjiar**

**BERUWALA.**

# INQILAAB

Volume — 3

1980 - 81

(HIJREE 1401)

EVELYN RATNAM LIBRARY ★ JAFFNA ★
715

★

The 3rd Annual of The

## MUSLIM MAJLIS

UNIVERSITY OF JAFFNA

(SRI LANKA)

## EDITORIAL BOARD

*Co-Editors:*

M. S. Wajeehu
M. S. H. M. Musthafa

*Members of the Board:*

Ziyad. M. Thaha
M. A. Mohamed Sanun
A. L. Jamaldeen

## *EXECUTIVE COMMITTEE*

| | | |
|---|---|---|
| *Patron* | : | Moulavi K. M. H. Kalideen B. A. (Hons) |
| *Senior Treasurer* | : | Mr. M. A. Nuhman B. A. (Hons) B. Phil |
| *President* | : | Ziyad. M. Thaha |
| *Vice President* | : | S. Najimudeen |
| *General Secretary* | : | M. A. Mohamed Sanun |
| *Asst. General Secretary* | : | A. L. Jamaldeen |
| *Social Secretary* | : | S. M. M. Mansoor |
| *Junior Treasurer* | : | N. Jamaldeen |
| *Co-Editors* | : | M. S. Wajeehu<br>M. S. H. M. Musthafa |
| *Committee Members* | : | M. M. Faiz<br>M. S. M. Fuward<br>A. L. Shajahan<br>Miss. I. S. Sithy Faiza<br>Miss. T. Raiza |

# ஆசிச் செய்தி



இஸ்லாம் என்ற பெயருக்குப் பலரும் பல காரணம் கூறுவர். இச் சமயம் இன்பமான சாந்தியையே பெரும்பாலும் போதித்து வருவதனுல், இஃது இஸ்லாம் என்ற பெயரால் வழங்கி வருகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மார்க்கம் மக்களுக்கு அவசியமான தேவைகளுக்கு ஏற்றதாகவும், உண்மையோடு மாறுபடாத கொள்கைகளை உடையதாகவும் விளங்குகின்றது. இஸ்லாத்தில் உயர்ந்த எண்ணங்களும் அறிவுக்குரிய அனுட்டான முறைகளும் அடங்கியிருக்கின்றன.

இஸ்லாமிய சமயத்தின்படி எல்லா மனிதரும் ஒரு சகோதர குடும்பத்தைச் சார்ந்தவர். மக்கட்பிறவி எடுத்தவர் யாவரும் கடவுள் முன்னிலையில் ஒரே தன்மையுடையவர் என்று முதன்முதல் உபதேசித்து அதனை அநுட்டித்துக் காட்டியவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே. உலகிலுள்ள மக்கள் யாவரும் ஒரே சாதியினரே எனும் உண்மையை அறபாத்மைதானம் வற்புறுத்துகின்றது. இந்த உண்மைக்கமைய யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர் யாவரையும் சகோதரத்துவத்துடன் பேணித் தங்கள் முயற்சிகளை மேற்கொள்வது பாராட்டத்தக்கது.

அவர்களுடைய படைப்பாகிய ''இன்கிலாப்'' பல சிறந்த எழுத்தாளரின் படைப்புகளைத் தாங்கி, இஸ்லாத்தின் நற்போதனைகளைப் பரப்புவதைக் கண்டு பேருவகை கொள்கிறேன்.

அவர்கள் பணி செழித்தோங்குக.

பேராசிரியர்
*கலாநிதி சு. வித்தியானந்தன்*
துணைவேந்தர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

# நுழையுமுன் சில வார்த்தைகள்

''அல்ஹம்து லில்லாஹ்'' இன்கிலாப் மூன்றாவது இதழ் உங்கள் கைகளில் விரிந்துவிட்டது. எமது பாரிய முயற்சியின் சிறிய ஆக்க மாகிய இதனை நுகர்ந்து பெறுமானங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பு உங்களுக்கே விடப்படுகிறது.

உலகில் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் சிந்தனைப் புரட்சி (இன்கிலாப் – *Revolution*) மூலம் தெளிவு ஏற்படுத்துவதால் மாத்திரமே, இன்று முழு உலகையும் ஆட்கொண்டிருக்கும் கொலை, கொள்ளை, விபச்சாரம், மது, அநியாயம் என்ற தீவினைகள்; சுரண்டல், சுவீகரிப்பு என்ற கொடுமைகள்; போர், ஆக்கிரமிப்பு என்ற நாச காரியங்கள் போன்ற இன்னோரன்ன அழிவுப் பாதைகளிலிருந்து முழு மனித சமுதாயத்தையும் விலக்கி ''சாந்தியும் சமாதானமுமுடைய'' ஆக்கபூர்வமான ஒரு சமுதாயத்தை அமைக்க முடியும் என்ற ஒரு பாரிய திட்டத்தின் தொடரில் நாம் ஒரு சொற்ப பகுதியையே செய்துள்ளோம்.

இத் திட்டத்தை அமுல் நடத்துவதில் எமது வழிகாட்டி நபிகள் (ஸல்) அவர்கள் எந்தெந்த வழிகளைக் கையாண்டார்களோ அதே முறைகளை நாமும் கையாளுவதிலேயே இம்மையிலும், மறுமையிலும் பூரண வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எப்பொழுதெல்லாம் எம்மவர்களின் ''ஈமான்'' இல் உறுதியும் பிர காசமும் பரிணமித்ததோ அப்போதெல்லாம் மகோன்னத நிலையை அடைந்திருந்தனர். எப்போதெல்லாம் அவர்களின் ஈமானில் உறுதி யும், பிரகாசமும் மங்க ஆரம்பித்ததோ அப்போதே அவர்கள் போட்டியும், பூசலும் நிறையப் பெற்று இகழ்வுற்று ஸ்தம்பிதமடைந்த சமுதாயமாக மாறியதை நாம் வரலாறு மூலம் உணர்கிறோம்.

முதலில் ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் ''ஈமானி''ன் உறுதி யையும் பிரகாசத்தையும் ஏற்படுத்திய பிறகே முழு உலகையும் நேர் வழியின்பால் அழைக்க முடியும். இந்த அடிப்படையிலேயே எமது சஞ்சிகையின் ஆக்கங்களையும் அமைப்பதற்கு இயன்றவரை முயற்சித் துள்ளோம். ஆனல் நாம் இதில் பூரணமடைந்து விட்டோம் என்று கூறுவதற்கில்லை.

எமது சஞ்சிகை வழமையாக வெளியிடப்படும் காலத்தைவிட இம்முறை சிறிது தாமதமடைந்தமைக்காக வருந்துகிறோம். இதற்கான காரணம் எமது பல்கலைக்கழகத்திலும் பல்கலைக்கழக சூழலிலும் இவ்வாண்டில் இடையிடையே ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக நாம் சஞ்சிகை வெளியீடு சம்பந்தமாக மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியையும் பின்போடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டது என்பதை அனைவரும் அறிவர்.

எமது இந்த இதழுக்கு ஆசியுரை வழங்கிய உப வேந்தர் அவர்களுக்கும், ஆக்கங்கள் உவந்தளித்த அறிஞர் பெருமக்களுக்கும், நண்பர்களுக்கும், அவ்வப்போது எமக்கு ஆலோசனைகள் வழங்கிய விரிவுரையாளர்களுக்கும், விளம்பரங்கள் தந்து தம்மை ஊக்குவித்த வணிகப்பெருமக்களுக்கும்; நிதி உதவி வழங்கிய பல்கலைக்கழக மாணவர் அவைக்கும், குறுகிய காலத்துள் சிறப்புற அச்சிட்டுதவிய யாழ். ஸ்ரீ லங்கா அச்சகத்தினருக்கும்; அட்டைப் படத்தை அழகுபடுத்திய நண்பர் சேரனுக்கும் மற்றும் அயராது உழைத்த நண்பர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

அஸ்லாமு அலைக்கும்

*M. S. H. M. முஸ்தபா*
*M. S. வஜீஹூ*
(இதழாசிரியர்கள்)

# அட்டையிலுள்ளது ............... ...............

சற்றுத் தொலைவில் வைத்து
நோக்குக.

மஸ்ஜித்
அதனது பின்புலம்
வான்வெளி
விரிந்தே உள்ளது

அதன்மேல்
உதயம்
இன்னும் ஒரு முறை
ஒளிபரவுகிறது
காற்று வெளியிலே
சிந்தனை விரியும்

வெறும் பிரதிபலிப்புகள்,
ஓவியம் என்றகாலம்
முடிந்தது

மூன்றுவதாகவும்
ஒரு பரிமாணம்
உங்கள் சிந்தனை வழியிலே
கிடைக்கும்

ஓவியம்
எமது அன்பு நண்பன்
சேரன்

Best wishes from

# S. M. MEERAN SAHIB

**General Merchant & Transport Agent**

Dealers in:

Hides, Beah De-Me Sharkfins Etc.

117, ***Manipay Road,***

**JAFFNA.**

Telegram: 'MERA' JAFFNA.

Branch office:

155, Sea Street,

COLOMBO.

☎ 7134

# உள்ளே..........


| | | |
|---|---|---|
| ஆராயும் திறன் படைத்தோர்க்கு | ... | 1 |
| பள்ளி வாயில்களும் முஸ்லிம் கலாச்சார விவகாரத் திணைக்களமும் | .. | 9 |
| இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பாரம்பரியங்கள் | ... | 17 |
| அகமும் புறமும் | ... | 33 |
| உள்ளங்கள் தெளிவு பெறுகின்றன | ... | 37 |
| வஹியின் நிழலில் அசலும் - நகலும் - ஒரு ஒப்பீட்டாய்வு | ... | 45 |
| இஸ்லாமிய விஞ்ஞானம் | ... | 69 |
| நாளைய நாயகர் | ... | 85 |
| இலங்கையிலிருந்து நியுசிலந்துவரை | ... | 89 |
| ஒரு மஹாகவி பற்றி மற்றொரு கவிஞன் | ... | 97 |
| விஞ்ஞானமும் இஸ்லாமும் | ... | 101 |
| நாங்கள் மனிதர்கள் | ... | 107 |
| செயலாளர் பேசுகிறார் | ... | 109 |
| *Our Majlis Members* | ... | 113 |

★ விவசாயிகளுக்குரிய
கிருமிநாசினிகள், உரவகைகள்.

★ மாணவர்களுக்கான
உபகரணங்கள், உடைகள்.

★ வீடமைப்பிற்குரிய
சீமெந்து, இரும்பு, அஸ்பெஸ்டஸ்.

★ வாகனங்களுக்குரிய
டயர், ரியூப், உதிரிப்பாகங்கள்.

★ நுகர்ச்சிப் பொருட்கள்.

★ சிறந்த மரங்கள்.

அனைத்திற்கும்

சம்மாந்துறை

**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை**

நாடுங்கள்

*Best wishes from*

# M. K. S. JEWELLERS

Famous for
Fashionable Diamond
Jewellers

**R. G. BUILDING**
61, Kannathiddy,
JAFFNA.

Cables: EMKEES    Phone: **7547**

**Visit**
for your
Suitcase
Requirements

# HANIFCO

Agents for Masco Products
*168*, K. K. S. Road,
*JAFFNA.*

*சகல விதமான நவநாகரிக*
*றெடிமேட் ஆடைகளுக்கும்*
*மற்றும்*

**சேட்டிங், சூட்டிங்**
*போன்றவைகளுக்கும்*

*இன்றே*
*விஜயம் செய்யுங்கள்*

# பஸ்ஹஸ்

48, நவீன சந்தை,
**யாழ்ப்பாணம்.**

*VISIT*

# ANES BROTHERS

63, Hospital Road, JAFFNA.
for
Biscuits, Sweets & Sundry Goods

# ANES & CO

I, New Market.
Hospital Road.    JAFFNA.
for
Shop goods, Glass Wares,
Aluminium Wares, Fancy goods,
& Presentation Articles

## ANES METAL INDUSTRIES

48, Muslim College Road,
Moor Street,    JAFFNA.

For 'ANCHOR' Brand
Aluminium Holloware

நவநாகரீக பிடவை
வகைகளுக்கும்
அழகுசாதனப் பொருட்களுக்கும்
சம்மாந்துறையில் சிறந்த
ஒரே ஒரு ஸ்தாபனம்

**GEMSHINE ENTERPRISES**

78, Market Road.
SAMMANTHURAI.

சகலவிதமான விளையாட்டு
உபகரணங்களும், மணிக்கூட்டு
வகைகளும் பெற்றுக்
கொள்வதற்குச் சிறந்த
ஸ்தாபனம்

**(F)பான்சி ரேட்ஸ்**

72, கஸ்தூரியார் வீதி,
**யாழ்ப்பாணம்.**

டெலிபோன்: **8216**

சகலவிதமான
அரிசி வகைகளுக்கும்
நாடவேண்டிய
ஸ்தாபனம்

**ஈஸ்டன் அரிசி ஆலை**

**(Eastern Rice Mill)**

**சம்மாந்துறை.**

டெலிபோன்: **2076**

கிழக்கிலங்கையிலே
தங்க நகை வியாபாரத்தில்
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

**KALMUNAI JEWELLERY**

**கல்முனை ஜுவலரி**

(பஸ் நிலையம் முன்பாக)
76, மெயின் வீதி,
**கல்முனை.**

# ஆராயும் திறன் படைத்தோர்க்கு............

**திரு. வை. வரதராஜாப்பெருமாள்,**
*விரிவுரையாளர், கணிதத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.*

> *''அச்சத்தையும், நம்பிக்கையையும், தரவல்ல மின்னலே;*
> *அவன் உங்களுக்கு காண்பிப்பதும், வானத்திலிருந்து*
> *மழை பொழியச் செய்வதும், தரிசான நிலங்களைச் செழிக்கச்*
> *செய்வதும், அவன் சான்றுகளில் ஒன்றாகும். ஆராயும்*
> *திறம் படைத்தோர்க்கு இதில் நிச்சயமாகப் பல சான்றுகளிருக்கின்றன.''*
>
> — திருக்குர்ஆன் *(30:24)*

பல ஆண்டுகளின் பின் அண்மைக் காலத்தில் அறிஞர் உலகமும், விடுதலே நாடியோரும், எம்பெருமானின் போதனையையும், திருமறையின் தூய வழிகாட்டலேயும், நோக்கித் திரும்புகின்றார்கள். அண்மைக் காலத்தில் அமெரிக்க, ஐரோப்பிய பல்கலேக் கழகங்களில் பல விஞ்ஞானிகள், கணிதமேதைகள் இஸ்லாத்தின்பால் திரும்பி இருக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய இராச்சியத்திலுள்ள பல்கலேக் கழகங்களில் விஞ்ஞானிகளும், கணித மேதைகளும், இஸ்லாத்தின் பாற் திரும்பி இருக்கின்றனர். அறிஞர்கள் சாந்தியையும், பொருளார்ந்த வாழ்க்கை முறையையும், இஸ்லாத்தின் வழிகாட்டலில் பெறலாம் என்று உணரத் தொடங்கியுள்ளார்கள். இதே சமயத்தில் இஸ்லாமிய சமுதாய அமைப்பின் வர்க்கபேதமற்ற, சுரண்டலற்ற, பூரண ஜனநாயகத் தன்மை, விடுதலே வேட்கை கொண்ட மக்களேக் கவர்ந்து வருகின்றது.

இம் மாற்றங்கள், மத பீடங்களேயும், ஏகாதிபத்தியவாதிகளேயும், திகிலடையச் செய்துள்ளது. இதன் காரணமாக இன்று இஸ்லாமியக் கோட்பாடுகட்கு எதிராக மறைமுகமாகவும், நேரிடையாகவும், தாக்குதல்கள் தொடங்கி இருக்கின்றன. இவற்றில் ஒரு குற்றச்சாட்டு, அண்மைக் காலத்தில் பிரபலமாகப் பேசப்பட்டு வருகின்றது. அதாவது, இஸ்லாமிய கொள்கை முதல் வாதம் *(Fundamentalism)* விஞ்ஞான அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் தடையானது என்பதாகும்.

இக் குற்றச்சாட்டின் பொருந்தாத் தன்மையை விளக்குவதே இச் சிறிய கட்டுரையின் நோக்கமாகும்.

முதலாவதாக எம்பெருமானார் முஹம்மதுநபி (ஸல்) அவர்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்திய ஒரு அறிவுரை ஒவ்வொருவரும் முயன்று தமது அறிவையும், கல்வியையும் விருத்தி செய்து கொள்ள

வேண்டும் என்பதாகும். பெருமானாரின் அமுத வாக்குகள் சிலவற்றைப் பார்த்தோமானால், கல்வியின் இன்றியமையாத தன்மையை அவர் எவ்வளவு உறுதியாக வற்புறுத்தி இருக்கின்றார் என்பது தெளிவாகும்.

''ஒரு நாழிகை இறைவனின் படைப்புக்களைப் பற்றிச்
சிந்தனை செய்து நல்லறிவைப் பெற முயல்வது,
எழுபதாண்டுத்தொழுகையை விட மேலானது''

''அறிவின் துணையால், இறைவனின் அடியான் நன்மைகளின்
உச்சத்தை அடைகின்றான். கல்வியின் துணையால் ஒருவன்
இம்மை, மறுமை, இரண்டிலும் தன் நிலையை உயர்த்திக் கொள்கின்றான்''

''கல்வியைத் தேடுங்கள் ஏனெனில் இறைவனின் நல்லருளோடு
அதைத் தேடுபவன் தூய செயல் செய்தவனாவான்''

''சீனா சென்றாயினும் கல்வியைத் தேடிக்கொள்ளுங்கள்''

மேற்கூறிய திருவாக்குகளில் இருந்து எம்பெருமானார் மார்க்கக் கல்வியை மாத்திரம் அல்ல சகல கல்வியையுமே குறிப்பிடுகின்றார் என்பது தெளிவாகும்.

மேலும், பிரபஞ்சத்தைப் பற்றியோ, இயற்கை பற்றியோ, எது விதமான கோட்பாட்டையும் நாயகமவர்கள் முடிந்த முடிவாகக் கூறி விடவில்லை. மேலும் இத்தகைய கூற்றுக்களால் மூட நம்பிக்கைகள் வளர்ந்துவிடாமல், விஞ்ஞான ஆராய்ச்சி வளரும்படி தன்னுடைய நிலையைத் தெளிவாக்கியும் இருக்கின்றார்கள். ''மார்க்க விடயங்கள் அல்லாதவற்றில் நீங்கள் நான்கூறும் எல்லாவற்றையும் ஒப்புதல் சரியல்ல நானும் உங்களைப்போல் ஒரு மனிதன்தான்'' என்று கூறியதன் மூலம், பிரபஞ்சம் பற்றிய ஆராய்ச்சிகட்குத் தடையாக தன் கூற்றுக்கள் எதுவும் அமையாதவாறு அருள் செய்து விட்டார்கள். இப் பிரபஞ்சம் இறைவனது அருட் கொடையாக மனித சமுதாயத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பது இஸ்லாமியக் கோட்பாடு. இவ்வருட் கொடையை நன்கு பயன்படுத்த அறிவு தேவை. ஆராய்ச்சியும் தேவை. இதையே திருமறை, ஆராய்ந்து பார்ப்பவருக்கு நிச்சயமாக நல்ல சான்றுகள் உள்ளன என்று கூறுகின்றது.

இதன் அடிப்படையிலேயே இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் சுதந்திரமாகவும், தீவிரமாகவும், இஸ்லாமிய அறிஞர்கள் கணிதம், வானியல், மருத்துவம், இரசாயனம் போன்றவற்றில் பல ஆய்வுகளைச் செய்து வந்தார்கள். இவர்கள் தங்கட்கு முன் உள்ள கிரேக்க, இந்து கணிதவியலாளரான யூக்கிலிட், ஆரியபட்டர், வராகிமிலிரர் போன்றோரின் முடிவுகளையும் ஆராய்ந்து தருக்க ரீதியாக ஒழுங்கு செய்து, பல அரிய நூல்களை இயற்றி வைத்தார்கள். ஐரோப்பாவின் மத்திய

கால மறுமலர்ச்சியின்போது உண்டாகிய பல்கலைக் கழகங்களில் இந் நூல்கள் பாவிக்கப்பட்டு வந்தன.

ஐரோப்பாவில் மத பீடங்களின் தலையீட்டால் சுதந்திரமாக ஆராய்ச்சி செய்ய அஞ்சிய பல அறிஞர்கள் இஸ்லாமிய பல்கலைக் கழகங்களான அல்ஹம்பரா, கொரடோபா போன்ற ஐரோப்பாவில் உள்ள பல்கலைக் கழகங்கட்கும், பக்தாது, கொரசம், டமஸ்கஸ் போன்ற இஸ்லாமிய நாடுகளின் பல்கலைக்கழகங்களையும் அணுகினுர்கள். இஸ்லாமிய பல்கலைக்கழகங்கள் மதபீடங்களின் கடும்பிடியில் இருந்தவை அல்ல. அங்கே இஸ்லாமியர் அல்லாதோரும், இஸ்லாமியரும் சரி சமமாக நடத்தப்பட்டு வந்தார்கள். அண்ணல் நபியின் போதனைகளின் பயனுக அறிஞர்கட்கு இஸ்லாமிய சமூகத்தில் மிக உயர்ந்த மதிப்பு இருந்துவந்தது. ''நபியே! நல்லறிவைத் தேடி உம்மிடம் வருபவனை வெறுத்தொதுக்காதீர்'' என்று நபி (ஸல்) அவர்கட்கு வஹீ அறிவிக்கப்பட்டு இருந்தது. பூமி உருண்டையானது எனச் சொல்வதே ஐரோப்பாவிற் தண்டிக்கப்பட்டு வந்த வேளையில், பூமியின் அகலாங்கு நெட்டாங்கு கோடுகளை அல்புருணி கணித்தறிந்தார். அஜ்னியிற் தங்கியிருந்தபோது சமஸ்கிருத மொழியை நன்கு கற்றுப் பாண்டித்தியம் உடையவரானுர். ''சுல்வ சூத்திரங்கள்'' இன்று கூறப்பட்ட வகையீட்டு கேத்திர கணித முடிவுகளைச் சீர்பார்த்து நிருபணங்களுடன் எழுதினுர் என்று கூறப்படுகிறது. இவருடைய கல்வியை மெச்சி இவருக்கு ''வித்தியாசாகரர்'' எனும் பட்டம் இந்திய அறிஞர்களால் வழங்கப்பட்டது.

> ''நவீன விஞ்ஞானத்திற்கு மேன்மையான தம் பங்கை இஸ்லாமிய அறிஞர்கள் செய்வதற்கு திருக்குர் ஆன் மறைமுக காரணியாய் இருந்தது என்று *Hrischfield* என்னும் அறிஞர் கூறி இருக்கின்றுர்.

மருத்துவம், இரசாயனம் எனும் துறைகளில் இஸ்லாமிய அறிஞர்களின் பங்களிப்பு கணிசமானதே.

இஸ்லாமிய நாடுகள் கடந்த நூற்றுண்டில் தம் சுதந்திரத்தை இழந்தன. அத்துடன் விரிவான கல்வி பெருமையால் மக்கள் மத்தியில் இஸ்லாமியக் கோட்பாடுகள் மங்கியும் வலுவிழந்தும் போயின. கல்வி உளத்தை இஸ்லாமிய நாடுகள் இழந்தன. இறையருளால் மீண்டும் இஸ்லாமிய சிந்தனைகள், கோட்பாடுகள் தளிர்த்து வளர்ச்சியடையும் குறிகள் தென்படுகின்றன.

உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பைப் பெற்ற இஸ்லாமிய மாணவர் மீண்டும் அந்த உன்னத நிலையை அடைய உழைத்தல் வேண்டும். சென்ற காலத்தில் பழுதிலார் திறன்பற்றி மேடைகளிலும், வானொலியிலும் பேசுவதிலும் எதிர்காலம் சிறப்புற அமைய உழைத்தல் சிறந்தது.

இன்று இஸ்லாமிய நாடுகளில்கூட விஞ்ஞான ஆராய்ச்சியில், தொழில் நுட்ப வளர்ச்சியில் முன்னணி நாடாகச் சொல்லத்தக்க நாடு ஒன்றுமில்லை. இதற்குக் காரணம் பெருமானாரின் போதனைகளை விட்டு மக்கள் வாழ்க்கை விலகிச் செல்வதே காரணமாகும் எனத் துணிந்து கூறலாம்.

திருமறையில் அறிவின் பல்வேறு நிலைகள்பற்றிப் பேசப்படுகின்றது. புலனறிவு, மெய்யறிவு இரண்டையும் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. புலனறிவின் வரையறையும் அதைச் சீரியவழியில் தொகுத்து ஆராய்ந்து உண்மையைக் காணும் மெய்யறிவின் தன்மை பற்றியும், பெருமானாரும் அதன் பின்வந்த திருமறைக்கு விரிவுரை வரைந்தோர்களும் கூறியிருக்கிறார்கள்.

புலனறிவால் பெற்றவற்றைத் தொகுத்தாராய்ந்து அவற்றிற்கு ஆதாரமான உண்மை எது என்பதைக் காணுவதே சிறந்த ஆராய்வு என வலியுறுத்தப்பட்டுள்ளது. **Newton Einstein** போன்ற மேதைகள் பிரபஞ்சத்தை இவ்வாறு பார்த்துத் தமது மெய்யறிவால் தம் காட்சிகட்கு அப்பால் அவற்றின் ஆதாரமான உண்மை எதுவெனக் கண்டவர்களே.

உதாரணமாக, **Brown** எனும் தாவரநூல் ஆய்வாளர் நீரில் மகரந்தத் துகள்கள் இயங்குவதை அவதானித்தார். இதைப்பற்றி நீண்ட விபரமான கட்டுரை ஒன்றையும் வெளியிட்டார். இக்கட்டுரை அவர் கண்ட காட்சியைப்பற்றி விவரித்ததே அன்றி அக்காட்சிகளின் காரணத்தைப்பற்றி ஆராயவில்லை. நீண்ட காலத்தின்பின் **Einstein** ஒரு விளக்கத்தைக் கொடுத்தார். **Levy** எனும் சிறந்த கணித மேதையால் **Brown** கண்ட காட்சி முழுமையாக ஆராயப்பட்டு இன்று பல துறைகளில் பயன்படுத்தப்படும் ஒரு கணிதத்துறையாக வளர்ந்திருக்கின்றது.

சிக்கலான பல அமைப்புக்களையும் ஆராய்ந்து பார்க்கும்போது அவற்றின் ஆதாரமாக இருப்பவை எளிமையும், அழகும் உள்ள விதிகளாகக் காணப்படுகின்றன.

பௌதிகத்தில் *Laugevin Equation* ஊடகங்களிற் பிறபொருட்களின் செறிவுபற்றிய சமன்பாடுகள் ***(Diffusion Equations)*** மின்காந்த முறைகளைப் பயன்படுத்திச் செலுத்தப்படும் சமிக்கைகளின் சுத்திகரிப்புப்பற்றிய சமன்பாடுகள் அதே நேரத்தில் உயிரியலில் பரம்பரைகளின் சேர்க்கை ***Genetics*** பற்றிய சில சமன்பாடுகள் இவையெல்லாம் பொதுவான ஒரு கணித அமைப்பைப் பெற்றுள்ளன. இந்த அமைப்பை அறிய உதவியது ***Brown*** கண்ட காட்சி என்பதும் நாம் அறியும்போது எவ்வளவு வியப்பாயிருக்கின்றது.

''நிச்சயமாக ஆராய்ந்து பார்க்கும் இயல்புடையோருக்குப் பல சான்றுகள் உள்ளன'' என்ற திருவசனங்கள் எவ்வளவு ஆழ்ந்த கருத்துடையவை.

அட்சர கணிதம், வகையீட்டுக் கேத்திரகணிதம் முதலியவற்றில் முன்னைய இஸ்லாமிய அறிஞர்களின் நூல்களைப்பற்றி விமர்சிக்கும் மேலை நாட்டறிஞர்கள் பரந்து பலவாருகக் கிடைத்த முடிவுகளை ஒன்றிணைத்து அவற்றின் அடிப்படையாக இருந்த எளிமையான அழகிய அமைப்புக்களை காணுவதிற் திறம்பட விளங்கினுர்கள் என்று கூறுகிருர்கள்.

இவற்றைவிட வர்த்தகத்திற் கணக்குப்பதிவு முறையைப் பெருமளவுக்குச் சீராக்கி வைத்திருந்தார்கள். மேலும் பொருளாதாரம் இஸ்லாமிய வாழ்க்கை முறைக்கு அமைய, பொருளாதாரத்தை அமைத்தல் முதலியவற்றில் பல இஸ்லாமிய அறிஞர்கள் சிறந்த நூல்களை எழுதியுள்ளார்கள்.

திறந்த மனத்தோடு அணுகி ஆராய்பவர்கட்கு இஸ்லாம் ஒரு பூரணமான வாழ்க்கை நெறியைத் தருகின்றது புலப்படும். முதல் நான்கு கலீபாக்களின் ஆட்சிக்காலத்திலும் உலகத்தை இஸ்லாமிய சமுதாயம் எத்தகைய உயர் நிலைக்கு இட்டுச் சென்றது என்பதை அறிந்தவர்கட்கு, இன்றும் எம்பெருமானுர் (ஸல்) அவர்களின் போதனையின்படி நடப்பின் உலகம் மிக உயர்ந்த நிலையை அடையும் என்பதில் ஐயமில்லை.

*

*யாராகிலும் ஒருவன் தன்னுடைய கோபத்தைப் பிரயோகிக்க சக்தியிருக்க அதை மென்று விழுங்கினுல் கியாமத்தில் ஜனங்கள் கூட்டத்தில் ஆண்டவன் அவனைக் கூப்பிட்டு நீ நாடிய ஹூறுல் ஈனை கல்யாணம் முடித்துக்கொள்ள சம்மதம் கொடுக்கிறேன் என்று கூறுவான்.*

(ஹதீஸ்)

*

*நிச்சயமாக அல்லாஹுத்தஆலா உங்களுடைய உருவங்களையோ உங்களுடைய பொருள்களையோ பார்க்கமாட்டான். ஆனுல் அவன் உங்களுடைய இருதயங்களையும், உங்களுடைய செயல்களையும் தான் பார்க்கிருன்.*

(நபிகள் திலகம் (ஸல்)

With best compliments from

# HAPPY GEMS

(PROPRIETOR M. S. M·DUKKAIN)

*Exporters Of Precious and Semiprecious Stones*

**471, Main street, – Ratnapura.**

Branch:

## HAPPY GROUP OF COMPANIES

242, GALLE ROAD, COLOMBO-3

OFFICES:

**'Happy Dale'**
**China - Fort**
**BERUWELA.**
T. Phone 048 - 5438

**225 1/1, GALLE ROAD,**
**BAMBALAPITIYA,**
**Colombo - 4**
T. Phone: 82854

*With Best Wishes From*

# ALHAJ M. JABIR MOHAMED

(Dealer in Precious Gems)

No. 1, Katukurunda Road,

China - Fort

**BERUWELA**

T. Phone: **048 - 5142**

Office:

**225 11,** Galle Road.

COLOMBO-4

T. Phone: **82854**

Branch:

**201,** Main Street

RATNAPURA.

*Best wishes from:*

# VENUS JEWELLERY PALACE

*156*, Sea Street,
COLOMBO - *11*.
Phone: **22927**.

PHONE: **309**. GRAM: IRUMBU

Best wishes from:

# IRON STORES

*Hardware, Paints, Cartridges*
*Timber Merchants, & Government*
*Contractors*

**GRAND BAZAAR,**

*MANNAR.*

With the best compliments
from:

# C. S. SULAIMAN & SONS

GRAND BAZAAR,

*MANNAR.*

Phone: *292* Estd: *1935*

*For all your*

*TEXTILES*

**Visit**

# SINGAPORE CENTRE

GRAND BAZAAR,

MANNAR.

# பள்ளிவாயில்களும் முஸ்லிம் கலாசார விவகாரத் திணைக்களமும்

***M. M.* பாயிஸ்**

பௌதிகம் (சிறப்பு 4-ம் வருடம்)

இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் இஸ்லாமிய சமூக அமைப்பின் உயிர் நாடியாகப் பள்ளிவாயில்களே விளங்கியுள்ளன. ஒரு உயிரோட்டமான சமுதாயத்தை வழிநடாத்துவதற்குத் தேவையான சகல துறைகளினதும் நடவடிக்கைகள் பள்ளிவாயில்களை மத்தியநிலையமாகக் கொண்டே செயற்படுத்தப்பட்டன. பெருமானார் (ஸல்) அவர்கள் தமது குறுகிய வாழ்நாட்களின்போதே ஓர் இலட்சியப் பள்ளிவாயிலை - மஸ்ஜிதுந் நபவியை அமைத்து நடைமுறைப்படுத்தி பிற்கால சமூகத்தினருக்கு ஒரு சிறந்த முன்மாதிரியை விட்டுச் சென்றுள்ளார்கள். பிற்கால சமூகங்கள் இம் முன்மாதிரியைப் பின்பற்றியபொழுதெல்லாம் பள்ளிவாயிலில் நடைபெற்ற சகல பணிகளும் அச் சமூகங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்திருப்பதைக் காண்கிறோம். மாறாக எப்பொழுதெல்லாம் பள்ளிவாசல்களின் நிலை இம் முன்மாதிரியிலிருந்து விலக ஆரம்பித்ததோ அப்பொழுதெல்லாம் பள்ளிவாயில்கள் ஆற்றிய நற்பணிகளும் மறைய ஆரம்பித்து, ஈற்றில் வாழ்வின் சகல துறைகளிலும் சமூகம் வீழ்ச்சி அடையக் காரணமாக அது அமைந்தது. எதிர்காலத்திலும்கூட எமது பள்ளிவாயில்கள் எந்தளவுக்கு இவ் விலட்சியப் பள்ளிவாயிலை ஒத்ததாக அமையுமோ அந்தளவுக்கு சமூகம் மீண்டும் எழுச்சிகாணும் என நாம் எதிர் பார்க்கலாம். இந்நிலையில் இன்று பெரிதும் மாறுதலடைந்துள்ள இன்றைய பள்ளிவாயில்களின் செயற்பாட்டை அவ்விலட்சியப் பள்ளிவாயிலுடன் ஒப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். குறிப்பாக இலங்கையில் பள்ளிவாயில்களின் நிர்வாக அமைப்பு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த அரசியல் மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில், எதிர்காலத்திலாவது எமது பள்ளிவாயில்கள் தம்பணியை உரிய முறையில் ஆற்றவேண்டும் என்ற அவாவோடு சமுதாயத்தின் சிந்தனைக்கு ஒரு சில கருத்துக்களை இதன் மூலம் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

அன்றைய பள்ளிவாயில்களில் நடைபெற்று வந்த மிக முக்கிய செயற்பாடுகள் தொழுகை, தஃவத் (நலவைஏவித் தீயதை விலக்குதல்), தஃலீம் (அறிவைக் கற்பதும் கற்றுக் கொடுப்பதும்) குர் ஆன் ஓதல், திக்ரு (அல்லாஹ்வை ஸ்தோத்திரம் செய்தல்) போன்ற வணக்க வழிபாடுகளாகும். ஆனால் இஸ்லாம் என்பது வணக்க வழிபாடுகளை மட்டும் கொண்ட ஒரு மதமல்ல. அது வாழ்க்கையின் சகல துறைகளுக்கும் வழிகாட்டும் ஒரு மார்க்கமாகும். இவ்வகையில் அன்றைய பள்ளிவாயில்கள் அக்கால மக்களின் அரசியல். பொருளாதார. சமூகத் தேவைகளையும், பிரச்சினைகளையும் ஆராய்ந்து, அவற்றிற்கு இஸ்லாம் கூறும் தீர்வுகளை அமுல் நடத்தும் மத்தியத்தானமாகவும் விளங்கியுள்ளன. பெருமானாரதும், நேர்வழி நடந்த கலீபா (ஜனாதிபதி)க்களினதும் காலத்தில் மஸ்ஜிதுந்நபவியே பாராளுமன்றமாகவும், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாகவும் விளங்கியது. அன்றைய முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைகள் ஆலோசிக்கப்பட்டு தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதும். வெளிநாட்டுத் தூதுவர்கள் வரவேற்கப்பட்டதும் அங்குதான். நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றியதும், போர்வீரர்கள்

தயார் செய்து அனுப்பப்பட்டதும், ஏன் பிறநாட்டு மன்னர்களை இஸ்லாத்தின்பால் அழைத்து பெருமானாரவர்கள் கடிதம் எழுதியதும் அங்கிருந்தே ஸக்காத் (ஏழை வரி) பொருட்களை வசூலித்து உரியவர்களுக்குப் பங்கிடும் அலுவல்களும் அங்கிருந்தே மேற்கொள்ளப்பட்டன. சமூக விடயங்களைப் பொறுத்தவரை திருமணவைபவம், ஜனாஸாத்தொழுகை போன்றவைகூட பள்ளிவாயில்களில் நடைபெற்றுள்ளன. அது மட்டுமன்றி உலகம்போற்றும் நீதி நேர்மைமிக்க உத்தம ஸஹாபாக்கள் (நபித் தோழர்கள்) பயிற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழகமாகவும், குடும்ப விவகாரங்கள் உட்பட வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்ட நீதிமன்றமாகவும் பள்ளிவாயில்களே விளங்கியுள்ளன. முஸ்லிம்கள் அறிவுத்துறையில் ஒளிவீசிக்கொண்டிருந்த காலத்தில் அறிவுக்கிரந்தங்கள் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட நூல் நிலையங்களாகவும் பள்ளிவாயில்கள் மிளிர்ந்துள்ளன.

ஆனால் மஸ்ஜிதுந்நபவியில் நடைபெற்றுவந்த சகல விடயங்களுக்கும் நபியவர்கள் ஒரேவித முக்கியத்துவம் அளித்ததாகக் கூறமுடியாது. இஸ்லாம் ஈருலக வாழ்விற்கும் வழிகாட்டும் மார்க்கமாகும். எனினும் அது மறுமைவாழ்வே மனிதனின் நோக்கம் எனவும், அதை அடைந்து கொள்வதற்கான ஓர் அடிப்படைத் தேவையாகவே இம்மை கொள்ளப்படவேண்டும் எனவும் வலியுறுத்துகிறது. இந்நோக்கத்தை அடைவதில் ஓர் அமலின் (செயற்பாட்டின்) பங்களிப்பு எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவுக்கே பள்ளிவாயில்களில் அக்கருமத்திற்கு முக்கியத்துவமும் அளிக்கப்பட்டது. இவ்வகையில் சமுதாயத்தின் ஆன்மீக எழுச்சிக்கு வழிகோலும் அமல்களே முக்கியத்துவம் பெற்றன. ஒவ்வொரு தனி மனிதனையும் இறைவனோடு தொடர்புபடுத்தும் தொழுகை, தஃலீம் தஃவத், குர்ஆன்திலாவத், திக்ரு போன்றவற்றுக்கே பெருமானாரவர்கள் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். பின்வரும் நபிமொழி இதனை உறுதிப்படுத்துகிறது. ''யாரேனுமொருவர் அல்லாஹ்வை திக்ரு செய்வதற்கென ஒரு பள்ளிவாயிலைக் கட்டிக்கொடுத்தால் அவருக்கு அல்லாஹ் சுவர்க்கத்தில் ஒரு மாளிகையை அன்பளிப்பான்'' (ஆதாரம் இப்னுமாஜா). இந்த நபிமொழிக்கு விளக்கமளிக்கும் அல்லாமா ஸக்காவி (ரஹ்) அவர்கள் திக்ரு என்ற பதம் தொழுகை, குர்ஆன்திலாவத், தஃலீம் என்பவற்றைக் குறிப்பிடுவதாகக் கூறுகிறார்கள்.

இவற்றுள்ளும் தொழுகையே கூடிய முக்கியத்துவம் பெறுகிறது என்பது வெள்ளிடைமலை. அடுத்து தஃலீம். ஒரு முறை நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுந்நபவிக்கு விஜயம் செய்தபோது அங்கு ஸஹாபாக்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்திருந்து முறையே குர்ஆன்திலாவத், திக்ரு, தஃலீம் ஆகிய அமல்களில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார்கள். முதலிரு குழுக்களையும் பார்த்து ''நல்லது; செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு தஃலீமுடைய குழுவில் அமர்ந்து கொண்டார்கள். முடிவில் விளக்கம் கேட்கப்பட்டபோது ஏனைய அமல்களை உற்பத்திசெய்யும் தாய் அமலாக தஃலீம் விளங்குவதால் அதில் அமர்ந்து கொண்டதாகக் கூறினார்கள். இச்சம்பவம் நபியவர்கள் தஃலீமுக்கு அளித்த முக்கியத்துவத்தைத் தெளிவாக்குகிறது. (ஆதாரம் திர்மிதி)

இதேபோன்று பள்ளிவாயில்களை மையமாகக்கொண்டு நடைபெற்ற மற்றுமொரு முக்கிய அமல் தஃவத் ஆகும். இப்பணியை மேற்கொள்வதற்கான பிரசாரகர்கள் பள்ளிவாயில்களிலேயே தயார் செய்யப்பட்டனர். அண்ணலாரின் அன்பு மனைவி ஆயிஷாநாயகி (ரலி) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் நாயகமொழி இதற்கு ஆதாரமானதாகும். 'ஒருநாள் பெருமானாரவர்கள் வெளியிலிருந்து வீட்டிற்கு வந்தார்கள். அவர்களது முகத்தில் ஒரு விசேடமான உணர்ச்சியைக் கண்ணுற்

றேன். பெருமானாரவர்கள் வீட்டில் யாருடனும் பேசாமல் வுளூ செய்துகொண்டு பள்ளிவாயிலுக்குச் சென்றார்கள். என்ன சொல்லப்போகிறார்கள் என்று கேட்ப தற்காக வீட்டுச் சுவருடன் ஒட்டி நின்றுகொண்டேன். நபியவர்கள் மிம்பர் (மேடை)மீது ஏறி அல்லாஹ்வைப் புகழ்ந்து துதித்தபின் கூறினார்கள். 'ஜனங்களே! நன்மையை ஏவித் தீமையை விலக்கிக் கொண்டிருக்கும்படி அல்லாஹ் உங்களுக் குக் கட்டளையிடுகிறான். நீங்கள் பிரார்த்தனைசெய்து அது அங்கீகரிக்கப்படமாட் டாதே, அப்படியான காலம் வருவதற்கு முன் இப்படிச் செய்யுங்கள் (இப்பணியை விட்டுவிடுவதால்) அக்காலம் வந்துவிடுமாயின் நீங்கள் வேண்டிக்கொண்டால் கொடுக்கப்படமாட்டீர்கள். எதிரிகளுக்கு விரோதமாக உதவி கோரினால் உதவி யளிக்கப்படமாட்டீர்கள் என அல்லாஹ் அறிவித்துள்ளான், இவற்றை மட்டும் கூறிவிட்டு மிம்பரிலிருந்து இறங்கி வந்துவிட்டார்கள்''. (நூல்: இப்னுமாஜா)

பள்ளிவாயில்களில் நடைபெற்ற சமூக, அரசியல், பொருளாதார நடவடிக் கைகள் இதற்கடுத்த அந்தஸ்தையே பெற்றிருந்தன. அதேவேளையில் பள்ளிவாயில் களின் கட்டிடம். தளபாடங்கள், ஏனைய வசதிகள் போன்றவற்றிற்கு நபியவர் கள் எவ்வித முக்கியத்துவமும் அளிக்கவில்லை. பெருமானாரின் காலத்தில் மஸ்ஜி துந்நபவி இருந்த நிலையை அறிந்தால் எம்மிற் பலருக்கு ஆச்சரியம் ஏற்படலாம். பெருமானாரவர்கள் நெடுநாட்களாக பேரீத்தமரக் குற்றியொன்றின் மீதிருந்தே குத்பா (பிரசங்கம்) நிகழ்த்தி வந்தார்கள். ஒரு முறை வயோதிபமாது ஒருவர் பெருமானாரிடம் வந்து தனது மகன் மூலம் மரத்தினால் ஒரு மிம்பர் அமைத்துத் தர அனுமதியளிக்குமாறு கோரிக்கொண்டதையடுத்தே நபியவர்கள் அதற்கு அனு மதியளித்தார்கள். இச்சம்பவம் புகாரி கிரந்தத்தில் பதிவாகியுள்ளது. அதுமாத் திரமன்றி விளக்குக்கூட தொங்கவிடப்படாமல் மரக்குற்றியொன்றின்மீதே வைக் கப்பட்டிருந்தது. மேலும் தரையில் எவ்வித விரிப்பும் விரிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வசதிகள் எல்லாம் பெருமானாரின் மறைவுக்குப் பின்பே ஏற்படுத்தப்பட்டன. இவற்றிலிருந்து இவ்வசதிகளை பள்ளிவாயில்களில் ஏற்படுத்திக் கொள்வதைக் குறை கூறுவதாக எண்ணிவிடவேண்டாம். இங்கு இவற்றைக் குறிப்பிடுவதன் நோக்கம் நபியவர்கள் வாய்ப்பு வசதிகள் இருந்தும், அவற்றிற்கு எந்தளவு முக்கியத்துவம் அளித்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதே.

நாயகமவர்களினதும், நேர்வழி நடந்த கலீபாக்களினதும் காலத்தின் பின் பள்ளிவாயில்களின் அமைப்பில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்படலாயின. ஆட்சி அதிகாரங்களும், செல்வக் குவியல்களும் முஸ்லிம்களின் கைகளை எட்டியபோது அவற்றை நிர்வகிப்பதிலும், பாதுகாப்பதிலும் அளவுக்கதிகமாக அவர்களது கவனம் செலுத்தப்பட்டதனால் ஆன்மீகப் பணிகளின் வளர்ச்சி குன்றியது. அரசியல், பொருளாதார, சமூக நடவடிக்கைகள் படிப்படியாக பள்ளிவாயில்களை விட்டு வெளியாகின. கைப்பற்றப்பட்ட நாடுகளில் காணப்பட்ட கட்டிடக்கலை நுணுக் கங்களையும், அலங்காரங்களையும் பள்ளிவாயில்களில் ஏற்படுத்திக் கொள்வதிலேயே ஆட்சியாளர்களின் முழுக்கவனமும் செலுத்தப்பட்டது. இதன் விளைவாக சமுதா யத்தின் அரசியல், பொருளாதார, சமூக நடவடிக்கைகளில் இஸ்லாம் காட்டிய உயரிய நெறிமுறைகள் சிறிது சிறிதாக மறைந்து அந்நிய நடைமுறைகள் புகுந்தன. இதுவே இன்றைய நம் சமூகத்தின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

பரிதாபகரமான இந்நிலையினைத் தெளிவாக விளங்கிக்கொள்ள ஓர் உவமானத்தை நோக்குவோம். பள்ளிவாயில்களையும் அவற்றை மையமாகக்கொண்டு நடைபெறும் எல்லா நடவடிக்கைகளையும் ஒரு மனிதனுக்கு ஒப்பிடலாம். பள்ளிவாயிலில் நடை

பெறும் ஆன்மீகப்பணிகள் அனைத்தும் அம்மனிதனின் உயிர்நாடிக்கு ஒப்பானவை. சமூகவாழ்விற்கு இன்றியமையாத கல்வி, பொருளாதாரம், அரசியல், சுகாதாரம், விஞ்ஞானம் போன்ற இன்னோரன்ன துறைகள் சார்ந்த நடவடிக்கைகளை அவனது உடலுறுப்புகளுக்கு ஒப்பிடலாம். பள்ளிவாயிற் கட்டிடம், தளவாடங்கள் மற்றும் வசதிகள் அம்மனிதனது ஆடை, ஆபரண அலங்காரம் போன்றதாகும். இந்த உவமையை சற்றுக் கவனத்துடன் நோக்கவேண்டும். ஒரு மனிதனை நாம் சம்பூரண மனிதனாக ஏற்பது அவனது உடலுறுப்புக்கள் அனைத்தும் பூர்த்தியாக இருந்தால் தான். ஆனால் உறுப்புக்கள் பூரணமாக இருந்தால் மாத்திரம் போதாது. இவ்வுறுப்புக்கள் தம்பணியை நல்ல முறையில் ஆற்ற வேறு பல முக்கிய காரணிகளும் அவசியமாகும். முதன்மையாக சகல அவயவங்களும் இயங்குவதற்குத் தேவையான சக்தியையும், போஷாக்கையும் அளிக்கவல்ல தூய இரத்தமும், இத்தூய இரத்தத்தை சகல அங்கங்களுக்கும் தொடர்ச்சியாகப் பாய்ச்சிக்கொண்டிருக்கக் கூடிய பலம் வாய்ந்த இதயமும் வேண்டும். எல்லாவற்றிலும் மேலாக இவ்விதயத்தையும், ஏனைய உறுப்புக்களையும் இயக்கக் கூடிய உயிர் அவ்வுடம்பில் இருத்தல் அத்தியாவசியமாகும். வெளித்தோற்றத்தில் உறுப்புக்களைப் பூரணமாகக் கொண்ட ஓர் உடம்பில் உயிர் இல்லையெனின் அதனை மனிதன் என நாம் அழைப்பதில்லை. இதேபோல உயிருள்ள ஓர் மனிதனிடத்தில் காணப்படும் இதயம் பலமற்றதாக இருப்பின் உறுப்புகளுக்கான இரத்தோட்டம் பாதிக்கப்பட்டு, அதன் மூலம் அவ்வுறுப்புகளின் செயற்திறனும் குறைந்துவிடும். அல்லது இதயம் பலமானதாயிருக்க அது செலுத்திக்கொண்டிருக்கும் இரத்தம் அசுத்தமானதாகவோ, நோய்க் கிருமிகளைக் கொண்டதாகவோ இருப்பின், உடலுறுப்புக்களில் நோய்களும், புண்களும் தோன்றி அம்மனிதனுக்குப் பிரயோசனத்திற்குப் பதிலாக வேதனையையே கொடுத்துக்கொண்டிருக்கும். எனவே ஒரு மனிதனது உயிர், இதயம், இரத்தம் என்பன ஏனைய உறுப்புகளை விட ஒருபடி உயர்ந்த அந்தஸ்தைப் பெறுகின்றன. இவையின்றி அவன் ஜீவிக்க முடியாது. ஆனால் உடலுறுப்புக்களில் சில இல்லாத நிலையிலும் வாழ்ந்துவிடலாம்.

இதேபோன்று அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் என்ற உறுப்புக்களை உரிய முறையில் இயக்கவும், வளர்க்கவும் வேண்டிய தூய இரத்தம்தான், இஸ்லாமிய சரீஅத் (சட்டதிட்டங்களும் நடைமுறைகளும்) ஆகும். இவ்விரத்தத்தை உறுப்புகளுக்கூடாகத் தொடர்ச்சியாகப் பாய்ச்சும் - அதாவது சரீஅத் சட்டதிட்டங்களை சமூகத்தின் சகல துறைகளிலும் நடைமுறைப்படுத்தும் இருதயம்தான் சமூகத்திலுள்ள உலமாக்கள் (மார்க்க அறிஞர்கள்) தலைவர்கள் ஆகியோர் இவையனைத்திற்கும் அத்தியாவசியமான உயிர்தான் சமூகத்திலுள்ள ஒவ்வொரு தனி மனிதனதும் ஈமான் (இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் அசைக்க முடியாத நம்பிக்கை) ஆகும். ஒரு சமூகம் பலம்மிக்க அரசாங்கத்தைக் கொண்டிருக்கலாம். பிரமாண்டமான பொருளாதார வளங்களை உள்ளடக்கியிருக்கலாம். விஞ்ஞான அறிவிலும் ஆற்றலிலும் மேம்பட்டிருக்கலாம். ஆனால் இவையனைத்தும் அச் சமூகத்தினருக்கு நற்பலனையளிக்க வேண்டுமானால் இத்துறைகள் ஒவ்வொன்றிலும் இஸ்லாம் போதிக்கும் சட்டதிட்டங்களும், வழிகாட்டல்களும் பின்பற்றப்படல் வேண்டும். இதற்கு மாற்றமான எந்தவொரு நடைமுறையும் நிச்சயமாக அச்சமூகத்தில் அநீதி, அமைதியின்மை போன்ற பிரச்சினைகளையே தோற்றுவிக்கும். ஆனால் சமூகத்திலுள்ள ஒவ்வொரு தனிமனிதனிடத்திலும் ஈமான் உறுதியாகாதவரை சரீஅத் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சூழ்நிலையும், ஆர்வமும், தைரியமும் அச்சமூகத்தில் ஏற்படாது. கடந்தகால வரலாறுகள் இவற்றை மிகத்தெளிவாக நிரூபிக்கின்றன. எனவேதான் ஒவ்வொரு

தனிமனிதனிடத்திலும் ஈமானைப் பலமுடையதாக்க உதவும் தொழுகை, தஃவத், தஃலீம், திக்ரு போன்ற ஆன்மீக முயற்சிகள் பள்ளிவாயில்களில் நடைபெறவேண்டிய அதிமுக்கிய பணிகளாகின்றன.

இவ்வுவமையின் துணைகொண்டு அன்றைய இலட்சியப் பள்ளிவாயில்களோடு இன்றைய பள்ளிவாயில்களை இலகுவாக ஒப்பிடலாம். முன்பு விளக்கியுள்ளவாறு அன்றைய பள்ளிவாயில்கள் உடலுறுப்புக்கள் அனைத்தையும் பூரணமாகக்கொண்ட தேகாரோக்கியமான மனிதனுக்கு ஒப்பாக இருந்தன. அவனிடத்தில் ஆடம்பரமான ஆபரணங்களோ, அலங்காரங்களோ காணப்படவில்லை. மிக எளிமையான ஆடைகளே இருந்தன. ஆனால் இன்று உலகின் பல பாகங்களிலும் பரந்துகிடக்கும் பள்ளிவாயில்களின் நிலையை அவதானிக்கும்போது வேதனையாகவும் விநோதமாகவும் உள்ளது. ஓரிடத்தில் உயிரும், உடலும் அற்றநிலையில் ஆடை ஆபரணங்கள் மட்டும் காட்சிப்பொருளாக இருந்துகொண்டிருக்கின்றன. வேறு சில இடங்களில் உயிரற்ற நிலையில் உடல் மட்டும் ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட நிலையிலுள்ளது. மற்றும் சில இடங்களில் கை, கால் போன்ற சில உடலுறுப்புகள் இல்லாத நிலையில் ஆனால் ஆரோக்கியமாக அம்மனிதன் காணப்படுகிறான். இன்னும் சில இடங்களிலோ உறுப்புக்களை இழந்துள்ள அம்மனிதன் நோய்வாய்ப்பட்டு உயிருக்கே ஆபத்தான நிலை. ஆம், ஸ்பெயின் போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் பண்டைய பள்ளிவாயில்களின் கம்பீரமான கட்டடங்கள் மட்டுமே இன்று எஞ்சியுள்ளன. இன்று அங்கு முஸ்லிம்களோ அல்லது இஸ்லாத்தின் வேறு எந்த சாயல்களுமோ இல்லை. ரஷ்யா போன்ற கம்யூனிஸ நாடுகளில் இன்றும் முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனினும் அவர்களிடம் இஸ்லாமிய நடைமுறைகள் காணப்படுவதாகத் தெரியவில்லை. வயது முதிர்ந்தவர்கள் மட்டும் பள்ளிவாயில்களுக்குச் சென்று தொழுது வருவதைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். ஏனைய நாடுகளிலெல்லாம் இன்று தொழுகை போன்ற சில மார்க்க அனுஷ்டானங்கள் மட்டுமே பள்ளிவாயில்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முஸ்லிம் நாடுகளில் கூட அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் பள்ளிவாயில்களோடு தொடர்பற்ற முறையிலேயே நடைபெற்றுவருகின்றன. ஆயினும் முஸ்லீங்கள் தம் சொந்த வாழ்வில் இஸ்லாமிய சட்டதிட்டங்களை ஓரளவுக்குப் பேணி நடக்கக்கூடியவர்களாகவே காணப்படுகின்றனர். முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இலங்கைபோன்ற நாடுகளிலும் இந்நிலையே இருந்து வருகிறது.

நமது நாட்டில் பள்ளிவாயில்கள் ஆன்மீகப் பணிகளை மாத்திரம் ஆற்றிக் கொண்டிருப்பதைப் பற்றிப் பலர் குறைபட்டுக் கொண்டாலும் எம்மைப் பொறுத்தவரை இந்நிலைக்குக் காரணமாக இருந்த நம் மூதாதையர்களைப் பாராட்டவே தோன்றுகிறது. ஏனெனில் இலங்கை அந்நிய ஏகாதிபத்திய ஆட்சிக்குட்பட்டிருந்தபோது முஸ்லிம்கள் அரசியல், பொருளாதார, கல்வித் துறைகளில் திட்டமிட்டு நசுக்கப்பட்டதோடு மதமாற்ற முயற்சிகளுக்கும் ஆளானார்கள். இந்நிலையில் நம் முன்னோர்கள் ஏனைய துறைகளில் ஏற்பட்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் தமது மதத்தைப் பாதுகாத்துக் கொண்டனர். உதாரணமாக அன்றைய பாடசாலைகளில் இஸ்லாத்திற்கு முரணான கொள்கைகள் திணிக்கப்பட்டபோது அவர்கள் தம் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதை நிறுத்திக்கொண்டனர். ஆனால் பள்ளிவாயில்களையும், குர்ஆன் மதரஸாக்களையும் அமைத்து பிள்ளைகள் இஸ்லாமிய அறிவையும் நடைமுறைகளையும் கற்றுக்கொள்ள வழிகோலினர். அதாவது ஒரு சில உறுப்புக்களை இழந்துதான் உயிரைக் காப்பாற்ற வேண்டும்

என்ற நிலையேற்பட்டபோது அவர்கள் அதனைத் துணிச்சலுடன் எதிர்கொள்ளப் பின்னிற்கவில்லை. உயிரை இழந்து உடலுறுப்புக்களைப் பாதுகாத்துக் கொள்வதை விட இது மேலானதுதானே? இதன் காரணமாக முஸ்லிம்கள் அரசியல், கல்வித்துறைகளில் பின்னடைய நேரிட்டாலும், அவர்களது மத அனுஷ்டானங்களில் எவ்விதமாற்றமும் ஏற்படவில்லை. இன்றுவரை இலங்கை முஸ்லிம்கள் இஸ்லாமிய உணர்வு மிக்கவர்களாகக் காணப்படுவதும், நாட்டின் பல பாகங்களிலும் ஏராளமான பள்ளிவாயில்கள் அமைந்திருப்பதும் இதனையே காட்டுகிறது. இவை நம் முன்னோர்களின் அயராத உழைப்பினதும், தியாகத்தினதும் பிரதிபலன் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இவ்வாறு நம் முன்னோர்களினால் பல இடையூறுகளுக்கு மத்தியில் பேணிப்பாதுகாக்கப்பட்டு இன்று நம் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ள பள்ளிவாயில்களில் அண்மைக் காலங்களில் ஆங்காங்கு ஏற்படும் சில பிரச்சினைகள் கவலையளிப்பனவாக அமைந்துள்ளன. பள்ளிவாயில் சொத்துக்களை நிர்வகித்தல், நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமனம் போன்றவற்றில் ஏற்படும் பிரச்சினைகளே இவை. இப்பிரச்சினைகள் காரணமாக சில ஊர்களில் ஜமாஅத்தார்களுக்கிடையே பிரிவினைகள் ஏற்பட்டது மட்டுமன்றி, பள்ளிவாயில்களின் அன்றாட நடவடிக்கைகளும் தடைப்பட்டுள்ளன. சில பள்ளிவாயில்களில் இப்படியான பிரச்சினைகள் காரணமாக ஜும்மாவும் நடைபெறாதிருந்ததை அறிகிறோம். மற்றும் சில இடங்களில் இவ்விடயங்கள் நீதிமன்றம் வரை சென்றுள்ளன. மேலும் பல பள்ளிவாயில்களில் வருமானப் பற்றாக்குறை காரணமாக அவற்றை நிர்வகிப்பதிலும், அங்கு கடமையாற்றும் இமாம், முஅத்தின் ஆகியோரின் சம்பளங்களை வழங்குவதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இப்படியான பிரச்சினைகள் பற்றிப் பரவலாகப் பேசப்பட்டுவரும் இவ்வேளையில் எமது அரசாங்கம் முஸ்லிம்களின் கலாசார விவகாரங்களைக் கவனிப்பதற்கெனத் தனியானதொரு திணைக்களத்தை ஏற்படுத்தியிருப்பது நம் கவனத்தை ஈர்க்கிறது. இத்திணைக்களம் மூலம் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கும் ஆக்கபூர்வமான தீர்வுகள் காணப்படவேண்டும் என்பதே எமது அவா. குறிப்பாக கல்வி, வேலைவாய்ப்பு, குடியிருப்பு, காணிப்பங்கீடு போன்ற விடயங்களில் முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டிருப்பது வெளிப்படை. இவ்விடயங்களில் எமது உரிமைகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுப்பது இத்திணைக்களத்தினதும், அரசியல் தலைவர்களினதும் கடமையாகும். எனினும் பள்ளிவாயில் விவகாரத்தில் இத்திணைக்களத்தின் தலையீடுபற்றி பலர் மகிழ்ச்சியுற்றாலும் எம்மிடம் ஒருவித அச்சமே மேலோங்கி நிற்கிறது.

பள்ளிவாயில் விவகாரங்களைப் பொறுத்தமட்டில் வக்புசபைச் சட்டத்தைத் திருத்தியமைத்து, அதன் மூலம் பள்ளிவாயில் நிர்வாகம் சீராக நடைபெறவும், அதன் சொத்துக்கள் பாதுகாக்கப்படவும், பிரச்சினைகள் நீதிமன்றம் வரை செல்வதைத் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படப்போவதாகத் தெரிகிறது. அத்துடன் முஸ்லிம் நாடுகளிலிருந்து நிதியுதவி பெற்று மேலும் பள்ளிவாயில்களையும், மதரஸாக்களையும் அமைத்து நல்ல முறையில் நிர்வகிக்க முடியும் என்றும்கூறப்படுகிறது. சந்தேகமின்றி இவை நன்நோக்கங்கள்தான். ஆனால் நாம் கூறவிரும்புவது, பள்ளிவாயில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் முடியுமான வரை அரசியல் மட்டத்திலல்லாமல், சமூக மட்டத்திலேயே தீர்த்துக்கொள்ளப் படவேண்டும் என்பதே. ஏனெனில் பள்ளிவாயில் நிர்வாகம் சம்பந்தமான ஒரு சில அதிகாரங்களையேனும் அரச கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்களிடம் ஒப்படைப்பது, காலப்போக்கில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பது எமது சந்தேகமாகும். இக்கால அரசியல் சூழ்நிலைகளில்

எந்தவொரு அரச நிறுவனமும், அதிகாரியும் ஆட்சியாளர்களின் அரசியல் நலன்களைப் பேணக் கட்டுப்பட்டிருப்பர் என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே இவ்வாறுன நடவடிக்கைகள் இன்றில்லாவிடினும், நீண்ட காலப்போக்கில் நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமனம், இமாம்களின் கருத்துச் சுதந்திரம் போன்ற அடிப்படை விடயங்களில் அரசியல் தலையீடுகளை ஏற்படுத்திப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இது எமது ஆடை அலங்காரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கப் போய், உயிருக்கோ அல்லது இதயத்துக்கோ ஊறு விளைவித்துக் கொள்வதைப் போன்றதாகும்.

இது ஒரு வீண் சந்தேகம் எனப் பலருக்குத் தோன்றலாம். எனினும் இன்று சில முஸ்லிம் நாடுகளிலேயே ஏற்பட்டுள்ள நிலைமைகள் எமது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகின்றன. உதாரணமாக ஈராக் நாட்டில் வெள்ளிக்கிழமை குத்பா - பிரசங்கம் கூட அந்நாட்டின் அரசாங்க மத விவகார அமைச்சினுல் தணிக்கை செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட பின்பே ஓதப்பட முடியும். இவ்வாறு அனுமதிக்கப்பட்ட குத்பாக்களையும் ஒலிபெருக்கியில் ஓத முடியாது. (ஆதாரம்: *Islamic Revolution - October - 1980*). உலகிலேயே மிகப்பெரிய முஸ்லிம் நாடான இந்தோனேஷியாவில் கூட பள்ளிவாயில்களில் மார்க்கப் பிரசங்கம் செய்ய அரசின் முன் அனுமதி பெறவேண்டியுள்ளது. இதைவிடப் பாரதூரமான விடயம் என்னவென்றால் ''ஸூரத்துஇக்லாஸ்'' போன்ற ஏகத்துவத்தை வலியுறுத்தும் குர்ஆன் அத்தியாயங்களுக்கு விளக்கமளிக்க அங்கு அனுமதிக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் ஏகத்துவத்தைப் பற்றிப் பேசினுல் அங்குள்ள ஏனைய மதத்தினரது மனம் புண்படுமாம். இவை, இன்று உலகெங்கும் பரவலாக ஏற்பட்டு வரும் இஸ்லாமிய மறுமலர்ச்சியை விரும்பாத ஏகாதிபத்தியவாதிகளினுல் திட்டமிட்டுச் செய்யப்படும் சூழ்ச்சிகள் என்பதை மறந்துவிடக்கூடாது. முஸ்லிம்களின் ஈமானை அழித்தொழிப்பதில் தோல்வி கண்ட அவர்கள் கையாளும் புதிய தந்திரோபாயமே இது. ஒரு மனிதனின் இரத்தத்தில் விஷத்தைக் கலக்குவதற்கு அவனது நெருங்கிய உறவினனையே பயன்படுத்துவது போல, இப்புதிய முயற்சிக்கு சில ''முஸ்லிம்''களையே அவர்கள் தமது பிரதிநிதிகளாகப் பயன்படுத்துகின்றனர்.

இப்படியான நிலை இலங்கையிலும் ஏற்பட்டுவிட்டதாக நாம் கூறவில்லை. எதிர்காலத்திலும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதே எமது பிரார்த்தனை. நமது நாட்டைப் பொறுத்தளவில் இமாம்களின் கருத்துச் சுதந்திரம் நன்முறையில் பாதுகாக்கப்பட்டே வந்துள்ளது. அண்மையில் குடும்பக்கட்டுப்பாடு பற்றிய அரசின் அறிவிப்பு வெளியான போது, அது பற்றிய இஸ்லாத்தின் கருத்துக்களை இமாம்கள் தமது குத்பாக்கள் மூலம் மக்களுக்கு எடுத்துரைத்தது இதற்குப் போதிய சான்ருகும். இச் சுதந்திரத்திற்கு பாதகம் ஏற்படுவது ஒரு மனிதனது இருதயத்தின் சுயாதீன தொழிற்பாட்டுக்கு ஊறு விளைவதற்கு ஒப்பானதாகும். எனவே இவ்வாறுன சுதந்திரங்கள்தான் எமக்கு அவசியமேயன்றி ஆடம்பரமான பள்ளிவாயிற் கட்டிடங்களும், நவீன வசதிகளுமல்ல.

முடிவாக நாம் வலியுறுத்திக் கூறவிரும்புவது என்னவென்ருல் முஸ்லிம் கலாசார விவகாரத் திணைக்களம் முஸ்லிம்கள் கல்வி, வேலைவாய்ப்பு, குடியேற்றம் போன்ற விடயங்களில் இழந்துள்ள உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டுமேயன்றி, எவ்விதத்திலும் எமது மதசுதந்திரங்கள் பறிபோவதற்கு வழி வகுத்து விடக்கூடாது. இவ்விடயத்தில் தூரதிருஷ்டியுடனும், விழிப்புடனும் செயலாற்ற வேண்டும். மேலும் வக்புசபைச் சட்டத்திருத்தம்போன்ற மாற்றங்களை ஏற்படுத்த முனையும்போது பொதுமக்களின் அபிப்பிராயங்களும் கோரப்பட்டு கவனத்திற்கு எடுக்கப்படல்வேண்டும். இதுகாலவரை அவர்களினுலேயே சுட்டிக்

காக்கப்பட்டு வந்த பள்ளிவாயில்களின் நிர்வாக அமைப்பு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும்போது அவர்களின் கருத்துக்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுவது எவ்விதத்திலும் நியாயமாகாது. பௌத்த கலாசார விவகாரத் திணைக்களத்தினால் ''சங்க சபா''விற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முன்பே அது பல நாட்களாக சிங்களத் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு பொதுமக்களின் கருத்துக்கள் கோரப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அதே வேளையில் உலமாப் பெருமக்களும் இவ்விடயங்களில் கவனமெடுத்து, தமது ஆலோசனைகளைப் பொதுமக்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் எடுத்துக் கூறவேண்டும். அண்மையில் ''ஜம்இய்யத்துல் உலமா'' இன்றைய சமூகத்தில் பள்ளிவாயில்களின் பங்கு பற்றி ஒரு கருத்தரங்கை நடாத்தியது மகிழ்ச்சிக்குரியதே.

ஈற்றில் பாரிய பொறுப்பு பொதுமக்களைச் சார்ந்ததே. இன்று நம் பள்ளிவாயில்கள் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் நாம் ஒற்றுமையாகப் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுவதன் மூலம், அரசியல் மட்டத்திற்கு செல்லாமல் எமக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள முடியும். பள்ளிவாயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக மார்க்கப் பேணுதலுடையவர்களையே தெரிவு செய்யவேண்டும். அப்போதுதான் பள்ளிவாயில்கள் தம் பங்களிப்பை உரியமுறையில் ஆற்றும் எனவும், அவற்றின் சொத்துப் பராமரிப்பு நேர்மையாக நடைபெறும் எனவும் எதிர்பார்க்க முடியும். அத்தோடு பள்ளிவாயில் நிர்வாகத்திற்குத் தேவையான நிதி வசதிகளை நமக்குள்ளேயே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். மிக முக்கியமாக இமாம்கள், முஅத்தின்களின் நியாயமான ஊதியத்தை ஊர்ஜமாஅத்தினர்களிடமிருந்தே பெற்றுக் கொடுக்க வழி செய்யவேண்டும். இது எமது இதயத்திற்கு அளிக்கும் ஊட்டச்சத்துப் போன்றது என்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். மேலும் பள்ளிவாயில்களின் வெளியலங்காரங்களில் கவனம் செலுத்துவதை விடுத்து இயன்றவரை பெருமானார் (ஸல்) அவர்கள் விட்டுச்சென்ற இலட்சியப் பள்ளிவாயிலின் சாயலை நம் பள்ளிவாயில்களில் படிப்படியாக ஏற்படுத்திக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து வரவேண்டும். அதுமட்டுமன்றி, இன்று பள்ளிவாயில் நிர்வாக விடயங்களில் நடைபெறும் அரசியல் மட்ட நடவடிக்கைகளைத் தூரதிருஷ்டியோடு நோக்கி, அரசியல் தலைவர்களை வழி நடாத்த வேண்டும்.

சுருங்கக்கூறின் இஸ்லாமிய சமுதாயத்தின் உயிர்நாடியான பள்ளிவாயில்கள், பெருமானாரது இலட்சியப் பள்ளிவாயிலோடு ஒப்பிடும்போது இன்று பல உறுப்புக்களை இழந்த ஆனால் ஓரளவு ஆரோக்கியமான குழந்தையின் நிலையில் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இழந்த உறுப்புக்களை மீளப்பெறுவது ஒருபுறமிருக்க, அதன் உயிருக்கோ, ஆரோக்கியத்திற்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு பாதுகாத்துக்கொள்வதே அத்தியாவசியமாகும். இக் கடமையை வேறுயாரிடமும் ஒப்படைக்காது, தன் மடியிலேயே வைத்துப் பேணுவதே முழுச் சமூகத்தினதும் தலையாய பொறுப்பாகும்.

# - இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பாரம்பரியங்கள் -

**கே. எம். எச். காலிதீன்**
அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றை தனியாக விளக்கும் நூலோ ஆய்வுக் கட்டுரைகளோ இது வரை ஒழுங்காக வெளிவரவில்லை. எமது முஸ்லிம் மஜ்லிஸ் ஆரம்பிக்கப்பட்டு, இதுவரை வெளியிட்ட இரு ' இன்கிலாப்'' சஞ்சிகைகளும் ''இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியங்கள்'', ''இலங்கை முஸ்லிங்களின் கலாசார பாரம்பரியங்கள்'' ஆகிய எனது கட்டுரைகளை வெளியிட்டன. இத் தொடரில் இவ்வாண்டு வெளியிடவுள்ள ''இன்கிலாப்'' சஞ்சிகைக்கு ''இலங்கை முஸ்லீம்களின் அரசியல் பாரம்பரியங்களை'' மேலோட்டமாக ஆய்வு செய்வதன் மூலமாக, இக் குறையை நிவர்த்திக்க வழி அமைக்கலாம் எனக் கருதியே இக் கட்டுரையை எழுத முற்பட்டேன். இதில் கூறப்படும் கருத்துக்கள் நாம் மேற்கொண்ட ஆய்வில் இருந்து பெறப்பட்ட சிந்தனையின் முடிவுகளாகும். இத்துறையில் மேற்கொண்டும் ஆய்வை மேற் கொள்வோருக்கு இது வழி அமைக்கவேண்டும் என்பதும் எமது விருப்பாகும்.

### எமது அரசியல் வரலாற்றின் ஆரம்பம்:

ஆதி பிதா ஆதம் (அலை) அவர்கள் சுமார் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் தரிபட்ட நாடு என வரலாற்றுக் குறிப்புக்கள் தெளிவு படுத்துவதால், முதல் மனிதன் முதன் முதல் தரிபட்டநாடு என்னும் வகையில், இலங்கைக்கு உலக வரலாற்றில் புகழுண்டு. இப்புகழானது, ஏனைய வரலாற்றுக் குறிப்புக்களையும், ஆதாரங்களையும் மிகைத்து விளங்குவதால் இதன் பெறுமதி கனமுடையதாகும். முத்துக்களும் இரத்தினங்களும், மாணிக்கங்களும், வாசனைத்திரவியங்களும், யானைத் தந்தங்களும் எமது நாட்டின் புகழை வரலாற்று ரீதியில் மட்டுமன்றி அரசியல் அந்தஸ்திலும் மத்தியகால வரலாற்றில் உயர்த்தியுள்ளன.

உலக வரலாற்றில் பெரும் சாம்ராச்சியத்தை அமைத்திருந்த உரோமர்களின் வணிகச் செல்வாக்கை, கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் அரேபியர்கள் முறியடித்து, இலங்கையின் வணிகத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததைத் தொடர்ந்து, அறபு நாடுகளுக்கும் - குறிப்பாக மத்திய கிழக்கிற்கும் இலங்கைக்கும் இடையே நெருங்கிய வர்த்தக உறவுகள் வளர ஆரம்பித்தன. இவ்வுறவுகள் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இருந்து கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை இலங்கையில் பலமான செல்வாக்கைப் பெற்றிருந்தது. (1)

இப்னு ஸஹ்ரயார் தம்முடைய ' அஜாயிபுல் ஹிந்த்'' என்னும் நூலில் இலங்கைக்கும் அறபு நாட்டுக்கும் இடையேயுள்ள தொடர்புபற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''இஸ்லாத்தின் திரு நபியைப் பற்றியும், அவர்களின் அற போதங்களைப் பற்றியும் இலங்கையிலும் அதன் சூழலிலும் வாழ்ந்து வந்த மக்கள் அறிய வந்த பொழுது, அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பற்றியும் இஸ்லாத்தைப் பற்றியும் நேரடியாகத் தெரிந்து வருவதற்காக ஒருவரை அறபு நாட்டிற்கு அனுப்பி வைத்தனர். நீண்ட, துன்பம் நிறைந்த பயணத்தைச் செய்து, அவர் மதீனாவை

யடைந்த பொழுது உமர்(றழி) அவர்களே கலீபாவாக இருந்து அரசோச்சிக் கொண்டிருந்தார். அவர்களிடமிருந்து இஸ்லாத்தைப் பற்றியும், இஸ்லாத்தின் திரு நபியைப் பற்றியும் செய்திகளைக் கேட்டறிந்து கொண்டு திரும்பும் வழியில் இப்பொழுது பாக்கிஸ்தானிலுள்ள மக்ரான் என்ற இடத்தில் அவர் இறந்துவிட்டார். பின்னர் அவருடைய இந்து ஊழியன் இலங்கை வந்து இஸ்லாத்தைப் பற்றியும் அண்ணல் நபி(ஸல்) அவர்களைப் பற்றியும் தாம் கேட்டறிந்த செய்திகள் அத்தனையையும் எடுத்துரைக்க, அதுகேட்டு மகிழ்ந்த இலங்கை மக்கள், முஸ்லிம்கள் மீது அன்பும் அபிமானமும் கொண்டு அவர்களை முகம் மலர வரவேற்று உபசரித்தனர்.'' (2)

ஆரம்ப காலத்தில் இருந்தே இலங்கையுடன் அறபு வணிகர்கள் கொண்டிருந்த தொடர்புகள் இதனைத் தொடர்ந்து இலங்கையில் மேலும் வளர்ச்சி பெற வழி வகுத்துள்ளது. ஆரம்ப காலங்களில் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிட வேண்டிய அவசியம் அறபு முஸ்லிம்களுக்கிருக்கவில்லை. அவர்களுக்கு எவ்வித பிரச்சினைகளையும் இங்கு வாழ்ந்த மக்கள் உருவாக்கவில்லை. வெளிநாட்டுப் பொருட்களை அவர்கள் உள்ளூரில் உயர் வகுப்பினரில் இருந்து, தாழ்ந்த பிரிவினர் வரை எல்லா மக்களுக்கும் வழங்கியமையால் முஸ்லிம் வணிகர்களுக்கு தனியான அந்தஸ்தினை இலங்கை மக்கள் கொடுத்தனர்.

## மத்திய கிழக்கில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி:

மத்திய கிழக்கில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியைத் தொடர்ந்து இலங்கைக்கும் அறபு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் மேலும் வலுப்பெறலாயின. உமைய்யாக்களின் ஆட்சிக் காலப்பிரிவில் இலங்கையில் அறபு முஸ்லிம்களின் குடியேற்றம் பல பாகங்களிலும் இடம்பெற்றதாக வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இவர்களின் ஆட்சிக்காலப் பிரிவில் முஹம்மத்பின் காஸிம் (கி. பி. 712) இந்தியாமீது படையெடுக்க முக்கிய காரணம் இலங்கையில் இருந்து தமது தாயகத்துக்குச் சென்ற அறபு மக்களின் குடும்பங்களை இந்திய கடற் கொள்ளைக்காரர்கள், கைப்பற்றி கொள்ளையிட்டமையாகும். (2) இந் நிகழ்ச்சி உமைய்யா ஹலீபா அப்துல் மலிக்கின் ஆட்சியின் போது இடம் பெற்றது.

அறபு முஸ்லிம் வணிகர்கள் தென்கிழக்கு ஆசியாவுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகள் இலங்கையின் ஊடாக இடம் பெற்றமையால் தமது பிரதான துறைமுகமாக காலித் துறைமுகத்தைப் பயன்படுத்தினர். காலித் துறைமுகமே இலங்கையின் பழமை வாய்ந்த துறைமுகமாகும். வர்த்தகத்துறை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இங்கு ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டிருந்தது. இந் நீதிமன்றத்துக்கு தலைவராக 'காழி'' என்று அறபியில் அழைக்கப்படும் நீதிபதி பணிபுரிந்தார். அப் பெயரே இவ்விடத்துக்குரிய பெயராக வழக்கில் இடம் பெற்றுவிட்டது. இப் பிரதேசத்தில் அறபு முஸ்லிம்களின் ஆதிக் குடிகள் பரவலாக வாழ்ந்தனர்.

இங்கு குடியேறி வாழ்ந்த முஸ்லிம்கள், சிங்கள மன்னர்கள் ஆட்சி செய்த பிரதேசங்களிலும், தமிழ் மன்னர் ஆட்சி செய்த பகுதிகளிலும் பரவலாக வாழ்ந்தனர். முஸ்லிம்களது சமயக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், சமூக நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும், இங்கு காணப்பட்ட அரசாங்கங்கள் தடையாக இருக்கவில்லை என்பது விஷேட கவனிப்புக்குரியதாகும்.

பிரபல அறபுப் புவியியலாளரும் தேச சஞ்சாரியுமான அல் இத்ரீஸி அவர்கள், தாம் வரைந்த உலகப்படத்தில் இலங்கையையும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையைப்பற்றி அவர் குறிப்பிடுகையில், இலங்கை அரசாங்கம் சமயப் பொறையை உடையது என்றும், எல்லாச் சமயங்களுக்கும் சமத்துவம் அளிக்கும் கொள்கையை உடையது எனவும் குறிப்பிட்டு அரசருடைய அமைச்சரவையில் ஆலோசகர்களாக நான்கு பௌத்தர்களும், நான்கு முஸ்லிம்களும், நான்கு கிறிஸ்தவ யூத மதங்களைச் சார்ந்தவர்களும் இடம் பெற்றிருந்தனர் எனக் குறிப்பிடுகின்றார். (4)

அப்பாஸியர் ஆட்சிக் காலம் சுமார் ஐந்து நூற்றாண்டுகள் மத்திய கிழக்கில் இடம்பெற்றிருந்தது. அவர்களின் ஆட்சிப் பிரதேசங்கள் பரந்திருந்தமையாலும் செல்வத்தில் உயர்வடைந்திருந்தமையாலும் வணிகத் தொடர்புகள் இலங்கையுடன் நெருக்கமாக ஏற்பட்டது. கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஹலீபா பதவியை ஏற்ற ஹாரூன் அல்ரஷீத் அவர்களின் ஆட்சியின்போது, தமது தூதுவராக அஸ்ஸப்பாஹ் என்பவரை அனுராதபுரத்தில் ஆண்டுவந்த மன்னரின் அரசவைக்கு அனுப்பிவைத்தார். என்றும், அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப் பட்டதாகவும் குறிப்பிடப் படுகின்றது. இலங்கைக்குத் தேவையான வர்த்தகப் பொருட்களையும் உணவு வகைகளையும் ஏக போக உரிமையுடன் இவர்களே அளித்து வந்தனர். இதனால் அரச சபைகளில் இவர்களுக்குத் தனியான அந்தஸ்து அளிக்கப்பட்டது.

மத்திய காலத்தில் கல்வித்துறைகளின் முன்னேற்றங்களில் முஸ்லிம்கள் வளர்ச்சி பெற்றிருந்தமையால், வைத்திய, விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் அறபு முஸ்லிம்கள் முன்னணி வகித்தார்கள். இலங்கை மன்னர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்த அறபு முஸ்லிம்களில் ஹகீம்களின் உதவியை நாடினர். மாற்ற முடியாத நோய்களை இவ்வாறான வைத்தியர்கள் மாற்றினார்கள் என இலங்கை வரலாறு தெளிவுபடுத்துகின்றது. அரச வைத்தியர்களாக அரச சபைகளில் இவர்கள் புகழ் பெற்றிருந்தார்கள். வைத்தியர்களின் குடும்பங்கள் பக்தாதில் இருந்தும், ஸ்பெயினில் இருந்தும் இலங்கைக்கு வந்தனர். இவர்களது பரம்பரை, வைத்தியத்துறையில் இலங்கை மன்னர்கள் மத்தியில் புகழ் பெற்றிருந்தன. இவர்களது சேவையின் முக்கியத்துவம் கருதி செம்பாலான பட்டயங்களும் வழங்கப்பட்டிருந்ததை சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் பிற்காலத்தில் விளக்கியுள்ளார்.

வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருந்த அறபு முஸ்லிம்கள் நகரங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கைக் கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் இலங்கையின் மேற்குக் கரையோரங்களில் இருந்து வர்த்தகம் செய்த இவர்களுக்கு மன்னர்களின் ஆதரவு எப்போதும் இருந்து வந்துள்ளது. காலப் போக்கில் இலங்கையின் கிழக்கு வடக்குப் பிரதேசங்களுக்கும் இவர்களின் வர்த்தகம் விஸ்தரிக்கப்பட்டது. நகர ஆக்கங்களில் காலி, கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கண்டி உட்பட ஏனைய கரையோர நகரங்களை உருவாக்கியவர்கள் முஸ்லிம் வர்த்தகர்களே என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அறபு வர்த்தகர்கள் பத்தாம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் கொழும்புத் துறைமுகத்தை பிரதானமாகக் கொண்டிருந்தனர் என்பதை இலங்கை வரலாற்று நூல் தெளிவுபடுத்துகின்றது. போர்த்துக்கீசர் வரும்வரை முஸ்லிம்களின் பிரதான துறைமுகமாகவும் இது இருந்தது. (5)

## எகிப்துக்கும் இலங்கைக்கும் தொடர்புகள்:

இஸ்லாமிய நாடுகளின் வர்த்தக நிலையங்களுள் கேந்திரஸ்தானமாக விளங்கிய நாடு எகிப்தாகும். மேலைத்தேச, கீழைத்தேச வர்த்தகங்கள் எகிப்தின் ஊடாக இடம் பெற்றமையால், பிரதான நகராகவும் இது விளங்கிற்று. ஐரோப்பாவில் வெனிஸ், ஜெனோவா பெற்றிருந்த சிறப்பைவிட, எகிப்து அதிமுக்கியத்துவமானதாகவும், பல நாட்டு மக்களும் ஒன்றுபடும் இடமாகவும், பல நாகரிகங்களும் சங்கமிக்கும் பிரதேசமாகவும் இது விளங்கிற்று. எகிப்திய சுல்தானுக்கு இலங்கை மன்னன் புவனேகபாகு, பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் அனுப்பிய தூது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புவனேகபாகு அனுப்பிய செய்தியில் கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. ''எகிப்து தான் இலங்கை. இலங்கைதான் எகிப்து. எகிப்தின் தூதுவர் ஒருவர் எம்முடன் இருப்பதை விரும்புகின்றேன். ஏடனில் இன்னுமொரு தூதுவரை நியமிக்கலாம். பெறுமதி வாய்ந்த முத்துக்களும், இரத்தினங்களும் எம்மிடம் பல தரத்திலும் இருக்கின்றன. எம்மிடம் கப்பல்களும் உண்டு; யானைகள், துணிவகைகள், மரவகைகள், கறுவா போன்ற தேவையான பொருட்களைப் பெறமுடியும். தேவையான தளபாடங்களைச் செய்வதற்கு, மரவகைகளை இருபது கப்பல்களில் ஒவ்வொரு வருடமும் தரமுடியும். எனது இராச்சியத்தில் உங்களது வர்த்தகர்கள் சுதந்திரமாகத் தமது வியாபாரங்களைச் செய்வதற்கு அனுமதியளிக்கப்படும். என்னிடம் எமன் நாட்டுத் தூதுவர் வர்த்தக நோக்கத்திற்காக வந்தார். உங்கள்மீது உள்ள அன்பால் அவரை நான் திருப்பி அனுப்பிவிட்டேன்'' (6) என இலங்கை மன்னன் அனுப்பிய செய்தியில் குறிப்பிடப்பட்டது.

## முஸ்லிம் இளவரசர்:

புவனேகபாகு மன்னனுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே காணப்பட்ட தொடர்புகள் இன்னுமொருவகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பாண்டியர்களின் படையெடுப்பினால் பாதிக்கப்பட்ட இலங்கை அரசியல் வத்ஹிமி என்னும் இளவரசருக்குச் சென்றது பற்றி ஒரு வரலாறு உண்டு. இரண்டாவது புவனேகபாகுவிற்கு முஸ்லிம் பெண் பெற்றெடுத்த இளவரசரே வத்ஹிமி இளவரசாகும். இவரது ஆட்சியை விரும்பாத பௌத்த குருமார், இவரை தந்திரோபாயத்தின் மூலம் கொலை செய்துவிட்டனர். பின்னர் ''கலே பண்டார தெவியோ'' என இவர் சிங்கள மக்களால் அழைக்கப்பட்டு தெய்வ அந்தஸ்துக் கொடுக்கப்பட்டு வழிபட்டு வரலாயினர். யாப்பகுவயினதும், குருநாகலினதும் அரசியல் பாதுகாவலர்களாக முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இபுனு பதூதா இலங்கைக்கு வந்தபோது இரு ஆட்சிப் பிரிவுகள் இலங்கையில் இருந்தது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆரியச் சக்கரவர்த்திகள் வட பிரதேசத்தையும், சிங்கள மன்னர்கள் ஏனைய பிரதேசங்களையும் ஆட்சி செய்துள்ளது தெரியவருகிறது. குருநாகலுக்குச் சென்ற இபுனுபதூதாவை, குருநாகல் மன்னன் ஆதரித்த செய்தியும் அங்கு, முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டிருந்த கௌரவமான அந்தஸ்தும் அவரது குறிப்புக்களில் காணப்படுகின்றன. ''நகரின் வெளிப்பகுதியில் செய்க் உதுமான் ஸீராஸி அவர்களின் பள்ளிவாசல் அமைந்திருந்தது. ''ஸாவுஸ்'' என இது அழைக்கப்பட்டது. இலங்கை நாட்டின் (பிரதான அரசராக விளங்கிய) குருநாகல் மன்னனும், பிரஜைகளும் இதனைத் தரிசிக்கும் பழக்கமுடையவர்களாக இருந்தனர்.'' (7)

இவ்வாறான உறவு முறைகளும், நெருங்கிய தொடர்புகளும் அரசியல் ரீதியிலான பிணைப்பும் ஆரம்பகாலத்தில் இருந்தே சிங்கள மன்னர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நிலவி வந்தன. தலை நகரங்கள் மாறியபோதும் இதனால் முஸ்லிம்களுக்கு பாதிப்புக்கள் இடம் பெறவில்லை. பிரதான அரசர்கள் தங்களுக்குப் பாதுகாவலிற்காகத் தமது தலைநகரங்களுக்கு அண்மையில் முஸ்லிம்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்திருந்தனர். பழைய இராசதானிகளை அண்டி முஸ்லிம்களின் குடியேற்றங்கள் காணப்பட்டமைக்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

### பாக்தாத்தின் வீழ்ச்சி:

மங்கோலியரின் படையெடுப்பினால் இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் தலைநகராக விளங்கிய பாக்தாத் அழிக்கப்பட்டாலும், இஸ்லாமிய உலகில் பல்வேறு சிற்றரசுகள் ஆட்சியினை மேற்கொண்டிருந்தன. சிலுவை யுத்தங்களின் காரணமாக மேற்குலகைச் சார்ந்த வணிகர்கள், கீழைத்தேச வணிகத்தினைப்பற்றி அறிந்து கொண்டனர். தரை மார்க்கமாகத் தமது வணிகத்தினை மேற்கொள்ள முஸ்லிம்கள் தடையாக இருப்பர் எனக் கண்ட ஐரோப்பிய நாடுகள், கடல்மார்க்கமாகப் பாதை கண்டு பிடிப்பதில் முயன்றனர். இதன் விளைவே ஆபிரிக்காவின் நன்நம்பிக்கை முனையைச் சுற்றி ஐரோப்பியர் கீழைத்தேசத்துடன் கொண்ட தொடர்பாகும். ஏற்கனவே சிலுவை யுத்தங்களினாலும், வர்த்தகத்தினாலும் முஸ்லிம்கள் அடைந்திருந்த முன்னேற்றங்களைக் கண்டு பொறாமையுற்றிருந்த இவர்கள், தாங்கள் சென்ற பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களைத் தமது பொது எதிரிகளாகக் கருதி செயல்பட்டனர். ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும், இலங்கையிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் இக் கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டது.

### இலங்கைக்குப் போர்த்துக்கீசரின் வருகை:

ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல், பாக்தாத்தின் வீழ்ச்சியின் பின் அறபு வணிகர்களின் வருகைக்குப் பதிலாக இந்திய உபகண்டத்தில் இருந்து, முஸ்லிம்கள் இலங்கையுடன் வர்த்தக உறவுகளை வளர்த்து வந்தனர். இவர்கள் மலபாரில் இருந்தும், கொரமண்டல், காயல்பட்டினம், கீழைக்கரை ஆகிய தென்னிந்தியப் பிரதேசங்களில் இருந்தும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர். இவ் வர்த்தக முயற்சிகளுக்கு இலங்கை மன்னர்கள் ஆதரவு வழங்கிவந்தனர். "கிழக்கிந்திய தீவுகளின் வர்த்தகத்தின் கேந்திர நிலையமாக மலாக்கா விளங்கியது. இங்கு பெறுமதி மிக்க வாசனைத் திரவியங்கள் பெறப்பட்டன. முஸ்லிங்களின் பிரதான வர்த்தக நிலையமாகவும் இது விளங்கியது. கீழைத்தேச வர்த்தகப் பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பும் தலமாக எகிப்து விளங்கியது. இவ்வர்த்தகம் முஸ்லிம்களின் கைகளிலேயே தங்கியிருந்தது. இது சமாதான முறையில் இடம் பெற்றுவந்தது. இந்து சமுத்திரத்தில் முஸ்லிம்கள் வர்த்தகத்தில் தனி ஆதிக்கம் பெற்றிருந்தனர். இது இலங்கையூடாக இடம் பெற்றது." (8)

இச் சூழ்நிலையில்தான் போர்த்துக்கீசர் இலங்கையுடனும் தொடர்புபட்டனர். ஆசியாவுக்குப் போர்த்துக்கீசர் வந்தவுடன் ஆசியாவிலும் இலங்கையிலும் அவர்கள் பெற்றிருந்த அரசியல் செல்வாக்கையும் வர்த்தக ஆதிக்கத்தையும் அழித்தொழிப்பதிலும் தமது வர்த்தக, சமய செல்வாக்குகளைப் பரப்புவதிலும் கவனம் செலுத்தினர். முஸ்லிம்களின் பண்புகளையும், போர்த்துக்கீசரின் இயல்புகளையும் நன்கு அறிந்து கொண்ட இலங்கை மன்னர்கள், முஸ்லிம்களின் பக்கமே தமது ஆதரவு

களை நல்கிவந்ததை போர்த்துக்கீசரின் காலப் பிரிவில் நாம் காண்கின்றோம். ஏழாம் விஜயபாகு மன்னன் போர்த்துக்கீசருக்கு எதிராகப் படை எடுப்பு மேற்கொண்ட போது, முஸ்லிம்களின் உதவியை நாடியது இதற்கோர் உதாரணமாகும். தென்னிந்தியாவில் ஆட்சிபுரிந்த இந்து சமயத்தைச் சார்ந்த மன்னர்களும் முஸ்லிம்களின் உதவியையே நாடினர். பொதுவாக மன்னர்களும் மக்களும் போர்த்துக்கீசரையே பொது எதிரிகளாகக் கருதினார்கள்; முஸ்லிம்களை நண்பர்களாகவே கருதி செயல்பட்டுள்ளனர்.

## கோட்டை இராச்சியத்தின் பிரிவினையால் முஸ்லிம்கள் அடைந்த பாதிப்பு:

பலம்மிக்க இராசதானியாக விளங்கிய கோட்டை அரசு பிரிவுபட்டதும், இளவரசர்களிடையே ஏற்பட்ட அரசியல் பிணக்குகள், போர்த்துக்கீசரை இந்நாட்டின் மீது அதிகாரம் செலுத்த வழி அமைத்தது. இது ஏழாவது புவனேகபாகுவின் காலத்தில் இடம்பெற்றது. புவனேகபாகு தனது சகோதரனை மாயாதுன்னைக்குப் பயந்து போர்த்துக்கீசருடன் உறவுகள் வைத்துக்கொள்ள முனைந்தது, கொழும்புப் பிரதேசத்தில் வர்த்தகத்துறையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களைப் பெரிதும் பாதித்தது. புவனேகபாகுவின் ஆட்சிப் பகுதியில் உள்ள முஸ்லிம்களை வெளியேற்றுவதில் கவனம் எடுத்த போர்த்துக்கீசர், இத்திட்டத்தை புவனேகபாகுவின் மூலமே சாதிக்க முற்பட்டனர். வெளிநாட்டவரின் தலையீட்டால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட முதல் பெரும் பாதிப்பு இதுவாகும். இலங்கை மக்களால் போற்றப்படும் மாயாதுன்னை மன்னன் தனது ஆட்சிப் பிரதேசமான சீதாவாக்கையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு காணிகள் வழங்கி புகலிடம் அளித்தான். நகரங்களை உருவாக்கி கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் உள்நாட்டை நோக்கி நகர வேண்டிய சூழ்நிலை முதன் முதலாக இலங்கை வரலாற்றில் ஏற்பட்டது. கொழும்புத் துறைமுகமோ, அல்லது தென்மேற்குக் கரையோரங்களோ தமது வர்த்தகத்துக்கு எதிர் காலத்தில் வெற்றியளிக்காது எனக் கருதிய முஸ்லிம்கள் புத்தளத்தில் குடியேற்றத்தை அமைத்தனர். முதலாவது அரசியல் பாதிப்பால் ஏற்பட்ட இடப் பெயர்வு இதுவாகும். புத்தளப் பிரதேசம் மாயாதுன்னையின் சீதாவாக்கைப் பிரதேசத்தில் அடங்கியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## சிங்கள மன்னர்களின் நல்லுறவுகள்:

மாயாதுன்னையின் படை வீரர்களாகவும், அரசியல் தூதுவர்களாகவும் முஸ்லிம்களும் விளங்கினார்கள். கலிகட் மன்னனுக்கு மாயாதுன்னையின் அரசியல் தூதுகளை முஸ்லிம்களே எடுத்துச் சென்றனர். தென்னிந்திய மன்னர்களும், இலங்கை தேசிய மன்னர்களும் ஒன்றிணைந்து போர்த்துக்கீசருக்கு எதிராக நடாத்திய போராட்டங்களில் முக்கிய பங்கினை இலங்கை முஸ்லிம்கள் வகித்துள்ளார்கள். படைத்துறையில் சிங்கள மக்களை விட முஸ்லிம்களுக்கு அதிக அனுபவமும் நடை முறைகளும் தெரிந்திருந்தன. மாயாதுன்னையோடு தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம்களை புத்தளத்தில் மட்டுமன்றி; மன்னார், சிலாபம், நீர்கொழும்பு, களுத்துறை, பேருவலை, அளுத்கம, பெந்தோட்டை, காலி, வெலிகம ஆகிய பிரதேசங்களிலும் குடியேற வாய்ப்பளிக்கப்பட்டது. கொழும்பில் ஆதிக்கம் பெற்ற போர்த்துக்கீசர் தென்மேற்குப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு இன்னல் விளைவிக்க முற்பட்டனர். இதன் முக்கிய கட்டமே 1575-ல் வெலிகமயில் நடைபெற்ற சண்டைகளில் அதிகமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டமையாகும். எனினும் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்

கீசருக்கு எதிர்ப்புக்கள் ஐரோப்பிய நாடுகளிலும், உள் நாட்டிலும் வலுத்தமையால் முஸ்லிம்கள் மீது அவர்கள் கடைப்பிடித்த கொள்கையைத் தளர்த்த வேண்டி ஏற்பட்டது. அத்துடன் தமது கொள்கையால் தமது வணிகத்துக்கும், உதவிகளுக்கும் ஏற்படும் நஷ்டங்களை அவர்கள் உணர்ந்தனர். சுயநல, இலாப நோக்கத்தின் அடிப்படையிலேயே, அவர்கள் தமது கொள்கைகளில் மாற்றததைக் கொண்டு வந்தனர் என குவெஸ்ரோஸ் சுவாமி குறிப்பிட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

முதலாவது இராஜசிங்க மன்னன் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள் விதானைகளாகவும், கணக்கப்பிள்ளைகளாகவும் விளங்கினர். அரசாங்கக் களஞ்சியங்களின் முக்கிய பொறுப்புக்களும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன உதாரணமாக காலியில் இருந்த அரசாங்க உணவுப் பண்டகசாலை முஸ்லிம் அதிகாரியின் பொறுப்பில் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

கண்டிப் பிரதேச மன்னன் சேனரதன், போர்த்துக்கீசர்களுக்கு எதிராக முஸ்லிம்களைத் தனது பிரதேசத்தில் குடியேறுவதற்கு வாய்ப்பளித்து நிலங்களையும் வழங்கினன். இதன் ஒரு பகுதியே மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஏற்பட்ட முஸ்லிம்களின் குடியேற்றமாகும். அரசியல் ரீதியான இம் மாற்றங்கள் இலங்கை மன்னர்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையே ஏற்பட்டிருந்த நல்லுறவுகளை விளக்குகின்றன. இத் தொடர்புகளும், உறவுகளும் ஒல்லாந்தரின் காலத்தில் மேலும் வலுப் பெறலாயிற்று.

## ஒல்லாந்தர் முஸ்லிம்கள்மீது கடைப்பிடித்த கொள்கை:

பதினேழாம் நூற்றுண்டின் மத்தியகாலப் பிரிவில், போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தை முறியடித்த ஒல்லாந்தர் இலங்கையிலும் தமது ஆதிக்கத்தை வளர்க்க முற்பட்டனர். போர்த்துக்கீசர் போன்றே சமயத்துறையிலும், வர்த்தகத் துறையிலும் முஸ்லிம்களைத் தமது எதிரிகளாக ஒல்லாந்தர் கருதினர். என்றுலும் ஆரம்பத்தில் தமது சட்டங்களைக் கடுமையாகத் திணிக்க விரும்பவில்லை. மக்களைத் துன்புறுத்திய ஒல்லாந்த உத்தியோகஸ்தர்களை உயர் அதிகாரிகள் தண்டித்தனர். சமயத்துறையில் முஸ்லிம்கள் அவர்களின் பொது எதிரியாக விளங்கியமையால் அரசியல் அந்தஸ்துக்களில் முஸ்லிம்களுக்கு இடமளிப்பது குறைவாக இருந்தது. தேச வழமையான ஊழியம், வருடத்தில் சில நாட்களுக்குச் செய்ய வேண்டும் என முஸ்லிம்களும் வற்புறுத்தப்பட்டனர். முஸ்லிம்கள் இதை விரும்பாததால் கி. பி, 1743-ல் ஒல்லாந்தரால் ஒரு சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதன்படி ''அரச ஊழியம் செய்யாதோரின் காணிகள், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்'' என அச்சட்டம் கூறியது முஸ்லிம் குடும்பத்தலைவர்கள் ஒரு ரிக்ஸ்டொலர் தலைவரியாகச் செலுத்த வேண்டும் எனவும் வற்புறுத்தப் பட்டனர்.

## குதிரைமலையைத் துறைமுகமாகக் கொள்ளல்:

முஸ்லிம்களின் வர்த்தகம் குதிரைமலை ஊடாக தென்னிந்தியாவுடன் நடைபெற்றது. ஒல்லாந்தரின் வர்த்தகத்துக்குத் தடையாக இருந்தது மலைநாட்டு மன்னர்களும் சிங்கள மக்களும் முஸ்லிம்களுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்துக் கொண்டதால் ஒல்லாந்தருக்கு இலாபம் குறைவாக இருந்தமையால்,

ஒல்லாந்தரே சுங்கப் பகுதிகளை உருவாக்கி இவ்வர்த்தகத்தை மேற்கொள்ள முயன் றனர். இதனால் மொத்த வியாபாரங்களையும், சிறிய வியாபாரங்களையும் அரசாங் கத்தின் அனுமதியின்றி செய்யக்கூடாது எனக் கட்டளையிட்டனர். இந்தியாவில் இருந்து வரும் முஸ்லிம் வர்த்தகர்கள் இங்கு தங்கியிருப் பதைக்கூட ஒல்லாந்தர் அனுமதிக்கவில்லை. கொழும்புப் பிரதேசத்தில் வசிக்க அனுமதியளிக்காத வகையில் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் சட்டம் கொண்டு வந்தனர். இது வெற்றியளிக்காததால் பின்னர் தளர்த் தப்பட்டது. 1785-ல் தான் ஒல்லாந்தரது ஆதிக்கம் நிலவிய பிரதேசங்களில், முஸ்லிம்களும் ஏனைய பிரஜைகள் போன்று வாழ்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

### மலைநாட்டில் முஸ்லிம்களின் வர்த்தகம்:

கண்டி மன்னர்களின் அனுசரணையோடு மலைநாட்டு வர்த்தகம் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்டது. குதிரை மலை பிரதான துறைமுகமாக முஸ்லிம்களால் பா விக்கப்பட்டது. இதனைத் தடை செய்வதற்காக டச்சுக் கால்வாய் என அழைக்கப் படும் கால்வாய் ஒன்று கொழும்பில் இருந்து நீர்கொழும்பு வழியாக ஒல்லாந் தரால் அமைக்கப்பட்டது. இதுவும் அவர்களுக்கு வெற்றியளிக்கவில்லை. முஸ்லிம்கள் மலைநாடுகளுக்கு தவள முறையில் உப்பு, கருவாடு, பிடவைகள் உட்படத் தேவையான பொருட்களை எடுத்துச் சென்றனர். ''மெடிகே'' என்று அழைக்கப்படும் முஸ்லிம் கிராமங்கள் ஏற்படுவதற்கு இவ்வாறான தவள முறை யிலான வர்த்தகமே காரணமாக விளங்கிற்று. முஸ்லிம்கள் பல மொழிகளை அறிந்தவர்களாகவும், பல மக்களுடன் நாகரிகமாகப் பழகக் கூடிய தன்மையுடை யவர்களாகவும், அனுபவசாலிகளாகவும் விளங்கியமையால் அரசர்களும் கூட தங்களது காரியங்களை, முஸ்லிம்களைக் கொண்டே செய்வித்துக் கொண்டனர்.

கண்டி மன்னர்கள் சில முஸ்லிம்களுக்குக் காணிகளை வழங்கி, முத்துக்கள், இரத்தினக் கற்கள் சுத்திகரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுத்தினர். இவர் களுக்கு அரச மரியாதையும் வழங்கப்பட்டது. இவ்வாறு அரச மரியாதை வழங்கப்பட்ட குடும்பங்களில் ஒன்று கோபால முதலியாரின் குடும்பமாகும். 1760-ல் கீர்த்திசிறீ மன்னனால் ''கடபேரிய சன்னஸ்ஸ'' இக்குடும்பத்துக்கு வழங் கப்பட்டது. இவ்வாறே மொலதண்ட முகாந்திரமாலாகெதர, மொல்லிகொட முகாந்திரமாலா கெதர' யட்டிநுவர முகாந்திரமாலா கெதர, வெல்வதுர முகாந் திரமாலா கெதர, பாருகார முகாந்திரமாலா கெதர எனப் பெயர்கள் வழங்கப் பட்டன. ஒல்லாந்தர் காலத்தில் மத்திய மாகாணப் பிரதேசங்களில் முஸ்லிம் களின் குடியேற்றம் அதிக அளவில் இடம் பெற்றமைக்கு ஒல்லாந்தர் கடைப் பிடித்த வர்த்தகச் சட்டம் காரணமாக விளங்கிற்று. கரையோரப் பிரதேசங் களில் இருந்து மலைநாட்டில் குடியேறிய முஸ்லிம்கள் ஏற்கனவே தமிழை தாய் மொழியாகக் கொண்டிருந்தனர். இதுவே மலைநாட்டிலும் முஸ்லிம்களின் தாய் மொழி தமிழாக இருப்பதற்குக் காரணமாகும். ஒரு சிலரே சிங்களப் பெண்களைத் திருமணம் செய்தனர். அவர்கள் சிங்கள மொழியைத் தாய் மொழியாகக் கொண் டிருந்தாலும் தமிழ் மொழியும் அவர்களது பழக்கத்தில் வளரலாயிற்று. ஒல்லாந் தர் கண்டியைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகளுக்கு எதிராகச் சிங்கள மன்னர் களுடன் சேர்ந்து முஸ்லிம்களும் சண்டைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ஒல் லாந்தரின் இலட்சியம் வெற்றிபெறவில்லை.

### பிரித்தானியர் ஆட்சியில் முஸ்லிம்கள்:

கி. பி. 1796-ல் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த ஆங்கிலேயர், கி. பி. 1802-ல் இலங்கையைப் பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக்கி கி. பி. 1815-ல் இலங்கை முழுவதையும் கைப்பற்றியதோடு, முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். முன்னைய இரு ஐரோப்பிய இனத்தவர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் போன்று வர்த்தக நோக்கத்துக்காக இலங்கையை இவர்கள் கைப்பற்றினார்கள் எனினும், சர்வதேச சூழ்நிலைகளை அனுசரித்து அதிகமான அடக்கு முறை அம்சங்களைக் கைக்கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பிருக்கவில்லை. இராச தந்திர முறைகளைக் கைக்கொண்டு தமது ஆட்சியை இலங்கையில் நிலைப்படுத்தினர்.

### முஸ்லிம் உலகின் நிலை:

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டு ஆரம்பகாலப் பகுதியிலும் முஸ்லிம் நாடுகளின் நிலையை மேலோட்டமாக ஆராய்வதன் மூலமாக, இலங்கையிலும் அதன் பாதிப்பை இலகுவாகத் தெரிந்து கொள்ளமுடியும்.

இஸ்லாமிய உலகில் தலை நிமிர்ந்து, தலைமைதாங்கிய துருக்கிய சாம்ராச்சியம் படிப்படியாக ஐரோப்பிய நாடுகளின் கைகளிலும் ரஷ்யாவின் ஆதிக்கத்திலும் சிக்கவாரம்பித்தது. பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகள் முஸ்லிம் உலகின் எஜமானர்களாக இக்காலப் பகுதியில் செல்வாக்கைப் பெற்றிருந்தனர். வட ஆபிரிக்காவிலும், எகிப்திலும், பிரான்சும், பிரித்தானியாவும் தங்களது படை பலத்தின் மூலம், தமது அதிகாரங்களைப் பலப்படுத்திக் கொண்டன. துருக்கியைத் துண்டாடுவதில் மேற்கத்திய நாடுகளும் ரஷ்யாவும் கவனம் செலுத்தின. இந்தியாவில் புகழ் பெற்று விளங்கிய மொகலாய ஆட்சியும் பிரித்தானியாவின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டு முஸ்லிம் உலகைப் பொறுத்தவரை மிகவும் துன்பங்கள் நிறைந்த காலப்பகுதியாகும். மேற்குலக நாடுகளே எஜமானர்களாக, முஸ்லிம் நாடுகளில் விளங்கினர். சுதந்திரத்துக்காகப் போராடியவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர் அல்லது நாடுகடத்தப்பட்டனர். முஸ்லிம் நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பல நாடுகள் சுதந்திரம் அடைந்தன. தென் கிழக்காசிய நாடுகளிலும் இதே நிலையே நீடித்தது.

### தேசிய இயக்கங்களின் வளர்ச்சி:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலப் பிரிவில் இருந்து சுதந்திர இயக்கங்களின் வளர்ச்சியை எல்லா நாடுகளிலும் காணக்கூடியதாய் இருக்கின்றது. இலங்கையிலும் தேசிய இயக்கங்களின் வளர்ச்சிக்கு ஆபிரிக்கா, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகளில் எழுந்த தேசிய இயக்கங்கள் துணைபுரிந்துள்ளன. பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையை அறிமுகப் படுத்திய பிரித்தானியர், இதன் மூலம் அரசியல் விழிப்புணர்ச்சிக்கு வழிவகுத்தனர் எனக் குறிப்பிடுவது ஒரு வகையில் பொருத்தமானதே. மத்திய பிரதேசத்தைக் கைப்பற்றி பௌத்த சமய விவகாரங்களில் பிரித்தானியர் தலையிட்டதை பௌத்த மக்கள் சிறிதும் விரும்பாத காரணத்தால் வேறொரு வகையில் பௌத்த மக்களிடம் இருந்து எதிர்ப்பு எழுந்தது. இவற்றின் வேகத்தை இராச தந்திரத்தின் மூலம் சமாளிக்கும் திறமையைப் பிரித்தானியர் பெற்றிருந்தனர்.

முன்னைய ஐரோப்பியர்களான போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் போன்று வர்த்தகத்தையும், கிறிஸ்தவ சமயத்தையும் பரப்பும் நோக்கம் ஆங்கிலேயருக்கும் இருந்தது. உறுதியான ஆட்சியை இங்கு நிறுவிய இவர்கள், சமயப் பிரச்சாரக் குழுவுக்கு சுதந்திரம் அளித்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் பணிகளுக்கு அரசியல் ரீதியில் சமய தாபனங்கள் மூலம் உதவிகளை வழங்கினர். இப்பணியில் வப்டிஸ்ட், வெஸ்லியன், சேர்ச், அங்கிலிக்கன், பிரஸ்வெஸ்டேரியன், மெதடிஸ்ட் ஆகிய சமயப் பிரச்சாரக் குழுக்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும், இவர்களது பணிகளின் மூலம் கிறிஸ்தவ சமயக்கல்வியும், காலப்போக்கில் ஆங்கிலக் கல்வியும் விருத்தியடைந்தது. கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த பௌத்த மக்களும், வட பிரதேசத்தில் வாழ்ந்த ஹிந்துக்களும் இவை மூலம் கிறிஸ்தவ சமயத்தை ஏற்று, ஆங்கிலக் கல்வியைக் கற்று, அரசாங்கப் பதவிகளிலும் நியமனம் பெற்றனர். ஆங்கிலக் கல்வியைப் பெற்ற வர்க்கத்தினரே பிற்காலத்தில் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட முனைந்தனர்.

## முஸ்லிம்களும் ஆங்கிலக் கல்வியும்:

முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியையோ கிறிஸ்தவ சமயத்தையோ விரும்பிக் கற்கவோ, ஏற்கவோ முன்வரவில்லை. இதனால் அரசாங்கத் துறைகளில் முஸ்லிம்களுக்கு உயர் பதவிகள் பெற முடியவில்லை. ஆங்கிலக் கல்வியைக் கற்றவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இக்கல்வி அமைப்பும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கமாகவே அமைந்திருந்தது. இவ்வாறான அரசாங்கக் கல்லூரிகளில் முஸ்லிம் பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர்கள் முன்வரவில்லை, காரணம், தமது பிள்ளைகளை இவ்வாறான பாடசாலைகளுக்கு அனுப்பினால் சில சமயங்களில் கிறிஸ்தவ வேதத்தையும், ஆங்கிலப் பண்பாட்டையும் அவர்கள் பெற்றுவிடுவார்கள் என்னும் அச்சம் நிலவியதனாலாகும்.

## தேசிய இயக்கங்களின் பின்னணி:

இலங்கையின் தேசிய இயக்கங்கள் ஆரம்பத்தில் தோட்டத் துரைமார்களின் நலனுக்காக உருவாகியது. பிரித்தானியர் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை இங்கு அறிமுகப் படுத்தியதனால் இத்துறையில் ஈடுபட்டோரும், வர்த்தகத் துறையில் ஈடுபட்டோரும் அரசியல் துறையில் தங்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என வாதிட்டனர். இச் சூழ் நிலையில் பிரித்தானிய அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் கோல்புறூக் கமரன் விசாரணைக்குழு 1829-ம் ஆண்டில் அனுப்பப்பட்டது. இவர்களது விசாரணைகளும், முடிவுகளும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. நிருவாகத்தைச் சீர் செய்வதற்குப் பல ஆலோசனைகள் இவர்களது முடிபுகளில் வெளியாகின, சட்டமியற்றும் துறையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களின் தெரிவை முதன் முதலில் இலங்கையில் அறிமுகப்படுத்த வழி அமைத்த ஒரு குழு என்ற வகையில் இது முக்கியத்துவம் பெற்றது. பதினைந்து அங்கத்தவர் கொண்ட சட்ட வாக்கத்துறையில் ஆறு உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் இடம் பெறுவதற்கு இது வழிவகுத்தது. 1834-ல் இவர்களது முடிவுகள் இலங்கையில் அமுல் நடாத்த வழி அமைக்கப்பட்டது

கோல்புறூக் கமரன் சீர்திருத்தக் குழுவினரின் தீர்மானங்களால் நன்மை அடைந்தவர்கள் தோட்டத் துரைமார்களும், வர்த்தகர்களுமாகும். உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களாக சட்டநிரூபணசபைக்குத் தெரிவான அங்கத்தவர்களை

நோக்கின் இவ்வுண்மை தெளிவாகும். ஜோஸப் ரெட், (வர்த்தகர்) முதலியார் ஜோஹன்னஸ் கொட்பிரைட்பிலிப்ஸ் (சுப்ரீம்கோட் பிரதம முதலியார்) ஜெப்ரே (வர்த்தகர்) ஜே ஜி. ஹில்பிராண்ட் (வர்த்தகர்) ஜி. எச். பேர்ட், (வர்த்தகர்) முதலியார் ஏ. குமாரசுவாமி (வருமானத் திணைக்கள முதலியார்) ஆகியோரே உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இருவர் தவிர்ந்த ஏனையோர் வர்த்தகத் துறையைச் சார்ந்தவர்கள் என்பது ஈண்டு நோக்கத் தக்கது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இவ்வாறான தெரிவு முறையே இடம் பெற்று வந்தது.

## இலங்கை அரசியல் வரலாற்றில் முஸ்லிம்களின் பங்கு:

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றிலும், எழுச்சியிலும் கி. பி. 1882-ம் ஆண்டு முக்கிய காலப் பகுதியாகும். இவ்வாண்டில்தான் எகிப்தின் சுதந்திரத்திற் காகப் போராடிய வீரர்கள் நாடுகடத்தப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிடியில் இருந்து எகிப்தை விடுதலை பெறச் செய் வதற்காகப் போராடிய அஹ்மத்அறபி பாஷா என்பவருக்குப் பிரித்தானிய அரசு மரணதண்டனையை ஆரம்பத்தில் விதித்தது. பின்னர் நாடுகடத்தத் தீர்மானித் தது. இத்தீர்மானத்தின்படி அஹ்மத்அறபிபாஷா, தில்பா பாஷா, முஹம்மத் பஹ்மி, முஹம்மத் ஸாமி, அலிபஹ்மி, அப்துல்ஹைஹ, யாகூப் ஆகியோர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் இலங்கைக்கு வரும் செய்தியறிந்த இலங்கை முஸ்லிம் கள் பெரும் வரவேற்பளித்து அவர்களைக் கௌரவித்தனர்.

அறபிபாஷா அவர்களின் வருகையின் பின்னரே இலங்கை முஸ்லிம்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் சட்ட நிரூபண சபையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இடம் பெறவேண்டும் என்ற குரலை எழுப் பத் தூண்டியவர் அறபிபாஷாவே. கல்வித்துறையிலும் சமூக சேவைத் துறையி லும் ஈடுபாடு கொள்ள விருப்புக்கொண்ட ஒரு குழுவினரை இவர் உருவாக்கினார். இவர்களில் அறிஞர் சித்திலெப்பை, வாப்பிச்சிமரிக்கார். ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் ஆகியோர் பிரதான இடம் பெற்றனர்.

அறபி பாஷாவின் தூண்டுதலின் விளைவாக இலங்கை அரசாங்கத்தின் சட்ட நிரூபண சபையில் முதலாவது பிரதிநிதித்துவம் கி. பி 1889-ல் கிடைத்தது. முதல் முஸ்லிம் பிரதிநிதியாக ஜனாப். எம் ஸி அப்துல் ரஹ்மான் அவர்களும், இதன் பின்னர் முறையே ஜனாப். ஏ. எல் எம். ஸரீப், டபிள்யூ எம் அப்துல் ரஹ்மான் ஆகியோர்களும் முஸ்லிம்களின் பிரதி நிதிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

அறிஞர் எம். ஸி. சித்திலெப்பை அவர்கள் ''முஸ்லிம் நேசன்'' என்னும் பத்திரி கையையும் ஜனாப் ஐ. எல் எம். அப்துல் அஸீஸ் ''முஸ்லிம் காவலன்'' என்னும் பத்திரிகையையும் வெளியிட்டனர். முஸ்லிம் உலகின் செய்திகளை இலங்கை முஸ்லிம் கள் அறிந்து கொள்வதற்கும், இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளை அரசாங் கத்துக்கு விளக்க வைப்பதற்கும் இப்பத்திரிகைகள் பயன்பட்டன. எனினும் புரட்சிகர மான மாற்றங்களை ஏற்படுத்துவதில் இப்பத்திரிகைகளின் செயற்திட்டங்கள் வழி அமைத் தனவா? என்பது சந்தேகத்துக்குரியது. ஏனெனில் பிரித்தானிய அரசின் புகழ் பாடுவ தற்கு இப்பத்திரிகைகளில் முக்கிய இடமளிக்கப்பட்டதால், இதன் இலட்சியம் புரட்சி கரமாக அமையவில்லை என்ற முடிவினைக் கொடுக்கின்றன. அரசியல் துறையில் அற பிபாஷாவின் பங்கைப்பற்றி 1901-ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டறிக்கையில் பதிவா

ளர் நாயகமாக விளங்கிய பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் குறிப்பிடும்போது ''அறபிபாஷாவும் அவருடன் நாடுகடத்தப்பட்ட ஏனையோரும் கடந்த பத்தாண்டுகளில் முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்கு வழி அமைத்துள்ளனர்'' எனக் கூறியுள்ளார். இலங்கை முஸ்லிம்களின் கல்வி விருத்தியும் அறபிபாஷாவின் வருகையின் பின்னர் தான் வளர்ச்சி பெற்றுள்ளது. கொழும்பு கல்விச் சங்கம் உருவாக்கப்பட்டு அதன் மூலமாக 1892-ம் ஆண்டில் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ''அல்மதுரஸதுஸ் ஸாஹிரா'' என்னும் பெயரில் உருவாக்கப்பட்டது ஆங்கிலக் கல்வி மூலம்தான் முஸ்லிம்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதை அறிஞர் சித்திலெப்பை, ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் போன்றோரும் உணர்ந்தனர். இதே காலப்பிரிவில் இந்தியாவில் சேர் செய்யத் அஹ்மத் கான் அவர்களின் அலிகார் இயக்கமும் இலங்கைக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது கவனத்தில் கொள்ளத் தக்கதாகும். 1905-ம் ஆண்டில் நீதிமன்றங்களில் முஸ்லிம் சட்டத்தரணிகள் தொப்பி அணிவதில் ஏற்பட்ட பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகக் கூட்டிய பொதுக்கூட்டம் முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பலப்படுத்தியுள்ளது.

கி. பி. 1915-ம் ஆண்டின் பின்னர், குறிப்பாகக் கம்பளைக் கலகத்தின் பின்னர் இலங்கையில் ஏனைய தேசிய இனங்கள் மத்தியில் சுதந்திர தீவிரவாத இயக்கங்கள் தோன்ற வாரம்பித்தன. ''இலங்கை இளைஞர் இயக்கம்'' என்னும் தாபனம் உருவாக்கப்பட்டதில் இருந்துதான், நாட்டின் சுதந்திரத்துக்காக போராடக்கூடிய தீவிரவாதக் குழு செயற்பட்டது. இந்தியாவில் நிறுவப்பட்டிருந்த முஸ்லிம் லீக்கை பின்பற்றி, இலங்கையிலும் அகில இலங்கை முஸ்லிம் லீக் என்னும் தாபனம் 1924-ல் உருவாக்கப்பட்டது. இவர்கள் தேசிய காங்கிரசுடன் இணைந்து இலங்கையின் சுதந்திரத்திற்காகப் போராடினர்.

இலங்கை முஸ்லிம்களின் கலாசார சமய விடயங்களைக் கவனத்தில் கொண்டு முஸ்லிம்களுக்கான விசேட சட்டக் கோவைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்ற வற்புறுத்தல் நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது. இதனால் முஸ்லிம் விவாக, விவாகரத்து, பதிவுச் சட்டம் 1929-ல் உருவாக்கப்பட்டது. இதே ஆண்டு காலப் பகுதியில் ஜனாப் என். எச். எம். அப்துல்காதர் அல்ஹாஜ் ரி. பி. ஜாயா போன்றோர் சட்ட நிரூபண சபைக்கு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை மக்களின் சுதந்திரப் போராட்டத்தின் பலனாக டொனமூர் பிரபுவின் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று பிரித்தானிய அரசாங்கத்தால் அனுப்பப்பட்டது. 1931-ம் ஆண்டில் இக்குழு தமது விசாரணைகளை மேற்கொண்ட போது, சோனகர் அரசியற்குழு, மலாயர் அரசியற் சங்கம், கண்டி மலாயர் சபை ஆகியன சாட்சியமளித்தன. இக் குழுக்களில் பிரதானமாக ஜனாப் ஏ. எச். எம். அப்துல்காதர் ஜனாப் எச். எம். இஸ்மாயில், ஜனாப். ஜே. ஏ. குட்டிலன், ஜனாப். எம். ஜே. மஜீது ஆகியோர் இடம் பெற்றனர். டொனமூர் அரசியல் திட்டத்தில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டார்கள் என்னும் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டமையாலும், பூரணசுதந்திரம் அளிக்கப்படவேண்டும் என்ற வற்புறுத்தல் இடம் பெற்றமையாலும் சோல்பரிப்பிரபுவின் தலைமையில் ஓர் அரசியற் சீர்திருத்தக்குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டபோது, இலங்கைக்கு முஸ்லிம்களின் சார்பில் பெரும்பான்மைச் சமூகத்தோடு ஒன்றிணைந்து நாட்டின் சுதந்திரத்துக்காக அல்ஹாஜ். மாக்கான் மரிக்கார், அல்ஹாஜ் ரி. பி. ஜாயா, அல்ஹாஜ் ரர்ஸிக் பரீத் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் டி. எஸ். சேனநாயக்கா பிரதமராக இருந்த போது அல்ஹாஜ் ரி. பி. ஜாயர் அவர்கள் அமைச்சராக விளங்கினர். டட்லி சேனநாயக்கா முதல் முறை பிரதம அமைச்சராக விளங்கியபோது டாக்டர் எம். ஸி. எம். கலீல் அமைச்சராக விளங்கினர். இவரே கொத்தலாவலை பிரதம மந்திரியாக விளங்கிய காலத்திலும் முஸ்லிம் அமைச்சராக இருந்தார். திரு. பண்டாரநாயக்கா பிரதம அமைச்சராக 1956-ம் ஆண்டில் பதவி வகித்தபோது ஜனுப் ஏ. ஸி. எஸ். மரிக்காரும், திரு. தகநாயக்கா பிரதம அமைச்சராக விளங்கியபோது ஜனுப் எஸ். எம். முஸ்தபாவும், சர் ராஸிக் பரீத் அவர்களும் அமைச்சர்களாக விளங்கினர். திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் கலாநிதி அல்ஹாஜ். பதியுத்தீன் மஹ்மூத் பணிபுரிந்தார். தற்போதய அரசாங்கத்தில் அல்ஹாஜ். எம். எச். முஹம்மத், ஜனுப். ஏ. ஸி. எஸ். ஹமீத் ஆகியோரும் அமைச்சர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைகளை உயர் மட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கும் ஓர் இயக்கமாக முஸ்லிம்லீக் செயல்பட்டு வந்துள்ளது. குறுகிய காலம் இஸ்லாமிய சோஷலிச முன்னணி இயங்கி மறைந்துவிட்டது முஸ்லிம் லீக்கின் குரல் இலங்கை முஸ்லிம்களின் ஏக குரலாக அமையவில்லை என்பது வெளி மாகாணங்களின் அபிப்பிராயமாகும். இயக்கத்தின் ஆதிக்கம் கொழும்போடு அமைந்து விடுவதால், இக் குறைபாடு பரவலாகப் பேசப்படுவதற்கு முக்கிய காரணமாகும்.

திரு. ஜே, ஆர் ஜெயவர்த்தனவை ஜனதிபதியாகக் கொண்ட தற்போதய அரசாங்கத்தில் இலங்கை முஸ்லிம்களுக்கு கலாசார அமைச்சொன்று நிறுவ வேண்டும் என அகில இலங்கை கதீப்மார்கள் சங்கத்தின் வேண்டுகோளை அடுத்து, பல இயக்கங்களினதும் ஆதரவு இவ் வேண்டுகோளுக்குக் கிடைத்தமையால் இப்போது ஓர் இஸ்லாமிய கலாசார விவகாரத் திணைக்களம் உருவாக்கப்பட்டுள்ளது. இத் திணைக்களம் இலங்கை முஸ்லிம்களின் சகல அரசியல், சமூக, சமய, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் என்ற நம்பிக்கையை முஸ்லிம்கள் கொண்டுள்ளனர். முஸ்லிம்களின் உரிமைகள் உரிய முறையில் வழங்கப்படவில்லை என்பதும், முஸ்லிம்களின் சமூக பொருளாதார விவகாரங்களுக்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாதகமாக அமைகின்றது என்பதும் தற்போதைய குறைபாடுகளாகும். பாராளுமன்றத்தின் கட்சியின் செல்வாக்கிற்குட்பட்ட முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சமூகத்தின் குரலாக அமையமாட்டார்கள் என்ற நம்பிக்கை முஸ்லிம்களிடத்தில் வலுவடைந்து வருகின்றது. கடந்தகால வரலாற்றில் தேசிய உயர்வுக்காக முஸ்லீம்களின் பங்களிப்பு சில சமயங்களில் பெரும்பான்மை சமூகத்தை விஞ்சும் அளவுக்கு காணப்பட்டுள்ளது. முஸ்லிம் நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும், பெற்றுக்கொள்வதிலும் கவனம் செலுத்தும் எமது அரசியல் தலைவர்களும். அரசியல் வாதிகளும் சமூகத்தில் இருந்தும், சமூகப் பிரச்சினைகளைத் தட்டிக் கழித்தும் வாழ முடியாத ஒரு சூழ்நிலையை இப்போது எதிர் நேர்க்குகின்றனர்.

சுதந்திரத்திற்குப்பின் சமூகத்தின் உயர்வுக்காக மிகக் கடினமான உழைப்பை மேற் கொண்ட முஸ்லிம்களின் தலைவர்களான சேர் மாக்கான் மரிக்காரையோ, அல்ஹாஜ். ரி. பி ஜாயாவையோ, முன்னுள் சபாநாயகர் எஸ். எச். எம். இஸ்மாயில் அவர்களையோ, சேர். ராஸிக்பரீத் அவர்களையோ, கலாநிதி அல்ஹாஜ். பதியுத்தீன் மஹ்மூத் அவர்களையோ முஸ்லிம் சமூகம் மறந்துவிடவில்லை; முஸ்லிம்களின் தலைவர்கள் சமூகத்தின் சேவகர்களாக மாறுதவரை சமூகத்தின் தலைவர்கள் தியாகி

களாக மாறுதவரை, அவர்களை அரசியல் தலைவர்களாகவோ சமூகத்தின் தலைவர்களாகவோ முஸ்லிம் சமூகம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தற்போதய முஸ்லிம்களின் தலைவர்கள் உணர்ந்து செயல்படுதல் அவசியமாகும். பாராளுமன்றத்தில் சபாநாயகராகப் பணிபுரிந்த அல்ஹாஜ் எஸ். எச். எம். இஸ்மாயில் அவர்களும், தற்போது சபாநாயகராக விளங்கும் அல்ஹாஜ் பாக்கீர் மரிக்கார் அவர்களும் முஸ்லிம் சமூக உயர்வில் கூடிய அக்கறையுள்ளவர்கள் என்பதை அவர்களது செயல்பாடுகள் தெளிவுபடுத்துகின்றன.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் கல்வித் துறை சார்ந்தோரின் கருத்துக்களினை கவனத்தில் கொண்டு செயல்படுதல் அவசியம் என்பதை முஸ்லிம் அரசியல் வாதிகள் உணர்வார்களாக.

---


1. Neimann Page 237
2. இஸ்லாமிய கலைக் களஞ்சியம் 1-ம் பாகம் பக்கம் 201
3 Story of Islam Page 49
4 History of Ceylon Volu. I Part II Page 706
5 History of Ceylon Volu. I Page 19
6. Glimpses From The Past of The Moors of Sri Lanka Page 79
7. ibn Batuta Travels in Asia Africa - Page 94
8. Moors in The Portuguese Period Dr. K. W. Gunawardane


---

✢ ஒரு தீமை உங்களிடையே நிகழக் கண்டு அதனை உங்களில் ஒருவன் பார்த்தால் முதலில் அவன் அதனைத் தனது கரங்களால் விலக்கி தவிர்க்க வேண்டும். அவ்வாறு கரங்களால் செய்ய முடியவில்லையாயின், அவன் தனது நாவைக் கொண்டு அந்தத் தீமையை விலக்கி வைக்க வேண்டும். அவ்வாறு நாவினாலும் செய்ய வில்லையாயின் அவன் தனது மனதைக் கொண்டு, அந்தத் தீமையைப் பற்றி பொருத்தக் கேடான முறையில் எண்ணிக் கொள்ளவேண்டும். இந்தக் கடைசி நிலை ஈமானில் மிகப் பலவீனமானதாகும்.

(முஸ்லீம்)

*With the best compliments*

*from*

# Dawn Stores

**205, 2ND CROSS STREET,**

**COLOMBO - 11**

*Telephone: 26710*

---

*Best wishes from*



**NEW**

## MUTHUMEENACHI

JEWELLERY

152-B, Sea Street,

COLOMBO-11

*Phone: 33164*

---

*VISIT*

## Jaleeza Stores

Main Street,

MANNAR.

*With the best compliments from*

**Suguna Traders**

21, 2nd Cross Street,

COLOMBO - 11.

*Best wishes from*

**Deensons**

Dealers in Fancy Goods General Merchants and Importers

51, China Street,

Colombo-11.

*Tel: 23671*

*Office:*

180/9, Keyzer Street,

COLOMBO - 11.

Tel: 27514

*Best compliments from*

**M. A. M. MAHAMOOD**

99, Keyzer Street,

COLOMBO-11

*Best compliments from*

**Southa Stores**

55, Third Cross Street,

Colombo-11.

# அகமும் புறமும்

அக்கரைப்பற்று – அஷ்றப்
(முதலாம் வருடம்)

இஸ்லாம் தூய்மையின் அடிப்படையில் அமையப்பெற்ற ஒரு மார்க்கமாகும். இது சுத்தத்திற்கு மிக்க முக்கியத்துவம் அளிக்கின்றது. ஒரு மனிதனின் செயல்பாடுகளை எடுத்து நோக்கும்போது அவைகள் தூய்மையானதாக, சுத்தமானதாக அமையும் போதுதான் அதற்கான முழுமையான கூலி வழங்கப்படுகின்றது.

(தஹாறத்) எனும் சொல்லை நாம் எடுத்து ஆராயும்போது - அகராதியிலே (நஜ்ஸ்) அசுத்தமானவைகளை விட்டும் சுத்தமாதல், இன்னும் உள்ளத்திலே உள்ள துர்க்குணங்களான குறைபாடுகளை விட்டும் விடுவு பெறுதல் எனும் கருத்தையும்; பரிபாஷையில் நோக்கும்போது இஸ்லாம் (நஜ்ஸ்) 'அசுத்தம்' என வரையறை செய்திருக்கின்றவைகளை விட்டும் இன்னும் தொடக்குகளை விட்டும் சுத்தமாகுதல் எனும் கருத்தையும் தருகின்றது.

சுத்தத்தை இரண்டாக வகுக்கலாம். (1) (வாஜிபு) அவசியம் சுத்தம் பெற வேண்டியது. இல்லாவிடில் குற்றவாளியாகிவிடுகின்றான்; இதற்கு தொடக்குகளை விட்டும் சுத்தம் பெறுவதைக் குறிப்பிடலாம்;

(2) (சுன்னத்) இது செய்தால் நன்மையுண்டு; செய்யாவிடில் குற்றமில்லை; இதற்கு உதாரணமாக வுளூவைப் புதுப்பித்தல், சுத்தமான குளிப்புக்கள் போன்றனவாகும்.

அவசியம் செய்யப்படவேண்டிய (வாஜிப்) ஆன சுத்தம் மேலும் இரு பிரிவு பெறுகின்றது. இதுபற்றி கஸ்ஸாலி இமாம் அவர்கள் குறிப்பிடும்போது இவைகளை அறிந்து செயல் படுவது (பர்ளு ஐன்) கட்டாயக் கடமையாகும் என வற்புறுத்தியுள்ளார்கள்.

இதனையிட்டே இறைமறை அல்-குர் ஆன் ''இன்னல்லாஹ யுஹிப்புத் தவ்வாபீன யுஹிப்புல் முததஹ்ஹிறீன்'' ''நிச்சயமாக இறைவன் (தவ்பா) பாவ மன்னிப்புக் கோருபவர்களையும், இன்னும் சுத்தமானவர்களையும் விரும்புகின்றான் எனக் கூறுகிறது. இதில் முதலாவது பகுதியான (தவ்பா) ''பாவமன்னிப்பு'' கோருவதன் மூலம் ஒரு மனிதன் தனது குற்றங்களிலிருந்து விடுதலை பெற்று சுத்தமுள்ளவனாக மாறுகின்றான், இரண்டாவது பகுதியை நோக்கும்போது இதிலே இறைவன் சுத்தமானவர்களை விரும்புகின்றான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது; (தஹாறத்) ''சுத்தம்'' எனும்போது இதனை மூன்று பிரிவுகளுக்குள் உள்ளடக்கலாம்;

1) மெய்ச் சுத்தி. 2) நாச் சுத்தி; 3) உளச் சுத்தி.

இதிலே முதலாவது ''மெய்ச் சுத்தி''யை எடுத்து நோக்கினால் சாதாரணமாக ஒவ்வொரு முஸ்லிமும் தனது உடலைச் சுத்தமாகவே வைத்துக் கொள்ளுகின்றான். ஐங்காலத் தொழுகையை நிறைவேற்ற வேண்டுமெனில் அவன் உடல், உடை, தொழும் இடம் சுத்தமுள்ளவனாக இருப்பது மிக அவசியமாகின்றது. இஸ்லாத்தில் (நஜ்ஸ்) அசுத்தமானவைகள் என வரையறை செய்யப்பட்டவைகளைவிட்டு தனது உடலைப் பாதுகாத்துக் கொள்ளும்போது உடல் சுத்தமானவ

ளுக மாறுகின்றான். இதிலே கண்ணுக்குப் புலப்படாத தொடக்குகளை விட்டும் சுத்தமாவதும் பொதுவாக அவசியமான குளிப்பை உண்டாக்கக்கூடிய கருமங்கள் ஏற்படின் அதிலிருந்து சுத்தம் பெறுவதும் சேருகின்றது.

உடல் சுத்தி எனும்போது அதில் ஒரு அங்கமாக அமையப் பெற்றுள்ள உடைச்சுத்தத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஆடைகளை அழுக்குகள் இன்றி அணிவது மட்டும் சுத்தமாகிவிட முடியாது; அணியப்படுகின்ற ஆடைகள் (நஜ்ஸ்) எனும் அசுத்தமானவைகளை விட்டும் சுத்தமாக அமைவதுடன், இஸ்லாம் ஆண், பெண் இருபாலாரும் உடலில் எவ்வளவு பகுதியை மறைக்கவேண்டும் என வரையறை செய்திருக்கின்றதோ அப்பகுதிகள் யாவும் முக்கியமாக மறைக்கப்படவேண்டும். ஆண்கள் தொப்பிளுக்கும் முழங்காலுக்குமிடைப்பட்ட பகுதியை மறைப்பதும், பெண்கள் முகமும், மணிக்கட்டிற்கு வெளியே உள்ள பகுதி தவிர்ந்த மற்ற உடல் முழுவதையும் மறைத்துக் கொள்வதும் அவசியமாகின்றது. இதிலே; ஆண்கள் ஆடைகள் அணியும் போது பெருமையுடன் கரண்டைக் கால்களுக்குக் கீழாக தரையை அரைக்கும் வண்ணம் ஆடை அணிவதையும், பெண்கள் தலையைத் திறந்து கொண்டு, தனது அங்கங்களை வெளிக்காட்டிச் செல்வதையும் பெருமானார் (ஸல்) அவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள்; இவைகளும் மெய்ச் சுத்தியைச் சேர்ந்தது எனக் கொள்ளலாம்.

இதே போன்று மெய்ச் சுத்தியை இன்னுமொருபடி உயர்ந்து நோக்கின் முஸ்லிமான ஒரு மனிதன் இஸ்லாம் ஆகுமாக்கியிருக்கின்ற வழியில் உழைத்து (ஹலால்) என இஸ்லாம் வரையறை செய்திருக்கின்றவைகளைப் பெற்று உண்பதன் மூலம் (ஹறாம்) விலக்கப்பட்டவைகள் என்பனவற்றை உடலில் சேராவண்ணம் பாதுகாத்துக்கொள்வதும் மிக்க அவசியமாகின்றது. ஏனெனில் ஒரு சந்தர்ப்பத்தில் நபியவர்கள் ''எந்த ஒரு மனிதனுடைய உடலில் (ஹறாம்) ''விலக்கப்பட்டவைகள் சேர்ந்திருக்கின்றதோ அந்த உடல் சுவர்க்க வாடையை அனுபவிக்காது'' என்ற கருத்தைத் தந்தார்கள். எனவே; இந்த முக்கிய மூன்று விடயங்களிலும் பாதுகாப்பாக நடந்து கொள்ளும்போது ஒருவன் மெய்ச்சுத்தியைப் பெறுகின்றான்.

இரண்டாவது பகுதியான நாச்சுத்தியை எடுத்து நோக்குவோமெனில்; இது மனிதன் தனது நாவை எவ்வாறு பயன் படுத்திக் கொள்ளவேண்டும். அதனை கீழ்த்தரமான அசுசிகளை விட்டும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளவேண்டும் எனும் ஒரு முக்கிய பகுதியாகும். இறைவன் நாவிற்கு எத்தனையோ சிறப்புக்களைக் கொடுத்திருக்கின்றான். அதிலிருந்து வெளியாகின்ற சில வார்த்தைகளுக்கு அம்பைவிட மிக வேகமாக ஊடுருவிச் செல்லும் ஆற்றலைக் கூடக் கொடுத்திருக்கின்றான். மனிதன் தனது நாவைத் திறக்குமுன் அவன் பேசப்போகின்ற விடயம்பற்றி நன்முகச் சிந்திக்க வேண்டியவனாக உள்ளான். ஏனென்றால் ஒரு அறிஞர் அதுபற்றிக் குறிப்பிடும்போது ''ஒருவன் ஒரு பேச்சைப் பேசுவதற்கு முன்பு அவனுக்கு அப்பேச்சு அடிமையாக இருக்கின்றது. அப்பேச்சைப் பேசிவிட்டானெனில் அவன் பேச்சுக்கு அடிமையாகி விட்டான் என்ற பேருண்மையைத் தெளிவுபடுத்தினர். எனவே மனிதனின் அங்கங்களிலே மிக உயர்வானதும் மிக இழிவானதும் இந்த நாவாகவே இருக்கிறது. ஒருவர் ஒரு விடயத்தைப் பற்றிப் பேசும்போது மற்றவர்கள் அதனை விரும்பக் கூடிய வகையில் பேசுவதும் பெரியவர்களுடன் பேசுவதாயின் கண்ணியமாகவும், சிறியவர்களுடன் அன்பாகவும் பேசிப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஒரு முறை அண்ணல் (அலை) அவர்கள் ''யாருக்குப் பேச்சு அதிகமாகின்றதோ அவனுக்குப் பாவங்கள் அதிகமாகின்றது. எவருக்குப் பாவம் அதிகமாகிவிட்டதோ அவனின் உள்ளம் மடிந்துவிடுகின்றது. எவனுடைய உள்ளம் மடிந்துவிடுகின்றதோ அவன் நரகில் நுழைந்துவிடுகின்றான்.'' எனக் குறிப்பிட்டார்கள்; பொய், புறம், கோள், படுதூறு, இவ்வாறான கீழ்த்தரமான பாவகாரியங்களில் நாவைப் பயன்படுத்துவதும், தூஷண வார்த்தைகள், வீண் பேச்சுக்கள் போன்றவற்றிற்குப் பயன்படுத்துவதும் நாச்சுத்தியை நாசப்படுத்தி விடுகின்றது. அவ்வாறின்றி நாவைப் பேணி, இறைவனை (திக்ர்) துதி செய்வதிலும், திருமறை ஓதுவது, நல்லுபதேசங்கள் புரிவது இவ்வாறான நற்கருமங்களில் ஈடுபடுவதன் மூலம் நாச்சுத்தியைப் பேணுதல் அவசியமாகும்.

மூன்றாவது பகுதி மேற்கூறப்பட்ட எல்லா வகையையும் விட உயர்விடம் பெறுகின்ற ''அகச்சுத்தி'' ஆகும்; ஒரு மனிதனின் உறுப்புக்களில் மிகப் பிரதானமான உறுப்பு இதயமாகும்; இதைவிட்டே இறை நபிகள் (ஸல்) அவர்கள்.

''மனிதனின் உறுப்புக்களில் ஒரு சதைத் துண்டு சரியாக இருந்தால் அவனின் எல்லா அவயவங்களும் சரியாக இயங்குகின்றன. அந்த சதைத்துண்டு கெட்டுவிடின் எல்லா அவயவங்களுமே கெட்டுவிடுகின்றன என்ற கருத்தைக் கூறினார்கள். இக் கூற்று இந்த இதயத்தையும், இந்த இதய சுத்தியின் அவசியத்தையுமே வலியுறுத்தி நிற்கின்றது.

ஒரு மனிதனின் செயல்பாடுகள் வணக்கங்கள் எல்லாவற்றிற்கும் அவனுடைய எண்ணத்தைப் பொறுத்தே கூலி கொடுக்கப்படுகின்றது. இதையிட்டே நபி பெருமானின் பொன் மொழி ''இன்னமல் அஉமாலு பின்னிய்யாத்'' ''நிச்சயமாக செயல்பாடுகளெல்லாம் நிர்ணயத்தைக் கொண்டே அமையப் பெற்றுள்ளன. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனின் நிர்ணயத்தைக் கொண்டே கூலி கொடுக்கப்படுகின்றது.'' எனக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. ஒருவனது உள்ளம் பொறாமை, பெருமை, பேராசை, வஞ்சகம், மேலெண்ணம், அதிகார விருப்பம், இவ்வாறான துர்க்குணங்களால் நிறைக்கப்பட்டுள்ளபோது, அவன் செய்கின்ற நல்லமல்கள் எதுவும் அவனுக்குப் பூரண பயனளிக்காது; துர்க்குணங்களால் நிறைக்கப்பட்ட அவனது ஈமான் துருப் பிடித்து, ஒளியிழந்து, இருளடைந்து பிரகாசமின்றிக் காணப்படுகின்றது. எனவே, அவனது எல்லாச் செயல் பாடுகளை விடவும் மிக மிக அவசியமானது உள்ளச் சுத்தியே யாகும். உள்ளச் சுத்தியின் அடிப்படையில் செயல்படுகின்ற நற் செயல்களுக்கே பூரணமான கூலி வழங்கப்படுகிறது. உள்ளச் சுத்தியின்றி மெய்ச் சுத்தியோ அல்லது நாச்சுத்தியோ எந்தப் பயனும் அளிக்காது உதாரணமாக ஒருவன் பத்து ரூபாய் பணத்தை இறைவனுக்கா நல்மனதுடனே ஒரு ஏழைக்குத் தர்மம் செய்கின்றான். வேறொரு மனிதன் பத்து இலட்சம் ரூபாக்களை பெருமைக்காகக் கொடுக்கின்றான்: இதிலே பிந்திய பெரும் தொகையைவிட பத்து ரூபாதான் இறைவனுக்காகச் செய்யப்பட்ட தான தர்மமாகையால் அதுவே இறைவனிடம் உயர்விடம் பெறுகின்றது.

பொதுவாக இதே போன்றுதான் எல்லாச் செயல்பாடுகளுக்குமான கூலி அவனது மனநிலையைக் கொண்டே வழங்கப்படுகின்றது. வணக்கங்களிலே மிக மேலானது தனது மனதை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து மேற்குறிப்பிட்ட துர்க்குணங்களை அகத்தை விட்டும் அகற்றி அன்பு. பரிவு, பாசம், நல்லெண்ணம், தாழ்வு, விட்டுக் கொடுத்தல் போன்ற நற்குணங்களை வளர்த்து இறை தியானத்தின் மூலம் உள்ளத்தை ஒளிபெறச் செய்து உள்ளச் சுத்தியைப் பேணிக்

கொள்வதாகும்; தனது மெய்ச்சுத்தி, நாச்சுத்திகளைப் பேணிக் கொள்வதைவிடக் கடினமானதும், உயர்வானதும் உள்ளச் சுத்தியேயாகும்.

இறைவனின் தூதுவர்களாக வந்த நபிமார்கள், நபிநாயகத்தின் அன்புத் தோழர்களாக வந்த அஸ்ஹாபுகள், இறை நேசச் செல்வர்களான அவுலியாக்கள் இவர்களெல்லாம் இவ்வாறான சுத்தங்கள் அனைத்தையும் பேணி தமது உள்ளங்களை இறை தியானத்தின் மூலம் ஒளிபெறச் செய்திருந்தனர். இறைவனுக்கு மிக்க பயபக்தி உடையவர்களாக இருந்தமையால் இறைவனின் நேசத்திற்குள்ளானார்கள். எனவே, நாமும் எம்வாழ்வில் மேற்குறிப்பிடப்பட்ட மெய், நா, உளச் சுத்திகளைப் பேணி இறை நேசம் பெற்ற நல்லடியார்களாகத் திகழ்வோமாக.

---

★ பொறாமையைப் பற்றி பயந்து கொள்ளுங்கள். ஏனெனில் விறகை நெருப்பு எரித்துக் கரித்துச் சாம்பலாக்கி விடுவதைப் போன்று நன்மைகளை விழுங்கிவிடக் கூடியது.

(அபூதாவூத்)

ஒரு முனாபிக்கின் அறிகுறிகள் மூன்று. அவனது பேச்சில் 'பொய்' இருக்கும். அவன் வாக்குறுதி செய்தால் அதில் மாற்றமிருக்கும். அமானிதம் செய்தால் சதிமோசம் செய்வான்.

(புகாரி)

ஒருவனுக்கு அவனுடைய தந்தை, அவனுடைய மகன், மற்றும் மனிதர்கள் அனைவரைப் பார்க்கிலும் நான் எதுவரை உவந்தவனாக இருக்கமாட்டேனோ அதுவரை அவன் ஈமான் கொண்டவனாக ஆக மாட்டான்.

(புகாரிமுஸ்லிம்)

---

# EXECUTIVE COMMITTEE 1980-81



*Seated: L. R:*

I. S. Sithy Faiza (C. M.)
M A. Mohamed Sanun (General Secretary)
Ziyad M. Thaha (President)
S. Najimudeen (Vice President)
T. Raiza (C. M.)

*Standing: L R:*

M. S. Wajeehu (Editor)
N. Jamaldeen (Junior Treasurer)
M S. H. M. Musthafa (Editor)
M. S. M. Fuard (C. M.)
A. L. Jamaldeen (Asst. Secretary)
S. M. M. Mansoor (Social Secretary)
A. L. Shajahan (C. M.)

# உள்ளங்கள் தெளிவு பெறுகின்றன [சிறுகதை]

**எம். எல். எம். மொஹிடீன்,**
(1-ம் வருடம், வர்த்தகம்.)

அன்று பாடசாலை மாணவர்கள் எல்லோரது முகத்திலும் புதுப்பொலிவு காணப்பட்டது. ஆசிரியர்களும் மிகவும் சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் தத்தம் கடமைகளில் ஈடுபட்டனர். அன்றுதான் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகவிருந்தது. சலீமும், நண்பன் இஸ்மாயிலும் விளையாட்டுத் திடலுக்குச் செல்ல விரைந்தனர். சமீரும் இவர்களுடன் சேர்ந்துகொண்டான். இல்ல விளையாட்டுப் போட்டியாக இருந்தாலும் அவ்வளவு சனத்திரளும் மூன்று பகுதிகளாகக் கூறுபோட்டதைப் போல் வேறுபடுத்தப்பட்டிருந்தனர். எல்லாப் பிரிவினர்களும் ஏனோ உற்சாகத்துடன் காணப்பட்டனர். இந்த நிகழ்ச்சியும் படிப்பில் திறமையாகச் சித்தியெய்தும் மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்ச்சியும் அவர்களது பாடசாலையைப் பொறுத்தவரை மிகவும் சிறப்பாக நடைபெறுவது வழக்கமாக இருந்து வந்தது. அன்று காலை 8 மணிக்கே விளையாட்டுப் போட்டி ஆரம்பமானது. மூன்று இல்லங்களைச் சேர்ந்தவர்களும் மிகவும் விறுவிறுப்புடன் தங்களது திறமைகளைக் காட்டினர். சலீமும் அவனது நண்பர்களும் விளையாட்டுக்களில் பங்களிப்புச் செய்யாவிடினும் மிகவும் அக்கறையுடன் நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டிருந்தார்கள். இதற்கு அவர்கள் மூவரும் ஒரே இல்லத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததும் காரணமாக அமைந்தது. விளையாட்டுக்களில் மூன்றிலிரண்டு பகுதி முடிவடைந்து விட்டது. அவர்களது இல்லம் இரண்டாவது இடத்தை வகித்து நின்றது. எனவே தங்களது இல்லத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தெம்பு கொடுப்பதற்காக வெவ்வேறாகப் பிரிந்தனர். அவர்கள் கூறிய உற்சாக வார்த்தைகள் பல விடயத்தில் காட்டில் எறித்த நிலாப் போல் பயனற்றதாக அமைந்தது. ஆனால் இரண்டு பெண் மாணவர்களுக்கு அவர்கள் கொடுத்த ஊக்கமானது, இல்லத்திற்கு 26 புள்ளிகளை ஈட்டிக் கொடுத்ததுடன் மட்டுமல்லாமல் இவ்விரு பெண்களினதும் புள்ளியால் 10 மேலதிக புள்ளிகளின் பேரில் அவர்களது இல்லம் வெற்றி வாகை சூடியது. இம் மாபெரும் வெற்றியை ஈட்டித்தந்த மாணவிகளுள் பஸீறாவை சலீமால் என்றுமே மறக்க முடியாது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற, திறமையாகச் சித்தியெய்தும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவிலும் பஸீறாவே கதாபாத்திரமாகத் திகழ்ந்தாள். அதற்கு அவள் எல்லாப் பாடங்களிலும் மிக அதிகமாகப் புள்ளி வாங்கியதுடன் வகுப்பிலும் அவள்தான் எப்பொழுதும் முதலாவது மாணவியாக வருவதும் காரணமென்பது மகிழ்ச்சியை அளித்தது. இந்த நிகழ்ச்சிகளின்பின் பஸீறா அவன் இதயத்தில் ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டாள். அதன்பின் இடையே அவர்களிருவரும் சந்தித்த எச்சந்தர்ப்பத்திலும் கதைக்கத் தவறியதில்லை.

நாட்கள் உருண்டோடின. சலீம், தற்போது 12 ஆம் தரம் கணிதப் பிரிவிற் கற்றுக் கொண்டிருந்தான். அவளும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 11 ஆம் தரத்தில் கற்றுக் கொண்டிருந்தாள். இந்தக் காலகட்டம் தான், சலீமின் வாழ்வில் மறக்க முடியாதது. பஸீறா அவனுடன் சரளமாகக் கதைத்துப் பேசத் தொடங்கினாள். இதன்பின்னர்தான் அவனுக்கு பஸீறா மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது தெரிய வந்தது. இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் எவ்வளவு திறமையாக இருக்கிறாள்? இவளால் எப்படி முடிகிறது; எதிலும் நேர்மை, கண்ணியம், புனிதம் அவளைப் பற்றித் தனக்குள்ளே சிந்தித்துக் கொள்கிறான்.

பஸீரு அன்று பாடசாலைக்கு வரவில்லை; அவளது நண்பி சபீனாவின் உதவியுடன் பாடசாலை விட்டதும் அவளது வீட்டிற்குச் சென்றான். பஸீருவின் தாயார் கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்தார். பஸீரு மருந்தைக் கையிலெடுத்துக்கொண்டு நின்றிருந்தாள். சலீமைத் திடீரென்று கண்டதும் "வாங்க சலீம் நீங்க... எங்க வீட்டுக்கு... நினைக்கவேயில்ல, உக்காருங்க" என்று அன்போடு வரவேற்றாள்; அவள் பேச்சில் எவ்வளவு இனிமை! அங்கிருந்த பழைய கதிரை ஒன்றில் கைக்குட்டையை விரித்து அமர்ந்து கொள்கிறான். "இருங்க, இதோ வந்திட்டன்" என்று கூறி பக்கத்திலிருந்த கடைக்குச் சென்று, பிஸ்கட், பழம் வாங்கி வந்து, பிளாஸ்கிலிருந்த தேனீரையும் சேர்த்துக் கொண்டு வந்து அவன் முன் வைத்துவிட்டு ஒருபுறமாக பஸீரு அமர்ந்து கொள்கிறாள். தாயாரின் சுகவீனத்தை விசாரித்துவிட்டு, வற்புறுத்தலின் பேரில் தேனீரையும் அருந்தினான் சலீம். பின் போக எழுந்தான்; "சலீம், நாளைக்கும் நான் ஸ்கூலுக்கு வரமாட்டன். இனி திங்களில்தான் வருவேன்" தயக்கத்தோடு பஸீரு சொல்ல, தலையை சரி என்பது போல ஆட்டிவிட்டு சென்று விடுகிறான் சலீம், அந்த நிகழ்ச்சிக்குப் பின் பஸீரு மீது சலீம் கொண்டிருந்த அன்பு காதலாக மாறியது.

அன்று திங்கட்கிழமை சலீமினது கண்கள் பக்கத்து வகுப்பினையே நோட்டமிட்ட வண்ணமிருந்தது. ஆம்; பஸீரு பாடசாலைக்கு வந்துவிட்டாள். அவனுக்கு மிக்க மகிழ்ச்சி. இன்று பஸீருவிடம் கதைத்து எப்படியாவது அவள் மனதை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல். இடைவேளைக்குப் பின் இரு பாட வேளைகள் பஸீருவுக்கு ஓய்வு. அந்த நேரத்தில்தான் அவளுடன் கதைத்தாக வேண்டும். ஆனால் அவனுக்கோ ஒரு பாடவேளைதான் ஓய்வு. பரவாயில்லை. அதற்குள் கதைத்து விடலாம்; இடைவேளைக்கு வெளியில் செல்ல முற்பட்ட பஸீருவிடம "இடைவேளை முடிந்தபின் சந்திக்க முடியுமா?" என்று சலீம் கேட்க, "ஓப் கோர்ஸ்" என்று சிரித்துவிட்டுச் சென்றாள் பஸீரு. பத்தே நிமிடங்களில் தனது தோழி சபீனாவோடு திரும்பி வந்தாள். இது ஓய்வு வேளை. ஆகையால் எல்லா மாணவர்களும் விளையாட்டுத் திடலுக்குச் சென்றிருந்தனர்; இவர்கள் மூவரும் தனித்து, எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டனர். "பஸீரு, கொஞ்சம் தனியாகக் கதைக்க வேணும்" என்று சலீம் சொல்ல, "பரவாயில்ல; இவ என்னோட உயிர்த் தோழி. என்ன விஷயமெண்டாலும் சொல்லலாம்" என்று பதிலிறுத்தாள் பஸீரு. சலீமுக்குச் சங்கடமாக இருந்தது. ஆயினும் அவளே இவ்வளவு சொல்லும்போது என்ன செய்ய முடியும்? பேசாமல் மௌனமாக ஒரு நிமிடம் கரைந்தது. ஒருவாறாகத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு "உம்மாக்கு இப்போ சுகமா?" என்று கேட்டான். ஆம் என்று தலையை ஆட்டிய பஸீரு "என்னமோ தனியாக் கதைக்கணும் எண்டு சொன்னீங்களே, அதச் சொல்லலயே" என்று கேட்டாள். அவன் விடயத்துக்கு வந்தான்.

"பஸீரு, நீ என்னப்பத்தி என்ன நெனைக்கிறே?" சலீம் கேட்டபோது "ஒரு கோடீஸ்வரரோட வாரிசு. இருந்தாலும் நல்ல பண்புள்ளம் கொண்டவர். பாரபட்சம் காட்டாம பழகக்கூடியவர் எண்டு நெனைக்கிறேன்" என்றாள் பஸீரு. அது அவனுக்கு போதுமானதாக இருந்தது "இன்னும் விஷயத்துக்கு வரலயே" பஸீரு கேட்டாள். "நான் உன்ன விரும்புகிறேன்" சலீம் அமைதியாகச் சொன்னபோது அவன் எதிர்பார்த்த மாற்றங்கள் எதுவுமே பஸீருவின் முகத்தில் ஏற்படவில்லை. ஆனால் சபீனா சிரித்தாள். "ஏன் சிரிக்கிறீங்க?" சலீம் கேட்க, ஏதோ சொல்ல வாயெடுத்த பஸீரு மீண்டும் மௌனியானாள். சலீம் தொடர்ந்தான். "நா கேட்டது தப்பா இருந்தா மன்னிச்சுடுங்க." இதைச் சலீம் சொல்ல "அப்படி இல்ல. நானும் உங்கள விரும்புகிறேன். ஆனா" என்றவளின் முகம் மாறுகிறது; "என்ன விஷயம்;

சொல்லுங்க'' சலீம் கேட்டபோது ''நீங்க பெரிய பணக்கார வீட்டுப்புள்ள. நா ரொம்ப ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவ'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னாள் பஸீரு. பாடம் முடிவதற்கான மணியொலிக்க, சலீம் சென்றுவிட்டான்.

பாடசாலை முடிந்ததும் வாயிற்கதவருகில் அவனுக்காக பஸீருவும், சபீனாவும் காத்து நின்றனர். அவனும் அவர்களோடு சேர்ந்து கொண்டான். அவனே முதலிற் கதையைத் தொடங்கினான். ''ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமை எந்த மனிதனுக்கும் வரக்கூடாது; பணமிருந்தால்தான் பெரியவர்கள் என்று நினைப்பதும் தவறானது. நாங்க எல்லாருமே முஸ்லிம்தான்; எங்களுக்குள்ள இவளவு பிரிவினை கூடாது. மௌத்தானதும் எல்லாருக்குமே ஆறடி நிலந்தான் சொந்தம். சொத்து, சுகம் கூட வாறதில்ல.'' என்று சலீம் தத்துவம் பேசத் தொடங்கியபோது ''சரி சலீம். நீங்க என்ன விரும்புறது வெளியில யாருக்குமே தெரியக்கூடாது'' என்று நிபந்தனை விதித்தாள் பஸீரு. அதன்பின் இருவரும் ஒன்றாகக் கதைத்தார்கள், சிரித்தார்கள். இவ்வாறு இவர்களது காதல் மலர்ந்துகொண்டு வந்தது.

இவர்களது காதல் இடைநிறுத்தப்படும் நிலைக்கு வந்தது. சலீம் பொறியியல் பிரிவில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று இன்னுமோர் மாதத்தில் போய் விடுவான்; பஸீருவின் படிப்பு குடும்பத்தின் வறுமைநிலை காரணமாக 12-ம் தரத்தோடு நின்றுபோய் விட்டது; தொழில் தேட பணத்துக்கு எங்கே போவது? பஸீரு வீட்டில் தனிமையானாள். இந்த ஒருமாதமும் நீடிக்கக் கூடாதா? என எண்ணத் தோன்றியது அவனுக்கு. இடையில் அதிகமாக சந்திக்கும் சந்தர்ப்பங்களை சபீனாவின் வீட்டில் ஏற்படுத்திக்கொண்டார்கள். பல்கலைக்கழகத்துக்குச் செல்ல இன்னும் ஒரு நாள்தான் இருந்தது. அன்று மாலை நான்கு மணியளவில் பஸீருவும், சலீமும் சபீனாவின் வீட்டில் சந்தித்துக்கொண்டார்கள்.

அன்று ஏனோ இருவரது முகத்திலும் வாட்டம் தெரிந்தது. சபீனாவின் வீடு அன்று அதிக தனிமையில் ஆழ்ந்திருந்தது; ஒவ்வொருவரும் தத்தம் வேலைகளுக்கெனச் சென்றிருந்தனர். மௌனத்தை நீடிக்காமல் ''நாளைக்கா வாசிற்றிக்கு போறீங்க?'' என்று பஸீரு கேட்டாள். ''ஒன்னப் பிரிஞ்சு போறது எனக்குக் கஷ்டமா இருக்கு பஸீரு'' அவன் கலங்கினான். ''அதால என்ன? மத்தவங்களைப் போல இல்லாம, நல்லாப் படிச்சிட்டு வாங்க. நா ஒங்களுக்காக எவுளவு காலமும் காத்திருப்பேன்'' பஸீரு உறுதியாகச் சொன்னாள். இன்னும் ஏதேதோ கதைத்துவிட்டு மனக்கஷ்டத்துடன் அங்கிருந்து வெளியேற முற்பட்டான் சலீம். ''கட்டாயம் கடிதம் போடுங்க'' என்று சொன்னபோது பஸீருவின் கண்களில் நீர் திரையிட்டது; இடையில் சபீனா சிரிப்போடு உள்ளே வந்தபோது இருவரும் முகத்தை மாற்றிக்கொள்ள முற்பட்டனர் அது அவர்களால் முடியவில்லை. ஒருவாறாகப் புறப்பட்டு வீட்டுக்குச் சென்றார்கள்.

சலீமின் வாப்பா மிகவும் பணக்காரர். ஏகப்பட்ட சொத்துக்களின் அதிபதி. வழமையாக இரவு 9-00 மணிக்கே வீடுவரும் அவர் அன்று 7-00 மணிக்கே வந்திருந்தார். தன் செல்ல மகன் பல்கலைக்கழகம் போவது தனக்கு மிகவும் பெருமை என்று நினைத்து, தன் பணக்கார நண்பர்களுக்கென ஒரு 'பார்ட்டி' ஏற்பாடு செய்திருந்தார். சலீமும் அதிற் கலந்துகொண்டான்.

மறுநாள் வாப்பா, உம்மா சகிதமாக தங்களுக்குச் சொந்தமான பியட்காரில் கண்டிக்குப் பறந்தான். அன்றே அவனுக்கு எல்லா வசதிகளுடனும் கூடிய அறையொன்று வாப்பாவால் பெற்றுக்கொடுக்கப்பட்டது; பஸீருவினைச் சுற்றிச்சுற்றி

வந்தன அவனது நினைவலைகள்; அவளது நினைவோடு பல்கலைக்கழக வாழ்வுக்குள் தன்னை ஆட்படுத்தினான் சலீம்.

காலச் சக்கரம் சுழன்றது. நான்கு வருடங்கள் முடிவுற்றது. தற்போது எஞ்சினீயர் சலீமாக அவன் ஊருக்குள் பிரவேசிக்கப் போகிறான்; அதனைப் பெரிய விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று வாப்பா காத்திருந்தார். ஆனால் சலீம் இதை விரும்பவில்லை; இதனால் சாதாரணமாக அவன் வந்துசேர்ந்தான். இரு கிழமைகள் கழிந்தன; தனக்காகக் காத்திருக்கும் பஸீராவைச் சந்திக்கச் சபீனாவின் வீட்டுக்குச் சென்றான்; சபீனா அன்போடு வரவேற்றாள். இந்த நான்கு வருடங்களில் சபீனா ரொம்பவும் மாறிப்போய் மிக அழகாக இருந்தாள். இவளே இப்படியிருக்கிறாளே! என் பஸீரா எப்படியிருப்பாள்? என்று நினைத்தபோது மனம் பழையவற்றையெல்லாம் மீண்டும் மீட்டிக்கொண்டது.

தம்பியோடு சென்ற சபீனா, பஸீராவையும் கூட்டிக்கொண்டு வந்தாள். அவளும் வெட்கத்துடனும், நாணத்துடனும் மூக்காடு போட்ட நிலையில் சலீமின் முன் காட்சியளித்தாள். சலீம் திகைத்து விட்டான். ''இது என் பஸீராவா?'' அவன் பார்வைகள் நிலைகுத்தின; பஸீரா தூரத்தே அமர்ந்தாள். சபீனாவும் அவளுடன் சேர்ந்துகொண்டாள். ''இவ்வளவு அழகுடன் இருக்கிறார்களே! எல்லாப் பெண்களும் இக்காலகட்டத்தில் பார்ப்போர் கண்களுக்கு அழகாய்த்தான் இருப்பார்களோ!'' அவனது சிந்தனைக்கு முற்றுப் புள்ளியாய் பஸீரா பேசத் தொடங்கினாள். ''எப்ப வந்தீங்க?'' என்று. ''ரெண்டு கிழமையாகுது'' என்றான் சலீம். ''அது சரி. எங்களப் பாக்க எங்க நேரங் கெடைக்கப் போவுது? பணக்காரப்புள்ள. அதிலும் எஞ்சினியர்; பார்க்கவே கெடைக்காது'' என்றாள் பஸீரா. ''பஸீரா, அந்தத் தேவையில்லாத கதயெல்லாம் விட்டுட்டு வெஷயத்துக்கு வா; தொழில் ஒன்னுக்கும் முயற்சி பண்ணலையா?'' என்று கேட்ட சலீம் ''இன்னும் ரெண்டு மாதங்களில அப்பொயின்மென்ட் ஆர்டர் வந்திடும். கொழும்பில்தான் வேல கெடைக்கும். அதனால் என்ன வாப்பா பணக்காரர். கார் இருக்கு. போய் வந்திடலாம்.'' என்று சலீம் சிரித்துவிட்டு, தன் பல்கலைக்கழக வாழ்நாட்களை இருவருடனும் பகிர்ந்தான். பின்னர் கதைகளை ஒருவாறாக முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

தொடர்ந்த நாட்களில் ஒரு நாளுக்கு இரண்டு மூன்றாக சலீமுக்குக் கல்யாணப் பேச்சுத் தொடங்கியது. பணக்கார எஞ்சினியர் மாப்பிள்ளை அல்லவா? மிகப் பெரிய பெரிய இடங்களில் இருந்தெல்லாம் சம்மந்தப் பேச்சுக்கள் நடைபெற்றன. மில் முதலாளிகள், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மாணிக்கக்கல் வியாபாரிகள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு மாப்பிள்ளை கேட்டு வந்தனர். ஆனால் சலீம் இவை ஒன்றுக்கும் ஒத்து வரவில்லை. தான் யாராவது ஒரு ஏழைப் பெண்ணுக்குத் தான் வாழ்வளிக்க விரும்புவதாகக் கூறிக் கொண்டிருந்தான். ஆனால் அவனது புதிய நண்பர்களின் பேச்சுக்கள் ஓரளவு அந்த நோக்கத்தை மாற்றியமைக்க முயற்சித்தன. மேலும் அவனது புதிய நண்பர்களின் தூண்டுதலால் சலீமும் கெட்ட பழக்கங்களையெல்லாம் சாதாரணமாக எண்ணிச் செய்யத் தொடங்கிவிட்டான். ஆம். இப்போது அவன் சினிமா செல்கிறான். மற்றவர்களுடன் சேர்ந்து குடித்துக்கொண்டு கும்மாளம் போடுகிறான். ஊரிலுள்ள பலரின் பகைமையைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். மற்றவர்களின் பேச்சைக் கேட்டுத் தன் மனதை மாற்றிக் கொண்டான்; இதற்கு ஆதரவாக ''பஸீராவுடன் கதைத்தேன். மகிழ்ந்தேன். வேறு விசேடமாக சத்தியமா செய்து கொடுத்தோம்? ஏன் யோசிக்கணும்?'' எனத் தன்னைத் தானே கேள்வியும் கேட்டுக் கொண்டான். ஆனால் பஸீராவின் மனதில் ஆசையை வளர்த்தோமே என்பது பற்றிச் சற்றும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

சலீம் வீட்டுத் தோட்டத்தில் கிடந்த சோபாவில் அமர்ந்திருந்தான். அவ்வமயம் அவனது பல்கலைக்கழக நண்பரொருவரும், விரிவுரையாளரும் வந்து சலீமைப் பள்ளிக்கு வரும்படி அழைத்தனர். சலீமும் தனது விரிவுரையாளர் வந்துவிட்டாரே என்பதற்காக சம்மதித்தார். அவர்கள் சலீமைப் பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு போய் உபதேசம் செய்து இருநாட்கள் தங்களுடன் தங்கும்படி செய்கின்றனர். இதன்பின் படிப்படியாக அவனது உள்ளமும் மாறத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து சலீம் 40 நாட்கள் தபீலீக் ஜமா அத்தாருடன் சேர்ந்து ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் செல்கிறான். செல்வந்தர்கள், பல கோணங்களிலும் உள்ள மக்கள், அவர்களது ஒற்றுமை என்பவற்றை நேரிற் காணக்கூடியதாக இருக்கிறது. மற்றும் மார்க்கப் பிரச்சாரங்களைக் கேட்டதன் மூலமும் தன்னைவிட தகுதியிலும் பணத்திலும் கூடிய எத்தனையோ மக்களின் எளிய வாழ்க்கையும். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் காட்டிய உண்மை இஸ்லாமிய வாழ்வு முறையையும் பின்பற்றி மனநிறைவுடன் வாழ்வதையும் கண்கூடாகக் கண்டதன்பின் இச்சம்பவங்கள் அவன் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தின. இதன் பயனாக அவனது ஆடம்பர வாழ்க்கை படிப் படியாகக் குறைக்கப்பட்டு தற்பொழுது தொழுகை, பள்ளி, அடிக்கடி ஜமா அத் உண்மையில் அவனது உருவமே மாற்றம் பெற்றுவிட்டது. ஆம். இப்பொழுது எளிய வாழ்க்கையின் சாயல் அவனை வியாபித்திருந்தது. தற்போது சலீம் நீண்ட ஜுப்பாவுடனும், தலையிலே தொப்பியுடனும், தாடியுடனும் காட்சி அளித்தான்.

இந்நிலையில்தான் வெளிநாட்டிலிருந்து வந்த மார்க்கப் பிரமுகர்களும், உள் நாட்டின் தலைசிறந்த மார்க்கப் பிரச்சாரகர்களும் கலந்துகொண்ட இஜ்திமாவிலும் சலீம் கலந்து கொண்டான். அதன் பலனாக அவன் பல உண்மைகளை உணரக்கூடிய தாக இருந்தது. முஸ்லிம்களுக்கிடையில் பாரபட்சம் காணப்படக்கூடாது. ஏழை களுக்குப் பணக்காரர்கள் முடியுமானவரை வாழ்வளிக்க வேண்டும். ஏழைக் குமர் களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் முடியுமான வரை ஒற்றுமையுடனும், நேர்மையுடனும் வாழவேண்டும் என்ற கருத்துக்கள் அவன் உள் ளத்தைத் தொட்டது. தொடர்ந்தும் பல ஜமா அத்துக்களிலும், மார்க்கப் பிரச் சாரங்களிலும், இஜ்திமாவிலும் கலந்துகொண்டான். அவனது மனம் மாற்றம் பெற்றுத் தான் பஸீருவுக்கே வாழ்வளிக்க வேண்டும் என்ற உறுதி மனத்துள் ஏற் பட்டது. இந்த முடிவைத் தனது வாப்பாவிடம் தெரிவித்தான்; அவர் கடைசி வரையும் ஒத்துக்கொள்ளவில்லை. அவனது கல்யாணப் பிரச்சினை எப்போது முடி யுமோ என்பது ஊருக்குள் ஒரு கேள்விக்குறியாகவும் அமைந்தது. இதன்பின் இரு கிழமைகளில் அவர்களது ஊருக்கு வந்த வெளியூர் வாசிகள் நடத்திய இஜ்திமாவில் சலீமினது வாப்பாவும், வேறு சில பணக்காரப் பிரமுகர்களும் சலீமினதும் வேறு பலரினதும் வற்புறுத்தலுக்கிணங்க கலந்துகொள்ள வேண்டியதாய்ப் போயிற்று. சலீமின் வாப்பாவும் சில மார்க்க உண்மைகளை அறியக்கூடியதாய்ப் போயிற்று. இவ்வாறு அதிகரித்த ஜமா அத்துக்கள், மார்க்கப் பிரச்சாரங்கள், இஜ்திமாக்களின் மூலமாக சலீமினது வாப்பாவின் உள்ளமும் தெளிவுபெற்றது. அவர் மார்க்கப் பித்தனாகவே மாறிவிட்டார். தனது ஒரே மகன் சலீமை பஸீருவுக்கே கட்டிக் கொடுக்க முன்வந்தார். இதைக் கேட்ட பஸீருவும் தாயாரும் மகிழ்ச்சியில் பொங்கினர். தனது பிள்ளைக்கா இப்படி ஒரு பெரிய வாழ்வு? இவர்களின் நிக்காஹ் 1979ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி மாத்தளையில் நடைபெற்ற இஜ்திமாவின் போது பிரகடனம் செய்யப்படவிருந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் சலீமின் வாப்பாவின் நண்பனான சும்சுத்தீன் ஹாஜியாரும் தனது பெண்மக்களுள் ஒருவரான பாத்திமாவிற்குத் தனது வியாபார

திருவனத்தில் நேர்மையாகவும், மிகவும் நம்பிக்கையுடனும் மார்க்கப் பக்தியுடனும் தொழில் புரிந்துவந்த லத்தீப் என்னும் ஏழைப் பையனை நிக்காஹ் செய்துவைக்க முன்வந்தார். அதுமட்டுமல்லாமல் சலீமின் வாப்பாவும் அவரது நண்பர்களும் ஜமா அத். இஜ்திமாக்கள் பற்றியும், அவை முஸ்லிம் மக்களிடையே ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் உணர்ந்தார்கள். மேலும் மார்க்க உண்மைகளை மற்றவர்களுக்குப் போதிக்கவும் தொடங்கிவிட்டார்கள். சலீமினது நிக்காஹ்ஹும், லத்தீப்பினது நிக்காஹ்ஹும் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி நடந்த இஜ்திமாவில் வாசித்துப் பிரகடனம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சி அப்பிரதேசத்து முஸ்லிம் மக்கள் ஒவ்வொருவரினதும் நெஞ்சத்தில் ஒரு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டது.

- முற்றும் -

---

சன்மார்க்கக் கல்வியை கற்பது ஒவ்வொரு முஸ்லிமான ஆண், பெண்மீதும் கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது.

(திர்மிதி)

மனிதர்களை நன்மையின்பால் அழைத்து நற்கருமங்களை ஏவித் தீயகாரியங்களை விட்டும் விலக்கி வைக்கும் ஒரு கூட்டத்தார்கள் உங்களுள் இருப்பது அவசியம். மேலும் அவர்கள்தான் ஜெயசீலர்கள்.

(ஆலஇம்ருன்)

தன் சகோதரனுக்கு தான் விரும்பும் பொருளையே உவந்து கொடுத்து மகிழாதவரை உங்களில் எவரும் சிறந்த முறையில் ஈமான் கொண்டவர்கள் ஆகமாட்டார்கள்.

(புகாரிமுஸ்லீம்)

---

With the Best compliments

from

P.S.K.V. PALLAK LEBBE & Co

163, Second Cross Street,

COLOMBO - 11

*With the best compliments*

*from*

S. P. PERIANNA PILLAI & Co.

180, Second Cross Street,

COLOMBO . 11.

With the best compliments
from

# Akkaraipattu Motor Works

*Authorised Dealer For Sri Lanka Trading (Tractor) Corporation*

Main Street, AKKARAIPATTU.

PROP: **I. R. M. ABOOBUCKER.**

Authorised Manufacture of Tractor Trailers
and Agriculturar Implements

Specialists in

Lathe Works and Motor Repairs
Reliable Electric Works

# *Agro Farmers Enterprise*

**Main Street - — Akkaraipattu.**

# வஹியின் நிழலில் அசலும் நகலும் - ஒரு ஒப்பீட்டாய்வு.

**மௌலவி: எம்: ஐ. அப்துர் ரஸ்ஸாக்**
அறபு, இஸ்லாமிய நாகரீகத்துறை துணை விரிவுரையாளர்.
யாழ். பல்கலைக் கழகம்.

*''(நபியே! இது) வேதநூல். இதனை நாமே உம்மீது அருட் செய்திருக்கின்றோம். (இதன்மூலம்) மனிதர்களை அவர்களுடைய இறைவன் கட்டளைப் பிரகாரம், இருள்களிலிருந்து வெளியேற்றி பிரகாசத்தின்பால் நீர் கொண்டு வருவீராக! (அப்பிரகாசமோ) மிக்க புகழுக்குரிய (அல்லாஹ்வாகிய யாவரையும்) மிகைத்தவனின் நேரான வழியாகும்.'' (14:01)*

மனிதன் இவ்வுலகிலும், மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கை நிலைமைகளிலும் வெற்றியடைய வேண்டும் எனும் ஒரே ஒரு நோக்கத்திற்காகவே அல்லாஹ், காலத்துக்குக் காலம் இவ்வுலகின்கண் நபிமார்களையும், ரசூல் மார்களையும் அவர்கள் மூலமாக ஸுஹ்புகள், வேதங்கள் எனும் அமைப்பில் நல்ல பல வாழ்க்கைத் திட்டங்களையும் அருளிச் செய்தான். இந்த வரிசையில் சிறப்புமிக்க அகில உலக இரட்சகன் 'ரப்புல் இஸ்ஸத்'தான அல்லாஹ்விடம் இருந்து, நபிமார்கள், ரசூல் மார்கள் அனைவருக்கும் தலைவர் 'ஸய்யிதுல் முரஸ்லீன்'ன ரசூலே அக்ரம் முஹம்மத்(ஸல்) அவர்கள் மூலமாக, இறையச்சம் உடையவர்களுக்கு வழிகாட்டும் 'ஹுதன் லில் - முத்தகின்'ன அல் - குர்ஆன் அருளப்பட்டது மனிதனிடம் காணப்படும் புலனறிவுகள், பகுத்தறிவு, சிந்தனைத்தெளிவு முதலியன சம்பூரணமற்றவை என்பதை அல் - குர்ஆன் வலியுறுத்திக் கூறுவதுடன், பிறரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் ஒரு உணர்வும் இம் மனிதனிடம் மறைந்திருக்கின்றது என சூசகமாக எடுத்துக் காட்டுகின்றது. எனவே, அவனது வாழ்க்கையின் அடிநாதமாக வஹியின் வெளிப்பாடுகள் அமைய வேண்டும் என அல்லாஹ் எதிர்பார்க்கின்றான். இவ்வாறு அவனது வாழ்க்கை அமைந்துவிட்டதென்றால் அதுவே அவனது ஈடேற்றத்துக்கு வழி எனவும், இதற்கு மாற்றமாக அமைந்து விட்டால் அது அவனது அழிவுக்கும், இழிவுக்கும் காரணமாக அமையும் எனவும் சரித்திரச் சான்றுகளுடன் அல்-குர்ஆன் வலியுறுத்தி நிற்கின்றது.

வஹியின் முக்கியத்துவத்தை பின்வரும் அல்-குர்ஆன் வசனங்கள் தெளிவு படுத்தக் கூடியனவாக இருக்கின்றன.

''அல்லாஹ் (நேருக்கு நேராகப்) பேசுவதற்குரிய தகுதி மனிதரில் எவருக்கும் இல்லை. எனினும், வஹியின் மூலமாகவோ, அல்லது திரைக்கப்பால் இருந்தோ, அல்லது தான் விரும்பியதைத் தன் அனுமதியின் மீது வஹியை(ப் பெற்று) அறிவிக்கக்கூடிய ஒரு தூதரை அனுப்பிவைத்தோ - (மனிதரிடம் பேசுகிறான்) நிச்சயமாக அவன் மேலானவனும் ஞானமுடையவனுமாவான்'' (42:51)

(நபியே!) இவ்வாறே உமக்கு நம்முடைய கட்டளைகளில் உயிரானதை (-குர்ஆனை) வஹிமூலமாக அறிவிக்கின்றோம்; (இதற்கு முன்னர்) நீர் வேதம் இன்ன

தென்றும், விசுவாசம் இன்னதென்றும் அறிந்தவராக இருக்கவில்லை. ஆயினும் (இவ்வேதத்தை உமக்கு நாம் வஹிமூலம் அறிவித்து) இதனைப் பிரகாசமாகவும் ஆக்கி நம் அடியார்களில் நாம் விரும்பியவர்களுக்கு இதனைக் கொண்டு நேரான வழியைக் காண்பிக்கின்றோம். (நபியே!) நிச்சயமாக நீர் (இதன் மூலம் ஜனங்களுக்கு) நேரான வழியைக் காண்பிக்கின்றீர்'' (42:52)

எனவே வஹியின் மூலமாக அருளப்பட்டிருக்கின்ற அல்-குர்ஆனே முஸ்லிம்களது வாழ்க்கை உயிர்நாடி. இவ்வூற்றிலிருந்தே 'உலூமுல் குர்ஆன்' எனப்படும் அல்-குர்ஆனை அடியொற்றி வளர்ந்த ஹதீஸ், விரிவுரை, பிக்ஹ்முதலான பல துறைகள் இஸ்லாத்தில் வளர்ச்சியுற்றன. அல்-குர்ஆன் அருளப்பட்ட காலை வாழ்ந்த சமுதாயத்தினர்களான, ஸஹாபாப் பெருமக்கள் இதனோடு ஏற்படுத்திக் கொண்டிருந்த தொடர்பு முழு உலகத்தையும் வியப்பில் ஆழ்த்தக்கூடியதாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு ''அக்காலத்தில் பெருநூற்கள், ஆராய்ச்சிகள், விஞ்ஞானம், கலாச்சாரம், நாகரீகம் போன்றன இருக்கவில்லை என்பது காரணமாக அமையவில்லை. உண்மையில் அன்று பற்பல கலைகள் கலாச்சாரங்கள், நாகரிகங்கள் எல்லாம் இருந்தன. எடுத்துக் காட்டாக உரோம நாகரிகம் அன்று இருந்தது. இன்றுங்கூட அதன் சட்டம் (அல்லது அச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை) ஐரோப்பாவின் சட்டமாக இருந்து வருகின்றது. கிரேக்க நாகரிகம் தோற்றுவித்த கலைகள், தத்துவங்கள் இருந்து வந்தன. இவை தாம் மேனாட்டுச் சிந்தனையின் பின்னணியாக என்றும் இருந்து வந்துள்ளன. இவை மட்டுமல்ல; பாரசீகநாகரிகம், அதன் கலை கவிதை, புராணக் கதைகள், மதங்கள், சட்டங்கள் ஆகியனவும் இருந்து வந்தன.

அக்காலத்தில் வேறுபல நாகரிகங்களும் இருந்தன. அரேபிய நாட்டுக்கு வடக்கிலும் தெற்கிலுமாக உரோமநாகரிகமும் பாரசீக நாகரிகமும் கொடிகட்டிப் பறந்தன. போதாக் குறைக்கு, அரேபியாவிலே யூத, கிறிஸ்தவ சமூகங்கள் வாழ்ந்து வந்தன. அவ்வாறிருந்தும் அந்நிகரற்ற சந்ததி, ஆரம்பக் கட்டத்திலேயே, இஸ்லாத்தைப் புரிந்து கொள்வதற்கு அல்-குர்ஆனை மட்டுமே தனது ஊற்றுக் கண்ணாக ஏற்றுக் கொண்டது ஏன்? மேற் சொன்ன உலக நாகரிகங்களையும், பண்பாடுகளையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பது இதற்குக் காரணமல்ல எனத் தெளிவாக விளங்குகின்றது. ஆழ்ந்து சிந்தித்துத்தான் அவர்கள் இஸ்லாத்துக்கு அல்-குர்ஆனில் இருந்துமட்டும் விளக்கம் பெற்றூர்கள்'' 1

அன்று உலகில் காணப்பட்ட ஏனைய நாகரிகங்கள், கலாச்சாரங்கள், சிந்தனைகள் என்பன மனித சக்திகளைக் கொண்டு உருவாக்கப்பட்டவையாகக் காணப்பட்டன. அல்-குர்ஆனோ சிருஷ்டி கர்த்தாவானல் வஹிமூலம் அறிவிக்கப்பட்டதாக இருந்தது. வஹிமூலம் அறிவிக்கப்படாத வொன்ருக இருந்திருந்தால் அன்றைய இலட்சிய சமுதாயம் இதிலிருந்து இஸ்லாத்துக்கான விளக்கத்தைப் பெற்றிருக்க மாட்டாது. இக்கருத்தை அல் குர்ஆனே தெளிவுபடுத்தும் போது, ''இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா? இஃது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் அநேக (தவறுகளையும்) முரண்பாடுகளை(யும்) அவர்கள் காண்பார்கள்'' என அழகாக விளக்குகின்றது. (4:82)

அல்-குர்ஆன் போதனைகள், கருத்துக்கள் உயரிய இலக்குகளை அடைந்து கொள்ளும் துறையில் மனிதனை வழி நடாத்திச் செல்லுகின்ற ஒழுக்க வழிகாட்டிகளாக இருக்கின்றன. (*Moral Guidence aleong the path of noble achievements*) இதனாலேயே அல்-குர்ஆன், அதன் தோற்ற காலத்திலேயே உத்பத்இப்னுரபீஆ, வலீத்பின்

முஹைறரா, லபீத்இப்னு அபீரபீஆ போன்ற இலக்கிய வல்லுனர்களையும் கவர்ந்து விட்டது. கிப்பன் எனும் சரித்திராசிரியர் அல்-குர்ஆனைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது, "அது ஒரு முழுமையான நாகரீகம்" *(It is a complete Civilization)* எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் இது அவ்வக் காலங்களில் வாழ்ந்த சிந்தனையாளர்களையும், தத்துவவாதிகளையும், அறிஞர்களையும் கவர்ந்து வந்துள்ளதைச் சரித்திரம் தெளிவாகப் பதிவுசெய்து வைத்திருக்கின்றது. இந்திய விடுதலை வீரரான முஹம்மத் அலி ஜௌஹர் அவர்கள் அல்-குர் ஆனைப் பற்றிய தனதுகருத்தைத் தெரிவிக்கும் போது "நான் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் கல்வி கற்றவன்; எனினும், குர்ஆனைக் கற்றுத் தேர்ந்தநாளே நான் உண்மையாகக் கல்வி கற்ற நாள்" எனக் குறிப்பிடுகின்றார்: முதன் முதலாக அல்-குர்ஆனுக்கு ஆங்கிலத்தில் பொருள் எழுதிய *(The meaning of the Glorious Quran)* முஹம்மத் மர்மடியூக்பிக்தோல் *(Muhammed Mamaduke pickthall)* அவர்கள் தன்னுடைய கருத்தை வெளியிடும்போது, அல்-குர்ஆனைக் கற்றுக்கொண்ட எவரும், அதன் வழிகாட்டுதல்களுக்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்போர் நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவர் என்பதை மறுக்கமாட்டார்"[2] எனத் தெரிவிக்கின்றார். இவ்வாறு அல்-குர்ஆன் பலரதும் கண்ணியமான கருத்துக்களுக்கு ஆளாகியதற்கான காரணம் என்ன என்பது பற்றிச் சிந்திக்கும்போது, இதன் போதனைகள் அனைத்தும் மனித இயற்கைக்குப் பொருந்துவனவாகவும், மனித இயற்கை சுபாவங்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதுமே காரணம் என்பது தெரியவருகின்றது.

**அல்-குர்ஆனில் இடம் பெற்றுள்ள விடயங்களை மூன்று முக்கிய பிரிவுகளுக்குள் அடக்கலாம்.**

(1) ஈமான் எனும் விசுவாசத்துடன் தொடர்புடைய அல்லாஹ், மலாயிகாமார்கள், வேதங்கள், நபிமார்கள், மறுமை வாழ்க்கை முதலியனவற்றின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அமைந்தன. இவற்றை **மார்க்க அடிப்படைகள்** எனக் கூறலாம்.

(2) மன செயற்பாடுகளினால் நிகழக்கூடிய நற்குணங்களின்பால் மனிதர்களைத் தூண்டுவனவாக அமைந்தவை. இவற்றை **நற்குண அறிவுகள்** என அறிமுகப் படுத்தலாம்.

(3) உறுப்புக்களினால் நடைபெறும் செயல்கள் பற்றி விளக்கம் தரும் வகையில் அமைந்திருப்பவை. இவற்றைச் **சட்டவறிவுகள்** என இனம் காட்டலாம்.

முழு மனித சமுதாயத்தின் இம்மை மறுமை ஈடேற்றத்துக்குத் தேவையானவற்றைத் தத்ரூபமான முறையில் யதார்த்தக் கருத்துக்களுடன் விளக்குவதில் அல்-குர்ஆனுக்கு இணை அல்-குர்ஆனே என ஆணித்தரமாகக் கூறலாம். இவற்றை மனித மனங்களில் பதியச் செய்வது இலேசான ஒரு கருமமன்று என்பதையும் அல்-குர்ஆன் உணர்ந்திருக்கின்றது. இதனாலேயே இப்பாரிய கைங்கரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக அல்-குர்ஆன் பல்வேறுபட்ட முயற்சிகளை எடுத்திருக்கின்றது. அவற்றில் முக்கியமானவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

(1) தகுந்த உதாரணங்கள் காட்டி விளக்கம் கொடுத்தல்.

(2) சரித்திர சம்பவங்களை நினைவுபடுத்தித் தெளிவுண்டாக்குதல்.

(3) சமயோசிதமானமுறையில் கருத்துக்களை வெளியிடல்.

(4) சட்டங்களைப் பொறுத்தமட்டில் பொறுப்புக்களில் கடினமில்லாத முறையிலும் (அதமுல்ஹாஜ்) கஷ்டங்களைக் கொடுத்து இலேசு கொடுக்கும் முறையிலும் (தக்லீலுத்தகாலிப்), படிப்படியான பயிற்சிகளின் இறுதியில் சட்டமாக்கப்படும் முறையிலும் அமைந்தவை.

(5) நபித்தோழர்களின் கேள்விகளுக்கு விடையளிக்கும் பாணியில் அமைந்த வசனங்கள்.

(6) மனிதனின் அன்றாடத் தேவைகளான ஊண், உடை, உறையுள், மனைவி, வியாபாரம், அல்லது தொழில் முதலியனவற்றோடு வேறும் பல விடயங்களை ஒப்பிட்டு ஆன்மீகம் சார்ந்த அவை எவ்வளவு லௌகீகம் சார்ந்த இத் தேவைகளைவிட மனிதனுக்கு அவசியமானவை என்பதுபற்றியும் அவற்றின் பலாபலன்கள் பற்றியும் விளக்கக்கூடிய வகையில் அமைந்தவை. சுருக்கமாக விளக்கம் தருவதாயின், மனிதனின் மரணத்துக்குப் பின்னுள்ள முடிவில்லாத வாழ்க்கையில் அவனுக்கு இன்பத்தையும், சுகண்டியையும் தரக்கூடியனவற்றின்பால் அவனது சிந்தனையைத் திருப்புவதே இவற்றின் நோக்கம்.

இக் கட்டுரையின் நோக்கம், நான் மேலே தொகுத்துத் தந்தவற்றில் கடைசியாகக் குறிப்பிட்ட விடயம் பற்றி விரிவாக ஆராய்வதே. அல்-குர்ஆனில் ஆங்காங்கே பல இடங்களில் அசலிய்யத்தான சில விடயங்களை இலகுவானமுறையில் மனிதன் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் நகலான அவற்றையொத்த பல விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவற்றை இனம்காட்டி நகலைவிட அசல் எவ்வளவு மேலானதாக இருக்கின்றது என்பதை அவை இரண்டையும் ஒப்பிட்டு ஆராய்ந்து விளக்குவதாகும். அசலும் நகலும் மனிதனுக்கு எடுத்துக்காட்டப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டுள்ள அல்-குர்ஆனின் போதனுமுறை தனிச்சிறப்பு வாய்ந்ததும் இணையற்றதுமாகும்.

**பின்வரும் அல்-குர்ஆன் வசனங்களை ஒரு கணம் உன்னிப்பாகக் கவனியுங்கள்.**

''ஹஜ்ஜு (அதற்கெனக்) குறிப்பிடப்பட்ட (ஷவ்வால் துல்கஃதா' துல்ஹஜ் ஆகிய) மாதங்களில்தான். ஆகவே, அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை(த்தன்மீது) கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜு (மாதத்தின் பத்தாம் தேதி) வரையில், சம்போகம், துர்வார்த்தை பேசுதல், சச்சரவுசெய்து கொள்ளுதல் கூடாது. (இவைகளைத் தவிர்த்து) நீங்கள் என்ன நன்மை செய்தபோதிலும், நிச்சயமாக அல்லாஹ் அதனை அறிந்து, அதற்குரிய கூலி தருவான். தவிர, (ஹஜ்ஜுடைய யாத்திரைக்கு வேண்டிய) உணவுகளை (முன்னதாகவே) சித்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால், (நீங்கள்) சித்தப்படுத்திக் கொள்ள வேண்டியவைகளில் எல்லாம் மிகமேலானது, நிச்சயமாகப் பரிசுத்தத்தன்மைதான். ஆதலால், அறிவாளிகளே! நீங்கள் (குறிப்பாக ஹஜ்ஜுடைய காலத்தில்) எனக்குப் பயந்து (மிக்க பக்தியோடும் நடந்து) கொள்ளுங்கள்'' (2:197)

''ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக் கூடிய ஆடையையும் அலங்காரத்தையும் நிச்சயமாக நாம் உங்களுக்கு அருள் புரிந்திருக்கின்றோம். எனினும், (பாவங்களை மறைத்து விடக்கூடிய பயபக்தியென்னும்) பரிசுத்த தன்மையின் ஆடைதான் மிக்க மேலானது. இதுவும் அல்லாஹ்வுடைய அத்தாட்

சிகளில் உள்ளதாகும். (இதனைக் கொண்டு) அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவார்களாக!'' (7:26)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களைக் கூர்ந்து கவனிக்கும்போது, இறையச்சம் எனும் பரிசுத்தத் தன்மையின் உயர்வையும். மேன்மையையும் இவ்வசனங்கள் எடுத்து விளக்குவனவாக இரு பதையுணரலாம். எமது அன்றுட அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை ஆகிய இரண்டும் பரிசுத்தத் தன்மையுடன் ஒப்பிடப்பட்டு இவற்றைவிடப் பரிசுத்தத் தன்மையின் உயர்வு அப்பட்டமாக விளக்கப்பட்டிருக்கின்றது.

உணவும், உடையும் மனிதனது அதிமுக்கியத்தேவைகள் உணவின்றி உயிர் வாழ்வது சாத்தியப்படாது. இதேபோன்று உடையின்றியும் அவன் சமூகத்துடன் உறவாடிக் கூடிவாழ முடியாது. சீதோஷ்ண நிலை வேறுபாடுகளில் இருந்து தனது உடம்பைத் தற்காத்துக் கொள்வதற்கும், மானத்தை மறைப்பதற்கும், தன்னை அழகுபடுத்தி நாகரீகமானவனுகவும், பண்பட்டவனுகவும் காட்டிக் கொள்வதற்கும் அவனுக்கு ஆடை அவசியப்படுகின்றது. உலகத்தில் வாழ்கின்ற உயிரினங்கள் அனைத்துக்கும் பசியுணர்வு ஏற்படுகின்றது. இயற்கை அமைப்புக்களுக்கேற்ப அவை தத்தமது பசியைத் தீர்த்துக்கொள்வதற்காக வெவ்வேறு வகைகளான உணவுப் பதார்த்தங்களைப் புசிக்கின்றன. மனிதன் தனது பசியைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய மிருகங்களின் இறைச்சியை உபயோகித்துக் கொள்கின்றுன். இதே நேரத்தில் புலி, கரடி, சிங்கம், முதலை முதலியன நரமாமிசத்தை விரும்பியுண்ணக்கூடியனவாக இருக்கின்றன. எனவே, பசியுணர்வு உயிருள்ள அல்லாஹ்வின் படைப்புக்கள் அனைத்தினதும் ஒரு பொதுப்பண்பாக இருக்கின்றது. ஆனல், 'தக்வா' எனும் உளப்பரிசுத்தம ஆறறிவு படைத்த மனிதனிடம் மாத்திரம் இடம் பெறக்கூடியவொரு பண்பு. எனவே, மற்றைய உயிரினங்களுக்கும் பொதுவான ஒரு பண்பு, மனிதனிடமும் இருக்கின்றது என்பதால் மனிதன் ''அஷ்ரபுல் மக்லுவாத்'' எனும் படைப்புகளிலெல்லாம் மேலான படைப்பு எனும் சிறப்புப் பெயரைப் பெறமுடியாது. ஏனைய உயிரினங்களிடம் காணப்படாத ஒரு விசேஷமான பண்பை அல்லாஹ் மனிதனிடம் எதிர்பார்க்கின்றுன், இப்பண்பையே அல்லாஹ் 'தக்வா' எனும் உளப்பரிசுத்தம் அல்லது இறையச்சம் என அறிமுகப்படுத்துகின்றுன்.

ஆகாரத்தைத் தேடிப் பெற்றுக் கொள்வதில் மனிதன் தனது முயற்சியை ஈடுபடுத்தலாமேயொழிய, தனது ஆகாரத்தைப் படைத்துக்கொள்ளும் திறமை அவனிடம் கிடையாது. மாருக, அல்லாஹ்தான், மனிதனுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் உணவளிக்கின்றுன். மனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை அவன் முயற்சி செய்தாலும் செய்யாவிட்டாலும் அவனுக்கான ஆகாரத்துக்கான பொறுப்பை அல்லாஹ் ஏற்றிருக்கின்றுன். பின்வரும் அல்-குர்ஆன் வசனங்களைக் கவனியுங்கள்.

''அல்லாஹ்தான் உங்களைப் படைத்தவன். உங்களுக்கு ஆகாரம் கொடுப்பவனும் அவனே. பின்னர், அவனே உங்களை மரிக்கச் செய்கின்றுன். (அதன்) பின்னர், அவனே உங்களை உயிர்ப்பிப்பான். இவற்றில் எதையும் செய்யக் கூடியவை உங்கள் தெய்வங்களில் ஏதும் உண்டோ? அவர்கள் வைக்கும் இணைகளில் இருந்து, அவன் மிக்க உயர்ந்தவன், மாதூயவன்'' (30:40)

''(நபியே! நீர் கூறும்) நிச்சயமாக அல்லாஹ்தான் (யாவருக்கும்) ஆகார மளிப்போனும் அசைக்கமுடியாத பலசாலியுமாவான்'' (52:58)

''தரித்திரத்துக்காக(ப் பயந்து) உங்கள் குழந்தைகளை நீங்கள் கொலை செய்யாதீர்கள் (ஏனென்றால்,) உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம்.'' (6:51)

ஆனால். இறையச்சம் எனும் பரிசுத்தத்தன்மைக்கான அல்லாஹ்வின் வாக்குறுதி சில தியாகங்களை நிபந்தனைகளாக வைத்தே செய்யப்பட்டிருக்கின்றது. நிபந்தனையற்ற வாக்குறுதி இல்லை. எனவே, 'தக்வா'வை வளர்த்துக் கொள்வதில் நாம் தியாகங்கள் பலவற்றை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றோம்.

உடையைப் பொறுத்தமட்டில் மனிதன் மாத்திரமே உடைகளைக் கொண்டு மேனியை மறைத்துக் கொள்ளக்கூடியவனாக இருக்கின்றான் ஏனைய உயிரினங்கள் இறக்கும்வரை பிறந்த மேனியுடனேயே இவ்வுலகத்தில் வாழ்ந்து செத்துமடிகின்றன. அவற்றிற்கு வெட்க உணர்ச்சியென்பதோ, நாகரீகமாக. அழகாகப் பிறர் முன் தோற்றமளிக்க வேண்டும் எனும் உணர்வோ கிடையா ஆரம்பத்தில் இலை குழைகளைக் கொண்டு தனது அங்கங்களை மறைத்துக்கொண்ட மனிதன் அறிவு முதிர்ச்சி பெற்று இன்று நாகரீகமான முறையில் உடையுடுத்தவும் அழகான முறையில் பிறர்முன் தோற்றமளிக்கவும் கற்றுக்கொண்டான். மேனியை மறைத்துக் கொள்வதற்காக மனிதன் அணியும் ஆடைகளைவிட, உளப்பரிசுத்தம் ான் அவனுக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்றது என்பதே அல் குர்ஆனின் கருத்து.

உணவு, உடை முதலியவற்றின் அவசியம் எவ்வாறோ, அதைவிட ஒருபடி கூடுதலாக மனிதனுக்குத் ''தக்வா'' எனும் பரிசுத்த உள்ளத்தின் அவசியத்தை விளக்கக் கூடியனவாக நாம் ஏற்கனவே அவதானித்த அல்-குர்ஆன் வசனங்கள் அமைந்திருக்கின்றன. உணவும், உடையும் பெரும்பாலும் மனித உடம்பைக் கட்டிக் காத்துப் பேணுவதற்கே உதவி செய்கின்றன. மனித உடலினுள்ளே இனந்தெரியாத வகையில் அமைந்திருக்கும் அவனது ஆத்மா புறக்கணிக்கப்படக் கூடியவொன்றல்ல. நிச்சயமாக ஆத்மாவானது இறையச்சம் அற்றதாகவும், பரிசுத்தமற்றதாகவும் ஆகிவிட்டால் அவன் உண்ணும் உணவைக் கொண்டோ, உடுத்தும் ஆடைகளைக் கொண்டோ சாதகமான விளைவுகளை அவனால் அடைந்து கொள்ளமுடியாமற் போவதுடன் அவனால் உலகத்துக்கும் எதுவித நன்மையுமேற்படாது.

இங்கே உளப்பரிசுத்தம், உணவு, உடை என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டு அதன் சிறப்பு விளக்கப்பட்டிருப்பதில் ஒரு முக்கிய கருத்து பொதிந்திருக்கின்றது. நாம் உண்ணக்கூடிய உணவு உடம்பின் பல உறுப்புக்களின் தொழிற்பாட்டுக்கு ஆட்பட்டதன் பின்புதான் இரத்தமாக மாறி நம்முடலில் சக்தியைச் சேர்க்கின்றது. நாம் உயிர் வாழும்வரை நமது இருதயம் அடித்துக்கொண்டேயிருக்கின்றது. இதன் மூலம் இரத்தமானது உடம்பின் பல உறுப்புக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. நாம் உட்கொள்ளும் உணவு முதன் முதலாக உமிழ் நீரினால் ஐதானதாக ஆக்கப்பட்டுப் பற்களினால் மெல்லப்படுகின்றன. வயதைப் பொறுத்து நாம் உட்கொள்ளும் உணவு வகைகளும் அமைவதால் இதற்கேற்றாற்போன்று பற்களும் நமக்கு அளிக்கப்படுகின்றன. ஆறுவயதுக் குழந்தையிடம் இருபது பற்கள்தான் இருக்கும். பதின்மூன்று வயதை அக்குழந்தையடையுமுன் நிலையான பற்கள் அனைத்தும் தோன்றி விடுகின்றன. ஆனால் கடைவாய்ப்பற்கள் நான்கும் பதினெட்டு வயதுக்குப் பின்தான்

வெளிப்படுகின்றன. பருவமடைந்த ஒருவரின் பற்களின் எண்ணிக்கை முப்பத்தி ரண்டாக இருக்கும். பற்களைக் கொண்டு மெல்லப்பட்ட உணவு நாவினுல் தொண்டைக் குழிக்குள் தள்ளப்படுகின்றது. குடலையடைந்த உணவு அங்கே சில மணித்தியாலங்கள் தங்கியிருக்கும். உணவு சீரணமடைவதற்குதவியாக ஒரு சாறு இங்கே சுரக்கப்படுகின்றது. உணவில் இருக்கக்கூடிய சத்துக்கள் குடற்சுவரில் அமைந்திருக்கும் சுரப்பிகளால் உறிஞ்சப்பட்டு உடம்பின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன. ஆடையைப் பொறுத்தமட்டில் கூட எவ்வளவோ சிரமங்களை மேற்கொண்டதன்பின்தான் அவற்றைக் கொண்டு தன்னை அலங்கரித்துக் கொள்ளக்கூடிய நிலைக்கு மனிதன் வருகின்றுன். எனவே, 'தக்வா' எனும் உளப்பரிசுத்தமும் இலேசாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வொன்றல்ல. பல தியாகங்களை மேற்கொள்வதன் இறுதியிலேதான் இதை அடைந்து கொள்ளலாம் என்பதை இவை மூலமாக விளங்குகின்றோம்.

இவ்வாறுன தியாகங்கள் பல பற்றி அல்-குர்ஆன் வகுத்துக் காட்டியிருப்பதை இனிக் கவனிப்போம்.

இது வேதநூல். இதில் சந்தேகமே இல்லை. பயபக்தியுடையவர்களுக்கு. (இது) நேரான வழியைக்காட்டும் (2:2)

(பயபக்தியுடைய) அவர்கள் மறைவானவற்றை (உண்டென்று) விசுவாசங் கொள்வார்கள். தொழுகையையும் கடைப்பிடித்தொழுகுவார்க. நாம் அவர்களுக்குள் அளித்த (பொருள் முதலிய) வற்றிலிருந்து (தானமாகச்) செலவும் செய்வார்கள் (2 3)

அ றி (நபியே!) அவர்கள் உமக்கு அருளப் பெற்ற (இவ்வேதத்)தையும், உமக்குமுன் (இருந்த நபிமார்களுக்கு) அருளப்பெற்றவற்றையும் விசுவாசங் கொள்வார்கள். (நியாயத் தீர்ப்பு நாளாகிய) மறுமையையும் (உண்மை என்று) அவர்கள் உறுதியாக நம்புவர்ர்கள். (2:4)

இத்தகையோர்தாம் தங்கள் இறைவனின் நேரான வழியில் இருக்கின்றுர்கள்; இவர்கள்தாம் நிச்சயமாகச் சித்தியடைந்தவர்கள். (2:5)

இவ் வசனங்களில் பயபக்தியுடையவர்களின் நல்ல பல பண்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதன் மூலம் பயபக்தியை அடைந்து கொள்வதற்கு இவற்றை வழிகளாக எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. பின் வரும் வசனத்தில் நோன்பும் 'தக்வா' வைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு தியாகம் என்பது விளக்கப்பட்டிருக்கின்றது.

> ''விசுவாசிகளே! உங்களுக்கு முன்பிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே, உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. (அதனுல்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்''. (2:183)

இன்னேரிடத்தில் ஹஜ்ஜின்போது செய்யப்படுகின்ற புனித கிரியைகளின் மகத்துவத்தை அல்-குர்ஆன் விளக்கிவிட்டு ''எவன் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பெற்ற புனித சடங்குகளை கண்ணியப்படுத்துகின்றுனே, அது அவனுடைய இருதய பரிசுத்தத் தன்மையை அறிவிக்கிறது'' எனக்கூறி பரிசுத்தத் தன்மையை வளர்ப்பதில் ஹஜ்ஜுக் கிரியைகள் அளிக்கக் கூடிய பங்களிப்புப்பற்றி விளக்கிக் காட்டுகின்றது. இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளத் துணைபுரியும், இன்னும் சில கருமங்கள் பற்றி அல்-குர்ஆன் கருத்துத் தெரிவிக்கும்போது,

EVELYN ... NAM LIBRARY ... JAF

''அநாதைகளின் பொருளை - அவர்கள் பிராயமடையும் வரையில் - நியாயமான முறையிலன்றித் தொடாதீர்கள். அளவை (சரியான அளவு கொண்டு) பூரணமாக அளவுங்கள். எடையை நீதமாக நிறுங்கள் யாதோர் ஆத்மாவையும் அதன் சக்திக்குமேல் நாம் நிர்ப்பந்திப்பதேயில்லை. நீங்கள் எதைக்கூறிய போதிலும், (அதனால் பாதிக்கப்படுவோர் உங்கள்) உறவினராயினும் (சரியே) நீதத்தையே கூறுங்கள். நீங்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றுங்கள். நீங்கள் நல்லுணர்ச்சி பெறும் பொருட்டே, இவற்றை உங்களுக்கு உபதேசிக்கின்றான். 'நிச்சயமாக இதுதான் என்னுடைய நேரான வழியாகும். அதனையே நீங்கள் பின்பற்றுங்கள்; மற்ற வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை, அவனுடைய வழியிலிருந்து உங்களைப் பிரித்துவிடும். நீங்கள் பரிசுத்தவான்களாவதற்காக இறைவன் இவற்றை உங்களுக்கு நல்லுபதேசம் செய்தான்' (என்றும் கூறுவீராக!)'' (6:152,153)

இறைவணக்கத்தின்பால் மக்களை அழைப்பது, ஸகாத், தர்மம் முதலியன கொடுத்து வாக்குறுதியை நிறைவேற்றிப் பொறுமையைக் கடைப்பிடிப்பது, இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக உடலாலும் பொருளாலும் பாடுபடுவது போன்ற வழிகளின் மூலமாகவும் இறையச்சம் அல்லது உளப்பரிசுத்தம் எனும் 'தக்வா'வை அடைந்து கொள்ளலாம் என அல்-குர்ஆன் நமக்கு நல்லுபதேசம் செய்கின்றது.

இனி இறையச்சத்தின் சிறப்புக்கள், மேன்மைகள் பற்றி எமது சிந்தனையைத் திருப்புவோம்

**''அல்-குர்ஆன் வசனங்களின் அடிப்படையில் 'தக்வா'வின் மேன்மைகளைப் பன்னிரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.**

(1) புகழ்ச்சியும் மேன்மையும் தக்வா உடையவர்களுக்கே கிடைக்கும்.

(2) பாதுகாப்பும் விரோதிகளிடமிருந்து தற்காப்பும் இவர்களுக்குரித்தானது.

(3) இறை உதவியும் கூட இவர்களுக்கே கிடைக்கும்.

(4) கஷ்டங்களில் இருந்து விடுதலையும் ஹலாலான ஆகாரமும் இவர்களுக்குக் கிடைக்கும்.

(5) இத்தன்மையுடையோரின் செயல்கள் சீராகும்.

(6) பாவமன்னிப்புக்கும் இத்தகையோரே தகைமையானோராக மாறுகின்றனர்.

(7) அல்லாஹ்வின் அன்பும் நேசமும் இவர்களுக்கே கிடைக்கும்.

(8) பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படக்கூடிய தகைமையைப் பெறுவர்.

(9) சிறப்பும், சங்கையும் இவர்களுக்கே கிடைக்கும்.

(10) மரணத்தின்போது நன்மாராயம் பெறுவர்.

(11) நரக விடுதலைக்கு உரித்துடையோர்.

(12) சுவர்க்கத்தில் தரிபட்டிருக்கும் பேற்றைப் பெறுகின்றனர்''.[3]

இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் முதற் கலீபாவாகப் பதவியேற்ற அபூபக்கர் சித்திக் (ரழி) அவர்களின், 'கிலாபத்' தின் பின் ஆற்றிய முதலாவது உரையும் 'தக்வா' வின் மேன்மைபற்றி இரத்தினச் சுருக்கமாக எடுத்துக்காட்டக்கூடியதாக இருக்கின்றது. அவ்வுரை இவ்வாறு அமைந்திருந்தது. மனிதர்களே உங்களை ஆட்சி செய்யும் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனினும் உங்களைவிட நான் (எவ்வகையிலும்) சிறந்தவனல்லன். எனினும், அல் குர்ஆனும் பெருமானார் (ஸல்) அவர்களது வழிகாட்டுதல்களையும் நாம் கற்றுக்கொண்டுள்ளோம். உண்மையான அறிவு என்பது தக்வாதான் என்பதையும், மிகவும் மடமைத்தனம் பாவம் செய்தல்தான் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். உங்களிடத்தில் பலசாலி என்னிடத்தில் பலவீனனுவான். (பலவீனனுக்குச் சேரவேண்டியதை) அவனில் இருந்து நான் பெற்றுக் கொடுப்பேன். (இதேபோன்று) உங்களில் பலவீனன் என்னிடத்தில் பலசாலியாவான். அவனுக்குரிய உரிமைகளை நான் பெற்றுக் கொடுப்பேன். மனிதர்களே! நான் பின்பற்றக்கூடியவனேயன்றி ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தக்கூடியவனல்லன். நான் திறமையாக நடந்தால் என்னுடன் ஒத்துழையுங்கள். நான் வழி தவறினுல் என்னைச் சீர் செய்யுங்கள்''[4] இறையச்சத்தின் பக்குவமான பண்புகளை விளக்கிக் காட்டக்கூடிய இவ்வுரையே மிகுந்த உளப்பரிசுத்தமுடைய ஒருவரின் உரையாக அமைந்திருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

பெருமானுர் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது கடைசி ஹஜ்ஜின் முடிவில் திரண்டிருந்த நபித்தோழர் மத்தியில் ஹி. 10 துல்ஹஜ் 11-ல் அல்லது 12 ல் மினுவில் வைத்து ஆற்றிய நீண்ட உரையின் கடைசியில் இதே கருத்தை வெளியிட்டிருக்கின்ருர்கள். ''மனிதர்களே! உங்கள் இறைவன் ஒருவனே; உங்களது தகப்பனும் ஒருவரே; நீங்கள் அனைவரும் ஆதமின் சந்ததியினர்; ஆதமோ மண்ணுல் படைக்கப்பட்டார் அறபியல்லாத ஒருவனைவிட அறபிக்கோ, அறபியைவிட அஜமிக்கோ, கறுப்பனைவிட சிகப்பு நிறமுடையவனுக்கோ, சிகப்பு நிறமுடையவனைவிடக் கறுப்பு நிறமுடையவனுக்கோ 'தக்வா' வைப் பொறுத்தேயன்றிச் சிறப்புக்கிடையாது. அல்லாஹ்விடத்தில் சிறந்தவன் உங்களில் இறையச்சம் உள்ளவனே''[5]

'தக்வா' எனும் சொல்லுக்கு விளக்கம் தரும் ஹஸ்ரத்இப்னுஅப்பாஸ் (ரழி) 'மஆலிமுத்தன்ஸீல்' எனும் நூலில், ஷிர்க்கை வைத்தல், பெரும் பாவங்கள், துர்நடத்தைகளைவிட்டும் விலகியிருப்பது என்றும், உமர் இப்னு அப்துல்அஸீஸ் (ரஹ்) அவர்கள் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது, அல்லாஹ் விலக்கியனவற்றைத் தவிர்த்தும் கடமையாக்கியவற்றைச் செய்வதுமாகும் எனக் கருத்துத் தெரிவிக்கின்ருர்.

அல்-குர்ஆனுடைய பார்வையில் இம்மையானது நிலையற்றது; மறுமை வாழ்வுதான் நிலையானதும் இன்பத்தையோ துன்பத்தையோ முழுமையாக அனுபவிக்கக்கூடியதுமாகும். இம்மையில் மாறி மாறி வரும் இன்பமும் - துன்பமும், சுகமும் - துக்கமும், செல்வ நிலையும் - ஏழ்மையும் இன்னபிற ஏற்றத்தாழ்வுகளும் அசலான மறுமை வாழ்வில் மனிதன் அனுபவிக்கப்போகும் ஏற்றத்தாழ்வுகளின் நகல் வடிவங்களேயன்றி வேறில்லை. இம்மையில் ஒருவனுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை அவன் மறுமை வீட்டைத் தேடுவதில் பயன்படுத்தவேண்டும் என அல்-குர்ஆன் அவனுக்கு இதனுலேயே ஆணையிடுகின்றது. யதார்த்தமான மறுமை வீட்டைத் தேடுவதில் எமது கவனத்தை முழுமையாகச் செலுத்தும்போது இம்மையின் சாதகமான விளைவுகள் தன்னிடம் தானுகவே வந்து சரணடைந்து விடும் என்பதே அல் - குர்ஆனின் ஆணித்தரமான நம்பிக்கை. உணவு, உடை என்பனவற்றின் அவசியம்

ஒரு மனிதனால் எவ்வாறு உணரப்படுகின்றதோ, அதேபோல் ஒரு வசிப்பிடத்தின் அவசியமும் அவனால், மனித இனத்தின் தோற்றகாலந் தொட்டே உணரப்பட்டு வந்திருக்கின்றது. இவ்வகையிலேயே அல் - குர்ஆன் மனித இயற்கையுணர்வுக்கு மதிப்பளித்து மறுமை வீட்டின் அவசியத்தை சூசகமான முறையில் உணர்த்தி நிற்கின்றது. மறுமையை ஒரு வீட்டுக்கு ஒப்பாக்கித் திருக்குர்ஆன் பலவிடங்களில் மனிதனுக்குப் போதனை செய்கின்றது. ஒரு பானை சோற்றில் ஒரவிழ் பதம் பார்ப்பது போன்று அவ்வாறு உவமித்துக் கூறப்பட்டுள்ள ஒரு வசனத்தைக் கவனிப்போம்.

"(யூதர்களே!) அல்லாஹ்விடம் இருக்கும் மறுமையின் (சுவர்க்க) வீடு (மற்ற) மனிதர்களுக்கன்றி உங்களுக்கே சொந்தமென்று (கூறும்) நீங்கள் உண்மை கூறுபவர்களாக இருந்தால், (உங்களுக்குச் சொந்தமான அவ்வீட்டுக்குச் செல்வதற்காக) நீங்கள் மரணத்தை விரும்புவீர்கள்' என் (நபியே!) நீர் கூறும்".

யூதமக்களை விளித்துக் கூறும்வகையில் அமைந்த இவ்வசனத்தில் மறுமை வாழ்வானது மனித புத்திக்கு விளங்கக் கூடியவிதத்தில் ஒரு வீட்டுக்கு உவமிக்கப்பட்டுள்ளதோடு, இவ்வாழ்க்கையை விரும்பக்கூடியதன்மை மனித இயற்கையோடு பின்னிப் பிணைக்கப்பட்டவொன்று என்பதும் சூசகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மனிதன் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் பொழுதைக் கழிக்கக்கூடிய ஒரே ஒரு இடம் இவ்வுலகில் அவனது சொந்த வீடுதான். இதேபோன்று மறுமையில் மனிதன் சுவர்க்க வாழ்வை யடைந்து கொண்டால் அசலான, தறிபடாத என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய நிம்மதியும், சந்தோஷமும் அவனுக்குக் கிடைக்கும். மனிதன் தானாகவே சம்பாதித்துக் கொண்ட தீவினைகள் காரணமாகச் சில வேளைகளில் அவர்களது சொந்த வீடுகளே, அவர்களது மனநிம்மதியற்ற தன்மைக்கும், சந்தோஷமின்மைக்கும் கூடக் காரணமாகலாம். இதேபோன்று இவ்வுலக வாழ்க்கையில் இறை திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்கு மாற்றமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்துவிட்டுச் செல்லக்கூடிய மனிதன் நிம்மதியற்ற, எவ்வித சுகண்டியுமற்ற, துன்பமயமான, சோகமயமான நரக வாழ்வின் வீட்டை அடைய நேரிடும். எனினும் சந்தோஷகரமான மறுமை வீட்டையடைந்து கொள்வதற்காக முற்று முழுதாக உலகத் தேவைகளை, இன்பங்களைப் புறக்கணித்து வாழும்படி இஸ்லாம் பணிக்கவில்லை, பூமியில் விஷமம் செய்து வாழ்வதையே இறைவன் தடுக்கின்றான்.

"(உன்னிடம் இருக்கும் பொருள்களையெல்லாம் அல்லாஹ்வே உனக்குக் கொடுத்தான் ஆகவே) அல்லாஹ் உனக்களித்திருப்பதில் (தானம் செய்து) மறுமை வீட்டைத் தேடிக்கொள். இம்மையில் (தானம் செய்து நீ தேடிக் கொண்டதுதான்) உன்னுடைய பாகம் என்பதை நீ மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு(ப் பொருளைக் கொடுத்து) நன்மை செய்த பிரகாரம் (அதனைக் கொண்டு) நீயும் பிறருக்குக் கொடுத்து) நன்மை செய். பூமியில் நீ விஷமம் செய்ய விரும்பாதே! ஏனென்றால் விஷமிகளை நிச்சயமாக அல்லாஹ் விரும்புவதில்லை." (28:77)

இனி, அல்-குர்ஆன் எவ்வாறு இம்மையையும், மறுமையையும், ஒப்பு நோக்கி மறுமையின் சிறப்புப்பற்றி எடுத்துரைக்கின்றது என்பதுபற்றிக் கவனிப்போம்.

"(ஹஜ்ஜுக்குச் சென்ற) நீங்கள், உங்களுடைய (ஹஜ்ஜின்) கிரியைகளை நிறைவேற்றிவிட்டால், நீங்கள் (இஸ்லாத்துக்குமுன்) உங்கள் பிதாக்(களின் பெயர்)களை(ச் சப்தமிட்டு பெருமையாக)க் கூறிவந்ததைப் போல், அல்லது அதனைவிடப் பலமாக(ச் சப்தமிட்டு) அல்லாஹ்வை 'திக்ரு' (செய்து உங்களுக்கு வேண்டியவை

சனேயும் அவனிடம் கேட்டுப் பிரார்த்தனை) செய்யுங்கள்: (பிரார்த்தனையில்) 'எங்கள் இறைவனே! எங்களுக்கு (வேண்டியவைகளையெல்லாம்) இம்மையிலேயே அளித்து விடுவாயாக!' என்று கோருவோரும், மனிதர்களில் உண்டு; ஆனால், இத்தகையவருக்கு மறுமையில் யாதொரு பாக்கியமும் இல்லை'' (2:200)

''அன்றி, எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மையளிப்பாயாக! மறுமையிலும் நன்மை அளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ இரட்சிப்பாயாக! எனக் கோருவோரும் அவர்களில் உண்டு'' (2:201)

''தங்கள் நல்) வினையின் (பயனை இம்மையிலும் மறுமையிலும் அடையும்) பாக்கியம் இவர்களுக்குத்தான் உண்டு'' (2:202)

''எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும் அதன் அலங்காரத்தையும் (மட்டும்) விரும்பினால், அவர்கள் செயலுக்குரிய பலனை, இ(வ்வுலகத்)திலேயே நாம் பூரணமாக அவர்களுக்குக் கொடுத்துவிடுவோம். அதில் அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள். (எனினும்; மறுமையிலோ இத்தகையோருக்கு (நரக) நெருப்பைத் தவிர வேறொன்றுமில்லை; அவர்கள் செய்தவையாவும் இங்கு அழிந்துவிட்டன. அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே'' (11:15,16)

'எவன் மறுமையின் பயிரை விரும்புகின்றானோ, அவனுடைய பயிரை (- விளைச்சலை) நாம் அவனுக்காக அதிகப்படுத்துகின்றோம், எவன் இம்மையின் பயிரை (மட்டும்) விரும்புகின்றானோ, நாம் அவனுக்கு அதிலிருந்து ஓரளவு கொடுக்கின்றோம். எனினும், அவனுக்கு மறுமையில் யாதொரு பங்குமில்லை'' (42:20)

''எனினும், நீங்களோ (மறுமையை விட்டுவிட்டு) இவ்வுலக வாழ்க்கையைத் தெரிந்தெடுத்துக் கொள்கின்றீர்கள். மறுமையின் வாழ்க்கைதான் மிக்கமேலானதும் நிலையானதுமாகும்'' (88:16,17)

மேலே நாம் அவதானித்த அல் - குர்ஆன் வசனங்கள் இம்மை வாழ்வின் இஸ்திரமற்ற தன்மையையும், மறுமை வாழ்வின் நிலையான தன்மையையும் எடுத்துக்காட்டி மறுமைவாழ்வின் சுபீட்சத்துக்காக மனித சமுதாயம் முயற்சிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்வனவாக இருக்கின்றன. இம்மையின் சுகண்டியும் கஷ்டமும் மரணத்தோடு முடிவடைந்து விடக்கூடியன. இதனாலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''உலகில் நீ வாழும் போது ஒரு பரதேசியாக அல்லது வழிப்போக்கன் போன்று (எண்ணிக் கொண்டு) வாழ்வாயாக'' [6] என நமக்குப் போதனை செய்கின்றார். அப்துல்லாஹ் இப்னுஉமர் (ரழி) அவர்கள் அடிக்கடி மாலையாகிவிட்டால் காலைப்பொழுதை எதிர்பார்த்திருக்காதே; காலையாகிவிட்டால் மாலைப் பொழுதை எதிர்பார்க்காதே; உடல் சுகம் குன்றிநோய்வாய்ப்படு முன் தேகாரோக்கியத்துடன் இருக்கும் காலத்தை (நல்லனசெய்ய)ப் பயன்படுத்திக் கொள்; மரணத்துக்கான ஆயத்தங்களை தயாரித்துக் கொள்ள உனது ஆயுட்காலத்தைப் பயன்படுத்திக் கொள்வாயாக'' எனக் கூறுபவராக இருந்தார். தனது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவளவுக்கு இம்மையுடனான தொடர்பை வைத்துக்கொண்டு, இம்மையில் பற்றில்லாது (தனது ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள மறுமை வாழ்வை எதிர்பார்த்திருப்பது) வாழ்ந்தால் இறைநேசம் கிடைக்கும்'' [7] என்ற கருத்தும் ஹதீஸ்ஷரீபிலே காணப்படுகின்றது. ''அல்குர்ஆன் பார்வையில் இம்மைச் செல்வங்கள், சாதனங்கள் அனைத்தும் அவனது மறுமைப் பிரயாணத்தில் இடைவழியில் எதிர்படக் கூடியனவே;

இவற்றையெல்லாம் கடந்து போகும்போதுதான் அவன் தனது கடைசி மைல் கல்லான மறுமையை அடைந்து கொள்கின்றான். எனவே, இவ்வுலக வாழ்க்கையின்றி மறுமை இல்லை; அதற்காக வேண்டி இவ்வுலக வாழ்க்கையில் மூழ்கித் தனது இலக்கை மறந்துவிடவும் முடியாது. எனவே, இவ்வுலக வாழ்க்கை, அதன் சாதனங்கள் மனிதனுக்கு எவ்வளவு தூரம் அவசியப்படுகின்றதோ, அதற்கேற்றாற் போன்று அவற்றைக் கொண்டு மறுமை வீட்டின் சுபீட்சத்துக்காக மனிதன் உழைக்க வேண்டும்''[8]

மறுமை வாழ்வென்பது பின்வரும் அம்சங்களையுள்ளடக்கியதாகும்.

*(1)* ஒருநாள் அல்லாஹ், முழு உலகையும், அனைத்து படைப்பினங்களையும் அழித்ததன்பின் மனிதர்கள் அனைவருக்கும் மறுவாழ்வு அளிப்பான். அனைவரும் அல்லாஹ்வின் முன்னிலையில் ஆஜராவர். இதற்கு 'மஹ்ஷர்' எனப் பெயர்.

*(2)* ஒவ்வொருவரும் இவ்வுலகில் புரிந்த செயல்களனைத்தையும் தாங்கிய செயலேடு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.

(3) நற் செயல்கள், தீச்செயல்களைவிட எடை கூடியதாக இருப்பின் அல்லாஹ் அவர்களை மன்னித்துவிடுவான். தீச்செயல்கள், நற்செயல்களைவிட எடை கூடியிருப்பின் தண்டனை அளிப்பான்.

*(4)* யார் மன்னிப்புப் பெறுகின்றாரோ அவர்கள் சுவர்க்கம் புகுவர். யாருக்குத் தண்டனை விதியாகின்றதோ அவர்கள் நரகம் புகுவர்.[9] இக்கருத்தை அல்-குர்ஆன் பின்வருமாறு அழகுபட வர்ணிக்கின்றது.

''மறுமையின் வேதனைக்குப் பயப்படக் கூடியவருக்கு நிச்சயமாக இதில் நல்லதோர் அத்தாட்சி இருக்கிறது. மனிதர்கள் அனைவரும் ஒன்று சேர்க்கப்படும் நாளாகும் அது, அன்றி அவர்கள் யாவரும் (இறைவன் சந்நிதியில்) கொண்டு வரப்படக்கூடிய நாளாகும். சொற்பநாட்களுக்கேயன்றி நாம் அதனைப் பிற்படுத்திவைக்கவில்லை

அது வரும் நாளில் அவனுடைய அனுமதியின்றி எந்த ஒரு மனிதனும் (அவனுடன்) பேசமுடியாது. அவர்களில் துர்ப்பாக்கியவான்களும் உள்ளனர். நற்பாக்கியவான்களும் உள்ளனர்.

துர்ப்பாக்கியவான்கள், நரகத்தில் வீழ்த்தப்படுவார்கள். (வேதனை தாங்க முடியாது) அதில் அவர்கள் பெரும் கூச்சலிட்டுக் கதறுவார்கள்.

உம் இறைவன் நாடினாலன்றி வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் காலம் வரையில் அதில் அவர்கள் தங்கிவிடுவார்கள். நிச்சயமாக உமது இறைவன், தான் விரும்பியவற்றை(த் தடையின்றிச்) செய்து முடிப்பான்.

நற்பாக்கியவான்கள் சுவனபதியில் (நுழைந்து விடுவார்கள்) உமது இறைவன் நாடினாலன்றி, வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் காலம் வரையில் அதில் தான் அவர்கள் தங்கிவிடுவார்கள். (அது) முடிவுறாத (என்றும் நிலையான) ஓர் அருட்கொடையாகும்'';

இவ் வசனங்கள் மறுமை பற்றிய ஒரு சம்பூரண விளக்கத்தை இரத்தினச் சுருக்கமாகத் தருவதோடு, மறுமை வாழ்வில் நடைபெறக் கூடியன, அதன் நிலை

யான தன்மை முதலியனபற்றியும் விளக்கம் தருவனவாக இருக்கின்றன. இம்மையின் நிலையற்ற தன்மையுடன் மறுமையின் நிலையான தன்மையை அல்-குர்ஆன் ஒப்பிட்டு ஆராய்ந்திருக்கும் பான்மையானது தனிச்சிறப்பு வாய்ந்த வொன்றாக இருப்பதுடன் மறுமையின் நிழல்தான் இம்மையென்றும், எனவே அசலான மறுமைப்பேற்றையடையும் நோக்கோடு நாம் முயற்சி செய்யும்போது இம்மை தானாகவே நம்மை வந்தடையும் எனும் சூட்சகமான கருத்தை விளக்குவதாகவும் அல்-குர்ஆனின் இவ் வொப்பீட்டாய்வு அமைந்திருக்கின்றது.

**இனி, அல்-குர்ஆன் நமக்குக் காட்டித் தரும் சிறந்த வியாபாரம் பற்றிக் கவனிப்போம்.**

''விசுவாசிகளே! ஒரு வியாபாரத்தை நான் உங்களுக்கு அறிவிக்கவா? (அது) துன்புறுத்தும் வேதனையில் இருந்து உங்களை இரட்சித்துக் கொள்ளும். (அதாவது) அல்லாஹ்வையும், அவனுடைய (இத்) தூதரையும் விசுவாசித்து, உங்களுடைய பொருள்களையும், உங்களுடைய உயிர்களையும் தியாகம் செய்து அல்லாஹ்வுடைய பாதையில் போரிடுங்கள். நீங்கள் அறிவுடையோர்களானால், இதுவே உங்களுக்கு மிக்க மேலானதாக இருக்கும் (என்பதை அறிந்து கொள்வீர்கள்.)'' (62:10,11)

ஒருவன் தன்னிடம் இருக்கக்கூடிய பணத்தை ஈடுபடுத்தி இருவகைகளில் இலாபம் பெற்றுக் கொள்ளலாம்.

1. வணிகத்தில் முதலீடு செய்வது.
2. வட்டித் தொழிலில் முதலீடு செய்வது.

அல்-குர்ஆன் முதலாவது முறையில் முதலீடு செய்வதை அனுமதித்து வட்டியில் ஈடுபடுத்துவதைத் தடை செய்திருக்கின்றது. ''வட்டியை (வாங்கி) விழுங்குகிறவர்கள், ஷைத்தான் பிடித்துப் பித்தங் கொண்டோர்கள் எழும்புவதுபோலன்றி, (வேறுவிதமாக மறுமையில்) எழும்ப மாட்டார்கள். ஏனென்றால், வணிகமும் வட்டியைப் போன்றதுதான். (எனவே, வட்டி வாங்குவதில் தவறில்லை) என இவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அல்லாஹ் வணிகத்தை ஆகுமாக்கி வைத்து, வட்டியைத் தடுத்துவிட்டான். ஆதலால், (உங்களில்) எவரேனும் தன் இறைவனிடமிருந்து வந்த (வட்டிவாங்கக் கூடாதென்ற) எச்சரிக்கைப்படி (அதைவிட்டு) விலகிக் கொண்டால், (அதற்கு) முன் (அவன் வாங்கிச்) சென்றுபோனது அவனுக்குரியதே'' (2:275) சிறந்தவொரு தொழிலை அறிமுகப்படுத்தித் தரும்படி பெருமானார் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போதுகூட, 'கைத்தொழிலும் நேர்மையான வர்த்தகமுமாகும்' எனப் பதில் அளித்திருப்பதும் இஸ்லாத்தில் வணிக நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதென்பதையும், ஏனைய தொழில்களைவிட அது மகத்துவமானது என்பதும் விளங்குகின்றது. எனவேதான் அல்லாஹ்விடத்தில் மகத்துவமான முக்கிய மூன்று விடயங்கள் வியாபாரத்துடன் இணைத்துக் கூறப்பட்டு சிறந்த வியாபாரம் என விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அம் மூன்று விடயங்களுமாவன:

1. அல்லாஹ்வைப் பற்றியும், ரசூலைப்பற்றியும் விசுவாசம்.
2. பொருள்களைத் தியாகம் செய்து அல்லாஹ்வுடைய பாதையில் பிரயாசையெடுத்தல்;

3. உயிர்களைத் தத்தம் செய்து இறைபாதையில் முயற்சி செய்தல்.

கொடுக்கல் - வாங்கல், கொள்வனவு - விற்பனையுடன் சம்பந்தப்பட்ட வியாபாரத்தின் மூலம் மனிதன் தனது உழைப்பை ஈடுபடுத்திக் குறுகிய வொருகாலத்தில் அதிகமான பணத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம். இதன் பெறுமதியும் முக்கியத்துவமும் கூட மனிதனால் வெகுவாக உணரப்படுகின்றது. ஆனால் சிறந்த வியாபாரம் என அல் - குர்ஆன் குறிப்பிடும் வியாபாரத்தைப் புரிந்துகொள்ளத் தெளிவான அறிவு வேண்டும் என்பதனால் ''நீங்கள் அறிவுடையோர்களானால், இதுவே உங்களுக்கு மேலானதாக இருக்கும்'' எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பாமர மக்களின் அறிவில் இருந்து வித்தியாசப்படக்கூடிய, மேன்மையான தூய்மையான அறிவு வாய்க்கப் பெற்றோரால் மாத்திரமே இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம் என்பது இதில் இருந்து தெளிவாகின்றது.

வியாபாரம் என்பது பண்டமாற்று முறையிலாகவும் இருக்கலாம்; பணத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகவும் இருக்கலாம். கொள்வனவும், விற்பனையும் இதில் சம்பந்தப்படுவதனால் தேவையுடையோரின் தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன் கொண்டு நடாத்துவோரும் இலாபம் எனும் ரீதியில் பயனடைகின்றனர். இதே போன்று அல் - குர்ஆன் அறிமுகப்படுத்தும் வியாபாரத்தின் மூலமும் தமக்கும் மற்றோருக்கும் பயனேற்படுவதை ஒவ்வொரு தனிநபரும் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளவேண்டும். வட்டி, கொள்ளை இலாபம், அளவை, நிறுவை, மோசடி, தரம் குறைந்ததைத் தரம் கூடியது எனக்கூறி விற்பனை செய்தல் போன்ற வர்த்தகத்தில் நுழைந்து அதன் புனிதத் தன்மைக்கு மாசேற்படுத்தாது பாதுகாத்துக் கொள்வது அவசியமாக இருப்பது போன்று, இதிலும் தற்புகழ்ச்சி, பெருமை, கர்வம், பிறரை மதியாமை போன்ற துர்க்குணங்கள் வந்து கலந்துவிடாமல் நாம் பேணிப் பாதுகாப்பாக இருப்பது அவசியம். வியாபாரத்தின் வளர்ச்சிக்காக மனிதன் தன்னுடைய பணம், பொருள், நேரம், உழைப்பு முதலியனவற்றை ஈடுபடுத்துகின்றான். அதன் பிரயோசனத்தையும் அவன் கண்கூடாகக் காண்கின்றான். இதே போன்று அல்லாஹ்வையும் அவனது ரசூலையும் விசுவாசிக்கும் ஒரு மனிதன், இவ்விசுவாசத்தைத் தன்னுள் மென்மேலும் வளர்த்து, ஆட்டம் காணாதவொன்றாக இஸ்திரமானதாக ஆக்கிக் கொள்வதற்குத் தியாகம் செய்ய முன்வரவேண்டும். தனது உடைமைகளைக் கொண்டு அல்லாஹ்வுடைய பாதையில் முயற்சி, பிரயாசையெடுத்துக் கொள்ளவேண்டும். உயிரைப் பணயம் வைத்துத்தான் இதைப் பெற்றுக் கொள்ளவேண்டியிருப்பின் அதற்கும் தயங்கக் கூடாது எனும் அருமையான கருத்தை இவ்வியாபாரம் நமக்குக் காட்டித் தருகின்றது. அல்லாஹ்வின் பாதையில் உடலாலும், பொருளாலும், உயிராலும் பிரயாசையெடுத்துக் கொள்வதன் மகத்துவம் பற்றி உணர்த்தி நிற்கும் இன்னும் சில அல் - குர்ஆன் வசனங்களின்பால் எமது சிந்தனையைத் திருப்புவது ஏற்புடைத்து என நினைக்கின்றேன்.

''நிச்சயமாக எவர்கள் விசுவாசங்கொண்டு (தங்கள்) ஊரைவிட்டுப் புறப்பட்டு அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் உயிர்களையும் பொருள்களையும் தத்தம் செய்து யுத்தம் புரிந்தார்களோ, அவர்களும், எவர்கள் அவர்களுக்கு(த் தங்கள் இல்லங்களில்) இடமளித்து வைத்துக் கொண்டு உதவி புரிந்தார்களோ அவர்களும் ஆகிய இத்தகையோர், ஒருவருக் கொருவர் நட்பில் மிக நெருங்கியவர்களாயிருக்கின்றனர். ஆயினும் விசுவாசம் கொண்டவர்களில் எவர்கள், இன்னும் (தங்கள்) ஊரைவிட்டுப் புறப்படாமல் இருக்கின்றனரோ அவர்கள்,

(தங்கள்) ஊரைவிட்டுப் புறப்படும் வரையில் நீங்கள் அவர்களுடைய எவ்விசயத்துக்கும் பொறுப்பாளிகளல்ல'' (8:72)

''எவர்கள் விசுவாசங் கொண்டு (தங்கள்) ஊர்களிலிருந்து வெளிப்பட்டு, அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் பொருள்களையும் உயிர்களையும் தத்தம் செய்து யுத்தம் புரிகின்றனரோ அவர்கள், அல்லாஹ்விடத்தில் மகத்தான பெரும் பதவி பெற்றவர்கள். இத்தகையோர்தாம் நிச்சயமாகச் சித்தியடைந்தோர். அவர்களுக்கு அவர்களுடைய இறைவன், தன்னுடைய அன்பையும் திருப் பொருத்தத்தையும் அளித்து, சுவனபதிகளையும் அவர்களுக்குத் தருவதாக நன்மாராயங் கூறுகின்றான். அவர்களுக்கு அ(ச்சுவனப)தி(களி)ல் என்றென்றும் நிலையான இன்பங்களுண்டு. என்றென்றும் அவற்றில் அவர்கள் நிலைபெற்றிருப்பார்கள். (இதனையன்றி) அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக (அவர்களுக்கு) மகத்தானகூலி உண்டு.'' (9:20,21,22)

(நபியே! விசுவாசிகளை நோக்கி, நீர் கூறும்: உங்களுடைய தந்தைகளும், உங்களுடைய மக்களும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய துணைவர்களும், உங்களுடைய குடும்பமும், நீங்கள் சம்பாதித்து வைத்திருக்கும் ''(உங்கள்) பொருள்களும் நஷ்டமாகி விடுமோ என நீங்கள் பயந்து (மிக எச்சரிக்கையுடன்) செய்துவரும் வர்த்தகமும், உங்களுக்கு (மிக்க) விருப்பமுள்ள (உங்கள்) வீடுகளும் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விடவும், அவனுடைய பாதையில் யுத்தம் புரிவதை விடவும் உங்களுக்கு மிக்க விருப்பமானவைகளாயிருந்தால், (நீங்கள் உண்மை விசுவாசிகளல்ல. நீங்கள் அடைய வேண்டிய தண்டனையைப் பற்றிய) அல்லாஹ்வுடைய கட்டளை வரும் வரையில் நீங்கள் எதிர்பார்த்திருங்கள். (உங்களைப்போன்ற) பாவிகளை, அல்லாஹ் நேரான வழியில் செலுத்துவதில்லை'' (9.24)

''எவர்கள் நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்றார்களோ அவர்களை, நிச்சயமாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம்.'' (30:69)

''(உண்மையான) விசுவாசிகள் எவர்கள் என்றால், அவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் (மெய்யாகவே) விசுவாசங் கொண்டு, பின்னர் எவ்வித சந்தேகமும் கொள்ளாது, அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய உயிர்களையும், பொருள்களையும் தத்தம் செய்து யுத்தம் புரிவார்கள், இத்தகையோர்தாம் (தங்கள் விசுவாசத்தில்) உண்மையானவர்கள்.'' (49:15)

அல் - குர்ஆனிலும் ஹதீஸிலும் விரவிக்கிடக்கும் 'ஜிஹாத்' எனும் சொல்லை முழுக்க முழுக்க 'யுத்தம்' எனும் கருத்தில் பலர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக மேற்கத்திய எழுத்தாளர்கள் இஸ்லாத்தைப் பரப்பும் நோக்குடன் வாளேந்தி யுத்தம் செய்வதையே இது குறிக்கின்றது எனத் தப்பாகக் கணக்குப் போடுகின்றனர். இஸ்லாமியப் பரிபாஷையில் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட புனித யுத்தங்களையே இச் சொல் குறிப்பதாக இருந்தாலும் இதன் பொருள் விரிவானதே. பிரபல நூலாசிரியரான கிளெய்ன் 'இஸ்லாமிய மதம்' என்ற நூலில் ''ஜிஹாத்' - அவிசுவாசிகளை இஸ்லாத்தில் எடுக்கும் நோக்கத்தோடு அல்லது அவர்கள் முஸ்லிம்களாவதற்கு மறுக்கும் பட்சத்தில் அவர்களைக் கீழ்ப்படுத்தி அழிக்கும் நோக்கத்தோடு போராடுவதாகும். இவ்வாறு ஏனைய எல்லா மதங்களையும் வெற்றி கொண்டு இஸ்லாம் பரவுவதற்கு வழி செய்வது முஸ்லிம்

சமுதாயத்தின் பரிசுத்தக் கடமையாகக் கருதப்படுகிறது'' என்று தப்பாகக் குறிப்பிடுகின்றார். அல் - குர்ஆன் ஹதீஸ் முதலியவைகளில் எவ்வெக் கருத்துக்களிலெல்லாம் இச் சொல்லானது எடுத்தாளப்பட்டிருக்கின்றது பற்றியும், யுத்தம் ஏன் முஸ்லிம்கள் மீது விதியாக்கப்பட்டது என்பதுபற்றியும் தெளிவாகப் புரிந்து கொள்ளாது இவ்வாறு தப்பான கருத்துக்களைக் கொண்டு இஸ்லாத்தை இழிவு படுத்தவும், உலகினர் மத்தியில் அதைச் சிறுமைப் படுத்திக் காட்டவும் எதிரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளில் ஒன்றாகவே இதைக் குறிப்பிடலாம். முஸ்லிம்கள் மதினாவுக்குக் குடிபெயர்ந்து சென்றதன் பின்பே யுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. 'ஆனால் ஜிஹாது சம்பந்தமான ஆணைகள், முதலில் கிடைத்த மக்கா வெளிப்பாடுகளிலும் அடங்கியிருக்கின்றன. பெருமானாரின் இஸ்லாமிய அழைப்பின் ஐந்தாம், ஆறும் வருடங்களில்தான் ''ஸீறுஅன்கமூத்'' இறக்கப்பட்டது. இந்த ஸிறுவில் 'ஜிஹாத்' எனும் சொல் தாராளமாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் 'யுத்தம்' எனும் கருத்திலல்ல; ஒருவரின் ஆற்றலும் சக்தியும் பிரயோகிக்கப்பட வேண்டும் எனும் கருத்திலேயே 'ஜிஹாத்' எனும் சொல் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு இடத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது:-[5] 'எவர்கள் நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்றார்களோ, அவர்களை நிச்சயமாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம். (பிறருக்கு) நன்றி செய்வோர்களுடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கிறான்''. (26 : 69). இந்த வசனத்தில் பாவிக்கப்பட்டிருக்கும் ''ஜாஹலுதூ'' என்ற சொல், அல்லாஹ்வை நெருங்குவதற்காகச் செய்யப்படும் ஆத்மீக முயற்சியையே குறிக்கிறது.''[10] இனி, யுத்தம் ஏன் முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டது என்பதற்கு அல்-குர்ஆன் தரும் நியாயங்கள்பால் நமது சிந்தனையைத் திருப்புவோம்.

(1) ''ஆகவே, (உங்களை எதிர்த்து யுத்தம் புரிய முற்பட்ட) அவர்களைக் கண்ட விடமெல்லாம் வெட்டுங்கள். உங்களை (உங்கள் ஊரிலிருந்து) அவர்கள் வெளியேற்றியவாறே, நீங்களும் அவர்களை வெளியேற்றி விடுங்கள், (அவர்கள் செய்யும்) கலகம், கொலையைவிட மிகக் கொடியது.'' (2:191)

(2) ''பலஹீனமான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும், சிறு குழந்தைகளுக்காகவும் (- இவர்களை இரட்சிப்பதற்காக) அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் யுத்தம் புரியாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது?'' (4:75)

(3) ''(விசுவாசிகளே! இந்நிராகரிப்போரின்) விஷமத்தனம் முற்றிலும் நீங்கி, அல்லாஹ்வுடைய மார்க்கம் முற்றிலும் நிலை பெறும் வரையில் (மக்கா வாசிகளாகிய நிராகரிக்கும்) அவர்களுடன் யுத்தம் புரியுங்கள். (விஷமம் செய்வதிலிருந்து) அவர்கள் விலகிக்கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதை உற்று நோக்கினவனாகவே இருக்கின்றான்.'' (8:39)

(4) ''(சத்தியம் செய்து) உடன்படிக்கை செய்துகொண்டதன் பின்னரும், அவர்கள் தங்களுடைய சத்தியங்களை முறித்து, உங்களுடைய மார்க்கத்தைப் பற்றியும் குற்றங்குறைகள் கூறிக்கொண்டிருந்தால், (நிச்சயமாக) நிராகரிப்போரின் (இத்தகைய) தலைவர்களுடன் போரிடுங்கள். ஏனெனில் அவர்களது உடன்படிக்கையில் உறுதியில்லை. (இத்தகைய விஷமத்திலிருந்து) அவர்கள் (அப்போது) விலகிக்கொள்ளலாம் தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்து (நம்முடைய) தூதரை (ஊரைவிட்டு) வெளிப்படுத்தவும் விரும்பி முயற்சித்த மக்களுடன் நீங்கள் யுத்தம் புரியவேண்டாமா?'' (9:12,13)

(5) "(நிராகரிப் போரால்) அநியாயத்துக்குள்ளானவர்களுக்கு (அவர்களை எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. இவர்கள் (எத்தகையோ ரென்ருல்,) நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப் பட்டார்கள். எங்களுடைய இறைவன் அல்லாஹ் ஒருவன் என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம்" (22:39,40)

(6) "(விசுவாசிகளே!) யுத்தம் செய்வது உங்களுக்கு வெறுப்பாயிருந்தும், (உங்களையும், உங்கள் மதத்தையும் காக்கும் பொருட்டு) அது உங்கள்மீது கடமை யாக்கப்பட்டிருக்கிறது" (2:216)

மேலே நாம் அவதானித்த வசனங்கள் யுத்தம் முஸ்லிம்கள் மீது கடமையாக் கப்பட்டிருப்பதற்கான நியாயங்கள் பலவற்றைத் தரக்கூடியனவாக இருக்கின்றன. இவையனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது, தற்காப்பின் அவசியத்தை உணர்ந்ததன் காரணமாகவே இஸ்லாம் யுத்தத்தைக் கடமையாக்கியிருக்கின்றது எனச் சுருக்கமாகக் கூறலாம். "ஜிஹாத்" என்ற சொல் 'ஜஹத்' அல்லது 'ஜுஹ்த்' என்ற சொல்லிலிருந்து பிறந்தது. ஆற்றல், முயற்சி, அதிகாரம் என் பவை இவற்றின் அர்த்தங்களாகும். "ஜிஹாத்," "முஜாஹதா" என்ற சொற்கள் ஒருவரின் சக்தியைப் பிரயோகித்து முயலுதல், எதிரியைப் பின் தள்ளல் என்ற கருத்துக்களைக் கொடுக்கின்றன" அல்லாஹ், ரசூலைக் கொண்டு விசுவாசம் கொண்ட தன்பின் அல்-குர்ஆன் பல இடங்களில் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய் வதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது ஜிஹாதை ஒரு வியாபாரம் எனக் கூறும் அல்-குர்ஆன் கொள்வனவு, விற்பனையுடன் சம்பந்தப்படுத்தியும் பல இடங்களில் இதை ஆராய்கின்றது.

"(விசுவாசிகளே!) உங்களுக்குமுன் சென்றவர்களுக்கு ஏற்பட்டது போன்ற (கஷ்டமான) நிலைமை, உங்களுக்கு வராமலே நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடலாமென்று நினைத்துக்கொண்டீர்களோ? தூதரையும், அவருடன் விசுவாசம் கொண்ட அவர்களையும், கஷ்டங்களும் துன்பங்களும் பீடித்து (அவர்கள் வருந் தித் தங்களுடைய கஷ்டங்களை நீக்கி வைக்க) அல்லாஹ்வுடைய உதவி எப்பொழுது (வரும்? எப்பொழுது வரும்)? என்று கேட்டதற்கு, அல்லாஹ்வுடைய உதவி நிச்சய மாக (இதோ) சமீபத்திலிருக்கிறது என்று (நாம், ஆறுதல்) கூறும் வரையில் அவர்கள் ஆட்டிவைக்கப்பட்டார்கள்." (2:214) இவ்வசனத்தில் சுவர்க்கத்தை விற்பனைப் பொருளாகவும் அதையடைந்து கொள்வதற்கான கிரயமாக அல் லாஹ்வுடைய பாதையில் 'முஜாஹதா' செய்வதுதான் என்பதாகவும் அல்லாஹ் குறிப்பிடுகின்ருன். பின்வரும் வசனத்தையும் கவனியுங்கள். இதில் வெளிப்படை யாகவே ஒரு வியாபாரத்தில் சம்பந்தப்படக்கூடிய வியாபாரி, வாங்குபவன், விற்கும் பொருள் அல்லது கொள்வனவு செய்யும் பொருள் முதலியன அடங்கிய பாணியில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

"அல்லாஹ் விசுவாசிகளுடைய உயிர்களையும் பொருள்களையும் நிச்சயமாக அவர்களுக்குச் சுவனபதி தருவதாக(க்கூறி,) மெய்யாகவே விலைக்கு வாங்கிக் கொண்டான். அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் 'ஜிஹாத்' செய்து, அவர்கள்(விரோதிகளை) வெட்டுவார்கள். (அல்லது) வெட்டப்பட்டு (இறந்து) விடுவார்கள். (இவ்விருநிலைமைகளிலும் அவர்களுக்குச் சுவனபதி தருவதாகத் தவ்ருத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் (அல்லாஹ்) வாக்களித்துத் தன் மீது கடமையாக்கிக் கொண்டிருக்கின்ருன். அல்லாஹ்வை விட வாக்குறுதி யைப் பூரணமாக நிறைவேற்றுபவன் யார்? ஆகவே, (விசுவாசிகளே!, நீங்கள்

அவனிடம் செய்து கொண்ட உங்களுடைய இவ்வர்த்தகத்தைப்பற்றி மகிழ்ச்சி யடையுங்கள், நிச்சயமாக இதுவன்றே மகத்தான பெரும் பாக்கியம்.'' *(9:111)*

தனது பொருள்களைக் கொண்டு அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தக்கூடிய வழிக ளான ஸகாத், தானதர்மம், வேறும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகச் செய்யப் படும் முயற்சிகள் அனைத்தும் அவனிடத்தில் நன்கு மதிக்கப்படுகின்றன. இவ்வாறு செலவிடுவதின் பயனை அல்லாஹ் விளக்குவதற்கும் ஒரு ரூபா முதலைக்கொண்டு எழுநூறு ரூபா இலாபம் சம்பாதிக்கக் கூடிய ஒரு வர்த்தகம் போன்றது எனச் சூட்சகமாக எடுத்துக்காட்டியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவ்வசனம் இவ் வாறு அமைந்திருக்கின்றது.

''அல்லாஹ்வின் பாதையில் தங்கள் பொருட்களைச் செலவிடுவோருக்கு உதார ணம், ஒருவித்துப் போன்றது. அந்த வித்து ஏழுகதிர்களைத் தந்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு மணிகள் இருந்தன. அல்லாஹ் நாடுவோருக்கு மேலும் அதிகப் படுத்துவான்.'' *(2:261)*

ஹதீஸுடைய கருத்தில் 'ஜிஹாத்' எனும் பதம் மனதை நல்வழிப்படுத்தும் பொருட்டு, இச்சைகளையடக்கி ஆத்ம பயிற்சி பெறுவது, ஹஜ்வணக்கம் முதலியன வற்றிற்கும் பாவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, மனிதன் தனது ஆத்மீக வளர்ச் சிக்காகச் செய்யும் அனைத்து தியாகங்களும், இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகத் தனது பேச்சால், பேனாமுனையால், பொருளால், நேரத்தால், உடலால், உயிரால் செய் யப்படும் அனைத்து தியாகங்களும்கூட 'ஜிஹாத்' எனவே மதிக்கப்படுகின்றன. இப்புனித வர்த்தகமானது, நமக்குப் பரிச்சயமான பல வகைப்பட்ட வர்த்தகங் களில் இருந்தும் கணிசமான அளவு வேறுபடுவதுடன், இவ்வர்த்தகத்தில் நாம் வெற்றியீட்டும் போது அல்லாஹ்வின் விசேஷமான அருளுக்கும், சுவனத்துக்கும் தகுதியானவர்களாக மாறிவிடுகின்றோம். நிலையான இன்பத்துக்கு ஆளாகின்றோம். எனவே, இறை திருப்தியைப் பெற்றுத் தரக்கூடிய இவ்வர்த்தகத்தைப், பேணுத லுடன் செய்ய முற்படுவோமாக.

இனி, இன்னோர் வகையான அல்-குர்ஆன் அசல், நகல் பால் எமது சிந்தனை யைத் திருப்புவோம்: பின்வரும் வசனங்களை அவதானமாகக் கவனியுங்கள்.

''பொருளும் மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே (யன்றி நிலையானவைகளன்று) என்றுமே. நிலையான நற்கருமங்கள் தாம், உம் இறை வனிடத்தில் நற்கூலியைப் பெறுவதற்கும் நன்னம்பிக்கை கொள்வதற்கும் மிக்க மேலானவையாகும்.'' *(18:46)*

''எவர்கள் நேரான வழியில் செல்கிறார்களோ அவர்களை, அல்லாஹ், பின்னும் நேரான வழியில் செலுத்துகின்றான். நிலையாக இருக்கக்கூடிய நற் கருமங்கள்தாம் உங்கள் இறைவனிடத்தில் (மேலான) நற்கூலியையும், நல்ல முடிவையும் தரக்கூடியவையாக இருக்கின்றன.'' *(19:76)*

''நற்கருமங்களோடு பொருளும் மக்களும் தொடர்புபடுத்தப்பட்டு, நற் கருமங்களே அசலானவை; நிலையானவை என்பதை விளக்க இவ்வுலகப் பொருள், மக்கள் என்பன மறுமையில் இருக்கக்கூடிய பல்வகைப்பட்ட சுகண்டியான பொ ருட்கள், சிதறிய முத்துக்கள் போன்று காட்சியளிக்கக்கூடிய என்றுமே இளமை மாறாத பிள்ளைகளின் நகல் உருவங்களே என்பது எடுத்துக்காட்டப்பட்டிருக்

கின்றது. இக்கருத்தை மேலும் ஊர்ஜிதம் செய்வது போல் இரண்டாவது வசனம் அமைந்திருக்கின்றது.

மனிதனுடைய அவசியத் தேவைகளில் அவனுக்கான ஒரு வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொள்வதும் முக்கியமானவொன்று. ஆனால், உலக வாழ்க்கைத்துணைவி எவ்வளவுதான் அழகும், அன்பும், இளமையும், இன்னோரன்ன கவர்ச்சிகரமான பண்புகளைப் பெற்றுக் காணப்பட்டாலும் அவள்கூட, சுவர்க்க நங்கைகளில் நகல் உருவமன்றி அசலாக இருக்க முடியாது எனும் கருத்தை அல்-குர்ஆன் சூட்சகமாகப் பல இடங்களில் தெளிவுபடுத்தி இம்மை வாழ்க்கையில் மருண்டுவிடாதீர்கள் என எச்சரிக்கின்றது.

**சுவர்க்கக் கன்னிகைகள் பற்றி அல்-குர்ஆன் வர்ணிக்கும்போது,**

*''(அங்கு இவர்களுக்கு) 'ஹூருல் ஈன்' (என்னும் கண்ணழகிகளான மனைவி)களும் இருப்பார்கள். (அவர்கள்,) பேணிக் காக்கப்படும் ஆணி முத்துக்களைப்போல் (இருப்பார்கள்)'' (56:22,23)*

*''ஹூர் (எனும் கண்ணழகிகளாகிய கன்னிகை)கள் (முத்து பவளங்களாலான) கூடாரங்களில் வசித்திருப்பர்.'' (56:72)*

*''நாம் அவர்களுக்கு (ஹூருல்ஈன் எனும்) கண்ணழகி(களாகிய கன்னிகை)களைத் திருமணம் செய்து வைப்போம்'' (52:20)* என்பதாகக் குறிப்பிடுகின்றது' இவ்வசலான சுவர்க்க நங்கைகளையடைவதற்கான முயற்சிகளில் ஈடுபட ஒவ்வொரு மனிதனுக்கும் இம்மை வாழ்வில் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கின்றது, இச் சந்தர்ப்பத்தை செவ்வனே பயன்படுத்தி, இறை கட்டளைகளுக்கும், இறைதூதர்களின் வழிகாட்டுதல்களுக்கும் வழிப்பட்டு நடக்கும் ஒவ்வொரு ஆணுக்கும் இப்பாக்கியம் கிடைக்கும். இவ் வாறு நடக்கும் ஒவ்வொரு பெண்ணும் சுவர்க்க நங்கையாக மாறி விருப்பமான ஆண்களையடைந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தையும் அல்லாஹ் சுவர்க்கத்தில் அவர்களுக்களிப்பான்.

இம்மை வாழ்க்கையில் மனிதன் சந்திக்கின்ற எல்லாப் பொருள்களும், அனைத்து நிலைமைகளும் அவன் மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையில் சந்திக்கப்போகின்ற யதார்த்தமான, ஹகீகத்தான், அசலானவற்றின் நகல் வடிவங்களே என்பதைச் சில ஆதாரங்கள் மூலமாக விளக்கியிருக்கின்றேன். விஞ்ஞான முன்னேற்றமும், இயந்திரப் பெருக்கும், தொழில் நுட்ப முன்னேற்றங்களும் மாத்திரம் ஒரு மனிதனை நல் மனிதனாகவோ, பண்பட்டவனாகவோ ஹகீகத்தை விளங்கியவனாகவோ ஆக்கிவிடா. ஒழுக்கத்தையும், ஆன்மீகப் பண்பாடுகளையும் அடிப்படையாகக் கொள்ளாத வரையில் சிறந்த வொரு சமுதாயம் இவ்வுலகில் தோற்ற முடியாது. பசிதீர உண்டு, களிப்புத்தீர அனுபவித்து, போகம் தீரப் புணர்ந்தால் மாத்திரம் மனிதன் உயர்வடைய முடியாது. அவனது ஆசைகள் அற்றுப் போயும் விடா. இவ்வாறு தவறுதலாக எண்ணும் மனிதன் நிச்சயமாக ஆழ்ந்த உறக்கத்தில் தான் இருக்கின்றான். இதை அலி (ரழி) அவர்கள் அழகுற விளக்கிக் காட்டும்போது ''மனிதர்கள் அனைவரும் உறக்கத்தில் இருக்கின்றனர்: மரணத்தை அனுபவித்துவிட்டால் விழித்தெழுவார்கள்'' எனக் கூறுகின்றார்கள் கருத்தென்னவெனில், அப்போதுதான், தான் உலகத்தில் அசலாக நம்பியிருந்தவைகள் எல்லாம அசல்கள் அல்ல, அவையனைத்தும் நகல் வடிவங்களே எனத் தெரிந்து கொள்வான்: பெருமானார் (ஸல்) அவர்கள்கூட தம்முடைய ஸஹாவாப் பெருமக்கள் உலோகாயுத விடயங்களில் அதிக ஈடுபாடு கொண்டு அவைபற்றிப் பெருமையாகப் பேசும்போதெல்

லாம் அவர்களுக்கு அவற்றின் நிலையற்ற தன்மைகள் பற்றியும் அசலானவை என்பது பற்றியும் விளக்கம் கொடுத்திருக்கின்ருர். அவ்வாருன ஒரு சம்பவத்தைக்கூறி இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

''முஸ்லிம்கள் கைபரை வெற்றி கொண்டபோது 'கனீமத்' பொருட்களை வாங்கியும் விற்றும் ஒரு ஸஹாபி பெருலாபத்தைப் பெற்றுக் கொண்டார். இவ் ஸஹாபி, பெருமானுர் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து, 'நாயகமே! இன்றைய வியாபாரத்தில் என்னைப் போன்று எவருமே இலாபம் அடையவில்லை. வாங்கவும் விற்கவுமாக இருந்து முன்னூறு ஊகியா வெள்ளி இலாபம் கிடைத்தது என்ருர். இதுகேட்ட நபியவர்கள், உங்களுக்கு உயர்ந்த இலாபம் தரும் ஒன்றைக் கூறட்டுமா?'' என்ருர்கள். அவசியம் கூறுங்கள் என்ருர் அவர். 'பர்ளுத் தொழுகைக்குப்பின் இரண்டு ரக்அத் நபில் தொழுவது'' எனப் பெருமானுர் (ஸல்) அவர்கள் அருளினுர்கள். அபூதாவூத் அவர்களின் பதிவான இவ்ஹதீஸை, உபைதுல்லாயின்ஸல்மான் (ரழி) அவர்கள் அறிவிக்கின்ருர்கள்.

### அடிக்குறிப்புக்கள்

(1) அல்-குர்ஆன் தோற்றுவித்த உயர்சமுதாயம் - அஷ்ஷஹீத்ஸெய்யித்குதுப் - அல்மிஸ்ரி (ரஹ்) - அஷ்ஷபாப்ஹிஜ்ரி 1400 ஆண்டு மலர்.

(2) The cultural Side of Islam Muhammed Marraduke Pikthal.

(3) முர்ஷிதுத்துல்லாப் - முதலாவது பக்கம்.

(4) The orations of Muhammed (sal) - M. Muhammed Ubaidul Akbar - Page 5.

(5) do page 95.

(6) அறி: அப்துல்லாஹ் இப்னுஉமர் நூல்: புகாரி.

(7) அறி: ஸஃதிப்னுஸஃதில்லாஇதி நூல்: இப்னுமாஜா;

(8) The distribution of wealth in Islam - Mufthi Muhammed Shefi.

(9) இதுதான் இஸ்லாம் - மௌலானுமௌதுதி பக்கம் 157

(10) இஸ்லாம் ஒரு அறிமுகம்: பக்கம் 158

Great News for Shopping Enthusiasts!
For The Latest in Suitings and Shirtings
and For All Kinds of Sarees
Step Into

**MOHIDEEN'S SILK HOUSE**

No. 9, Main Street,
AKKARAIPATTU,

Branch:

**NIZAAM TRADERS**
No. 2, Sagama Road,
AKKARAIPATTU.

Specialist in Tailoring

***Latest Tailoring***

&

**Readymade Stores**

1/3, Power House Road,
**JAFFNA.**

Attractive Designs
of

MODERN TEXTILES

*For Your Satisfaction*
*From*

# REFINE MOD CENTRE

41, Grand Bazaar, JAFFNA.
Phone: **8125**

AMEER TEX

Leading Tailors
in Sri Lanka

# Ameer Tex

**Specialists for Readymade Clothes**

**24A, Grand Bazaar, JAFFNA.**

***For All Your Textiles***
***&***
***Readymade Garments***

**Visit**

# Miskins Textiles

**I, Grand Bazaar, JAFFNA.**

Branch:

MISKINS
*22/1, Grand Bazaar,*
*JAFFNA.*

*Best Wishes From*

# SMACS

***10 & 12, Bazaar Lane,***
***JAFFNA.***

Always visit for

- *COURTESY*
- *QUALITY*
- *VARIETY*

# CITY TEX

*GRAND BAZAAR,*
*MANNAR.*

*From/*

# AMEENS

Specialists in:
Ladies & Gents Tailors
Manufacturers of:
Readymade Garments

**63/2 (24/1), Grand Bazaar,**
**JAFFNA.**

T'phone: 8283

*Visit tody for your requirements*

- Transistor Radios
- Cassettes, Clocks
- Fancy Goods
- Cycles
- Umbrellas
- Toys
- Eversilver Wares

**K. SELVARAJAH & BROTHERS**

37, Kasthuriar Road,
JAFFNA.

DIAL: **243**

For All Kinds Of
Latest & Modern
TEXTILES

*Visit*

**Ismail Stores**

MAIN STREET,
*AKKARAIPATTU.*

**LANKA STORES**

Hardware, Tractor & Motor
Spare parts Textile and
Footware Dealers

Agents for:

**Brown & Co Ltd.**
**& Bata Shoes**

Main Street,
AKKARAIPATTU.

*Telephone: 7344*
*Telegrams: LANKA STORES*

*With best compliments from*

**ZUM ZUM PHARMACY**
*AKKARAIPATTU.*

# இஸ்லாமிய விஞ்ஞானம்

**கலாநிதி எம். இஸட். எம். மல்ஹர்தீன்,**
கணிதத்துறை யாழ். பல்கலைக்கழகம்

இன்றைய இருபதாம் நூற்றுண்டில் மனித இனம் விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் முன்னெப்போதும் காணுத பெரும் முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. இவற்றின் விளைவாக மனிதனின் வாழ்க்கை நிலை, அறிவு, ஆற்றல், சிந்தனை, நம்பிக்கைகள் போன்றவற்றில் பல புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

ஆரம்பத்தில் இயற்கைக்குக் கட்டுப்பட்டு, பயந்து வாழ்ந்துகொண்டிருந்த மனிதன் இன்று இயற்கையை நன்கு புரிந்துகொண்டது மட்டுமன்றி, அதன் போக்கைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் கற்றுக் கொண்டான். இந்நூற்றுண்டின் விஞ்ஞான விந்தைகளான கார், விமானம், ரேடியோ, டெலிவிசன், கம்பியூட்டர் போன்ற சாதனங்களைக் கண்டு பிடித்து அதன் மூலம் தனது வாழ்வை சௌகரியமும், சொகுசும் மிக்கதாக ஆக்கிக் கொண்டான். கணிதம், பௌதிகம், வானியல, மருத்துவம், உயிரியல் போன்ற சகல விஞ்ஞானத் துறைகளிலும் அவனது அறிவு, ஆற்றல் என்பன பிரமிக்கத்தக்க அளவு அதிகரித்து விட்டன. ஒரு சில நூற்றுண்டுகளுக்கு முன் கற்பனைகூடச் செய்து பார்த்திராத காரியங்களையெல்லாம் அவன் இன்று மிக எளிதாகச் சாதித்து விடுகிருன்; ஒரு புறம் அணுக்களைப் பிளந்து பிரயோசனங்களைப் பெறுகிருன். மறுபுறம், விண்வெளியில் பறந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்கிருன். சுருக்கமாகச் சொன்னுல், மனிதன் இன்று விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் காரணமாக இயற்கையையே வெற்றி கொண்டுவிட்டான்.

இப்படியான, அதிசயிக்கத்தக்க முன்னேற்றங்களின் காரணமாக இன்று மனிதனிடம் பெரும் தன்னம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. தான் நினைத்தால் எக்காரியத்தையும் தனது சிந்தனைத்திறன், செயற்திறன் என்பவற்றினுதவியால் சாதித்துவிட முடியும் என நினைக்கிருன். எந்தவொரு உண்மையையும் தனது பகுத்தறிவின் ஆற்றலால் புரிந்துகொள்ள முடியும் எனவும் நினைக்கிருன். இதன் விளைவாக அவனது நம்பிக்கைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அவன் இப்பொழுது பகுத்தறிவுக்கெட்டாத எந்தவொரு விடயத்தையும் கண்மூடித்தனமாக நம்புவதில்லை. விஞ்ஞான ரீதியாகத் தெளிவாக ஆராய்ந்து விளங்கிக் கொண்ட பின்பே ஒரு விடயத்தை உண்மையெனக் கொள்கிருன். குறிப்பாக மதங்கள் சார்ந்த அவனது நம்பிக்கைகள் இன்று ஆட்டங்காண ஆரம்பித்துவிட்டன. இன்றைய விஞ்ஞான நாகரிகத்தின் மத்திய ஸ்தானங்களாக விளங்கும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும், ரஷ்யா, சீன போன்ற கம்யூனிஸ, சோசலிஸ நாடுகளிலும் கூடுதலான மக்கள் மத நம்பிக்கையற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இதே நிலையில், உலகின் வேறுபல பகுதிகளில் வாழும் கூடுதலான மக்கள் இன்னும் மத நம்பிக்கை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். குறிப்பாக, முஸ்லிம்களை எடுத்துக்கொண்டால், இன்றைய விஞ்ஞான விந்தைகளும் முன்னேற்றங்களும் அவர்களின் மத நம்பிக்கைகளில் எவ்விதத் தாக்கங்களையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. இந்த விஞ்ஞான யுகத்திலும்கூட முஸ்லிம்கள் இஸ்லாத்தின் போதனைகளில் அசையாத நம்பிக்கை கொண்டோராயும் அதன் போதனைகளை அணு அணுவாய்ப் பின்பற்றுவோராயுமிருப்பது பலருக்கு ஆச்சரியத்தையும் புதிரையும் ஏற்

படுத்தலாம். இப்படியான புதிர்களின் காரணமாகப் பல கோணங்களிலிருந்தும் எழுப்பப்படும் வினாக்களையும் சந்தேகங்களையும் நாம் அடிக்கடி கேட்கக்கூடியதாக வுள்ளது: ''விஞ்ஞான அறிவும், ஆற்றலும் வளர்ந்துவிட்ட இக்காலத்திலும், ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் இஸ்லாம் போதித்த கொள்கைகளை, ஏன் முஸ்லிம்கள் கண்மூடித்தனமாக நம்பி ஒழுகுகின்றனர்? இது பகுத்தறிவுக்கு ஏற்றதா? இஸ்லாமியர்களது மத நம்பிக்கைகள், நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவாகப் பெறப்பட்ட உண்மைகளுடன் பொருந்துகின்றனவா? மனித இனத்தின் வாழ்க்கைத் தரத்தை இன்றைய உன்னத நிலைக்குக் கொண்டுவந்த விஞ்ஞான ஆராய்ச்சிகள் பற்றி இஸ்லாம் என்ன கூறுகிறது? அவற்றை ஊக்குவிக்கின்றதா? தடுக்கிறதா? முஸ்லிம்கள் தமது வாழ்க்கையின் சகல துறைகளுக்கும் வழிகாட்டும் இறைதூதர் எனப் பெருமையுடன் போற்றும் பெருமானாரவர்களிடம் இன்றைய விஞ்ஞானத் துறைக்கு என்ன வழிகாட்டலை நாம் காணக்கூடியதாக உள்ளது? அவரைப் பின் பற்றி வாழ்ந்த பிற்கால முஸ்லிம்கள் இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏதேனும் பங்களிப்புக்களைச் செய்துள்ளனரா? இவ்வளவு முன்னேற்றம் கண்டுவிட்ட மனித இனத்திற்கு இனியும் இஸ்லாமிய மதக் கோட்பாடுகள் அவசியம் தானா?''

பல சந்தர்ப்பங்களில் இப்படியான சந்தேகங்களையும் வினாக்களையும் எழுப்புபவர்களே தமது சொந்தக் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் விடைகளாகத் திணிக்க முயற்சிக்கின்றனர்! ''மனிதனின் சிந்தனையாற்றல் பெருமளவு வளர்ந்து விட்ட இக்காலத்தில் பகுத்தறிவுக்கெட்டாத மத நம்பிக்கைகள் கண்மூடித்தனமானவை. விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மைகளுடன் இவை பொருந்த வில்லை. மனிதனின் சுதந்திரமான சிந்தனைக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதன் மூலம் மதங்கள் விஞ்ஞான வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. மதத் தலைவர்கள் மக்களை வெறுமனே ஆத்மீகத் துறைகளில் வழி நடாத்தினார்களேயன்றி, அவர்களுக்கு விஞ்ஞானம் போன்ற லௌகீகத் துறைகளில் எவ்வித ஊக்கத்தையோ, வழி காட்டலையோ அளிக்கவில்லை. இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு ஐரோப்பியர்களே முக்கிய காரணகர்த்தர்கள். முஸ்லிம்கள் இத்துறைக்குக் குறிப்பிடத்தக்க எவ்விதப் பங்களிப்புக்களையும் செய்யவில்லை. இயற்கையை மனிதன் வெற்றிகொண்டுவிட்ட இக்காலத்தில் இனி மதங்கள் அவசியமில்லை''

எவ்வித ஆதாரமுமற்ற இக்கருத்துக்கள் இன்று முஸ்லிமல்லாதவர்களிடம் மட்டு மன்றி, ஒரு சில முஸ்லிம்களிடமும் கூடக் காணப்படுகின்றன. இஸ்லாத்தையோ, விஞ்ஞானத்தையோ சரியாகப் புரிந்துகொள்ளாமையே இதற்குரிய மூல காரண மாகும். அத்தோடு, பல்வேறு சக்திகள் வெவ்வேறு காரணங்களுக்காக சர்வதேச ரீதியில் இஸ்லாத்திற்கெதிராக மேற்கொள்ளும் தவறான பிரச்சாரங்களும் இன்னொரு காரணமாக இருக்கலாம். உண்மையில், இஸ்லாம் தனக்கென உரித்தான பாரம் பரியங்களைக் கொண்ட ஒரு விஞ்ஞான முறையை — இஸ்லாமிய விஞ்ஞானத்தை — உள்ளடக்கிய ஒரு பூரண வாழ்க்கைத் திட்டமென்பதையும், இதனடிப்படையில் பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களே உலகில் விஞ்ஞானத்துறையில் ஒளிவீசிக் கொண்டிருந்தவர் என்பதையும், இவர்களின் விஞ்ஞானப் பங்களிப்புக்களே பிற்கால ஐரோப்பிய நாகரிகத்திற்கு வழிகோலியது என்பதையும் இவர்கள் அறியாதிருப்பது பரிதாபத்திற்குரியதே: இவர்கள் ஆதார பூர்வமான வரலாற்று நூல்களைப் புரட்டிப் பார்த்திருந்தால் உண்மைகளை உணர்ந்திருப்பர். நடுநிலை நின்று ஆராய்ந்திருந்தால் இத்தவறான பிரச்சாரங்களின் அர்த்தமற்ற தன்மையை விளங்கியிருப்பர்.

இன்றைய விஞ்ஞான முன்னேற்றங்களனைத்தும் தானாகவோ, தற்செயலாகவோ ஏற்பட்டவையல்ல; மனிதன் பல்லாயிரக் கணக்கான வருடங்களாகத் தனது வாழ்க்

கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளத் தனது பகுத்தறிவு, செயல்திறன் போன்றவற்றைப் பிரயோகித்து அயராது உழைத்து வந்துள்ளான். தொடர்ச்சியான இம்முயற்சிகளின் விளைவாக ஏற்பட்டுவந்த படிப்படியான அறிவு வளர்ச்சியின் உச்சக் கட்டமே இன்றைய விஞ்ஞான நாகரிகமாகும். பல்வேறு காலகட்டங்களிலும் தோன்றிய எகிப்திய, இந்திய, கிரேக்க, இஸ்லாமிய, ஐரோப்பிய மற்றும் நாகரிகங்கள் இவ்வளர்ச்சிக்குத் தத்தம் பங்களிப்புக்களைச் செய்தன. இவ்வகையில் இஸ்லாமும், உலகில் அது ஆதிக்கம் செலுத்திய 7-ம் — 18ம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் விஞ்ஞான வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்களிப்புக்களைச் செய்தது. இக்காலப் பகுதியில் முஸ்லிம்கள் மேற்கொண்ட விஞ்ஞான நடவடிக்கைகள் பெரும்பாலும் இஸ்லாமிய போதனைகளால் ஊக்குவிக்கப்பட்டும் வழிநடாத்தப்பட்டும் வந்தன. இதன் காரணமாக முஸ்லிம்கள் தமக்கே உரித்தான ஒரு விஞ்ஞான பாரம்பரியத்தையும், மரபையும் ஏற்படுத்திக் கொண்டனர். சுருக்கமாகச் சொன்னால், இஸ்லாம் விஞ்ஞானத்திற்கு முரணானதோ, தடையானதோ அல்லது அதிலிருந்து வேறுபட்டதோ அல்ல. உண்மையான விஞ்ஞானம் உட்பட வாழ்வின் சகல துறைகளையும் உள்ளடக்கிய ஒரு பூரண வாழ்க்கைத் திட்டமே இஸ்லாம். ஆனால், இஸ்லாமிய விஞ்ஞானம், இன்றைய நவீன விஞ்ஞான மரபுகளுடனும், பாரம்பரியங்களுடனும் பல ஒற்றுமை வேற்றுமைகளைக் கொண்டிருந்தது. இவற்றைச் சரிவரப் புரிந்து கொள்வதன் மூலமே விஞ்ஞானம் பற்றிய இஸ்லாத்தின் உண்மையான நிலையை அறிந்து கொள்ளவும், மேலே சுட்டிக்காட்டப்பட்டது போன்ற தவறான கருத்துக்களை நிவர்த்தி செய்து கொள்ளவும் முடியும். இவ்வகையில் இஸ்லாமிய நவீன விஞ்ஞான மரபுகளுக்கிடையிலுள்ள ஒரு சில ஒற்றுமை வேற்றுமைகளைச் சுருக்கமாக நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்று, பொதுவாக, விஞ்ஞானம் என்பது மனிதன் தனது பகுத்தறிவு முதலிய ஆற்றல்களை நல்ல முறையில் பயன்படுத்தி, தன்னைச் சூழவுள்ள இயற்கை பற்றிய உண்மைகளை அறிந்து கொள்வதையும், அந்த அறிவை முழு மனித இனத்தினதும் நலனுக்காகவும், மேம்பாட்டுக்காகவும் பயன்படுத்துவதையும் குறிக்கிறது. இவ்விஞ்ஞானச் செயற்பாட்டுக்கு மத்திய உயிர்நாடியாக விளங்குவது மனிதனது பகுத்தறிவும், செயலாற்றலுமே. எனவே இவ்விரு ஆற்றல்களும் பற்றிய இஸ்லாத்தினதும், நவீன விஞ்ஞானத்தினதும் கொள்கைகளைத் தெரிந்துகொள்ளல் அவசியமாகிறது.

நவீன விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை, இப்பிரபஞ்சம் பற்றிய எந்தவொரு உண்மையையும் அறிந்து கொள்வதற்கான ஒரேயொரு வழி பகுத்தறிவு ரீதியிலான சிந்தனையும், புலனறிவுக்குட்பட்ட பரிசோதனை முறைகளுமாகும். இவையன்றி மனிதன் உண்மைகளை அறிந்து கொள்வதற்கான வேறு வழிகள் இல்லை.

ஆனால், இஸ்லாமியக் கோட்பாடுகளின்படி சிந்தனையும், பரிசோதனைகளும் மட்டுமே உண்மைகளைப் பெறப் போதுமான வழிமுறைகளல்ல. புலனறிவுக்குட்பட்ட விடயங்களைப் பொறுத்தவரை, உண்மைகளை அறிந்துகொள்ள இவை பயன்படலாம். ஆனால், புலனறிவுக்கப்பாற்பட்ட விடயங்களில், பகுத்தறிவு தர்க்கரீதியான உய்த்தறிதலுக்கு மட்டுமே பயன்படலாம். அதாவது, ஒரு உண்மையை ஆதாரமாக வைத்து இன்னொரு உண்மையை ஊகிப்பதற்கே அது பயன்படும். தீர்க்கமான எந்த ஒரு முடிவுக்கும் பகுத்தறிவு தானாக இட்டுச் செல்லாது. எனவே, பகுத்தறிவு, ஒரு சில அடிப்படை உண்மைகளை — நம்பிக்கைகளை, எடுகோள்களை — ஆதாரமாக வைத்தே செயற்பட முடியும். நம்பிக்கைகள், எடுகோள்கள் என்பன உண்மையாக இருந்தால், நிச்சயம் அவற்றிலிருந்து பகுத்தறிவு ரீதியாகப் பெறப்படும் முடிவுகளும்

உண்மையாக இருக்கும்; இன்றேல், அவற்றிலிருந்து உண்மையான முடிவுகளை நாம் எதிர்பார்க்க முடியாது.

இதனை இன்னொரு விதமாகக் கூறலாம்; பகுத்தறிவும், ஆராய்ச்சியும், மனிதன் அறிவியல் துறையில் முன்னேறிச் செல்லப் பயன்படும் ஒரு ஏணிபோன்றதாகும்; ஆனால் இந்த ஏணிமட்டும் இருந்து பிரயோசனமில்லை. அதை நிலைநிறுத்தித் தாங்கக் கூடிய ஒரு உறுதியான அடிகதளமும் தேவைப்படுகிறது; ஏணியை நாம் ஒரு வழுக்கக்கூடிய தரையின்மீது வைத்து ஏற முயன்றால், அது எம்மை விழுத்திவிடும்- அல்லது ஒரு சேற்று நிலத்தில் வைத்து ஏறினால் மேலே செல்வதற்குப் பதிலாக சேற்றில்தான மூழ்கிவிடுவோம்!

பகுத்தறிவு பற்றிய நவீன கணிதவியலாளர்களின் கருத்தும் நாம் கடைசியாகக் கூறிய கருத்தையொத்ததாகவே உள்ளது. இதனால்தான் நவீன கணிதத்தின் எந்தவொரு துறையை எடுத்துக்கொண்டாலும் அது ஒரு சில வரைவிலக்கணங்களுடனும், எடுகோள்களுடனும் (Axioms) ஆரம்பிக்கின்றன. இவற்றிலிருந்து பகுத்தறிவு ரீதியிலான கணித முறைகள் மூலம் வேறு பல கூற்றுக்கள் தேற்றங்களாகப் பெறப் படுகின்றன. எடுகோள்கள் உண்மையானவையா இல்லையா என்பது பற்றி எதுவும் கூறப்படுவதில்லை; கூறப்படுவதெல்லாம், எடுகோள்கள் உண்மையாக இருந்தால் தேற்றங்களும் உண்மையாக இருக்கும் என்பது மட்டுமே புகழ் பெற்ற தத்துவ ஞானியும் கணித வல்லுனருமான Bertrand Russel இக்கருத்தைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறார். [1]

"Pure mathematics consists entirely of such asseverations as that. If such and such a proposition is true of 'Anything', Then such and such another proposition is true of that thing. It is essential not to discuss whether the first proposition is really true, and not to mention what the 'Anything' is of which it is supposed to be true... Thus, mathematics may be defined as the subject in which we never know what we are talking about, nor whether what we are saying is true."

இவ்வகையில், இஸ்லாம் சிந்தனைக்கும், ஆராய்ச்சிக்கும் உறுதுணையான அடித் தளமாகத் தருவது குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றையே; விஞ்ஞானம் மட்டுமன்றி, வாழ்வின் ஏனைய சகல துறைகளுக்கும் அடிப்படை வழிகாட்டியாக இவற்றைக் கொள்ளுமாறு இஸ்லாம் அழைப்பு விடுப்பது அவற்றின் தெய்வீகத் தன்மைக்கான பல அத்தாட்சிகளை முன்வைத்த பின்பேயாகும். உதாரணமாகப் பெருமானாரவர்கள் பல தடவைகள் தமது நபித்துவத்தின் அத்தாட்சியாக அளிக்கப்பட்ட அற்புதம் குர்ஆனே எனக் கூறியுள்ளார்கள். குர்ஆன் சென்ற பதினான்கு நூற்றாண்டுகளாக அதனை நடுநிலை நின்று ஆராய்ந்த எவருக்கும் தனது அற்புதத் தன்மைகளை வெளிப் படுத்திக்கொண்டே வந்துள்ளது. இந்த விஞ்ஞான யுகத்திலும்கூட அறிவியலின் பல துறைகளிலிருந்தும் அதனை ஆராய்ந்த பலர் அது ஒரு மனித சக்திக்கப்பாற்பட்ட படைப்பு எனபதைக் கண்டுகொண்டனர், கணித நோக்கில் அதனை நாம் பார்க்கும் போது அதில் காணக்கூடிய பல அற்புதத் தன்மைகளைச் சென்ற "இன்கிலாப்" மலரின் ஒரு கட்டுரையில் விளக்கியிருந்தோம்; இதே போலவே பிரான்ஸ் நாட்டைச் சேர்நத மருத்துவ விஞ்ஞானியொருவர் அண்மையில் வெளியான புத்தகமொன்றில்[2], நவீன மருத்துவ விஞ்ஞான நோக்கில் குர்ஆனை ஆராய்ந்து அது ஒரு அற்புதப் படைப்பு என்பதற்கு ஆதாரம் காட்டுகிறார். இது போன்ற பல அத்தாட்சிகளை முன்வைத்துத்தான் குர்ஆனையும், ஹதீஸையும் அடிப்படை வழிகாட்டிகளாகக்

கொள்ளுமாறு இஸ்லாம் அழைப்பு விடுக்கிறது. எனவே, குர்ஆன் ஒரு வேதவாக்கு என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட முஸ்லிம்கள், அது கூறும் மறைவான விடயங்களை — மறுமை வாழ்வு போன்ற பகுத்தறிவுக்கெட்டாத விடயங்களை — அப்படியே நம்புவது கண்மூடித்தனமானதல்ல. அதுவே பகுத்தறிவுக்குகந்ததாகும்; தமது பகுத்தறிவுக்குப் படாத எந்த ஒரு விடயமும் இருக்கவே முடியாது எனப் பிடிவாதமாக இருப்பதுதான் பகுத்தறிவுக்கு முரணானது!

சில வேளைகளில், எமது புலனறிவுக்கப்பாற்பட்ட விடயங்கள் பற்றிய, நவீன விஞ்ஞானிகளினதும், குர்ஆனினதும் கொள்கைகளுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றலாம்; இச்சந்தர்ப்பங்களில் குர்ஆன் கூறுவதையே முஸ்லிம்கள் தீர்க்கமான முடிவாக எடுப்பர். ஏனெனில், வெறுமனே பகுத்தறிவையும், பரிசோதனைகளையும் மட்டும் அடிப்படையாக வைத்துப் பெறப்படும் கூற்றுக்கள், வெறும் ஊகங்களன்றி வேறல்ல. உதாரணத்திற்கு டார்வினின் பரிணாமக் கொள்கையைக் குறிப்பிடலாம். இக் கருத்தையே பின்வரும் குர்ஆன் வசனம் எடுத்துரைப்பதாக செய்யித் குதுப் அவர்கள்[3] குறிப்பிடுகிறார்கள்.

''கவனியுங்கள்! நிச்சயமாக வானங்களில் உள்ளது எதுவோ அதுவும், பூமியில் உள்ளது எதுவோ அதுவும் அல்லாஹ்வுக்கே உரியனவாம். மேலும் அல்லாஹ்வையன்றி (வேறு) இணைகளை விளிப்பவர்கள் எதைத்தான் பின்பற்றி தொழுகிறார்கள்? வெற்று உத்தேசத்தையன்றி, வேறெதனையும் அவர்கள் பின்பற்றுவதில்லை. இன்னும் அவர்கள் வெறும் ஊகமே செய்கிறார்கள்'' (10:66)

இதே வேளையில் புலனறிவுக்குட்பட்ட பரிசோதனை முறைகளால் நாம் அறிந்து கொள்ளக்கூடிய, உயிரியல், மருத்துவம், பௌதிகம், வானியல் போன்ற துறைகள் சார்ந்த எத்தனையோ விஞ்ஞான உண்மைகளும் குர்ஆனில் கூறப்பட்டிருந்தன. வெறும் விஞ்ஞான பாடங்களாகவன்றி, மனிதர்களுக்கு அத்தாட்சிகளாக அருளப்பட்டிருந்த இவ்வசனங்கள் பிற்கால ஆராய்ச்சி முடிவுகளுடன் அதிசயிக்கத்தக்க விதத்தில் பொருந்துவதை நாம் இன்று காண்கிறோம். ஒரு உதாரணத்தை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். பூமியினதும், அதிலுள்ள உயிரினங்களினதும் தோற்றம் பற்றி ஆராய்ந்த உயிரியல் விஞ்ஞானிகள், தமது ஆராய்ச்சி முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு பல கொள்கைகளை முன்வைத்தனர். இவற்றுள், இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைப்படி, சூரியன், பூமி மற்றும் கிரகங்கள் அனைத்தும் ஆரம்பத்தில் ஒரு கோளமாகவே இருந்தன. இக்கோளத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய வெடிப்பின்போது சிதறிச் சென்ற பகுதிகளே பிறகு குளிர்ந்து, பூமியாகவும், கிரகங்களாகவும் ஆகின. பின்பு பூமி மேலும் குளிர்ச்சியடைய அதன் மீது நீர் படிந்து கடல் போன்ற நீர்த்தேக்கங்கள் தோன்றின. பின்பு இந்த நீரில் ஏற்பட்ட இரசாயன மாறுதல்களின் விளைவாக ஆரம்ப உயிரினங்கள் கடலில் தோன்றின. ஆனால் இதே கருத்தை 1400 ஆண்டுகளுக்கு முன் குர்ஆன், ஒரே யொரு வசனத்தில அழகாக எடுத்துரைத்திருப்பது, பல உயிரியல் விஞ்ஞானிகளையே[4] இன்று பிரமிப்புக்குள்ளாக்கியிருக்கிறது.

''(ஆரம்பத்தில்) ஒன்றாகச் சேர்ந்திருந்த வானங்களையும், பூமியையும் நாமே பிரித்தமைத்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்து படைத்தோம் என்பதையும் இந்த நிராகரிப்போர் கவனிக்க வேண்டாமா? (இதை) அவர்கள் நம்ப மாட்டார்களா?'' (21:30)

எனவே யதார்த்தத்தில், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கும் குர்ஆனின் போதனைகளுக்குமிடையில் எவ்வித முரண்பாடுகளும் இதுவரை ஏற்பட்டதில்லை; இனியும் ஏற்பட முடியாது — மாறாக, வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவு, குர்ஆனின் தெய்வீகத் தன்மையை நாளுக்கு நாள் ஊர்ஜிதம் செய்துகொண்டே வருகிறது.

நாம் இதுவரை கூறியதைச் சுருக்கமாகச் சொன்னால், இஸ்லாம், கிரேக்கர்களைப் போன்று வெறும் சிந்தனையை மட்டுமோ, அல்லது நவீன விஞ்ஞானிகளைப் போன்று சிந்தனையையும், பரிசோதனை முறைகளையும் மட்டுமோ அறிவின் ஊற்றுக்களாகக் கருதவில்லை; இவற்றோடு குர்ஆனையும் பெருமானாரது போதனைகளையும் அடித்தளமாகக் கொண்டதே இஸ்லாமிய விஞ்ஞானம்.

இதுவரை மனிதனது பகுத்தறிவு பற்றிய, இஸ்லாமிய, நவீன விஞ்ஞானக் கருத்துக்களைப் பார்த்தோம். இதே போன்று மனிதனது செயலாற்றல் பற்றியும் இவற்றினது கருத்துக்களைப் பார்ப்போம்: இறை நம்பிக்கையற்றவர்கள், இன்றைய நவீன விஞ்ஞான சாதனங்களனைத்தும் விஞ்ஞானிகளது அயராத முயற்சியினதும் செயலாற்றலினதும் விளைவே எனக் கருதுகின்றனர். இதுபோலவே எதிர் காலத்திலும் தாம் நினைத்த எந்தவொரு காரியத்தையும் சாதிக்க முடியும் எனவும் நினைக்கின்றனர். ''ஆகாயத்தில் பறக்க நினைத்தோம். விமானத்தைப் படைத்துவிட்டோம்; சந்திரனுக்குப் போக நினைத்தோம். நாமாகவே போய் வந்துவிட்டோம். உயிரினங்களை, இரசாயன கூடங்களில் உற்பத்தி செய்ய நாடியுள்ளோம். இதனையும் விரைவில் சாதித்துவிடுவோம்'' என இறுமாப்புடன் கூறுகின்றனர்.

ஆனால் இஸ்லாத்தைப் பொறுத்தவரை எல்லாம் வல்ல அல்லாஹ்வே இப்பிரபஞ்சத்தையும் அதிலுள்ள சகல வஸ்துக்களையும் படைத்தான்; பூமியிலுள்ள அனைத்து வஸ்துக்களும், உயர்ந்த படைப்பாகிய மனிதனுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. இவற்றை மனிதன் தனது தேவை, முயற்சி என்பவற்றிற்கேற்ப தேடிப் பெற்றுக் கொள்கிறான். இறைவனது நாட்டமின்றி மனிதனால் ஒன்றுமே செய்ய முடியாது. இதனை ஒரு சவாலாகவே குர்ஆன் விடுத்துள்ளது.

''மனிதர்களே, உங்களுக்கு ஒரு உதாரணம் கூறப்படுகிறது. அதனைச் செவி தாழ்த்திக் கேளுங்கள். அல்லாஹ் அல்லாத எவைகளை நீங்கள் (தெய்வங்களென) அழைக்கிறீர்களோ, அவை யாவும் ஒன்று சேர்ந்(து முயற்சித்)த போதிலும், ஓர் ஈயைக்கூட சிருஷ்டிக்க முடியாது. (சிருஷ்டிப்பதென்ன?) ஓர் ஈ அவர்களுடைய யாதொரு பொருளையும் எடுத்துக்கொண்ட போதிலும் அதனிடமிருந்து அதனை விடுவிக்கவும் அவர்களால் முடியாது (ஏனென்றால், அவற்றை தெய்வங்களென) அழைப்போரும், (அவர்களால் தெய்வங்களென) அழைக்கப்படுவோரும் பலஹீனமானவர்களே!'' (22:73)

இன்றைய நவீன விஞ்ஞான சாதனங்களின் தோற்றம் பற்றி நாம் ஓரளவு சிந்தித்தாலே நாம் மேலே கூறிய கருத்துக்கள் தெளிவாகும். உதாரணமாக ஆகாய விமானத்தை எடுத்துக் கொள்வோம். நாமே எமது பகுத்தறிவைக் கேட்டுப் பார்ப்போம். இதனை மனிதனே தானாகத் திட்டமிட்டு, சிருஷ்டித்து முடித்தானா அல்லது அவனது முயற்சிக்குப் பின்னால் வேறு சக்திகளும் செயல்பட்டிருக்கின்றனவா? விமானத்தை அமைப்பதற்குத் தேவையான, பாரம்குறைந்த ஆனால் வலிமையுள்ள உலோக வகைகளை மனிதனே தேவையேற்பட்டபின் படைத்தானா அல்லது ஏற்கனவே இவ்வுலோகங்கள் தயார் நிலையில் இருந்தனவா? விமானம் இயங்குவதற்குத் தேவையான முக்கிய எரிபொருளான பெற்றோலை, அது அவசியம் எனக் கண்டபின் விஞ்ஞானிகளே சிருஷ்டித்தனரா, அல்லது முன்பே அதுவே ஒரு

சக்தியால் படைக்கப்பட்டு நிலத்துக்கடியில் மறைத்துவைக்கப்பட்டிருந்ததா? விமானத்தின் எஞ்சின், மற்றும் இயந்திரங்கள் இயங்க அவசியமான மின்சாரத்தையும் இவர்களே திட்டமிட்டுப் படைத்தனரா அல்லது பல கோடிக்கணக்கான வருடங்களாக மின்சாரம், மனிதன் அறியாத ஒரு சக்தியாக இருந்து வந்துள்ளதா? விமானம் பாதுகாப்புடன் பறப்பதற்குத் தேவையான ரேடியோ, ராடார், டெலிவிசன் போன்ற கருவிகளைத் தேவையேற்பட்டபின் மனிதன் சிருஷ்டித்தானா அல்லது இத்தேவைகள் ஏற்படுவதற்கு முன்பே அவற்றிற்கான வசதிகளனைத்தும் வேறொரு சக்தியால் தயார் நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனவா?

இப்பொழுது எமது பகுத்தறிவே கூறுகிறது: விமானம், மற்றும் சாதனங்களனைத்தும் மனிதனது சிருஷ்டிப்புகளல்ல. மனிதர்கள் இவை பற்றிச் சிந்திப்பதற்குக் கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்பே, அவற்றிற்குத் தேவையான ஆயத்தங்களனைத்தும், சர்வவல்லமையுள்ள ஓர் சக்தியால் சிருஷ்டிக்கப்பட்டுத் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தன; மனிதன் செய்ததெல்லாம் தனது முயற்சி, ஆராய்ச்சிகள் மூலம், தேவைகள் ஏற்படும்போது இவற்றை வெளிக்கொணர்ந்ததுதான்.

போக்குவரத்துச் சாதனங்கள் எதுவுமே இருந்திராத அக்காலத்தில் அருளப்பெற்ற பின்வரும் குர்ஆன் வசனம இதனையே கூறி நிற்கிறது:

''அவன் (இறைவன்) குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும், கழுதைகளையும் உங்கள் வாகனங்களாகவும், அழகுப் பொருள்களாகவும் உண்டாக்கினான். மேலும், நீங்கள் அறியாத மற்றப் பொருள்களையும் இறைவன் படைப்பான்''

நவீன போக்குவரத்துச் சாதனங்களுக்கு மத்தியில் வாழும் எமக்கு, 1400 வருடங்களுக்குமுன் அருளப்பட்ட இவ்வசனம இன்று எவ்வளவோ கருத்துச் செறிவுடன் தோன்றுகிறது.

சிந்தனை ஆராய்ச்சி என்பனவைபற்றி நாம் மேலே கூறியவற்றிலிருந்து இஸ்லாத்தில் இவை உயர்வாக மதிக்கப்படவில்லை என்றோ அல்லது ஊக்குவிக்கப்படவில்லை என்றோ கருதிவிடக்கூடாது; சிந்தனையும் ஆராய்ச்சியும் மனித முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை என்பதை இஸ்லாம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. ஆனால் இவை மட்டும் மனிதனை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லாது: இவற்றிற்கு அடிப்படையாக, உறுதுணையாக இறைவழிகாட்டலும், உதவியும் அவசியம் என்பதையே அது வலியுறுத்துகிறது.

குர்ஆனையும், வரலாற்றையும் நடுநிலை நின்று ஆராயும் எவரும் இஸ்லாம் உண்மையில் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஒரு தூண்டு கோலாகவே அமைந்துள்ளது என்பதைக் கண்டு கொள்வர்; குர்ஆனினதும் பெருமானாரினதும் போதனைகள் சிந்தனை செய்வோரைப்பற்றி எவ்வளவோ மேலாக எடுத்துக் கூறியுள்ளன.

''வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப்பற்றி அவர்கள் சிந்தனை செய்து, 'எங்கள் இரட்சகனே! நீ இதை வீணகப் படைக்கவில்லை. புகழ் உனக்கே உரியது! என்பார்கள்'' (3:191)

''எழுபது ஆண்டுகள் வணக்கம் செய்வதை விட, இறைவனுடைய படைப்பைப்பற்றி முழு மனதுடன் ஒரு மணி நேரம் சிந்தனை செய்தல் சாலச் சிறந்தது''; (பெருமானார் (ஸல்)

அதோடு நின்று விடாமல், குர்ஆன் பல இடங்களில் நேரடியாகவே மக்களின் கவனத்தை இயற்கையின் பக்கம் திருப்பி சிந்தனையைத் தூண்டிவிடுகிறது. பின்வருவன போன்ற குர்ஆன் வசனங்களே அக்கால முஸ்லிம்களிடம் மருத்துவம், வானியல், கணிதம், தாவரவியல், வரலாறு, பூமிசாத்திரம் போன்ற அறிவியல் துறைகளில் ஆர்வத்தையும் அறிவுத் தாகத்தையும் ஏற்படுத்தியதாக அறிஞர்கள் கூறுகிறார்கள்.

''பின்னர் அந்த இந்திரியத்தை இரத்தக்கட்டியாக்கினோம். பின்னர் அவ்விரத்தக் கட்டியை மாமிச பிண்டமாகச் செய்தோம்; பின்னர் அம்மாமிச பிண்டத்திலிருந்து எலும்பை உற்பத்தி செய்து, அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின்னர் அதனை(ப்பூரணமான) மனித சிருஷ்டியாக அமைத்தோம். (இவ்வாறு சிருஷ்டித்த) அல்லாஹ், பெரும் பாக்கியமுடையவன்; (அவன்) சிருஷ்டிகர்த்தாக்களிலெல்லாம் மிக அழகானவன்.'' (23:14)

''அவனே (பொழுதை) விடியச் செய்பவன்; அவனே (நித்திரை செய்து நீங்கள்) சுகமடைவதற்காக இரவை ஆக்கினான்; (நீங்கள் காலத்தின்) கணக்கை அறிவதற்காகச், சூரியனையும், சந்திரனையும் (ஆக்கினான்) இவை யாவும் மிகைத்தோனும் மிக்க அறிந்தோனும் ஆகிய அல்லாஹ் உ(டை)டைய கற்பனையாகும். உங்களுக்காக, நட்சத்திரங்களை அமைத்தவனும் அவனே. தரையிலும், கடலிலும் உள்ள இருள்களில், அவைகளைக் கொண்டு, நீங்கள் வழியறிந்து செல்கிறீர்கள். (உண்மையை) அறியக்கூடிய மக்களுக்கு (நம்முடைய) வசனங்களை நிச்சயமாக (இவ்வாறு) விபரிக்கிறோம்'' (6:96,97)

''அவன் தான் மேகத்திலிருந்து மழையை இறக்கி வைக்கின்றான்; அதைக் கொண்டே சகல வகைப் புற்பூண்டுகளையும நாம் முளைக்கவைத்து, அதிலிருந்து பசுமையான தழைகளையும் நாம் வெளிப்படுத்துகின்றோம். அதிலிருந்து அடர்ந்த வித்துக்களை(யுடைய கதிர்களை)யும் நாம் வெளிப்படுத்துகின்றோம். பேரீச்சமரத்தின் பாளைகளில் வளைந்து தொங்கும் பழக்குலைகளுமிருக்கின்றன; (அவற்றையும் நாமே வெளிப்படுத்துகின்றோம்); திராட்சைத் தோட்டங்களையும், (பார்வைக்கு) ஒன்று போலும் (ரசனையில்) வெவ்வேறாகவும் உள்ள மாதுளை, ஐய்த்தூன் (-ஒலிவம்) ஆகியவற்றையும் (நாமே வெளிப்படுத்துகின்றோம்.) அவற்றின் கனிகளை நோக்குவீர்களாக!. அவை (பூத்துக்) காய்ப்பதையும் பின்னர் கனிந்து பழமாகும் வித்தையும் (உற்று நோக்குவீர்களாக!) விசுவாசங் கொள்ளும் மக்களுக்கு, நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.'' (6:99)

'' ... இரும்பையும் நாமே உடைக்கிறோம்: அதில் பெரும் (யுத்த) அபாயமிருக்கின்றது. மனிதர்களுக்குப் பிரயோசனங்களும் இருக்கின்றன. .........'' (57:25)

''அக்கிரமக்காரர்கள் வசித்த எத்தனையோ ஊர்களை, நாம் அழித்திருக்கிறோம். அதனுடைய முகடுகள் இடிந்து குட்டிச் சுவராகக் கிடக்கின்றன. எத்தனையோ கிணறுகள் பாழடைந்து கிடக்கின்றன. எத்தனையோ மாடமாளிகைகள் பாழாய்க் கிடக்கின்றன. அவர்கள் பூமியில் சுற்றித் திரிந்து (இவைகளைப்) பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்ப்பார்களாயின்,) உணர்ந்து கொள்ளக்கூடிய இருதயங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அல்லது (நல்லுபதேசத்தைக்) கேட்கக்கூடிய செவி அவர்களுக்கு உண்டாயிருக்கும். .........'' (22:45,46)

''(நபியே!) நீர் கூறும்: 'பூமியில் நீங்கள் சுற்றித் திரிந்து (ஆரம்பத்தில்) சிருஷ்டிகளை எவ்வாறு உற்பத்தி செய்கிறான் என்பதைப் பாருங்கள். (அவ்வாறே மரித்த)

பின்னரும், அல்லாஹ் (மறுமையில்) மறு முறையும் உற்பத்தி செய்வான்; நிச்சயமாக அல்லாஹ் யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்'' (29:20)

ஆம், அநாகரிகத்திலும், மூட நம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்த அன்றைய அராபியர்கள், இஸ்லாத்தை ஏற்றவுடன், இப்படியான திருக்குர்ஆன் போதனைகளும், பெருமானாரின் அறிவுரைகளும் அவர்களது அறிவுக் கண்களைத் திறந்து ஒரு சிந்தனைப் புரட்சியையே ஏற்படுத்தின. அதுவரை இயற்கைக்குக் கட்டுப்பட்டு, பயந்து வாழ்ந்து கொண்டிருந்த அம்மக்களின் மனதில், இறைவன் இயற்கையை மனிதர்களுக்காகவே படைத்து வசப்படுத்திக் கொடுத்துள்ளான் என்ற நம்பிக்கையும், இப்படைப்புக்களில் அவன் தமக்காக மறைத்து வைத்துள்ள அருட்கொடைகளைத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டது. இது, அவர்களிடம், இயற்கையின் தன்மையையும், போக்கையும் நன்கு விளக்கிக்கொள்ள வேண்டுமென்ற ஒரு அறிவுத் தாகத்தை ஏற்படுத்தியது. அத்தோடு, அறிவைத் தேடிச் செல்வதை ஒரு ஆன்மீகப் பணியாகவும் கருதிய முஸ்லிம்கள், கிரேக்கர்கள் விட்டுச் சென்ற அறிவுச் செல்வங்களையெல்லாம் தேடிச்சென்று கற்க ஆரம்பித்தனர். ஐரோப்பா, அறிவிருந்தும் இருளில் மூழ்கிக்கொண்டிருந்த இக்காலப் பகுதியில், முஸ்லிம்கள் கிரேக்கர்களின் ஏராளமான கணித, மருத்துவ, வானியல் நூல்களையெல்லாம் அரபு மொழியில் மொழி பெயர்த்து, அவற்றுக்கு ஆராய்ச்சி ரீதியான விமர்சனங்களையும் எழுதினர். இது மட்டுமன்றி, இத்துறைகளில் தாமாகவே நூற்றுக்கணக்கான நூல்களையும் எழுதினர். இப் பணிகளுக்கு அப்பாஸிய கலீபாக்களான அல்மன்சூர் (754 - 775), ஹாரூன் அல்ரஷீத் (786 - 809), அல்மூமான் (813 - 833) ஆகியோர் பேருதவிகள் புரிந்தனர். எழுத வாசிக்கத் தெரியாமல் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த அரேபியர்கள், இஸ்லாத்தின் போதனைகளால் தூண்டப்பட்டு ஓரிரு நூற்றாண்டுகளுக்குள் அறிவுலகின் உச்சிக்கே வந்துவிட்டனர். முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்காலம் எனப்படும் கி. பி. 8-ம் - 12-ம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் பாக்தாத், குர்துபா போன்ற முஸ்லிம் நகரங்களே உலகின் அறிவியல் மத்தியத்தானங்களாக விளங்கின. ஐரோப்பா உட்பட, உலகின் பல பாகங்களிலிருந்தும், இனமத பேதமின்றி மாணவர்கள் இந்நகரங்களுக்குச் சென்று கல்வி பயின்றனர்.

இக்காலப் பகுதியில் தோன்றிய முஸ்லிம் அறிஞர்கள், விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் அளப்பரியன. இவை பற்றி இச்சிறு கட்டுரைக்குள் எடுத்துரைப்பது முடியாத காரியமாகும். உதாரணத்திற்காக மட்டும் ஓரிருவரைப்பற்றிக் குறிப்பிடுகிறோம். மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டால், மத்தியகால உலகின் தலைசிறந்த மருத்துவ மேதைகளாகக் கருதப்படும் அல்ராஸி (865 - 925), அலி இப்னுஸீனா (980-1037) ஆகியோர் அதன் வரலாற்றிலேயே தனியிடம் வகிப்பவர்களாவர். இவர்கள் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவ நூல்கள் பிற்காலத்தில் இலத்தீன் முதலிய ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, பல நூற்றாண்டுகளாக மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பாட நூல்களாகப் பயன்படுத்தப்பட்டன [5] வானியலில் புகழ் பெற்றிருந்த அல்பத்தானி (858 - 929) என்பவர் ஏறக்குறைய 42 வருடங்கள் வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்தார். இவர் தயாரித்த மிகச் சிறப்பான வானியல் அட்டவணைகளே, பிற்கால அரேபிய, ஐரோப்பிய வானியலாளர்களின் ஆராய்ச்சிகளுக்குப் பல நூற்றாண்டுகளாக உபயோகப்பட்டு வந்துள்ளன. கணித வரலாற்றிலும் முஸ்லிம்கள் தனியிடம் வகிக்கின்றனர். அட்சர கணிதத்தின் தந்தை எனப் போற்றப்படும் அல் - குவாரிஸ்மி (780 - 850) என்

பவர் எழுதிய 'ஹிஸாப் அல்ஜப்ர்வல் முகாபலாஹ்' என்னும் நூலின் இலத்தீன் மொழி பெயர்ப்பே 16-ம் நூற்றுண்டுவரை ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களில் பிரதான கணிதப் பாடநூலாக இருந்து வந்தது. ஆனுல், கணிதத் துறைக்கான முஸ்லிம்களது முக்கிய பங்களிப்பு திரிகோண கணிதத்தைத் தோற்றுவித்ததாகும். இதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்கள் அபுல்வபா (940 - 998), நஸீருத்தீன் (1201 - 1274) ஆகியோராவர். திரிகோண கணிதத்தில் முதன் முதலாக ஒரு நூல் வெளியிட்ட பெருமை நஸீருத்தீனையே சாரும்.[6] அத்தோடு மத்திய காலப்பகுதியில் கேத்திர கணிதத்தின் வளர்ச்சிக்கும், முக்கிய பங்காற்றியவர்கள் முஸ்லிம்களே. நீண்ட இக்கால வரிசையில் தோன்றிய முஸ்லிம் கேத்திர கணித அறிஞர்களில் அல்கிந்தி (803 - 873), தாபித் இப்னுகுரா (826 - 901) இப்னு அல்ஹைதம் (965 - 1039), அல்பிருனீ (973 - 1048), கவிஞர் உமர்கையாம் (1048 - 1123) ஆகியோர் புகழ் பெற்றவர்களாவர்.

சுருக்கமாகச் சொன்னுல் மத்தியகாலப் பகுதியில் முஸ்லிம்கள் விஞ்ஞான வளர்ச்சிக்குச் செய்த முக்கிய பங்களிப்புக்களே பிற்கால ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. இதனை Stanislas Guyard என்ற ஜெர்மனிய அறிஞரொருவர் பின்வருமாறு குறிப்பிடுகிருர். ''மத்தியகால வரலாற்றிலே இஸ்லாத்தின் வரலாறு என்பது நாகரிகத்தின் வரலாருகவே விளங்குகிறது. புறக்கணிக்கப்பட்ட இரேக்க விஞ்ஞானத்தையும், தத்துவ சாத்திரத்தையும் அழிவிலிருந்து பாதுகாத்து, மேற்குலகை எழுச்சிபெறச் செய்து அறிவியக்க வளர்ச்சிக்குக் காரண கர்த்தாக்களாக இருந்தமைக்காக நாம் முஸ்லிம்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். ஏழாம் நூற்றுண்டில் பழைய உலகம் மரண வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தபோது அரேபியர்கள் (அரசியல் ரீதியாகப்) பெற்ற வெற்றி இந்த உலகில் புதிய குருதியைப் புகுத்தியது.''

எனினும், இஸ்லாம் விஞ்ஞான வளர்ச்சிக்காற்றிய பங்களிப்புக்கள், கூடுதலான ஐரோப்பிய சரித்திராசிரியர்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டே வந்துள்ளன. இவர்களது முயற்சி, இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு ஐரோப்பியர்களே முக்கிய காரணம் என்றும் முஸ்லிம்கள் இதற்கு எவ்வித முக்கிய பங்களிப்புக்களையும் அளிக்கவில்லை என்றும் தவறுன கருத்துக்களைப் பரப்புவதாகவே உள்ளது. இப்படியான பிரச்சாரங்கள்தான், நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற இஸ்லாம் பற்றிய பல தப்பபிப்பிராயங்களை எம்மில் பலரிடம் ஏற்படுத்திவிட்டது. எனினும் நாம் மேலே பார்த்த வரலாற்று உண்மைகளிலிருந்து இவர்களது பிரச்சாரங்கள் எவ்வளவு தூரம் உண்மையானவை என்பது புலனுகும்.

ஆரம்பத்தில் இஸ்லாம் பற்றிப் பல கேள்விகளையும், சந்தேகங்களையும் எழுப்பியவர்கள் இந்நிலையில் பின்வருமாறு கூறலாம்: ''நீங்கள் இதுவரை கூறிய வரலாறுகள் ஒரு புறமிருக்கட்டும், இன்றைய நிலைமைக்கு வருவோம். நவீன விஞ்ஞானம் கண்டுபிடித்த சாதனங்கள் மனித வாழ்வில் இன்று பல புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்திவிட்டன. இவற்றின் விளைவாக நாகரிகத்தின் உச்சிக்கே சென்றுள்ள இன்றைய மனிதனுக்கு, 1400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெருமானுரிடம் என்ன வழிகாட்டல் இருக்க முடியும்? இன்று அணுக்களையே பிளந்து விந்தைகள் புரியும் அளவுக்கு அறிவும் ஆற்றலும் அதிகரித்துள்ள மனிதனுக்கு இஸ்லாமிய போதனைகள் இனியும் அவசியம் தானு?''

எம்மைப் பொறுத்தவரை இஸ்லாம் இறுதிநாள்வரை வரக்கூடிய அனைவருக்கும் நேர்வழிகாட்டும் மார்க்கமாகும். காலத்தால் அழியாத அதன் போதனைகள் முன்னை

விட அவசியமாக இன்றைய விஞ்ஞான உலகுக்குத் தேவைப்படுகின்றன; பெருமானாரது போதனைகளும், வாழ்க்கை முறையும், ஆன்மீக எழுச்சிக்கு மட்டுமன்றி அரசியல், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி போன்ற வாழ்வின் சகல துறைகளின் மேம்பாட்டுக்கும் வழிகாட்டிகளாக அமைந்தன.

''அல்லாஹ்வையும், இறுதி நாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி, நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே இருக்கிறது: அவர்கள் (அவரைப் பின்பற்றி) அல்லாஹ்வை அதிகமாக நினைந்து துதிசெய்து கொண்டிருப்பார்கள்'' (33:21) எனவே இன்றைய நாகரிகத்தின் ஒரு முக்கியபகுதியான விஞ்ஞானத் துறைக்கும் சிறந்த முன்மாதிரிகள், வழிகாட்டல்கள் பெருமானாரின் வாழ்வில் நிச்சயம் இருக்கத்தான் வேண்டும்.

நாம் மேலே கூறிய கருத்துக்களை விளங்கிக் கொள்ள இன்றைய விஞ்ஞான உலகின் உண்மை நிலையை நாம் ஓரளவு புரிந்துகொள்ள வேண்டும். நவீன விஞ்ஞான முயற்சிகளின் காரணமாக இன்றைய உலகில் பிரமிக்கத்தக்க சாதனங்கள் பல உருவாகிவிட்டது உண்மைதான். இவற்றின் விளைவாக மனிதனது வாழ்க்கை வசதிகளும், சௌகரியங்களும் அதிகரித்து விட்டதும் உண்மைதான். ஆனால் இத்தனை சாதனங்களுக்கும் சௌகரியங்களுக்கும் மத்தியில் இன்றைய மனிதன் முன்னை விட நிம்மதியாகவோ, சந்தோசமாகவோ, கண்ணியமாகவோ வாழ்கிறான் என்றால் அது சந்தேகத்திற்குரியதே. மாறாக இன்று உலகம் அமைதியின்றி, நிம்மதியின்றி வீழ்ச்சியின் பக்கம் சென்று கொண்டிருப்பதையே நாம் உணரக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக பௌதிக விஞ்ஞானத் துறையை எடுத்துக்கொள்வோம். மனித இனத்தின் மேம்பாட்டுக்காக இத்துறையில் எவ்வளவோ ஆராய்ச்சிகளை மேற்கொண்ட விஞ்ஞானிகள் இறுதியில் அணுக்களையே பிளந்து அவற்றிலிருந்து மனிதனுக்குப் பிரயோசனமுள்ள அணு சக்தியைப் பெறுவதற்குரிய அறிவையும், ஆற்றலையும் பெற்றுக் கொண்டனர். ஆரம்பத்தில் இவ்வறிவும் ஆற்றலும் எவ்வளவோ ஆக்க வேலைகளுக்குப் பயன்பட்டு மனிதர்களுக்கு மிகுந்த பயனை அளித்தன. ஆனால் சிறிது காலத்துக்குள் இதே அறிவினதும் ஆற்றலினதும் தீய விளைவுகள் உலகில் தலைகாட்ட ஆரம்பித்தன. ஆட்சிவெறி பிடித்த ஏகாதிபத்திய வல்லரசுகள் அணுசக்தி பற்றிய அறிவையும் ஆற்றலையும் சொந்த நலன்கருதி, யுத்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவும் விருத்தி செய்யவும் ஆரம்பித்தன. ஆக்கவேலைகளுக்குப் பயன்பட்ட அணுசக்தி இறுதியில் அணுகுண்டுகள் வடிவில் தோன்றி மனித இனத்திற்கு நாசத்தையும் அழிவையுமே ஏற்படுத்தின. இப்பொழுது இந்த அழிவு முயற்சிக்கு விஞ்ஞானத்தின் ஏனைய துறைகளும் கைகொடுத்து உதவ முன்வந்துள்ளன. எத்தனையோ வல்லரசு நாடுகள் இன்று இரசாயனத் துறையில் அவற்றின் தொழில் நுட்பத் திறனை யுத்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வருகின்றன. அண்மையில், ஆப்கானிஸ்தானில் தாய்நாட்டுக்காகப் போராடிவரும் மக்களை அழிப்பதற்கு நச்சு வாயுக் குண்டுகள் உபயோகிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது இதே போல இன்று உயிரியல் விஞ்ஞானத் துறையிலும் எத்தனையோ நாடுகள் ஆயிரக்கணக்கில் மனிதர்களைக் கொல்லக் கூடிய கொடிய கிருமி வகைகளை விருத்திசெய்து அவற்றை யுத்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்த ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகின்றன; இவற்றின் விளைவாக இன்றைய உலகை யுத்த அபாயமும், அமைதியின்மையுமே சூழ்ந்து கொண்டுள்ளன. எனவே நவீன விஞ்ஞானம் அதன் உண்மையான குறிக்கோளை அடைவதில் இன்று தோல்வி கண்டுவிட்டது என்றே கூறவேண்டும்.

இந்நிலையில்தான் இன்றைய உலகம் பெருமானாரிடமிருந்து எவ்வளவோ முன்மாதிரிகளைப் பெறக்கூடியதாகவுள்ளது. மனித இனம் நிம்மதியும், வெற்றியும் அடை

வதற்குரிய ஒரேயொரு வாழ்க்கை முறையைப் பெருமானாரவர்கள் தமது சொந்த வாழ்க்கையிலேயே நடைமுறைப்படுத்திவிட்டுச் சென்றார்கள். அறியாமையிலும், மூட நம்பிக்கைகளிலும் மூழ்கி, வாழ்வில் எவ்வித குறிக்கோளோ, ஒழுக்க நெறிகளோ இன்றி அநாகரிகமாக வாழ்ந்து கொண்டிருந்த மக்களை இருபத்திமூன்றுவருட காலத்திற்குள் பண்பாடுள்ள ஒரு நாகரிக அமைப்பாக மாற்றி உலக வரலாற்றிலேயே பெருமைமிக்க ஒரு புரட்சியை ஏற்படுத்திக் காட்டினார்கள். இதற்காகப் பெருமானாரவர்கள் செய்ததெல்லாம் அம்மக்களின் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியதுதான். ஆரம்பத்தில், அறியாமையில் மூழ்கியிருந்த மக்களுக்கு மத்தியில் சத்தியத்தை எடுத்து விளக்கினார்கள். மூட நம்பிக்கைகளை விட்டுவிட்டு சத்தியத்தின்பால் வருமாறு அழைப்பு விடுத்தார்கள். வணக்கத்திற்குரிய இறைவன் ஒருவனேயென்றும், தாம் அவனது திருத்தூதரே என்றும் பிரகடனப்படுத்தினார்கள். இவற்றிற்கு ஆதாரமாக இறைவனால் அருளப்பட்டுக் கொண்டிருந்த குர்ஆன் வசனங்களை ஒதிக்காண்பித்தார்கள், உயரிய கருத்துக்களைக்கொண்ட பெருமானாரின் போதனைகளும், தெய்வீக சக்தி பொருந்திய குர்ஆன் வசனங்களும் அம்மக்களின் உள்ளங்களை ஊடுருவிச் சென்றன. அவற்றிலிருந்த மூட நம்பிக்கைகளும், மிருக உணர்வுகளும் தகர்த்தெறியப்பட்டன. அவர்களின் உள்ளங்களில் அடங்கிக்கிடந்த எத்தனையோ போலித் தெய்வங்கள் நீங்கி, ஒரே இறைவன் மீதான பூரண நம்பிக்கையும், அன்பும், அச்சமும் அங்கு குடிகொண்டன. உள்ளங்களில் ஏற்பட்ட இம் மாற்றங்கள், அவற்றிலிருந்து ஒரு மாபெரும் சக்தியை வெளியாக்கிக்கொண்டிருந்தன. அதுதான் ஈமானின் சக்தி - இறைவன் மீதான பூரண நம்பிக்கையின் விளைவாக ஏற்பட்ட மனோவாற்றல். இந்த ஈமானின் சக்தி ஒரு சிறு கால இடைவெளிக்குள் அவர்களின் வாழ்வில் பல மாறுதல்களை ஏற்படுத்தின. மூட நம்பிக்கையில் மூழ்கியிருந்தவர்கள், உலகம் போற்றும் அறிஞர்களானார்கள். கடுமையான சுபாபமுள்ளவர்கள் கருணையுள்ளம் கொண்டவர்களாக மாறினார்கள். சுருக்கமாகச் சொன்னால் அவர்களிடம் காணப்பட்ட மிருகத்தனமான பண்புகளனைத்தும் மறைந்து, உயரிய நற்பண்புகள் ஏற்பட்டன. இவற்றின் விளைவாக, அச்சமூகத்திலிருந்து போட்டி, பொறாமை, பிரிவினைகள், பூசல்கள் நீங்கி ஒழுக்கமும், கட்டுப்பாடும், ஒற்றுமையும் மிக்க ஒரு சமுதாயம் உருவாகியது. இத்தனைக்கும், பெருமானாரவர்கள் செய்ததெல்லாம் அம்மக்களின் உள்ளங்களில் முயற்சி செய்து அவற்றைச் சீர்திருத்தியதுதான். உள்ளங்கள் சீர்திருந்தியபோது வாழ்வின் சகல துறைகளும் சீர்திருந்தின; எவ்வித சாதனங்களுமோ, சௌகரியங்களுமோ இல்லாத நிலையிலும் மக்கள் நிம்மதியாக, சந்தோசமாக வாழ்ந்தனர்.

மேலே நாம் சுருக்கமாக எடுத்துக்கூறிய பெருமானாரது வாழ்க்கை வரலாறு இன்றைய விஞ்ஞான உலகுக்கு எத்தனையோ அரிய முன்மாதிரிகளையும், பாடங்களையும் புகட்டிக் கொண்டிருக்கிறது. மனித இனம் உண்மையில் நிம்மதி, சந்தோஷம், வெற்றி ஆதியன அடைய வேண்டுமானால் முதலில் மனிதர்கள் திருந்த வேண்டும். அவர்களது உள்ளங்கள் பண்பட வேண்டும். உள்ளங்கள் பண்படாமல், மனிதர்கள் சீர்திருந்தாமல் உலகில் எத்தனை நவீன சாதனங்கள் தோன்றினாலும், சௌகரியங்கள் ஏற்பட்டாலும் அவை மனிதர்களுக்கு உண்மையான நிம்மதியையோ, ஈடேற்றத்தையோ தராது. நவீன விஞ்ஞானத்தின் தோல்விக்கு ஒரு முக்கிய காரணம், அது மனிதனது தரத்தை உயர்த்தும் ஆன்மீக முயற்சிகளை முற்றிலும் புறக்கணித்துவிட்டு, வாழ்க்கை வசதிகளை விருத்தி செய்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டதுதான். இதன் காரணமாக உலக வஸ்துக்களினதும், சாதனங்களினதும் தரம் உயர்ந்துகொண்டே போக, மனிதனது நிலை சீர்கெட்டுக்கொண்டே வந்தது. அவனிடம் இருக்கவேண்டிய உயரிய மனிதப்

பண்புகள் படிப்படியாக மறைந்தன; வாழ்வில் எவ்வித குறிக்கோளுமின்றித் தனது உணர்வுகளையும், ஆசைகளையும் திருட்திப்படுத்தும் நோக்குடன் மட்டும் செயல்பட்டான். இதன் காரணமாக மனித இனம் ஒற்றுமையிழந்து சின்னாபின்னப்பட்டது; எங்கும் அநீதியும், அடக்குமுறையும் தலைதூக்கின; நன்னோக்கங்களுக்காக விஞ்ஞானிகள் அயராது உழைத்து உருவாக்கிய விஞ்ஞான அறிவும், ஆற்றலும், சாதனங்களும் சுயநல நோக்கங்களுக்காகத் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டன; இவையே இன்றைய உலகின் பிரச்சனைகளுக்கும், அமைதியின்மைக்கும் காரணங்களாக அமைந்தன; இந்நிலை மாறவேண்டுமானால் மனிதர்கள் மீண்டும் பண்பாடுடையவர்களாக மாறவேண்டும். இந்நிலையில்தான் இன்றைய உலகுக்கு இஸ்லாமிய போதனைகள் மிக அவசியமாகத் தேவைப்படுகின்றன. காலத்தால் அழியாத அதன் போதனைகள் நிச்சயம் மனித உள்ளங்களைத் திருத்தி மீண்டும் உலகில் மனிதப் பண்பாடுகள் மேலோங்கி மனித இனம் ஈடேற்றம் பெற உதவ முடியும்;

எனவே, இதுவரை மனித இனம் பெற்றுள்ள விஞ்ஞான அறிவும், ஆற்றலும் முழு மனித இனத்துக்கும் பயன்படவேண்டுமானால் இன்றைய விஞ்ஞானத்தின் போக்கு மாறவேண்டும்; அதன் குறிக்கோளும், செயல்முறையும் விரிவடைய வேண்டும்; அதன் குறிக்கோள் வெறுமனே இயற்கை பற்றிய அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்து, வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதாக மட்டும் இருக்கக் கூடாது. மனித வாழ்வின் உண்மையான குறிக்கோளை உணர்ந்து, அதனை அடைந்து கொள்வதற்கு அறிவையும், ஆற்றலையும், வளர்த்தலையும் பயன்படுத்துவதே அதன் நோக்கமாக இருத்தல் வேண்டும். சடப்பொருள்களைப்பற்றிய ஆராய்ச்சியிலும், முயற்சியிலும் ஈடுபடும் அதேவேளையில், மனிதர்கள் சீர்திருந்துவதற்கான முயற்சிகளும் கூடவே நடைபெறவேண்டும்; அணுக்களைப் பிளந்தும், விண்வெளியில் பறந்தும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அதே வேளையில் இந்த விண்ணையும் மண்ணையும் கற்பனைக்கெட்டாத நுணுக்கத்துடன் சிருஷ்டித்துள்ள அந்த இறைவன் பற்றியும் அவன் அவற்றைப்பற்றி படைத்துள்ள நோக்கம்பற்றியும் சிறிது சிந்திக்கத் தவறக்கூடாது. சுருக்கமாகச் சொன்னால் இன்று எமக்குத் தேவைப்படுவது உடலையும், ரூஹையும் (ஆன்மாவையும்) பிரித்து உடலை மட்டும் வளர்க்கும் விஞ்ஞானமல்ல; மாறாக உடலையும், ரூஹையும் ஒன்றிணைத்து வளர்க்கும் விஞ்ஞானமே எமக்குத் தேவை;

7-ம் — 12-ம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்கள் வளர்த்த இஸ்லாமிய விஞ்ஞானம் இப்பண்புகளையுடையதாக இருந்தது. ஆனால் அதன்பின்னர் ஏற்பட்ட அறிவியல் வீழ்ச்சியின் காரணமாக இஸ்லாமிய விஞ்ஞானம் தற்காலிக முடிவுக்கு வந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் உலகெங்கும் பரவலாக ஏற்பட்டு வரும் இஸ்லாமிய விழிப்புணர்ச்சி, மீண்டும் இஸ்லாமிய விஞ்ஞானம் பற்றிய உணர்வையும் தூண்டிவிட்டுள்ளது; நவீன விஞ்ஞானத்தின் உண்மை ரூபத்தை விளங்கிக்கொண்ட முஸ்லிம் நாடுகளும், முஸ்லிம் விஞ்ஞானிகளும், மீண்டும் இஸ்லாமிய அடிப்படையிலான விஞ்ஞானத்தை — இஸ்லாமிய விஞ்ஞானத்தைக் கட்டியெழுப்புவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவற்றின் பிரதிபலிப்பாக அடுத்த ஒரு சில வருடங்களுக்குள், முஸ்லிம் நாடுகள் பலவற்றில் இஸ்லாமிய விஞ்ஞானம் பற்றிய பல கருத்தரங்குகளும் மகாநாடுகளும் நடைபெறவுள்ளன. இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் துருக்கியில்உள்ள, இஸ்தான்பூல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் துருக்கிய — இஸ்லாமிய விஞ்ஞானம் பற்றிய ஒரு சர்வதேச மகாநாடு நடைபெறவுள்ளது; இஸ்லாமிய மருத்துவம் பற்றிய சர்வதேச மகாநாடொன்று 1982-ம் வருடம் பெப்ரவரி மாதம் குவைத்தில் நடைபெறவுள்ளது; இதே வேளையில் பாகிஸ்தானும்

1983-ம் வருடம் ''இஸ்லாமிய விஞ்ஞான உச்சிமகாநாடு'' ஒன்றை நடாத்தத் திட்டமிட்டு வருகிறது. இங்கிலாந்திலிருந்து வெளிவரும் பிரபல விஞ்ஞான சஞ்சிகை யான New Scientist அண்மையில் புத்துணர்வு பெற்றுவரும் இஸ்லாமிய விஞ்ஞானம் பற்றி ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது. அவ்விதழின் ஆசிரியர் தலையங்கத்தில், விஞ்ஞான உலகில் இஸ்லாமிய விஞ்ஞானம் மீண்டும் முக்கிய இடம்பெறும் நாள் நெருங்கிவிட்டது எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே, இன்றைய விஞ்ஞான வளர்ச்சிப் பாதையில் நல்ல ஒரு திருப்பம் மிக அண்மையில் ஏற்படலாம் என நாம் எதிர்பார்க்கலாம்.

அடிக்குறிப்புகள்:


1. J R. Newman, The World of Mathematics, Page 4.
2. M. Buccalle, The Bible, The Qur'an And Science.
3. இஸ்லாமிய சிந்தனை, ஏப்ரல் 81, பக்கம் 5.
4. M. Buccalle. The Qur'an And Modern Science, Naleemiah Publications
5. ஏ. எம். அபூபக்கர், அறிவியல் வளர்த்த முஸ்லிம்கள், பக்கம் 49.
6. E. T. Bell, The Development of Mathematics, Page 103
7. ஏ. எம். அபூபக்கர், அறிவியல் வளர்த்த முஸ்லிம்கள், பக்கம் 5
8. Ziauddin Sardar, 'Can Science Come Back To Islam', New Scientist, 23 October 1980


கல்வியை சிறந்த வாரிசாகவும், ஒழுக்கத்தைச் சிறந்த தொழிலாகவும், பயபக்தியை உயரிய சாதனமாகவும், வணக்கத்தை மேலான மூலதனமாகவும், நன்நடத்தையை சிறந்த வழிகாட்டியாகவும், நற்குணத்தை சிறந்த நண்பனாகவும், போதுமென்ற மனத்தை சிறந்த செல்வமாகவும், மரணத்தை மாண்புள்ள ஆசானாகவும் ஆக்கிக் கொண்டவன் இரு உலகிலும் நற்பேறை மிக எளிதிலடைவான்.

அலி (ரலி)

Best Compliments from

# GLASS HOUSE

*General Merchants & Lorry Transporters*

182, K. K. S. Road,

Tele phone: 201 **JAFFNA.**

For Your All Textiles Requirements

visit

## RAJEENA'S

Grand Bazaar,
MANNAR.

*Best Wishes from*

## ABTHEEN

Fashionable Gents Tailors

No 5. Grand Bazaar
JAFFNA.

அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
கோல்ட் கவரிங் நகைகள்

மற்றும்

வெளிநாட்டு விளையாட்டுப்
பொருட்கள்

ஆகியவற்றிற்குச் சிறந்த
ஸ்தாபனம்

**TAJMAHAL'S**

21, Model Market,
*JAFFNA.*



For
*Attractive Jewellery*

visit



**A. C. M. JEWEL HOUSE**

211, K. K. S. Road,
*JAFFNA.*



*நவயுகத்தின்*
*நாகரிகமான*

**சேட்டிங், சூட்டிங்,**
**றெடிமேட் சேட் வகைகள்**
**பென்ஸி குட்ஸ் சாமான்கள்**

**ஆகியவற்றைத்**
தெரிவு செய்ய இன்றே
விஜயம் செய்யுங்கள்

**நியூ செலக்ஷன்**

64, நவீனசந்தை,
**யாழ்ப்பாணம்.**
வியாபாரச் சின்னம்: சியான்ஸ்



*மலர் சிறப்புற எமது*
*வாழ்த்துக்கள்*

**சுவையான**
**ஐஸ்கிறீம் வகைகளுக்கு**

**றிக்கோ**

**சுவீற்ஸ் அன்ட் கிறீம் ஹவுஸ்**
**யாழ்ப்பாணம்.**
☎ 464

# நாளைய நாயகர்

**குஹில் தௌபீக்,**

முதலாம் வருடம், கலைப்பீடம்.

சாதிகுல பேதம் மறையட்டும்
நீதியே அனைவர்க்கும் கிடைக்கட்டும்
நாதியற்ற வேடதாரிகள் சமூகத்தை
ஒழிப்போம் நாம் விட்டொழிப்போம்
பேதையர் போலினி வாழமாட்டோம்
என்றே எங்கும் கூக்குரல்
சற்றே திரும்பிநான் பார்க்கிறேன்—அங்கே
நாளைய நாயகர் வருகிறார்—நம்
நலிவுகள் நீங்கிட உழைக்கவே
நாளைய நாயகர் வருகிறார்.

உழைப்பவன் வீட்டினில் பசிஓலம்
உழைப்பின் பலனைச் சுரண்டிப்
பிழைப்பவன் வீட்டினில் எக்காளம்
இந்நிலை நீடிக்க விடமாட்டோம்
இரப்பவன் சிறந்திட வழிவகுப்போம்
பாட்டாளி உயர்ந்திடவே உழைப்போம்
கூக்குரல் கேட்டுத் திரும்பினேன்—அங்கே
நாளைய நாயகர் வருகிறார்—சமூக
மேன்மைக்கென தினமுழைக்கவே
நாளைய நாயகர் வருகிறார்.

சீதனப்பேயை இன்றே ஒழிப்போம்
ஏழைக்கன்னியரை நாம் வாழவைப்போம்
புவியினில் பூவையர் உயரவைப்போம்
கல்யாணத்தைச் சந்தை எனநினைத்து
காளையரை விலைபேசும் கூட்டத்தோர்க்குச்

சமாதிகள் எழுப்பவும் தயங்கமாட்டோம்
உரமானகுரல் கேட்டு அதிர்கிறேன்—அங்கே
நாளைய நாயகர் வருகிறார்—அடிமைத்
தளைநீக்கி சமத்துவம் கொடுத்திட
நாளைய நாயகர் வருகிறார்.

ஏழை பணக்காரன் என்றிங்கில்லை
உயர்ந்தவன் தாழ்ந்தவன் எவனுமில்லை
அனைவரும் ஒருதாயின் புத்திரர்தான்
அயராது பாடுபட்டுழைத்து நாமும்
அன்பான சமுதாயம் காணவென்று
தோளோடு தோள்சேர்ந்து நிற்கிறோம்
கோஷத்தைக் கேட்டுத் திரும்பினேன்—அங்கே
நாளைய நாயகர் வருகிறார்—வளமான
வருங்கால வாழ்வை உருவாக்க எண்ணி
நாளைய நாயகர் வருகிறார்.

கோஷங்கள் வெற்றியைத் தருவதில்லை
கோஷ்டிகள் நிலைத்துமே நிற்பதில்லை
கண்மூடித் தனமான கொள்கைகளை
மண்மூடி அங்கே புதைத்திடுங்கள்
நாளை மலரப்போகும் காலமொன்றே
கனவாக எண்ணியே உழைத்திடுங்கள்
என்ற குரலினல் மகிழ்கிறேன்—அங்கே
நாளைய நாயகர் வருகிறார்—நலிந்த
வாழ்வை மாற்றிப் புதுவாழ்வுருவாக்க
நாளைய நாயகர் வருகிறார்.

Telephone: **8079**

# NIFTHY MOTORS

Importers and Merchants

Dealers in: Isuzu, Leyland, Benz & BMC Lorry Spareparts

Cycles, Cycle Spareparts & Wall Clocks.

150, K. K. S. ROAD,

JAFFNA.

Phone: **531** Grams: ENEMES

# N. M. Sultan Mohideen Hadjiar & sons

*Dealers in Fancy goods, Presentation Articles, Sundries*

*Stainless, Steelwares, Glass, Enamal, Aluminiaum wares,*

*Stationery, Groceries, Oilments etc.*

***123, 125, K. K. S. Road,***

**JAFFNA.**

*Space Donated by*

# Salams Transporters

**COLOMBO TO JAFFNA**

95, K. K. S. Road,
**JAFFNA.**
T, Phone: **697**

65, Dam street,
**COLOMBO-12.**
T'Phone: **35509**

*For*
*Bridal*
*Requirements*
*Fashionable*
*Textiles*
*& Fancy Goods*

# DESIGN TEXTILES

23, Modern Market,
JAFFNA.

T'Phone: 662

# இலங்கையிலிருந்து நியுசீலந்துவரை:

## இடைக்காலத்தில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் பெற்றிருந்த செல்வாக்கு

**பேராசிரியர் கா. இந்திரபாலா**
*வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்*

உலகத்திலேயே மிகக் கூடுதலான முஸ்லிம் மக்கள் வாழும் நாடாக இன்று இந்துனீசியா விளங்குகிறது. அதற்கருகில் இன்னொரு முஸ்லிம் நாடாக மலேஷியா காணப்படுகின்றது. அப்பால், பிலிப்பீன் தீவுகளுள் தெற்கேயமைந்துள்ள மின்டநாவுத் தீவிலே முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். அத்திவு தனி முஸ்லிம் நாடாகப் பிரிந்து செல்ல வேண்டும் என்று அங்கு ஒரு தீவிர இயக்கமும் நடைபெறுகின்றது. இத் தென்கிழக்காசிய இடங்களிலெல்லாம் இஸ்லாம் பரவிய வரலாறு ஒரு சுவையான வரலாருகும். இலங்கையில் இஸ்லாம் பரவிய வரலாறும் இந்த வரலாற்றின் ஒரு பாகம் எனலாம்.

மேற்காசியா, வட ஆபிரிக்கா, தென் ஐரோப்பா போன்ற இடங்களில் நடைபெற்றது போன்று இலங்கையிலோ தென்கிழக்காசியாவின் மேற்கூறிய நாடுகளிலோ எப்பொழுதாவது முஸ்லிம் மன்னர்களுடைய படையெடுப்பு எதுவும் நடைபெறவில்லை. இஸ்லாம் இந்த இடங்களிலே மிகவும் அமைதியான, சாத்வீகமான முறையிலே பரவியது. அத்துடன் வேறிடங்களிற் போலல்லாது, மிகவும் வெற்றிகரமாகவும், நிலையான வகையிலும் பரவியது. இவ்வாறு மேற்கூறிய இடங்களிலே இஸ்லாம் பரவிய வரலாற்றில் தென்னிந்தியத் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு என்பது பலருக்குத் தெரியாது.

கி. பி எட்டாம் ஒன்பதாம் நூற்றுண்டுகளில் முஸ்லிம் பேரரசு கிழக்கே சிந்து நதி தொடக்கம், மேற்கே ஸ்பானியா வரை பரந்திருந்தது. அக்காலத்தில் முஸ்லிம் வர்த்தகர்களும் அராபியக் கடலிலும் அப்பாலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஆனல் பத்தாம் நூற்றுண்டின் இறுதியில் சோழ மன்னனுன முதலாம் இராஜராஜன் கேரளக் கரையோரத்தைக் கைப்பற்றி, காந்தளூர்ச்சாலைப் போரிலே பிறர (அராபியரது என்று கொள்ள இடமுண்டு) கப்பல்களை அழித்து, லக்ஷதீவுகளையும் (ஏழரை இலக்கம்) மாலைதீவுகளையும் (முன்னீர்ப் பழந்திவு பன்னிராயிரம்) கைப்பற்றிய தோடு, சிறிது காலத்துக்கு முஸ்லிம் வர்த்தகர்களுடைய செல்வாக்கினை இந்து சமுத்திரப் பகுதியிலே கட்டுப்படுத்தினுன். இதனுல், சோழப் பேரரசின் காலமாகிய பதினேராம் பன்னிரண்டாம் நூற்றுண்டுகளிலே இந்து சமுத்திர வர்த்தகத்திலே பெரும் பங்கு கொண்டவர்கள் தமிழ்நாட்டு வணிக கணங்களைச் சேர்ந்தோராகவே காணப்பட்டனர். பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் சோழப் பேரரசு வீழ்ச்சியுற்றதன் பின்பே மீண்டும் முஸ்லிம் வர்த்தகர்களுடைய செல்வாக்கு இந்து சமுத்திரத்தில் மேலோங்கியது. தென்னிந்தியத் துறைமுகங்களில் அதுவரை செல்வாக்குப் பெற்றிருந்த பழைய வணிக கணங்களின் இடத்தை அதன்பின் முஸ்லிம் வர்த்தகர்கள் பெற்றுக்கொண்டனர். தமிழ்நாட்டின் முஸ்லிம் வர்த்தகர்கள் இலங்கையிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் பழைய வணிக கணங்கள் நடத்திய வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்தினர் அவர்களோடு அராபியரும், குஜராத்தைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர்களும் இந்து சமுத்திர வர்த்தகத்திலே பங்குகொண்டனர்.

முன்னர் இந்தியாவிலிருந்து தென்கிழக்காசியா சென்று வந்த பௌத்த வர்த்தகர்களும், இந்து வர்த்தகர்களும் எவ்வாறு தென்கிழக்காசிய நாடுகளிலே பௌத்தமும் இந்துமதமும் பரவுவதற்கு உதவியாய் இருந்தனரோ, அவ்வாறே பதின்மூன்றும் நூற்றுண்டிலிருந்து, இந்திய முஸ்லிம் வர்த்தகர்கள் சிறப்பாக குஜராத்திலிருந்து சென்றோரும் தமிழ் நாட்டிலிருந்து சென்றோரும் தென் கிழக்காசியாவிலும் இலங்கையிலும் இஸ்லாம் பரவுவதற்கு உதவினர். தமிழ் நாட்டில் காயல்பட்டினம், நாகபட்டினம் போன்ற துறைகள் முஸ்லிம் வர்த்தகர்களுடைய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தன. இலங்கைக்கு வந்த முஸ்லிம்கள் பலர் காயல்பட்டினத்திலிருந்து வந்தனர். இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தமிழ் பேசுவோராய் இருப்பதற்கு இப்பின்னணியே காரணம். வர்த்தகர்கள் மூலமாக மிகவும் அமைதியான முறையிலே இலங்கையில் இஸ்லாம் பரவியது. ஆனால், இலங்கையில் அரசியல் ஆதிக்கத்தைப் பெறும் அளவுக்கு முஸ்லிம் வர்த்தகர்கள் செல்வாக்குப் பெருத காரணத்தினுல், தென்கிழக்காசியாவிற் போன்று இங்கு பெரும்பான்மை மக்கள் மத்தியிலே இஸ்லாம் பரவ முடியவில்லை.

தென் கிழக்காசியாவிலே நிலைமை வேருகக் காணப்பட்டது. அங்கு இந்திய முஸ்லிம் வர்த்தகர்களுடைய செல்வாக்கு அரச சபைகளிலும் பரவியதால், மன்னர்களே மதம் மாறி, மக்களும் பெருந்தொகையாக இஸ்லாத்தைத் தழுவுவதற்கு வழிவகுத்தனர். இந்த அமைதியான வரலாற்றிலேதான் தமிழ்நாட்டிலிருந்து சென்ற தமிழ் பேசும் முஸ்லிம்கள் ஒரு முக்கியமான பங்கினை வகித்தனர்.

மலேஷியாவிலும் இந்துனீசியாவிலும் பதினைந்தாம் நூற்றுண்டில் துரிதமாக இஸ்லாம் பரவுவதற்கு மலாக்கா அரசின் எழுச்சியே காரணமாகவிருந்தது. இன்றைய மேற்கு மலேஷியாவின் தென்பாகத்திலுள்ள மலாக்கா என்னும் இடத்தில் பதினைந்தாம் நூற்றுண்டில் வலிமை வாய்ந்த ஓர் அரசு தோன்றியது. அந்த அரசை ஆண்ட மன்னர் இஸ்லாத்தைத் தழுவியதன் விளைவாக, அவர்களுடைய செல்வாக்குப் பரவிய இடமெல்லாம் இஸ்லாமும் பரவ முடிந்தது. இந்த மலாக்கா அரசிலே தமிழ் பேசும் முஸ்லிம்கள் அரசியலாதிக்கம் பெற்றிருந்தமை கவனிக்கத் தக்கதாகும்.

தென்னிந்தியத் துறைகளுக்கும் மலாக்காப் பிரதேசத்துக்குமிடையில் மிக நீண்ட காலமாக வர்த்தகத் தொடர்பு இருந்து வந்துள்ளது. பதினைந்தாம் நூற்றுண்டில். மலாக்காத் துறையில் 'பரமேஸ்வர' என்பான் தனது சிற்றரசை அமைத்து மலாக்காவின் எழுச்சிக்கு வழி கோலினுன். அந்த நேரத்தில் அவனுக்குத் தமிழ் பேசும் முஸ்லிம்கள் உதவியாக இருந்தனர் என அறிய முடிகின்றது. கி. பி. 1400க்குச் சிறிது பின்பாக அரச பதவியேற்ற பரமேஸ்வர மன்னன், பத்து ஆண்டுகளுள் தனது ஆதிக்கத்தை வளர்த்து, சீனவுடன் நெருங்கிய உறவு பூண்டு, சீனப் பேரரசனின் அங்கீகாரத்தையும் பெற்றுன். இதன் பின்னர் அவன் இஸ்லாத்தைத் தழுவி, மேகத் இஸ்கந்தர்ஷா என்னும் பெயரை ஏற்றுன். இந்த முக்கியமான மதமாற்றத்தில் தமிழ் பேசும் முஸ்லிம்களுடைய பங்கினைச் சரியாக அறிய முடியவில்லை. ஆனுல், தமிழ் பேசும் முஸ்லிம்கள் அவனுடைய குடும்பத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பதை நாம் அறியக் கூடியதாயுள்ளது.

1424 அளவில் இஸ்கந்தர் ஷா இறக்க, அவனுடைய மகன் ஸ்ரீ மகாராஜா என்ற இந்து விருதுடன் பதவியேற்றுன். இவனுடைய அரசியருள் ஒருத்தி ஒரு பிரபல தமிழ் வர்த்தகனின் மகளாகக் காணப்பட்டாள். தமிழ் பேசும் முஸ்லிம்களுடைய செல்வாக்கு இந்த ஆட்சியின்போது மேலும் வலுப்

பெற்றது. 1444 இல் மன்னன் இறக்க, அவனுடைய மக்களுள் ஒருவனுகிய ராஜா இப்ருஹிம் என்பான் ஸ்ரீ பரமேஸ்வர தேவ ஷா என்ற இந்து - முஸ்லிம் பெயருடன் மலாக்காவின் மன்னனுகினுன். இந்தக் கட்டத்திலே தான் தமிழ் பேசும் முஸ்லிம்களுடைய ஆதிக்கம் மலாக்காவின் அரசியலில் மேலோங்கியது. இதன் விளைவாக 1446 இல் தமிழ் பேசும் முஸ்லிம்களுள் ஒரு குழுவினர் அரண் மனைச் சூழ்ச்சி ஒன்றை நடத்தினர். தமிழ் அரசிக்குப் பிறந்த ராஜா காசிம் என்பானே இதற்குத் தலைமை தாங்கினுன். இச் சூழ்ச்சியின் போது பரமேஸ்வர தேவ ஷா கொல்லப்பட்டான். ராஜா காசிம் அரசபதவியேற்ருன். 1459 வரை தமிழ் அரசியின் மகனுகிய இவன் முஸபர் ஷா என்னும் பெயரால் ஆட்சி நடத் தினுன். இவனுக்குத் துணையாக இருந்தவன் இவனது தாய் மாமனுகிய ஒரு தமிழ் அதிகாரியே. இந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் முக்கியமான பதவி களை வகிக்க, மலேஷியாவிலும் இந்துனீசியாவிலும் மலாக்காவின் செல்வாக்குப் பரவியது; கூடவே இஸ்லாமும் பரவியது. அப்படிப் பதவிபெற்ருேருள் 'பெந்தஹர' என்ற முக்கிய பதவியை வகித்த துன் அலி என்ற தமிழ் பேசும் முஸ்லிம் அதிகாரி குறிப்பிடத்தக்கவன்.

1459 இல் தமிழ் முஸ்லிம் பரம்பரையில் வந்த ராஜா அப்துல்லா என்பான் மன்சூர்ஷா என்ற பெயருடன் மலாக்காவில் அரசபதவியேற்ருன். அவனுடைய ஆட்சியின்போது மேற்கு மலேஷியாவின் பெரும் பாகம் மலாக்காவின் ஆதிக் கத்தை ஏற்றது. இதனுல் அங்கெல்லாம் இஸ்லாம் விரைவாகப் பரவ முடிந்தது. அதுவரை காலமும் ஆக்கிரமிப்பு நடத்திவந்த தாய்லாந்து (சியம்) அரசைக் கட்டுப் படுத்தவும் மலாக்காவினுல் முடிந்தது. தெற்கில் இந்துனீசியத் தீவுகளில் இஸ்லாம் பரவுவதற்கும் மலாக்காவே நிலையமாக அமைந்தது. 1511 இல் மலாக்காவைப் போர்த்துக்கீசர் கைப்பற்றும் வரை இதே வம்சத்தினரே அங்கு ஆட்சி நடத்தினர். போர்த்துக்கீசர் மலாக்காவைக் கைப்பற்றியபோது தமிழ் நாட்டிலிருந்து பெருந் தொகையான வர்த்தகர்கள் மலாக்காத் துறைமுகத்துக்கு வந்து செல்வது வழக்கமாயிருந்தது.

தமிழ் பேசும் முஸ்லிம் வர்த்தகர் மலாக்காவிலே தாம் பெற்றிருந்த செல் வாக்கினைப் பயன்படுத்தி இந்துனீசியத் தீவுகளில், சிறப்பாக ஜாவாத் தீவில், பெரு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்; இவர்களுட் பலர் ஜாவாவிலே குடியேறி, அத்தீவிலே செல்வம் படைத்த வர்த்தகர்களாக வாழ்ந்தனர். ஜாவா விலே குடியேறிய தமிழ் பேசும் வர்த்தகர்களைப் பற்றிப் பதினுரும் நூற்ருண்டு போர்த்துக்கீச ஆவணங்கள் தகவல் தருகின்றன.

தமிழ் பேசும் முஸ்லிம் வர்த்தகர்கள் ஜாவா மட்டுமன்றி, அதற்கப்பாலும் வர்த்தகம் நடத்தினர். ஒரு சிலர் நியுசீலந்து வரை கூடச் சென்றிருக்கலாம் என்று கொள்ள எமக்கு முக்கியமான ஒரு தொல்பொருளாதாரம் கிடைத்துள் ளது. அதுதான் நியுசீலந்திலே கிடைத்த ஒரு தமிழ்ச் சாசனம்.

நியுசீலந்தை முதன் முறையாக ஐரோப்பியர் கண்டது 1642 இல் ஆகும். அவ்வாண்டிலே ஒல்லாந்த வர்த்தகக் குழுவைச் சேர்ந்த தஸ்மன் (*Capt. **A. J. Tasman***) என்பான் நியுசீலந்தினைக் கண்டிருந்தாலும், 1769 வரை ஐரோப்பியர் அதனைக் கைப்பற்றவில்லை; ஆனுல், பதினேழாம் நூற்ருண்டில் தஸ்மன் நியுசீலந் தைக் காணுமுன் பதினைந்தாம் நூற்ருண்டில் தமிழ் பேசும் முஸ்லிம் வர்த்தகர் கள் நியுசீலந்துக்குச் சென்றிருக்கலாம்.

இதற்கான சான்று இதுதான், 1836 இல் நியுசீலந்தில் பழங்குடிகளாகிய மவோரி மக்கள் சிலரிடமிருந்த ஓர் உலோக மணி (*bell*) ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப்பட்டது. அது இப்போது நியுசீலந்தின் தலைநகராகிய வெலிங்டனிலுள்ள டொமினியன் மியூசியத்தில் உள்ளது; அதிலுள்ள சிறப்பம்சம் என்னவெனில் தமிழில் ஒரு சாசனம் மணியைச் சுற்றிப் பொறிக்கப்பட்டிருப்பதுதான். அச்சாசனம் பின்வருமாறு அமைகின்றது.

*''முகைய்யதீன் வக்குசு உடைய கபல் உடைய மணி''*

அதாவது, இந்த மணி முகையதீன் வக்குசு என்ற முஸ்லிம் வர்த்தகருடைய கப்பலிலே பயன்படுத்தப்பட்ட மணி என்பதை இச் சாசனம் கூறுகின்றது. தமிழ் பேசும் முஸ்லிம் வர்த்தகர்கள் ஜாவாவுக்கும் அப்பால் வர்த்தகம் நடத்திய காலத்திலே, முகையதீன் வக்குசு என்ற ஒருவருடைய கப்பல் நியுசீலந்துப் பகுதி வரை சென்றிருக்க வேண்டும் என்று ஊகிப்பதற்கு இது இடமளிக்கின்றது. போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் தென்கிழக்காசியாவில் ஆதிக்கம் பெற்றபின்னர் அப்படி ஒரு முஸ்லிம் வர்த்தகருடைய கப்பல் அங்கு சென்றிருக்க முடியாது. இதையிட்டு, மேலும் நாம் ஆராய வேண்டும்.

இதுவரை கூறியவற்றால், ஐரோப்பியர் வருகைக்கு முன் தென்கிழக்காசியாவிலே வர்த்தகச் செல்வாக்கும் அரசியற் செல்வாக்கும் பெற்றிருந்தோருள் தமிழ் பேசும் முஸ்லிம் சமூகத்தினர் குறிப்பிடத்தக்கவர் என்பதை அறியலாம். இன்றைய இந்துனீசியாவிலும், மலேஷியாவிலும் இஸ்லாம் பரவுவதற்கு அவர்கள் முக்கியமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள்.



இகவாழ்க்கையை அழகுறச் செய்வதிலேயே மாய்ந்துவிடாதீர்கள், எனவே மறுமை வாழ்க்கையை மகிழ்ச்சி நிறைந்த நல்வாழ்வாக ஆக்கிக் கொள்வதற்குள்ள சாதனங்களைப் பெருமிதப்படுத்துவதில் முழு முயற்சி செய்யுங்கள். ஏனெனில் இகவாழ்க்கை அநித்தியமானது. மறுமை வாழ்க்கையே நித்தியமானது.

(ஹதீஸ்)

அபர்த்தமான கலைகளைப் பயில்வதால் ஒருவன் அறிஞனெனக் கூறப்படமாட்டான். தான் கற்ற கல்வியின் பிரகாரம் அமுல் செய்பவனையே (ஆலிம்) அறிந்தவன் எனக் கூறப்படும்.

(அபூ இஸ்ஹாக்)

*With the best compliments*

*from*

# YUMNA INDUSTRIES

(Workshop State Timber Corporation)

(Contractor **A. R. M. HUSSAIN**)

Main Street, AKKARAIPATTU.

*With the best compliments*

*from*

## T. M. M. AbdulCader & Bros.

34, Main Street,

KALMUNAI.

*T' Phone:* 067-2329

*T' Grams:* *'Thameem'*

*For*

Motor Spare Parts

&

Hardwares

## SULAIMAN & BROTHERS

55, Main Street,

SAMMANTHURAI-1.

வண்ணத் துணியகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம் போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் துணியகம்

# சஹாப் ஸ்டோர்
# SAHAB STORE

2, MAIN STREET,
AKKARAIPATTU.

*T' Phone:* **7252**



அன்பளிப்பு

# ஆதம் லெப்பை செய்யது முஹமட் ஹாஜி

சம்மாந்துறை.

Better Craftsmen..........................Addiyal

Curious Patterns..........................Ear Stud

Latest Designs..........................Bangles

Fancy Items..........................Gypsy

Birthday Stones..........................Rings

Blue Sapphire. Ruby, Catseye & Star Sapphire etc.

*Visit*

# K. T. M. Jewellers

*67, Kannathiddy, JAFFNA.*

T'Phone: **286**



நங்கையர் விரும்பும்
நவ நாகரிக
நகைகளுக்கும்
வைரங்களுக்கும்
புகழ் பெற்று விளங்கும்
ஒரே ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

**தங்கப் பவுண் நகை மாளிகை**

**கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 585

## K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANTS SOVEREIGN PALACE

Kannathiddy, JAFFNA.

With best wishes
from

# 'SIYANAS'

176, MODEL MARKET,
JAFFNA.

# 'சியானாஸ்'

176, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

*Branch:* ***171, MODEL MARKET, JAFFNA.***

***Cheapest in Price, Latest in Design***

***for all Varieties of Textile,***

***Readymade Garments,***

***Wedding Sarees***

***&***

***Fancy Goods***

# A. K. BROTHERS

22, New Central Market,

JAFFNA.

T'Phone: **7718**

# ஒரு மஹாகவி பற்றி மற்ருெரு கவிஞன்

எம். ஏ. நுஃமான்

வானில் புதியதோர் வெள்ளி மலர்ந்தது
மலர்ந்து
இன்று நூருண்டுகள் ஆயின
மண்ணில் புதியதோர் பொன்மலர் பூத்தது
பூத்து
இன்று நூருண்டுகள் ஆயின
மாகவி இக்பால்,
நீ இம் மண்ணிலே பிறந்து
ஆயின இன்று நூறு ஆண்டுகள்!

வரலாற்றுப் போக்கில், நூறு ஆண்டுகள்
மிகமிகச் சிறியதே,
மனிதனின் வாழ்விலோ நூறு ஆண்டுகள்
மிகமிக நெடியதே,
நீண்ட எமது வாழ்க்கை நெரிசலில்
நேற்றைய நிகழ்வையே
மறப்பவர் நாங்கள்
இன்றைய வாழ்வின் இடர்களுள் மூழ்கி
நேற்றைய மனிதரை மறப்பவர் நாங்கள்...

ஆயினும் நான்உனை நினைவு கூர்கிறேன்
ஏனெனில்
நீ'யொரு கவிஞன் ஆகையால்!
மண்ணேயும் விண்ணேயும்
குடைந்து சென்றன
உனது கவிதைகள்—ஆகையினுல்தான்
இன்றும் நான்உனை நினைவு கூர்கிறேன்;

கிழக்கிலும் மேற்கிலும் சூரியன் உதிக்கும்
நமது கவிதையில் ஆற்றல் இருந்தால்
வடக்கிலும் தெற்கிலும் சந்திரன் எழும்பும்
நமது கவிதையில் உணர்ச்சி இருந்தால்
வானக் கோள்களின் வரிசைகள் மாறும்
பூமிச் சுழற்சியின் திசைகளும் மாறும்
நமது கவிதையில் உண்மை கனன்ருல்...

உனது கவிதையில்
ஆற்றல் இருந்தது...
உனது கவிதையில்
உணர்ச்சி தெறித்தது...
உனது கவிதையில்
உண்மை கனன்றது...
மாகவி இக்பால்
ஆகையால், நான்உனை நினைவு கூர்கிறேன்!

மனிதனே இந்த உலகின் முதல்வன்
மனித மேன்மையே உனது குறிக்கோள்
மனித வாழ்வின் தளைகளை உடைத்து
மனித மேன்மையை உறுதிப் படுத்தவே
உனது கவிதைகள் கீதம் இசைத்தன,
பூரண மனிதனைக் காண விழைந்தன
உனது கவிதைகள்.

'தான்' எனும் மனித தனித்துவ வளர்ச்சியே
உனது கவிதையின் உட்பொருளாகும்
வாழ்வின் முனைப்பும், இயக்கமும் உனது
இலட்சிய மாகும்...
அச்சம், நிராசை என்பன உனது
கவிதைக் கனலின் எதிரிகள் ஆகும்
ஆகையால்'
நான்உனை நினைவு கூர்கிறேன்.

இஸ்லாம் உனது விளைநிலம் ஆயது
உனது வேர்கள் அதிலே சுவறின
உனது கிளைகளும் தளிர்களும் கூட
அந்த நீரிலே பசுமை கொண்டன,

ஆயினும்
நீ அதைத் தாண்டியும் சென்ருய்
''கோயிலுக்கு நான் மரியாதை செய்கிறேன்
கஃபாவின் முன்நான் மண்டி இடுகிறேன்
எனது மார்பிலே பூணூல் உள்ளது
எனது கையிலே ஜெபமாலை ஒளிரும்''
என்று நீஒரு கவிதையில் பாடினுய்,

முஸ்லிம் உலகில்,உன் கனவுகள் விரிந்தன
ஆயினும் கூட, அதற்கப்பாலும்
மனிதனைப் பற்றி உன்
நினைவுகள் அகன்றன.

இந்துஸ்தானில் உன்கால்கள் பதிந்தன
ஆயினும் கூட, அதற்கப்பாலும்
எல்லா இடமும்உன்
கைகள் பரந்தன.

''மண்ணில் இருந்தும்
தண்ணீரில் இருந்தும்''
விடுபடச் சொன்னாய்
''ஆப்கானியனோ துருக்கனோ அல்லன்
ஆகமுதலில் நான்ஒரு மனிதன்
எனக்கு வேறு வர்ணங்கள் இல்லை
அதன்பின் நானோர் இந்தியன் ஆகலாம்
அன்றேல் வேறோர் இனத்தவன் ஆகலாம்''
என்று கூறினாய்
மாகவி இக்பால்,
உனது வார்த்தைகள்
மகத்துவம் உடையன.
ஆகையால் நான்உனை
நினைவு கூர்கிறேன்.

வாழ்வின் கொடுமையை
நீ உணர்ந்திருந்தாய்
மனித சுரண்டலை நீவெறுத் திருந்தாய்
ஏற்றத் தாழ்வினை நீக்கவே நினைத்தாய்
அடிமைத் தளையை அகற்றவே துடித்தாய்
உன்னுள் மலர்ந்த
மனித நேயம் மதிக்கத் தக்கதே
உன்னுள் மலர்ந்த
கற்பனைக் கனவுகள் அற்புத மானதே

மாகவி இக்பால்
ஆயினும், நமக்குள் வாதங்கள் உள்ளன;
உனது காலத்தின் விளைச்சலே நீ
எனது காலத்தின் அறுவடை நான்
ஆகையால் நமக்குள் வாதங்கள் உள்ளன;

அற்புதமான கற்பனா வாதிநீ
கனவுகள் மிகுந்த அகநிலை வாதிநீ
உனது கனவுகள்
கற்பனை ஆயின
உனது கற்பனை
கனவுகள் ஆயின

மதத்தின் பேரில்ஓர் இராச்சியம் அமைக்கும்
உனது கனவுகள் கற்பனை ஆகின
இனத்தின் பேரிலோர் ஐக்கியம் வளர்க்கும்
உனது கற்பனை கனவுகள் ஆகின.
லாகூரிலும் டாக்காவிலும்
உனது கனவுகள் மரணம் அடைந்தன
சிந்து வெளியிலும் கங்கைக் கரையிலும்
உனது கற்பனை சமாதி அடைந்தது.

உனது ஷிக்வாவுக்கு
நானோர் ஜவாபு சொல்வேன்
உனது அழுகைக்கு நானோர்
ஆறுதல் சொல்வேன்
சகோதரத்துவச் சாம்பலில் இருந்து
வர்க்க உணர்வுடன்
விழித்தெழச் சொல்வேன்.

உழவனுக்கு உதவாத் தானிய மணிகள்
அனைத்தையும் தீயில் பொசுக்குக என்றாய்
ஆ! என் கவிஞனே
நிறுத்துக, உனது அராஜகப் பேச்சை!
அனைத்தும் பொசுங்கினால்
ஆர்பயன் அடைவார்?

என்னைக் கேட்டால்
விளைச்சலும் நிலமும் உழவனுக் கென்பேன்
உழவனைச் சுரண்டும் நிலம்உடை யோரே
புரட்சித் தீயில் பொசுங்குதல் வேண்டும்
என்று கூறுவேன்.

மாகவி இக்பால்,
அற்புத இலட்சியம் ஆயிரம் உடைய
கற்பனா வாதிநீ,
உனது இலட்சியம் மகிமைக் குரியது
கற்பனா வாதமோ விசாரணைக் குரியது;

நேற்றை விடவும்
இன்று இனியதே
இன்றை விடவும்
நாளை புதியதே!
நேற்றைய உனது பாதை வேறு
இன்றைய எனது பாதை வேறு
நாளை வருபவன் நமைவிடப் புதிய
பாதையில் போகலாம்.
வாழ்க்கை இதுவே.
இயக்கமே வாழ்க்கையின் இலக்கண மாகும்.

உனது நோக்குகள் உன்னத மானவை
உனது இதயம் புனித மானது
உனது கனவுகள் மனிதனின் கனவே
உனது கவிதைகள் மகத்துவம் உடையதே
வரலாறு என்னும் சங்கிலித் தொடரில்
உனது பெயரும் பளீரென மின்னும்
அந்த மின்னலில் வெளிச்சம் பெறுவோம்
ஆகையால் உன்னை நினைவு கூருவோம்,

இன்னும் நூறு ஆண்டுகளுக்கு.
பிறகும், அதற்குப் பிறகும் கூட
நாங்கள் உன்னை நினைவு கூருவோம்.

*28-1-1978 இக்கவிதை யாழ்ப்பாணம் உஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற இக்பால் நூற்றாண்டு விழாவில் வாசிக்கப்பட்டது.*

---

மக்கள் பாக்கியம் அதிகமுள்ள ஏழை மனிதன், புருஷனை திருப்தி செய்யும் மனைவி, தனது மகர் தொகையைக் கணவனுக்குச் சன்மானம் செய்த மாதரசி, ஈன்றோர் மனம் நோகாமல் நடந்துகொள்ளும் மக்கள், பாவத்தை விட்டும் பிழை மன்னிப்புத் தேடி மீண்டவர் ஆகிய ஐந்து பேர்களும் சுவர்க்கவாதிகளாய் இருப்பர்.

உமர் (ரலி)

உலகப் பற்று, தலைமைத்தனம், கீர்த்தி, புகழ் முதலியவைகளை ஒழித்து அல்லாவின் வழியின் பக்கம் சன்மார்க்கப் பிரசாரம் செய்து அழைக்கும் அறிஞரே நபிமார்களின் அனந்தர ஆலிமாவார்,

ஹசன் பஷரி

*With the best compliments*

*from*

# 'HILMA GEMS'

(Proprietor: **A. H M. ATHAULLA**)

**442, Main Street,**

RATNAPURA.

T' Phone: **495**

**Offices:**

225 $\frac{1}{1}$. Galle Road,

**COLOMBO-4**

*T' Phone:* **82854**

41 A, Dharul Hifaz

Perera Road,

***China fort***

**BERUWELA.**

## உயிரின் தோற்றம் - பரிணும வளர்ச்சி

# விஞ்ஞானமும் இஸ்லாமும்

**ஜெஸீமா ஆதம்லெவ்வை**
*விஞ்ஞானம் 3-ம் வருடம் யாழ். பல்கலைக் கழகம்.*

பிரபஞ்சங்கள் எவ்வாறு தோன்றின. அவற்றின் ஆரம்பம் என்ன? அவற்றின்கண்ணுள்ள தோற்றம் எங்கிருந்து ஆரம்பிக்கின்றது. உயிரின் தோற்றத்தின் மூலவுரு என்ன? என்பது பற்றிப் பல விஞ்ஞானிகளிடம் முரண்பட்ட கருத்துக்கள் இருந்து வருகின்றன, அவற்றுள் டார்வினின் கோட்பாடு என்ன? அது எவ்வளவு தூரத்திற்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும், பிரபஞ்சம், உயிர் என்பனவற்றின் தோற்றம் வளர்ச்சி, தன்மை பற்றி திருக்குர் ஆனின் கருத்து என்ன என்பதுபற்றியும் சிறிது விளக்குவதே இச்சிறிய கட்டுரையின் நோக்கமாகும்.

விஞ்ஞானிகள் முதன் முதலில் உயிர் எவ்வாறு தோன்றியது என்பது பற்றி ஆராய்ந்த போது பலர் ஒவ்வொரு விதமான ஆராய்ச்சி முடிவுகள் கூறினர். இறுதியில் ஒரு கொள்கை வரையறுக்கப்பட்டது. அதன்படி 4·5 கோடி வருடங்களுக்கு முன்னர் சூரியத் தொகுதியின் ஒரு கூறுக - நெருப்புக் கோளமாக பூமி தோன்றியது. அதைச் சூழ்ந்தும் தாழ்ந்தும் வளிமண்டலம் காணப்பட்டது. வெப்பம் மிகுதியாக இருந்ததால் பாரமான மூலகங்களும் வாயு நிலையிலிருந்தன. படிப்படியாக குளிர்வடையும்போது, இரும்பு போன்ற உலோகங்கள் பூமியின் மத்தியை வந்து அடைந்தன. அதன் மேல் பாரம் குறைந்த அலுமினியம், சிலிக்கன் போன்றனவும், காபன், ஐதரசன் என்பனவும் படியத் தொடங்கின. மேலும் வாயு நிலையிலிருந்த மூலகங்களான காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன் என்பன ஒன்ருேடொன்று தாக்கமுற்று ஈற்றில் அமினோவமிலம் உண்டாகி அவை பூமியில் படிந்தன. பூமி குளிர்ச்சியடைந்து செல்லும்போது மத்தியில் ஏற்படுத்தப்பட்ட அமுக்கத்திஞல் பெருமளவு வெப்பம் வெளியிடப்பட்டது. மத்தியிலுள்ள மூலகங்கள் உருகி கரைசல் நிலையிலிருக்க, மேற்பரப்பு திண்மமாக மாறியது. நீராவி ஒடுங்கி முகிலாக மாறி மழையைக் கொடுத்தது. பல்லாயிரம் வருடங்களாகத் தொடர்ந்து மழை பெய்ததால், சமுத்திரங்கள் உண்டாகிய தென்றும், இதஞல் பூமியிலுள்ள அமினோவமிலங்கள் உப்புக்கள் முதலியன கடலிற்கு அடித்துச் செல்லப்பட்டு அப்போதிருந்த சில சக்திகள் மூலம் தாக்கமடைந்து முதன் முதலாக கடலிலேயே உயிர் தோன்றியிருக்கலாமென்று கூறப்படுகின்றது.

1400 வருடங்களுக்கு முன்பே பூமியின் உற்பத்தி பற்றித் திருக்குர் ஆனில் விளக்கம் அருளப்பட்டுள்ளது. திருக்குர் ஆனில் நெருப்புத் துண்டமாக உண்டாக்கப்பட்ட கோளம், குளிர்வுற்று பூமியாகியது என்றும், அதைச் சுற்றி வாயு மண்டலம் சூழப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது. மனித சிருஷ்டிக்கு முன் இவ்வுலகில் ஜின்களின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. ஜின்களை கொடிய உஷ்ணமுள்ள நெருப்பிலிருந்து படைத்தோம் (15:27). வெப்பமாக இருந்த பூமி பின்பு மழை பொழிந்ததஞல் குளிரடைந்தது என்பதற்கு ஆதாரமாக திருக்குர் ஆனில் பல வசனங்களுள. ………… வானத்திலிருந்து தண்ணீரை இறக்கி அதன் மூலம் பூமியில் உயிரினங்கள் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது

உயிரின் தோற்றத்தை இரசாயனத் தோற்றத்துடன் இணைத்தவர்களில் சாள்ஸ் டார்வினைக் குறிப்பிடலாம். மேலும் உயிர்களின் பரிணும வளர்ச்சி பற்றி விளக்

குவதற்கு டார்வின் இயற்கைத் தேர்வு என்னும் கொள்கையை வெளியிட்டார். இதில், இயற்கையில் தொடர்ந்து வாழ்க்கைப் போராட்டம் ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கின்றதெனவும், அவற்றில் வெற்றி பெறுவதற்கு மாறல்கள் கொண்ட உயிர்கள் தப்பிப் பிழைப்பதற்கு ஏற்றவாறு இசைவாக்கமடைந்திருக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. மேலும் தப்பிப் பிழைப்பதற்கு இனப் பெருக்கலின் போது புது இயல்புள்ள சந்ததிகளைத் தோற்றுவிக்க வேண்டும். மற்றைய விஞ்ஞானிகள், உண்டாக்கப்படும் புது இயல்புகள் பரம்பரையலகுக்குக் கடத்தப்பட்டால் தான் எதிர்கால சந்ததியினரில் மாற்றம் ஏற்படும் என்று கூறுகின்றனர்.

இப்படி ஒரே அடிப்படையிலிருந்து தோன்றிய உயிரினம் காரணமாக பரிணாமத்தினால் வியத்தமடைந்து கொண்டே சென்றன. ஒரு மரத்தில் பல கிளைகள் உள்ளது போல் இணைந்துள்ளது. முதலில் ஒரு கல உயிரினம் தோன்றி, படிப்படியாக பல்கல உயிரினம் பரிணாமம் அடைந்து, அதிலிருந்து சிக்கலான அமைப்புடைய தாவரங்களும், விலங்குகளும் உண்டானதெனக் கூறப்படுகின்றது. இக் கொள்கையின்படி மனிதனே பரிணாம மரத்தின் உச்சிக் கிளையில் இருக்கின்றான்.

இந்த பரிணாமக் கொள்கைக்கு தொல்லுயிரியல், புவிச்சரிதவியல், முளையவியல், ஒப்பீட்டு உடலமைப்பியல், பிறப்புரிமையியல் முதலியவற்றிலிருந்து ஆதாரங்கள் தரப்பட்டுள்ளன.

பொதுவாக விஞ்ஞானத்தில் எந்தவொரு கொள்கையும் பகுத்தறிவு ரீதியாக ஆராய்ந்து, பரிசோதனைகள் மூலம், நிருபிக்கப்பட்ட பின்பே உண்மைகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆனால் டார்வினின் தேர்வுக் கொள்கையோ அல்லது இது போன்ற உயிரினங்களின் தோற்றம் பற்றிய ஏனைய கொள்கைகளோ இவ்விதமாக நிருபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளன்று. மாறாக இவை சான்றுகளையும், சில அவதானிப்புகளையும் அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட அநுமானங்களேயாகும். அமெரிக்க நாடுகளில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்ட டாவின், தகவல்கள் சேகரித்து அவற்றின் அடிப்படையில் ஒரு கொள்கையைப் பெற முயற்சித்தார். இதன் விளைவே அவரின் இயற்கைத் தேர்வுக் கொள்கை. இது துண்டு துண்டாக வெட்டப்பட்டுக் காணப்பட்ட படச்சுருள், மீண்டும் சீரின்றி பொருத்தப்பட்டதற்கு ஒப்பாகிறது. இக் கொள்கை நிருபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளில்லை என்பதை டார்வினே ஒப்புக் கொண்டிருந்தார். இது மட்டுமன்றி, பிற்காலத்தில் விஞ்ஞானிகள் இக் கொள்கையில் பல மாற்றங்களையும் செய்தார்கள். சுருக்கமாகக் கூறினால் பரிணாம வாதம் பரிணாமம் அடைந்து கொண்டே செல்கின்றது.

எங்கள் நாயகம் முகம்மது நபி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வால் அருளப்பட்ட குர்ஆன் இறைவனின் வேதவாக்கு என்பதை நாம் எந்தவொரு சந்தேகமுமின்றி நம்பக்கூடியதாக இருக்கின்றது. இது பரிணாம வாதத்தை ஒத்த விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்படாத ஊகங்களுடன் முரண்பட்டாலும், விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்ட எந்த ஒரு விடயத்திலும் முரண்படவில்லை.

மனிதர்கள் நேர்மையான வழியைக் கடைப்பிடித்து இவ்வுலகில் சிறப்புடன் வாழ்ந்து மறு உலகிலும் சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக, அல்லாஹ் திருமறையை அருளியுள்ளான். திருமறை வசனங்கள் மனித மனத்தைப் பண்படுத்தி அவனின் நிலைமை என்னவென்பதை உணர்த்துகின்றது. குர்ஆனில் இறைவனால்

படைக்கப்பட்டதென்று உறுதியாகக் கூறப்பட்டுள்ளவை பல வருடங்களாக முயன்று பெற்ற விஞ்ஞான ஆராய்ச்சி உண்மைகளுடன் வியக்கத்தக்க முறையில் பொருந்தியுள்ளன.

## குர் ஆனிலுள்ள சில வசனங்களாவன:

''வானத்தையும், பூமியையும் அவன் உண்டாக்கியவன். இன்னும் அவன் ஒரு கருமத்தை உண்டாக்க நாடுவானாயின் அதற்குச் சொல்வதெல்லாம் 'குன்' - 'உண்டாகு' என்பதுதான், உடனே உண்டாகிவிடும். அல்லாஹ் முன்மாதிரியில்லாமல் நூதனமாக சிருஷ்டிப்பவன்'' (2:117)

''அல்லாஹ், வானங்களையும், பூமியையும் 6 நாட்களில் படைத்து அர்ஷின் மீது தன் ஆட்சியை நிலைநாட்டினான். சகல காரியங்களையும் திட்டமிட்டு, நிர்வகித்தும் வருகிறான்.'' (10:3)

''அவனே சூரியனை ஒளிர்வாகவும் சந்திரனை (பிரதிபலிக்கும்) வெளிச்சத்தைத் தரக்கூடியதாகவும் ஆக்கி, வருடங்களின் எண்ணிக்கையையும், கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு அதற்கு மாறி மாறி வரக்கூடிய தன்மைகளையும் கற்பனை செய்தான். மெய்யான காரணமின்றி இவைகளை அல்லாஹ் படைக்கவில்லை'' [10:5]

''நாம் தான் வானத்தில் கிரகங்களை அமைத்துப் பார்ப்போருக்கு அதனை அலங்காரமாகவும் ஆக்கிவைத்தோம்'' (15:16)

''அவனே உங்களுக்காகப் பூமியை வசிக்குமிடமாகவும் வானத்தை ஒரு விதானமாகவும், அமைத்து மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து, அதனைக் கொண்டு உங்களுக்கு உணவாகக் கூடிய கனிவர்க்கங்களையும் உங்களுக்கு வெளிப்படுத்துகிறான். ஆகவே இவைகளையெல்லாம் நீங்கள் (தெளிவாக) அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு (எத்தகைய) இணைகளையும் ஏற்படுத்தாதீர்கள்.'' (2:22)

''மெய்யாகவே வானங்களையும், பூமிகளையும், படைத்திருப்பதிலும்; இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும், வானத்திலிருந்து தண்ணீரை இறக்கி அதன் மூலம் பூமியை உயிராக்கி, அதில் ஊர்ந்து திரியும் ஒவ்வொரு பிராணியாகப் பரப்பி வைப்பதிலும், காற்றுக்களை பல கோணங்களில் திருப்பிவிட்டுக் கொண்டிருப்பதிலும் வானுக்கும், பூமிக்கும் இடைப்பட்டிருக்கும் மேகத்திலும், உணருகின்ற கூட்டம் (மேகம்) உண்டாக்குவதும் அல்லாஹ்வே'' (2:164)

''அவன் தான் மேகத்திலிருந்து மழையை இறக்கி வைக்கின்றான் அதைக் கொண்டே சகல வகைப் புற்பூண்டுகளையும் நாம் முளைக்க வைத்து, அதிலிருந்து பசுமையான தழைகளையும் நாம், வெளிப்படுத்துகின்றோம். அதிலிருந்து அடர்ந்த வித்துக்களை வெளிப்படுத்துகின்றோம். மாதுளை, திராட்சைக் கனிகளை நோக்குவீர்களாக. அவை பூத்துக் காய்ப்பதிலும் பின்னர் கனிந்து பழமாகும் விதத்தையும் உற்று நோக்குவீர்களாக. விசுவாசம் கொள்ளும் மக்களுக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகளிருக்கின்றன.'' (6-99)

''நாம் பூமியை விரிவுபடுத்தி அதில் அசையாத மலைகளை நாட்டினோம். ஒவ்வொரு புற்பூண்டையும் ஒழுங்கான முறையில் அதில் நாம் முளைப்பித்தோம்.'' (15:19)
''பூமியில் ஊர்ந்து திரியக்கூடியவைகளும் தம்முடைய இரு இறக்கைகளால்

பறக்கக்கூடியவைகளும் உங்களைப் போன்ற ஜீவனுள்ள சிருஷ்டிகளேயன்றி வேறில்லை.'' (6:38)

''கிளைகள் உள்ளதும், கிளைகள் இல்லாததுமான மரங்களை உற்பத்தி செய்தோம். ஒரேவித நீர் புகட்டப்பட்ட போதிலும் சிலவற்றை ரசனையில் மேன்மையாக்கி வைத்தோம். இதில் அறிவுடைய மக்களுக்கு பல அத்தாட்சிகளிருக்கின்றன.'' (13:4)

தாவர இராச்சியத்திலிருக்கும் பெரும் பிளவுகளைப் பற்றி கண்டுபிடிப்பதற்கு முன்பே குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. அது மாத்திரமல்லாது தாவரமும் ஆண், பெண் பகுதிகளைக் கொண்டுள்ளதென அக்காலத்தில் யாருமே கண்டுபிடிக்க முன்னர் 'தாஹா' குறுவில் (20:83) அது காணப்படுகின்றது.

குர்ஆன் வெறுமனே சரித்திரப் புத்தகமோ, அன்றி விஞ்ஞான நூலோ அல்ல. ஆனால் பிரபஞ்சங்கள் பற்றிய சகல அறிவுகளும் அதில் பொதிந்துள்ளன. அது ஆராயும் திறம்படைத்தோருக்கு ஒரு அத்தாட்சியாக உள்ளது.

குர் ஆனில் மனிதனின் தோற்றம் பற்றிக் கூறப்படுவது எமக்குச் சில உண்மைகளை விளக்குவதற்காகவே அது விஞ்ஞான பூர்வமான சில விளக்கங்களுக்கு ஆதாரமாயிருக்கின்றது; விஞ்ஞானத்தில் கூறப்பட்ட உயிரின் தோற்றம் பரிணாமக் கொள்கை என்பவற்றிற்கு ஆதாரமான வசனங்கள் அல்குர்ஆனில் காணப்பட்ட போதிலும், முதல் மனிதனின் தோற்றம் பற்றியதில் வேறுபாடு காணப்படுகின்றது. அல்குர் ஆனில் முதல் மனிதனை அல்லாஹ் படைத்தான் என்று திட்டமாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கான சில ஆயத்துக்களாவன.

''மனிதர்களே! உங்கள் யாவரையும், ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்து பின்னர் உங்கள் தகப்பனிடம் தரித்திருக்கச் செய்து உங்கள் தாயின் கர்ப்பத்தில் ஒப்படைப்பவனும் அவனே''. (6;98)

''களிமண்ணால் நிச்சயமாக நாமே உங்கள் மூல பிதாவாகிய முதல் மனிதனைப் படைத்தோம்.'' (15:26)

''நிச்சயமாக நாம் ஆதம் நபியை முதலில் சத்துள்ள களிமண்ணால் படைத்தோம். பின்னர் அனைத்து மனிதரை உண்டாக்குவதற்காக, ஒரு பத்திரமான இடத்தில் இந்திரியத்துளியாகச் செய்தோம். பின்னர் அதை ஒரு இரத்தக்கட்டியாக்கினோம். இந்த இரத்தக் கட்டியை ஒரு மாமிசத் துண்டமாகச் செய்தோம். பின் தேவையானவைகளைச் சேர்த்து மற்றொரு சிருஷ்டியாக அமைத்தோம்.'' (2:96) (6:86)

கருவில் குழந்தை உற்பத்திக்கு, விந்தும் முட்டையும் அவசியமென்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்து சில காலங்களுக்கு முன் கூறினர். ஆனால் இதற்குரிய சான்று எங்கள் நாயகம் முகம்மதுநபி (ஸல்) அவர்களின் திருவாயால் இறைவன் அருளியிருக்கின்றான்.

முளையவியலின்படி, தனிக்கலத்திலிருந்து கருக்கட்டலின் பின் நுகம் தோன்றி, கலவியத்தம், அங்கவாக்கம் என்பன நிகழ்ந்து முளையம் தோன்றுகின்றது. இது குர் ஆனிலுள்ள வசனங்களுடன் ஒத்துள்ளது.

18ம் நூற்றாண்டில் பரிணாமக் கொள்கை உலகைப் பெரும் பரபரப்பிற்குள்ளாக்கியது. மதக் கொள்கைக்கு முரணான கருத்துக்களைக் கொண்டிருந்ததனால் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, விஞ்ஞானப் பாடவிதானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் மூலம் இக் கொள்கை ஊட்டப்பட்டன. இதனால் பொதுமக்களுக்கு மத்தியில் இக் கொள்கைகள் ஒரு விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மை என்ற தவறான கருத்தே பரவிக் காணப்படுகிறதேயன்றி இது ஒரு கருதுகோள் மட்டுமே என்ற உண்மை உணரப்படவில்லை. அநேக நாடுகளில் பாடப்புத்தகத்திலுள்ள இக் கொள்கை சம்பந்தமான தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டு பின் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலக் கல்வித் திணைக்களத்தினர் அண்மையில் தமது உயிரியல் பாடப்புத்தகத்தில் பல திருத்தங்களை மேற்கொண்டிருந்தனர், முன்பு அப்புத்தகத்தில் "எல்லா ஊர்வன விலங்குகளும், மீன் போன்ற மூதாதையிலிருந்து உண்டாகியது என்னும் வசனம் தற்போது "ஊர்வன" மீன் போன்ற மூதாதையிலிருந்து பரிணாமக் கொள்கையின் எடுகோளில் கூறப்பட்டது போல் தோன்றியிருக்கலாம்" என மாற்றப்பட்டது; அனைத்திலும் திட்டமாக புகுத்தாமல் 'இருக்கலாம்' என்று திருத்தியுள்ளனர்.

ஆதாரம் [*Scientific American April 1976*]

ஆனால் எமது பாடசாலைகளில் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களின் பாடத்திட்டத்தில் இக் கொள்கைகள் திணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதனால் இளம் மாணவர் மனத்தில் மறைமுகமாக மதக் கோட்பாட்டிற்கு எதிரான சில கருத்துக்கள் ஊட்டப்படுகின்றன. இதனால் மாணவர் மதத்தை நம்பாது நிலை தவறி, மதிகெட்டு போலியான வாழ்க்கை முறைக்குள் போக வழிவகுக்கின்றது; பரிணாமக் கொள்கையை பக்குவமடையாத அந்த வயதில் போதிப்பதிலும் பார்க்க உயர்தர வகுப்புகளில் போதிப்பதே சிறந்தது.

அன்பையும் பண்பையும் மறந்து, வன்மத்தையும், கன்மத்தையும் மேற்கொண்டு, ஒழுக்கத்தையும் விழுப்பத்தையும் துறந்து, இழிவையும் பழியையும் ஏற்று, இருளிலே தடுமாறி மனிதர் படுபாதாளத்தில் வீழ்ந்து மடிய முற்பட்ட போது; வற்றாத வான் கருணை மிக்க வல்லவனாகிய அல்லாஹ், வழி தவறிய மனிதர்களை நேர்மைப்படுத்த அந்த மனிதரிலே ஒருவரைத் தேர்ந்தெடுத்து, நன்மையும் தீமையும் புலப்படுத்தி, பகுத்தறிவின் எல்லையையும் சுட்டிக்காட்டி நேர் வழியிலே முறை பிறளாது ஒழுகும் வழியையும் தம் வாழ்க்கையின் மூலமும், வாக்கின் மூலமும் காட்டித்தரச் செய்தான். அருளப்பட்ட இந்த ஒப்பற்ற வேதம், உலகின் சிந்தனைச் சிற்பிகளும் சட்ட நிபுணர்களும் ஒன்று கூடி மனித சமுதாயத்தின் உயர்வு கருதி பல நாள் விவாதித்து முயன்று காணும் முடிவுகளைவிட உயரிய சட்ட திட்டங்களைக் கூறுவதாக அமைந்திருக்கின்றது.

எண்ணிலடங்காப் படைப்புகளின் கர்த்தாவாகிய இறைவன் அவற்றிலெல்லாம் ஏற்றம் பெற்ற படைப்பாக அழகிய கோலந் தாங்கிய மனிதனையே தன் பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தான். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதனுக்கு, அகிலங்கள் அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றலையும் அளித்தருளினான். அதுமட்டுமா? மனிதனுக்கு நன்மை தீமையைப் பிரித்தறிவித்து, நல்ல வழியின் ஏற்றத்தையும், மறுமையையும் எடுத்துரைத்தான். இவையனைத்தையும்விட மனிதன் தான் பெற்ற பெரும் பகுத்தறிவைப் பயன்படுத்தி வழி நடக்கும் உரிமையையும் உவந்தளித்தான்.

For
Citizen Watches
& Clocks
With
International Guarantee

*VISIT*

**Shums Jewellers**

168, Main Street,
**COLOMBO-11**

*Compliments of the season*
*from*

**HAKEEMSON**

Manufacturers & Distributors
*of*
*Orchid & Rose Brand G. I. Ware*

No 465, Horetuduwa,
**MORATUWA.**

*Best compliments*
*from*

**INAM GEMS**

188 1/6, Second Cross Street,
**COLOMBO-11**

*With Best Compliments*
*from*

**Gem King Enterprises**

Dealers in Precious
& Semi precious Stones
188, 13, Moulana Building,
2nd Cross Street,
**COLOMBO-11**
*T' Phone:* **20703**

# நாங்கள் மனிதர்கள்

**S. நஜிமுடீன்**
*3-ம் வருடம் மருத்துவம், யாழ்-பல்கலைக்கழகம்*

கிடைத்தவை நினையா(து)
கிடையாதவையே நினைந்து
நடைப்பிணம் போலவே
நடைபோட்டு வாழும்
நாங்கள் மனிதர்கள்.

இளமையினைச் செலவு செய்து
எங்கெங்கோ அலைந்த பின்னர்
இடைவழியில் சோர்வுடனே
இளைப்பாற அமர்ந்திட்ட
நாங்கள் மனிதர்கள்.

நல்லவையைத் தவிர்த்து
நலம் கெட்டதையே நினைந்து
நம்மையே அழித்து—உலக
நரகிலே உழல்கின்ற
நாங்கள் மனிதர்கள்.

சொர்க்கமென்று உலகினையே
சொல்லி மகிழ்ந் திருந்து—நாம்
சேர்த்தவைதான் எம்மைக் - (கரை
சேர்க்கு மென்று எண்ணியிருந்த
நாங்கள் மனிதர்கள்.

மலையளவு ஆசை வளர்த்து
மதி கெட்டுப் போயின்று
மனமெங்கும் இருள் சூழ
வழிமாறி விழிக்கின்ற
நாங்கள் மனிதர்கள்.

மனதினிலே கோட்டைகட்டி
மன்னவனாய்த் தானே மாறி
இராச்சியங்கள் ஆண்டு கொண்டு
இராஜபோகம் அனுபவித்த
நாங்கள் மனிதர்கள்.

வழிகாட்டிச் சென்றோமில்லை
வழிகாட்டல் கேட்டோமில்லை
வந்தபடி வாழ்வோமென
வரும் வழியில் தடுமாறும்
நாங்கள் மனிதர்கள்.

மற்றவரை நினைத்தோமில்லை
'மௌத்' தினையே நினைத்தோமில்லை
மயக்கத்திலே வாழ்ந்திருந்து
மடியவிருக்கின்ற-மானிடர்கள்—ஆம்
நாங்கள் மனிதர்கள்.

மறையளித்த இறை பெரியான்—தன்
வாழ் வளித்த நபி பெருமான்
எதை யளித்தார் என்றுணர்ந்து
ஏற்று நடக்காத
நாங்கள் மனிதர்கள்?

*With Best Wishes From*

# NALEEFA GEM TRADERS

**10, Naleem Hajiar Mawatha,**

**China fort**

**BERUWELA.**

T' Phone **5233** Beruwela, **84711** Colombo.

***With the Best compliments from***

# ASMA TRADERS

## DEALERS IN

Arpihyde, Foamihyde & Tanneride Leather Cloth
Plastic Case for (Chairs & Bags)
Plastic Sheetings, Adhesives & other
Upholstery Materials Etc.

**39 A, 3rd Cross Street,**

**COLOMBO-11.**

T' Grams: ASMAT T' Phone: **26470**

# செயலாளர் பேசுகிறார்...........

அன்பில் நிகரின்மையும் அருளில் அளவின்மையும் தனதாகக் கொண்ட இறைவா, உன்நாமம் என் ஆரம்பம் ஆகுக.

1974 ம் ஆண்டு, கலாநிதி பதியுதீன் மஃமூத் அவர்களினால் இப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. 1975-ம் ஆண்டு இங்கு அனுமதிக்கப்பட்ட 3 முஸ்லிம் மாணவர்களும், 1976-ம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட 29 முஸ்லிம் மாணவர்களுமாக மொத்தம் 32 அங்கத்தவர்களுடன் 1976 ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இம் மஜ்லிஸ், இன்று 131 அங்கத்தவர்களைத் தன்னகத்தே கொண்டு பெரு விருட்சமாக வளர்ந்துள்ளது. இந்த அங்கத்துவத் தொடர்ச்சி பற்றிய பின் வரும் புள்ளி விபரம் பயனுள்ளதாயிருக்குமென நம்புகிறேன்.

## பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள்

| Year | B. Com | Arts | Maths & Stats | Phy-Sc | Bio-Sc. | Medicine | A.M.P | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1974 | — | — | — | — | — | — | — | — |
| 75 | — | — | 3 | — | — | — | — | 3 |
| 76 | 8 | 16 | 2 | 2 | 1 | — | — | 29 |
| 77 | 6 | 2 | 2 | 5 | 4 | — | — | 19 |
| 78 | 5 | 1 | 1 | 1 | 3 | 7 | — | 18 |
| 79 | 17 | 12 | 4 | 3 | 1 | 2 | 1 | 40 |
| 80 | 18 | 8 | 6 | 7 | 12 | 10 | 2 | 63 |
| Total | 54 | 39 | 18 | 18 | 21 | 19 | 3 | 172 |

உறுப்பினர்கள் சமய, சமூக, கலாச்சார விடயங்களில் ஊக்கமுடன் பங்கு பற்றுவதற்கான சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதே மஜ்லிஸின் பிரதான நோக்கமாகும். இவ்வாண்டும் எமது மஜ்லிஸ் தனது நன் நோக்கங்களை நிறைவு செய்யும் பணியில் முழுமுயற்சி எடுத்துள்ளது. மஜ்லிஸின் நோக்கங்களைச் செயலாக்கிய பெருமை எமது அங்கத்தவர்களின் ஒத்துழைப்பையும், அவர்களது முயற்சியையுமே சாரும். ஏனைய மத நண்பர்களுடன் எமது ஒற்றுமையையும், நட்புறவையும் பேணுவதிலும் மஜ்லிஸ் பின்னிற்கவில்லை. பல்கலைக்கழக மாணவர் அவை, விளையாட்டுக் குழு, போன்றவற்றில் அங்கத்தவர்களாகவும், இளம் பொருளாளர்களாகவும் மஜ்லிஸ் அங்கத்தவர்கள் பணியாற்றிப் பல்கலைக் கழகத்திற்குத் தம் பங்களிப்பைச் செவ்வனே ஆற்றியுள்ளனர்.

கடந்த வருடம் 26-6-80 அன்று, எமது பழைய மாணவர்களுக்கென நடைபெற்ற பிரிவுபசார விழாவில் மஜ்லிஸ் அங்கத்தினர்கள் சோகம் நிரம்பிய முகத்துடன் காணப்பட்டனர். மஜ்லிஸின் வரலாற்றில் இது போன்ற தினங்கள் ஒவ்வொரு வருடமும் வருவதுண்டு. அங்கத்தவர்கள் மத்தியில் மறக்கமுடியாத நாளான அந்நாளில், எமது மஜ்லிஸ் தனது உறுப்பினர்களுள் ஒரு பகுதியை இழக்கின்றது. இல்லை. இல்லை. சிறந்த சேவையின் மூலம் எமது தேசத்தின் சமுதாய நிலையை உயர்த்துவதற்காக அர்ப்பணம் செய்கிறது அன்று எங்கள் பழைய மாணவர்கட்கு வாழ்த்துக் கூறி, உள்ளத்தால் பிரிவு பகர்ந்தோம். அத்துடன் இவ்வருடம் எமது பல்கலைக்கழகத்தினுள் காலடி எடுத்து வைத்த எமது புதிய அங்கத்தவர்களை மஜ்லிஸ் சம்பிரதாயப்படி 29-5-1981இல் சிற்றுண்டியுடன் வரவேற்றதும் இங்கு நினைவு கூரப்பட வேண்டியதே. அதுவும் இனிமையான நாட்களில் ஒன்றாகும்,

5-2-1981 அன்று, மீலாத்விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டதோடு, அவ்வப்போது சில இஸ்லாமியக் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன. குறிப்பாக எமது தொழுகை அறையில் வாராந்த நிகழ்ச்சியாக ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை 5 மணிமுதல் 6 மணிவரை நடைபெறும் தப்லீஃ ஜமாஅத் நிகழ்ச்சி, மஜ்லிஸ் அங்கத்தவர்களிடையே மார்க்கப் பற்றுணர்வைத் தட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றி வருகிறது. இந்நிகழ்ச்சிகளில் பங்களாதேஷ், பாகிஸ்தான், மற்றும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்த தப்லீஃஜமாஅத்தினர் பங்கெடுத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி, எமது உறுப்பினர்களும், முஸ்லிம் விரிவுரையாளர்களும் இணைந்து கடந்த 14-3-1981-ல் சாவகச்சேரிக்கு ஒருநாள் ஜமாஅத் சென்றோம். இது எமது அங்கத்தவர்களிடையே ஒரு சிறந்த மனமாற்றத்தை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

7-7 81 அன்று கொழும்பிலிருந்து இங்கு வருகை தந்த பெண்கள் ஜமாஅத் ஒன்று எமது முஸ்லிம் மாணவிகளுக்கெனப் பிரத்தியேகமாக ஒரு நிகழ்ச்சியை நடத்தியது. அவர்களுடன் வந்த ஆண்களும், எமது வாராந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். அன்று இடப் பற்றாக்குறை காரணமாக மஃரிப் தொழுகை பல்கலைக்கழக மைதானத்தில் நடாததப்பட்டது. மாணவர் அவை மூலமாக இவ்விடயம் எமது உபவேந்தர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, உடனடியாக ஒரு விசாலமான அறை தொழுகைக்கெனத் தற்காலிகமாக ஒதுக்கித் தரப்பட்டது. இதற்காக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கும், மாணவர் அவைச் செயலாளர் நாகலோகநாதன் அவர்கட்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இப்புதிய தொழுகை அறை 10-7-81 அன்று ஜும்ஆத் தொழுகையுடன் திறந்து வைக்கப்பட்டது. எமது பல்கலைக்கழக வரலாற்றில் இடம் பெற்ற இந்த முதலாவது குத்பா பிரசங்கத்தை எமது மஜ்லிஸ் போஷகர் மௌலவி K. M. H. காலிதீன் அவர்கள் நிகழ்த்தினார்கள். இதனால் எமது அங்கத்தவர்கள் எதிர் நோக்கிய பாரிய பிரச்சினை ஒன்று தற்காலிகமாகத் தீர்த்து வைக்கப் பட்டது. அதாவது எம் அங்கத்தவர்கள் வெள்ளிக்கிழமைகளில் இருமைல்களுக்கப்பால் உள்ள யாழ் நகருக்குச் சென்று ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்ற வேண்டியிருந்தது. இதனால் அவர்கள் 1 — 2 மணிநேர விரிவுரைகளுக்குச் செல்ல முடியாத நிலை இதுகாலவரை இருந்து வந்தது. **''எனவே அதிகரித்து வரும் எமது முஸ்லிம் மாணவர்களுக்கென ஒரு தனியான கலாச்சார நிலையம் (பள்ளிவாசல்) அமைக்க, முஸ்லிம் தனவந்தர்கள் முன்வந்து நவுவீர்களாயின் அது எமது சமுதாயத்துக்குச் செய்யும் ஒரு சேவை மட்டுமன்றி, இறைவனிடத்தில் நற்கூலி பெற்றுத் தரும் செயலுமாகும்.''**

துலங்கலுக்குத் தூண்டுகோல் எவ்வாறு அவசியமாக இருக்கிறதோ, அவ்விதம் எம் மஜ்லிஸின் வளர்ச்சிக்கும், அதன் பிரகாசத்துக்கும் காரணமாயிருந்த விரிவுரையாளர்கள் கலாநிதி மல்ஹர்டீன், மௌலவி றசாக் போன்றோருக்கும், மஜ்லிஸின் வளர்ச்சியில் பெரிதும் பங்கெடுத்துக்கொண்ட மாணவன் பாயிஸ் அவர்கட்கும், ஆலோசனைகள் பல வழங்கிய எமது போஷகர் மௌலவி காலிதீன், சிரேஷ்ட பொருளாளர் நுஃமான் அவர்களுக்கும், ஏனைய விரிவுரையாளர்களுக்கும், மஜ்லிஸை நேரான வழியில் இட்டுச்சென்ற எமது தலைவர் சியாட் முகமட் அவர்கட்கும், செயற்குழுவினருக்கும் அங்கத்தினருக்கும். குறிப்பாக மஜ்லிஸின் மகிமை பொருந்திய ஆக்கமாக மூன்றாம் முறையாக உங்கள் கரங்களில் தவழும் இம்மலரை வெளியிட ஏதுவாக இருந்த பத்திராதிபர்கள் ஜனாப்கள் முஸ்தபா, வஜீஹா போன்றோருக்கும், இன்று நாங்கள் இவ்விதமாக ஒன்றுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய இம் மஜ்லிஸை உருவாக்கி, அதைப் பேணிக் காத்துவந்த எமது பழைய மாணவர்கட்கும் எனது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அடுத்து வரும் புதிய செயற்குழு, மஜ்லிஸ் மென் மேலும் சிறப்பாக இயங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனக் கோரி விடை பெறுகிறேன்.

''அல்ஹம்துலில்லாஹ்''

முஹம்மட் சனூன்
கௌரவ செயலாளர்

Best wishes from

NAKUR MEERAN'S

Latest in Style Cheapest in Price

Textiles & Fancy Goods

Specialists in:

Modern Tailoring

154, Modern Market,

JAFFNA.

STYLIST

28, Modern Market, JAFFNA.

for

Ready Made Garments & Textiles

M. G. Textiles

Modern Market,

JAFFNA.

Best wishes from

EN. EM. ES

Hospital Road, 2. New Market,

JAFFNA.

*With the best compliments*
*from*

**S. A. SAMEEM**
32, Kaththarama Road,
KALUTARA - SOUTH

*With the best compliments*
*from*

**'GEMCITY'**

*Agents for*
*Bicycles, Radios & Watches*

161, Main Street,
KALUTARA.

*T' Phone:* **2639**

*With best wishes*
*from*

**'Favourites'**

89, Main Street,
KALUTARA.

T' Phone: **2535 / 2207**

**Leading House For**

- *All Kinds of Building Materials*
- *Electric Cables & Fittings*
- *Complete Estate Requisites*

DISTRIBUTORS FOR
B. M. C. MATERIALS

*Brown Group Products*
*S' lon Water Pipes & Fittings*
*Centrice Water pumps and*
*Robbialac Paints Etc.*

**BROADWAY STORES**
*101, 103,* Main Street,
*KALUTARA.*

# OUR MAJLIS MEMBERS

## FACULTY OF ARTS

### COMMERCE

| Name | Year | Address |
|---|---|---|
| Abdul Latheef M. I. | 4th | 1st Division, Addalaichenai. |
| Farook H. M. | ,, | 27, Mosque Rd, Kalmunai-4 |
| Gaffoor M. I. A. | ,, | A. V. V. Rd, Akkaraipattu-6 |
| Ibra Lebbe U | ,, | 'Thahira Manzil' Rawuthar Lane, Sammanthurai |
| Jamaldeen A. L. | ,, | 397, Mosque Rd, Thaikkanagar, Addalaichenai. |
| Meera Lebbe M. | ,, | Rawuthar Lane, Sammanthurai. |
| Asanar A. | 3rd | 1st Cross Street, Sammanthurai |
| Jamaldeen N. | ,, | 28, Small Mosque Rd. Akkaraipattu-3 |
| Julaina M. C. | ,, | 47, Navalar Rd. Jaffna. |
| Niyas A. M. | ,, | Koolangkulam, Chilawathurai. |
| Sahabdeen M. I. M. | ,, | Beach Rd. Akkaraipattu-1 |
| Aboobucker A. M. | 2nd | Erukkalampiddy-3 |
| Ameen M. A. C. M. | ,, | Iqbal Rd, Muthur. |
| Ameer Ali Y. B. | ,, | 33, Southi Veethi, Akkaraipattu-1 |
| Aroos M. U. M. | ,, | 57, Madawala Bazaar, Madawala. |
| Fuwad M. S. M. | ,, | 158/2, Pangollamada, Wattegama |
| Gaffoor U. L. A. | ,, | Udayar Veethi, Akkaripattu-4 |
| Ibunu Suhood M. A. C. | ,, | 213, Periya Madu, Mudu Kovil |
| Inul Jaleela M. I. | ,, | 137/1, Church Rd, Muthur-2 |
| Jamaldeen A. | ,, | 96A, 3rd, Cross street, Ninthavur. |
| Jameel M. A. M. | ,, | 'Pin Kot' 439, Mavadi Veethi, Sainthamaruthu, Kalmunai |
| Jawahir M. S. | ,, | Erukkalampiddy-1 |
| Kalilur Rahman M. C. | ,, | Matharasa Veethi, Akkaraipattu. |
| Kamaldeen A. M. | ,, | Lake View, Maruthamunai-2, Kalmunai. |
| Mohamed Thamby A. | ,, | Masa Hajiyar Lane, Nintavur-4 |
| Rafeek A. M. H. | ,, | 7, Sailan Rd, Kalmunai. |
| Razak M. A. A. | ,, | 111, Jinnah Rd. Akkaraipattu-5 |
| Sadakathulla A. M. | ,, | Veppankulam, Potkerny. |
| Abdul Majeed A. | 1st | 66/1, Punnakuda Rd. Eravur-3 |
| Abdul Wahab A. | ,, | Market Rd. Kalmunai. |
| Aboobucker M. I. | ,, | Mudaliyar Rd. Akkaraipattn-4. |
| Careem M. Z. A. | ,, | 33, 'Shareefas', Beerihela, Ankumbura. |
| Ismail A. M. | ,, | 11, Girls School Rd, Eravur-3 |
| Jawamil A. | ,, | 28, Periya Madu, Madu Church. |
| Kaleel S. M. | ,, | Division No. I, Ninthavur. |
| Lahir A. S. | ,, | Moor Street, Chilawatturai. |

| | | |
|---|---|---|
| Mohamed Jubaihir M. K. | ,, | 3rd Division, Addalaichenai. |
| Mohamed Mohideen M.L. | ,, | Small Mosque Rd. Akkaraipattu-1 |
| Moosin A. W. M | ,, | 124, Mannar Rd, Puttalam |
| Mujeebudeen M. T. M. | ,, | 5, Kadiyawatte Rd. Dharga Town. |
| Nazeer A. H. M | ,, | 637, Neerella, Akurana |
| Nazeer A. L. M. A. | ,, | 177, Karaitivu-1 (EP) |
| Ramseen M A. | ,, | Ward No 1, Erukkalampiddy. |
| Sifar M. J. M. | ,, | 338, New Street, Weligama. |
| Fareetha Ummah U. | ,, | Fisharies Co-operation Rd, New Kathankudy, Kathankudy-3. |
| Kathija A Bawa | ,, | Hospit al Rd, Sammanthurai-1 |

## ARTS

| | | |
|---|---|---|
| Cader I. A. | 3rd | Kiribbawewa, Kahatagasdigiliya. |
| Abdul Fareed K M | 2nd | "Jezeema Manzil" 20, Kumbiyangoda, Matale. |
| Aneeza H. | ,, | 12, Azath Rd, Jaffna. |
| Ibrahim N B. | ,, | 101, Urwala Rd. Teldeniya |
| Ismath M. Y. M. | ,, | 37, Jinnah Rd Jaffna. |
| Jainudeen U. L. M. | ,, | Kadduppally Rd, Eravur-3 |
| Janooba J. | ,, | 75, Kathi Aboobucker Rd, Jaffna. |
| Jasintha M Y. | ,, | 11, Muslim College Rd, Jaffna. |
| Musthafa M. S H. M. | ,, | 'Jubly Palace' Madik Anugana, Sunanthapura. |
| Naleema Z A. | ,, | 123/7, Muslim College Rd, Jaffna. |
| Raisa T. | ,, | 102/1, Muslim College Rd, Jaffna. |
| Samsudeen A. | ,, | Kadduppalli Rd, Eravur-1 |
| Sithy Baduriya M. S. | ,, | 139, Muslim College Rd, Jaffna. |
| Fareena M. Y. | 1st | A. P. Lane, Moor Street, Jaffna. |
| Mohamed Ashrof A. L. | ,, | Pallikkudiyiruppu. Akkaraipattu-6 |
| Muhuseer M. M. | ,, | Koolankulam, Chilawaththurai. |
| Nawab M R M | ,, | Raheema Manzil, Bammana, Narangoda. |
| Nawas Maraikayar K. M. | ,, | No 5, Thoppoor. |
| Rabil T. | ,, | 19, Mavady Rd, Jaffna. |
| Rajab A. C | ,, | 28, A. P Lane, Moor Street, Jaffna. |
| Sahibu | ,, | Ellawela, Kabithigollewa. |

## FACULTY OF SCIENCE

### BIO SCIENCE

| | | |
|---|---|---|
| Nazeera Beevi A L. | 4th | Jinnah Rd. Akkaraipattu-4. |
| Jazeema S A. L. | 3rd | South Ellard Kattankudy-6 |
| Sithy Faiza I. S. | ,, | Hospital Rd, Sammanthurai. |
| Wajeehu M. S. | ,, | 'Shifana Manzil' Erukkalampiddy-4 |
| Zulfica M. I. M. S. T. | 2nd | Ex Registrar's House, Kalmunai-7 |

| | | |
|---|---|---|
| Abdul Careem N. M. | 1st | Methanvely, Chilawathurai. |
| Abdul Majeed M. | ,, | Near Straw Centre, Sammanthurai. |
| Bathurudeen P. M. M. | ,, | Maqbooliya Rd. Maruthamunai-2. Kalmunai. |
| Basheer R. | ,, | Ikkrigollewa, Wahamalgollawa, Madawachia. |
| Fasil-Ur-Rahman M. I. | ,, | Mudaliyar Rd. Akkaraipattu-4. |
| Hamthoon I. L. M. | ,, | Main Street, Akkaraipattu-2 |
| Hisbullah M. I. | ,, | 4th Cross Street, Erukkalampiddy-7 |
| Mahiroon K. L. M. | ,, | 'Mahir Mahal' Sammanthurai 4. |
| Mohamed Ameen S. M. | ,, | A. K. M. Street, Eravur-3. |
| Peer Mohamed E. | ,, | Kanathara Katukaliyawa, Ehalagama, Anuradhapura. |
| Salahudeen I. L. | ,, | M. P. C. S. Rd, Division No. 4, Akkaraipattu. |
| Segu Ibrahim S. L. | ,, | 87, Mudaliyar Rd. Division No. 4, Akkaraipattu. |

## *PHYSICAL SCIENCE*

| | | |
|---|---|---|
| Faiz M. M. | 4th | 48, Kathi Aboobucker Rd, Jaffna. |
| Ziyad M. Thaha | ,, | 'Izzath', Kurugoda, Akurana. |
| Mansoor S. M. M. | 3rd | 'Darul Mohomed', 7, Gurundugahaela Akurana. |
| Abdul Raheem A. P. H. | 2nd | 'Jen-De-Lux' 1st. Cross Street, Sammanthurai. |
| Meera Lebbe S. | ,, | 152, Kiddanky Rd. Ninthavur-4. |
| Najumunnisa J. | ,, | Ward No. 10, Vidathal Theevu. |
| Abdul Majeed S. | 1st | C/o M. C. Mohamed, Old Market Road, Eravur-3. |
| Abeebur Rahuman M.C. | ,, | 295, Jinnah Rd, Akkaraipattu-5. |
| Mohamed Hussain M. | ,, | 37, Kathiyar Rd, Eravur-3. |
| Mohamed Ismail U. | ,, | 50, New Rd, Kalmunai-7. |
| Mohamed Yoosuph A.L.A. | | Jinnah Rd, Akkaraipattu-4 |
| Naheem N. M. | 1st | Ward No. 10, Vidatalhivu. |
| Samsudeen S. | ,, | 73, Aliyar Rd, Kalmunai-6. |

## *MATHEMHTICS & STATISTICS*

| | | |
|---|---|---|
| Jalaldeen M. T. M. | 4th | 'Hammaliya' Bandarakoswatte. |
| Mohamed Sanun M.A. | 3rd | 67/1, Muthaliyar Rd, Akkaraipattu-3. |
| Isma Lebbe Y. | 2nd | 'Dharul Shimry', Ninthavur-3. |
| Kaleem M. S. | ,, | laya Rd, Maruthamunai, Kalmunai. |
| Mohammed Thaiyar M. | ,, | 139, South Rd, Akkaraipattu. |
| Thahir M. A. | ,, | 2/3, Common Rd, Akkaraipattu |
| Athambawa I. | 1st | Satkuru Madrasa Rd, Saintbamaruthu-1. |
| Jabarullah S. | ,, | Main Street, Erukkalampiddy |
| Mohamed Saleem M. I. | ,, | 34/3, Sahib Rd, Kalmunai 4. |
| Muzadique A. O. J. | ,, | 29, Lane, No. 5. 5th, Cross Street, Puttalam. |
| Nazeer P. M. | ,, | Central Rd. Sammanthurai. |
| Shafiudeen I. N. M. | ,, | Safra Manzil, Vaan Veethy, Puttalam. |

## FACULTY OF MEDICINE

| | | |
|---|---|---|
| Mahboob B. M. | 3rd | Raja Lane, Kattankudy-4. |
| Mubarak M J M. | ,, | 154, Galhinna, Katugastota. |
| Musawir M. I M. | ,, | Thittawelgala, Nikadalupotha, Kurunegala. |
| Najimudeen S | ,, | "Fair Cottage" Sainthamaruthu, Kalmunai. |
| Nazeer A. M. | ,, | 147, Thaika Rd, Kalmunai-4. |
| Zarook M. J. M. | ,, | 251, Beligammana, Mawanella. |
| Ziyad M. R. M. | ,, | B 102, Hapugasthalawa. |
| Fowzy Shariff M.S.M. | 2nd | Beach Rd, Erukkalampiddy-2. |
| Shajahan A. L. | ,, | Vidatbaltheevu |
| Abdul Nazeer A | 1st | Sali Rd. Sammanthurai. |
| Alavudeen U. L. | ,, | M. M. V. Rd, Akkaraipathu-6. |
| Athahurahuman K. | ,, | Hospital Rd, Nintavur 3. (E. P.) |
| Basheer M. M. | ,, | 'Aushaar Manzil', 3rd Cross Street, Sammanthurai-4. (E. P.) |
| Failurahman A. L. | ,, | Olivil-2, Palamunai. |
| Ibra Lebbe M. S. | ,, | 35, Pilavadi, Lane, Sammanthurai-2. |
| Mohamed Anes M. A. | ,, | 68, Love Lane, Trincomalee. |
| Nawab M. M. K | ,, | Main Street, Erukkalampiddy-8. |
| Riyaz A. M. M. | ,, | A. V. V. Rd, Akkaraipattu-6. |
| Thowfeek A. R. M. | ,, | 'Rasool House', Veeramunai, Sammanthurai. |
| Rasheed A. M. M. A. | A. M. P. | Pilavady Lane, Sammanthurai. |
| Moulana | ,, | Maruthamunai, Kalmunai. |
| Nazeer | ,, | Sammanthurai. |

## PASSED OUT MEMBERS

| | |
|---|---|
| Abdul Thasool K. L | Boundary Rd, Samanthurai. |
| Ahamed M.T. | 'Villa De Lux' Main St, Sammanthurai |
| Amsilain M H. | 44, Dole Rd, Matale. |
| Ashraff M. I. M | 'Fowzi Manzil' Muslim Division, Karaitheevu. |
| Aslah M S. M. | 89, Galbokka Rd, Weligama |
| Azeez S. A. | Tamil Division, Sainthamaruthu, Kalmunai. |
| Careem U. L. A | 6M, ain St, Maruthamunai, Kalmunai. |
| Cassim M. S. M. | Madige Midiyala. Bandarakoswatte, |
| Hameed M. A. K. A. | Block-J-East, 114/101 Sammanthurai. |
| Hasan M. C. M | Mr/Kirinda Puhuwela. |
| Hussain A. M. | 69, Moonkilady Rd, Sammanthurai-2 |
| Inul Shifaya M. K. | 51, Hendeniya. Peradeniya. |
| Iqbal A. R. | Erukkalampiddy-6 |
| Irfan A. J. M. | 79, Mallawapitiya. Kurunegala. |
| Ismail Y. M. | 42, Udatalawinne Madige, Katugastota |

| | |
|---|---|
| Jabbar I. L. A. | "Crescent Light" Sainthamaruthu, Kalmunai. |
| Jaufar P. C. P. | Thaikkappalli, Akkraippattu. |
| Jaufar Sadique A. L. | "Hadjiar" Place 3rd Division, Sam manthurai. |
| Kabeer Rawuthar S. H. | 15A, Hadahapola, Horambawa. |
| Kasnafar H. M. | Moor Street, Mannar. |
| Makeen M. J. M. | 31, Terrace Street, Hambanthota. |
| Mansoor A. C. A. M. | "Maraiyakam" 5, Noordeen Lane, Sammanthurai. |
| Mathar I. S. | Ward No 4, T/Kinniya. |
| Mumtaz Begum A. H. | Attawarawatte, Welimada. |
| Munas M. H. M. | 920, Neerella, Akurana. |
| Noorul Bakiya A. J. | '21, Kottar Manzil' Dharga Town. |
| Sadick M. I. M. | Sainthamaruthu-2, Kalmunai. |
| Samsudeen M. | Ward No 2, Nilaveli, Trincomalee. |
| Shreen Rojee M. B. | 98, 2nd Cross Street, Puttalam. |
| Siddeek M. Y. M. | Sainthamaruthu-4, Kalmunai. |
| Sinnarasa S. | Hospital Rd, Sammanthurai |
| Sithy Fakiya M. K. | 145, Madawala Rd, Katugastota. |
| Sithy Jariya | Mosque Rd, Kahatagasdigiliya. |
| Sithy Saleema A. C. | 181, Kurunegala Rd, Anuradhapura. |
| Sithy Zoharabeebi I. L. | 439, Kalugamuwa, Gelioya. |
| Siyan M. M. | Lebbe Street, MN/Tharapuram. |
| Thaowfiq A. R. M. | Cassim Rd, Kalmunai-6. |
| Thasleem K. M. M. | 1st Division, Addalaichenai. |
| Thayyoob M. A. S. | Ward No 3, MN/Vidathal Theevu. |
| Umar Lebbe A. | Muthaliyar Rd, Akkaraipattu-3. |
| Uwais M. H. M. | Gatteberiya, Aranayaka. |

With Best Compliments
from

**FANCY MAHAL**

362, Main Street,
PANADURA.

For

All Your Needs In Motor Spares

*VISIT*

**ZUBAIR HARDWARE STORES**

Market Building
KALUTARA.

Reputed Name to Remember for
High Quality Electrical Goods
Radios, Bicycles and Presentation
Articles at Reasonable Price

# EMMO SONS

**General Merchants & Agents**

79, K. K. S. Road, **JAFFNA.**

Phone: **404 & 374.**

அன்பளிப்பு

# எஸ். எம். சுல்தான்

ஆட்டிறைச்சி வியாபாரம்

No. 3, பண்ணை வீதி,

யாழ்ப்பாணம்.

*Best Wishes from*

**M. B. Mohamed Ismail & Sons**

Agent for Lanka Filling

Station & Transport Agency

***AKKARAIPATTU.***

For

Quality and Fashionable

**TEXTILES**

**UMARAA'S**

Grand Bazaar,

MANNAR.

Best compliments from

**N. M. Seinulabdeen & Sons**

General Merchants

Grand Bazaar,

*MANNAR.*

**KAPPA MARAIKKAR**

**JEWEL HOUSE**

Dimond Soverign, Jewel

*Merchants*

&

*Manufacturing Jewellers*

*For Guaranteed & Modernity*

**Gold Jewels**

*Orders Executed Promptly*

**KAPPA MARAIKKAR**


**Jewel House**

Grand Bazaar,

MANNAR.

மலர் சிறப்புற

எமது நல் வாழ்த்துக்கள்



உங்கள் மழலைச் செல்வங்களின்

உயிரோவியமான படங்களுக்கு

# "பேபி போட்டோ"

படப்பிடிப்பாளர்

சேர் பொன். இராமநாதன் ரோட்,

**திருநெல்வேலி.**

அன்பளிப்பு

சுவை மிக்க தரமான

சைவ உணவுக்கு



# "அமுதசுரபி"

## (சைவ உணவகம்)

குறிப்பு:-

பண்டிகைகளா, விசேட நிகழ்ச்சிகளா எதுவானாலும் ஓடர்கள் குறித்த நேரத்தில் வழங்கப்படும்.

408, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

**நீங்கள் மில்க்வைற் தயாரிப்புகளுக்குத் தரும் ஆதரவின் பயன்**

★ வசதி, வாய்ப்பு, பயன் கருதி மரங்களை நடுதல்
★ வீட்டுத் தோட்டம் விருத்தி செய்தல்
★ பனை வளம் பெருக்கிப் பயன்பல பெறுதல்
★ பசளை தரும் செடிகள், மரங்களை உண்டாக்குதல்
★ ஊர்கள் தோறும் குளங்களை ஆளமாக்கி
மழைநீரைத் தேக்குதல்
★ சனசமூக நிலையங்களில் வாசிக்க வழி செய்தல்
★ பக்தி நெறியில் பரமனைப் பணிந்து
வாழப் பயிற்றுதல்
★ எல்லோரும் எல்லோருக்கும் சேவை செய்தல்
★ வள்ளுவர் நெறியில் வையகம் வாழ வழி வகுத்தல்
★ எல்லோரும் யோகாசனம் பயில வைத்தல்

**மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து
பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்**

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77,

**யாழ்ப்பாணம்.**

உங்களுக்குத் தேவையான சகலவித

மீன் பிடிக்கும் நூல்வலைகள், சைக்கிள்,

மோட்டார்வாகன உதிரிப்பாகங்கள்,

சாய்ப்புச் சாமான்கள்

எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

# என். எஸ். அப்துல் காதர்

## அன் சன்ஸ்

பெரிய கடை, மன்னார்.

**போ(F)மிகா சீற்,**

**சிப்போட்,**

**ஹாட் போட் சீற்,**

**யன்னல் கண்ணாடி**

வகைகளுக்கு

# ஜெஸீமாஸ்

95. ஸ்ரான்லி ரோட்.

**யாழ்ப்பாணம்.**

*Fixed price* *Best quality*

Available
Cotton Sarees
Nylex Sarees
Bell Bottom,
Best Suiting
&
Shirtings

visit

# SHARMILA'S

183, New Market,

*JAFFNA.*

Best wishes from

# HAJI S. M. ISMAIL & CO.

*Wholesale Dealers & General Merchants Agents for Lever Brothers*
*Stockists Nestle's Products, Kelani Tyres, Ceylon Stores*
*& Enamelling Works & J. B. Fishing Industries*

Mosque Building,
No. 20A, Main Street,
KALMUNAI.

Stores:

85 & 87 Cemetry Road,
*KALMUNAI.*

*With the best compliments from*

# S. M. MOOSEEN & SONS

Importers of
Sheetglass, Plain & Figured
Safety Glass and Formica Sheets

No. 10&12, 3rd Cross Street,
**COLOMBO - 11**

Telephone: *28204*

*With the best compliments from*

# LANKA GENERAL TRADERS

47 1/2, Dheeniya Building,

Second Cross Street,

**COLOMBO-II.**

*Telephone:* 36156, 23107

*Cable:* GEMADS

*Telex:* 21494 GLOBALCE ATTN: DAS.

**IMPORTERS OF**

Phoenix Brand Chinese Bicycles,

Bicyle Spares & Accessories Car Accessories

Radios, Radio Cassettes Car Cassettes

And

Electrical Appliances and sole Distributors

in Sri Lanka

For World Famous

THUNDER - JET SUPER

(FUEL SAVING DEVICE)

*With the Best Compliments*

*from*

# MEEZAN & COMPANY

(IMPORTERS & EXPORTERS)

**No. 5, Old Moor Street,**

**COLOMBO-12**

Telephone: *32544*

*With Best Compliments*

*from*

## Fairline Group of Companies

- ★ Fairline Garments (Int) Ltd Mt - Lavinia
- ★ Fairline Departmental Store-Nuwara-Eliya
- ★ Fairline Trade Centre-Akurana
- ★ Ceylon Garments Ltd. - Akurana
- ★ Siddique Drapery Stores - Colombo
- ★ New Cheap Stores - Kandy
- ★ S. A. M. Trading Corporation - Kekirawa

Ewl, First Floor,

***Ceylinco House,***

**COLOMBO - 1**

☎ 22017
22874
98911

ஸ்ரீ லங்கா அச்சகம், கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.